
அபூர்வ ராமாயணம் : தொகுதி - I

காற்றின் குரல்



திருப்பூர் கிருஷ்ணன்

அபூர்வ ராமாயணம் : தொகுதி - I

காற்றின் குரல்



திருப்பூர் கிருஷ்ணன்

திருப்பூர் குமரன் பதிப்பகம்
57-பி, பத்மாவதி நகர், காமராஜ் சாலை, விருகம்பாக்கம்,
சென்னை - 600 092 (வடபழனி ஆவிச்சி பள்ளி பின்புறம்
சாலிகிராமம் போருந்து நிலையம் அருகில்)
தொலைபேசி : 044 - 2377 1473, 092822 34525

Publishing Editor	K. Aravind, M.S.W.
Title of the Book	Kaatrin Kural (Apporva Ramayanam : Part - 1)
Author	Thiruppur Krishnan
Copy Right	Author
Subject	Short Stories
First Edition	November, 2013
Size of the Book	Demmy 1/8
No. of Copies	1000
No. of Pages	256 + viii
Paper used for text	18.1Kg. N.S. Maplitho
Printing Point	11 pt
Published by	**Thiruppur Kumaran Padhippagam** 57B, Padmavathy Nagar, Virugambakkam, Chennai - 600 092 (Kamaraj Salai, Vadapalani Avichi School Backside, Near Saligramam Bus Stand) Ph : 044 - 2377 1473, Mob : 92822 34525 Email : thiruppurkrishnan@hotmail.com
Art by	Artist Maniam Selvan
Cover Design	D. Raghuraj
Printed by	Shri Vignesh Prints 65/33, IInd Street, Pudur, Ashok Nagar Chennai - 600 083. Ph : 044 - 2471 4196 / 2489 6628
Price	Rs. 250/-

சமர்ப்பணம்

அம்மாவுக்கும் அப்பாவுக்கும்...

உள்ளே...

முன்னுரை :

ஸ்ரீராமஜயம் !

வற்றாத ஜீவநதியாய் இந்திய மனங்களில் என்றென்றும் ஓடிக் கொண்டிருப்பது ராமாயணம் என்ற இதிகாசம். பாரத தேசத்தின் அறநெறியை வடிவமைப்பதில் ராமாயண காவியத்திற்கு என்றும் பெரும்பங்கு உண்டு.

மகாத்மா காந்தி `ரகுபதி ராகவ ராஜாராம்` என்ற உயரிய பாடல் மூலம் மக்களிடையே சுதந்திர உணர்வலைகளைத் தட்டி எழுப்பி அவர்களை ஒருங்கிணையச் செய்ததும் அதன்மூலம் நாம் சுதந்திரம் பெற்றதும் நமது கடந்த கால வரலாறு.

நாம் சுதந்திரம் பெறத் தூண்டிய கருவிகளாக இருந்த பலவற்றில், புனிதமான ராம நாமமும் மிக முக்கியமான ஒன்று. ஆன்ம விடுதலையையே பெற்றுத் தரும் ராம மந்திரம் தேச விடுதலையையும் பெற்றுத் தந்தது.

வால்மீகி ராமாயணத்தை ஆதிகாவியம் என்கிறார்கள். சங்க காலத்திலேயே ராமாயணக் கதைக் குறிப்புகள் நமக்குக் கிடைத்துள்ளன. வால்மீகி, கம்பன், துளசி ஆகியோர் எழுதிய மூன்று புகழ்பெற்ற ராமாயணங்களைத் தாண்டியும் ஐம்பதுக்கும் மேலான ராமாயணங்கள் இந்திய மொழிகளில் உள்ளன.

இவை தவிர, தியாகராஜரது கீர்த்தனைகள் உள்படப் பல பாடல்களில் பல அரிய ராமாயணச் செய்திகள் கலந்து காணப்படுகின்றன. இவை அனைத்தும் என் ராமாயணச் சிறுகதைகளுக்குக் கருவாகப் பயன்பட்டிருக்கின்றன.

புதுமைப்பித்தன், கு.ப.ரா., பிரபஞ்சன், ச.து.சு. யோகியார், வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் போன்றோர் அகலிகையை வெவ்வேறு கண்ணோட்டத்தில் பார்த்து விமர்சன பூர்வமாகத் தங்கள் படைப்புகளை எழுதியுள்ளனர். தொன்மத்தை நவீனப்படுத்தி இன்றைய பெண்ணியச் சிந்தனைகளை உள்ளடக்கி அவர்கள் புனைந்த புதிய படைப்புகள் அவை.

என் அபிமான எழுத்தாளரான அமரர் கு. அழகிரிசாமி எழுதிய `திரிவேணி` என்ற ராமாயணச் சிறுகதை தமிழ் மொழிக்கு ஒரு சிறந்த அணிகலனாக அமைந்து ஒளி வீசுகிறது. உயர்ந்த அத்வைத தத்துவத்தை உள்ளடக்கி, தியாகராஜரையே ஒரு பாத்திரமாக்கி மறக்க இயலாத ஒரு கிழவியையும் புதிய பாத்திரப் படைப்பாக்கி அவர் எழுதிய அற்புதமான கதை அது.

என் ராமாயணக் கதைகள், ராமாயணத்தை விமர்சனபூர்வமாக அணுகும் தன்மையைக் கொண்டவை அல்ல. ராமாயணத்தில் சொல்லப்படும் என்றும் நிலைபேறுடைய அறநெறிகளை மீண்டும் மக்கள் மனத்தில் எழுச்சியுறச் செய்யவேண்டும் என்பதே எனது கதைகளின் நோக்கம்.

இந்தக் கதைகள் நடந்த சூழலுக்கும் கற்பனைக்கும் நான் பொறுப்பேற்றாலும் இந்தக் கதைகளுக்கான கருக்கள் முன்னரே நம் தேசத்தில் புழங்கி வருபவைதான். நாடோடிப் பாடல்களிலும் பல இசைக் கலைஞர்களின் கீர்த்தனைகளிலும் பல்வேறு ராமாயணங்களிலும் இந்தக் கதைகளுக்கான ஆதாரங்கள் உள்ளன.

தொண்ணூற்றியாறு வயது நிறைவாழ்வு வாழ்ந்த என் தந்தை திரு பி.எஸ். சுப்பிரமணியம் அவர்களும் தொண்ணூறு வயது நிறைவாழ்வு வாழ்ந்த என் தாய் திருமதி கே. ஜானகி அவர்களும் வாழ்நாளெல்லாம் ராமாயண இதிகாசத்தில் தோய்ந்து வாழ்ந்தவர்கள். வீட்டில் என் பெற்றோரிடையே நிகழும் சர்ச்சைகளே பெரிதும் ராமாயணம் குறித்ததாகத் தான் இருக்கும்.

அபூர்வ ராமாயணத் தொடர் எழுதும் காலகட்டத்தில் என் தந்தை அமரராகிவிட்டார். அதன் பின் உள்ள காலகட்டத்தில் என் தாய் வால்மீகி ராமாயணத்தை நாள்தோறும் வாசித்து என் கதைகளுக்கான பல்வேறு குறிப்புகளை அதிலிருந்து எடுத்துத் தந்தார். என் உறவினர்கள், நண்பர்கள் என இதிலுள்ள கதைகளுக்கான கருக்களை உதவியவர்கள் இன்னும் பலர். அவர்கள் அனைவருக்கும் என் நன்றி.

கோபால்ஜி அவர்களை இணை ஆசிரியராகக் கொண்ட தினமலர் நாளிதழின் `வேலூர் திருச்சி` பதிப்பின் பக்தி மலரில், `அபூர்வ ராமாயணம்` என்ற தலைப்பில் ராமாயண நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய ராமாயணச் சிறுகதைகளை எழுதலானேன். வாரம் ஒரு சிறுகதை வீதம் இக்கதைகள் தொடர்ந்து வெளிவருகின்றன. பல்லாண்டுகளாக

வெளிவரும் இப்பகுதி, வாசகர்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்றிருப்பதற்கு ராமன் அருளே காரணம்.

இத்தொடர் வெளிவருவதற்கு ஊக்கமளித்து வரும் தினமலர் செய்தி ஆசிரியர் ஆர். பார்த்திப மகாராஜன் அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியது. என் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய புலவர் வே. மகாதேவன் அவர்கள் அளித்துவரும் உற்சாகத்தால்தான் இந்தத் தொடர் இத்தனை வாரங்கள் சாத்தியமாகி இருக்கிறது. அவருக்கும் பக்திமலர் ஆசிரியர் குழுவினருக்கும் இந்தத் தொடருக்குத் தங்கள் அழகிய சித்திரங்களால் எழிலூட்டிய ஸ்வாம், ராஜே ஆகிய ஓவியர்களுக்கும் நன்றி.

ஓவியர் மணியம்செல்வன் என் தந்தை எழுதி வானதி பதிப்பகம் வெளியிட்ட `இதிகாசக் கதைக்கொத்து` என்ற புத்தகத்திற்கு அட்டைப்படம் வரைந்து பெருமைப்படுத்தியவர். அவரே எனது இந்தப் புத்தகத்திற்கும் அட்டைப்படம் வரைந்திருப்பது என் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறது. அவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

ராமாயணக் கதைகள் வரிசையில் `காற்றின் குரல்` என்ற என்னுடைய இந்நூல், முதல் தொகுதிதான். இன்னும் வரவேண்டிய தொகுதிகள் பல உள்ளன. வாசகர்களது வரவேற்பை ஒட்டி அடுத்த தொகுதிகளும் அடுத்தடுத்து விரைவில் வெளிவரும்

இந்நூலை வாசிக்கும் வாசககர்கள் அனைவருக்கும் ஸ்ரீராமரது திருவருள் பரிபூரணமாகக் கிட்டவேண்டும் என்றும், அறநெறிகளைப் பின்பற்றுவதில் நாட்டம் அதிகமாக வேண்டும் என்றும் ஸ்ரீராமரையே மனமாரப் பிரார்த்திக்கிறேன்.

அன்புடன்,
திருப்பூர் கிருஷ்ணன்.

1

தொட்டிலில் உறங்கிய தெய்வம்!

தொட்டில் ஆடிக் கொண்டிருக்கிறது. நவமணிகள் பதித்த தங்கத் தொட்டில். ஸ்ரீராமக் குழந்தை அதில் பள்ளி கொண்டிருக்கிறான். குழந்தைக்கு உறுத்தாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அன்னத்தின் இறகுகள் வைத்துத் தைக்கப்பட்ட சின்னஞ்சிறு மெத்தை தொட்டிலின் உள்ளே விரிக்கப்பட்டிருக்கிறது. அந்த மெத்தையில் தான் ஆனந்தமாகக் குழந்தை உறங்குகிறான். பிறந்து ஒரு மாதம் கூட ஆகாத குழந்தை.

கௌசல்யை தன் குழந்தையையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். நூறு நிலவுகளை ஒருசேரக் கட்டிவைத்த மாதிரி குழந்தையின் ஒளியும் குளுமையும் பார்ப்பவர்களைக் கட்டி இழுக்கின்றன. பரவசம் கௌசல்யையின் நெஞ்சை மூச்சுமுட்ட வைக்கிறது. இப்படி ஒரு குழந்தை எனக்குக் கிடைக்க என்ன தவம் செய்தேன்?

ஒரு குழந்தை இல்லாமல் தவித்துக் கிடந்த காலங்கள் இப்போது நினைத்தாலும் நெஞ்சைப் பதைபதைக்க வைத்தன. நகர வீதிகளில் கணவர் தசரதரோடு தேரில் வீதியுலா போகும்போது குடிமக்கள் எல்லாம் எங்கே அயோத்தியை ஆள்வதற்கான அடுத்த வாரிசு என்று கண்களாலேயே கேட்பதைப்போல் தோன்றும் அவளுக்கு. குடிமக்களின் பார்வையைச் சந்திக்க முடியாமல் தலையைக் குனிந்துகொள்வாள். தேரோட்டி சுமந்திரரிடம் `தலைவலிக்கிறது, விரைவாக

அரண்மனை திரும்ப வேண்டும், சீக்கிரம் தேரை ஓட்டுங்கள்!' என்பாள்.

சுமந்திரர் தேரின் ஓட்டத்தை மட்டுமல்ல, மகாராணி கௌசல்யையின் மன ஓட்டத்தைக் கூடத் தெரிந்துகொள்ளக் கூடியவர் தான். ஒரு பெருமூச்சுடன் தேரை மீண்டும் அரண்மனை நோக்கியே அவர் திருப்புவார். கௌசல்யை அரண்மனைக்கு வந்ததும் கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டு விம்மி விம்மிஅழுவாள்.

அவளுக்குக் குழந்தைப் பேறு அமையவில்லை என்ற காரணத்தைக் கூறித்தான் அடுத்த மகாராணி சுமித்திரை, தசரதரின் மனைவியாக அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டாள். சுமித்திரையைத் தன் சொந்தத் தங்கைபோல் கருதியே வரவேற்றாள் கௌசல்யை. சுமித்திரை மூலமாவது அயோத்திக்கு ஒரு வாரிசு அமையவேண்டும் என்று மனமாரப் பிரார்த்தித்தாள். சுமித்திரையையே தன் முதல் குழந்தை போல அவ்வளவு ஜாக்கிரதையாகப் பராமரித்தாள். ஆனால் என்ன சங்கடம். பல்லாண்டுகள் கடந்தும் சுமித்திரைக்கும் குழந்தை பிறக்கவில்லை. அயோத்தியின் வாரிசைக் காணவேண்டி மக்கள் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

பிறகு கைகேயி தசரதரின் மனைவியானாள். அவள் அரண்மனைக்கு வந்தது ஒரு நிபந்தனையுடன். கைகேயியின் தந்தை தன் மகளுக்குப் பிறக்கும் பிள்ளைக்குத்தான் இளவரசுப் பட்டம் என்ற வாக்குறுதியை வாங்கிக் கொண்டுதான் அவளை தசரதருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அதனால் என்ன? அயோத்திக்கு இளவரசர் வேண்டும் என்று தானே இந்தத் திருமணம்? ஆனால் யார் இட்ட சாபமோ, என்ன தெய்வக் குற்றமோ பலப்பல ஆண்டுகளாக கைகேயிக்கும் குழந்தை பிறக்கவில்லை.

பிறகுதான் ரிஷ்யசிருங்கரை வரவழைத்து புத்திரகாமேஷ்டி யாகம் செய்து இதோ ராம லட்சுமண பரத சத்துருக்கனர் என்ற நான்கு குமாரர்கள் பிறந்திருக்கிறார்கள். தசரதரின் மூன்று மனைவியருக்கும் மகப்பேறு கிட்டியிருக்கிறது.

தசரதரின் மனைவியரில் குழந்தைப் பேறில்லாததன் கொடுமையை அதிக காலம் அனுபவித்தவள் கோசலை தான். அந்தப் பழைய காலங்களை இப்போது நினைத்தாலும் மனத்தில் ஒரு பெருமூச்சு எழுகிறது. இதோ தங்கத் தொட்டிலில் வைரக் கட்டி போல் உறங்குகிறான் என் கண்மணி ஸ்ரீராமன். என் பிள்ளைக்கலி தீர்க்க வந்தவன். உலகோர் மத்தியில் ஒரு தாயாக என்னை கம்பீரமாக நடக்க வைத்தவன்.

என் செல்வமே. உறங்கு. ஆனந்தமாக உறங்கு. அவசரப்பட்டு நீ எழவேண்டாம். நீ எதிர்காலத்தில் அரசனானால் அதிகாலையிலேயே

எழுந்து கடமைகளை ஆற்ற வேண்டியிருக்கும். இப்போதேனும் ஆனந்தமாகத் தூங்கு குழந்தாய்.

சுற்றிலும் பணிப்பெண்கள் மகாராணியின் ஏவலுக்காகக் காத்திருந்தார்கள். அவர்களிடம் மெல்லிய குரலில் சொன்னாள் கோசலை:

`சேடிப் பெண்களே! எச்சரிக்கை தேவை. ஜாக்கிரதையாக என் குழந்தையை நான் வரும்வரை பார்த்துக் கொள்ளுங்கள். யாரும் சப்தம் போட்டுப் பேசி அவன் உறக்கத்தைக் கலைத்துவிட வேண்டாம். தெரிகிறதா? குளித்து பூஜையை முடித்துவிட்டு இதோ வந்துவிடுகிறேன்.`

திரும்பித் திரும்பித் தொட்டிலைப் பார்த்தவாறே ஒரு பூனை போல் சப்தமில்லாமல் மகாராணி நடந்து போவதைக் கண்டு சேடிப்பெண்கள் நகைத்துக் கொண்டார்கள். பிறகு தாங்கள் அந்த ராமக் குழந்தையைக் கண்குளிரப் பார்க்கலானார்கள்.

தொட்டிலே பாற்கடலாக, அதன் கீழ் விரிக்கப்பட்ட பட்டு மெத்தையே பாம்பணையாக, அண்ட பகிரண்டங்களையும் காத்து ரட்சிக்கும் திருமால் அங்கே சின்னஞ்சிறு குழந்தையாய்ப் பள்ளி கொண்டிருந்தார். ஆனால் இந்த இறை ரகசியத்தை அந்தச் சேடிப் பெண்கள் அறியவில்லை.

நீல நிறத்தில் உறங்கும் அந்தக் குழந்தையின் மோகன வடிவத்தில் சொக்கிப் போய் அவர்கள் வைத்த கண் வாங்காமல் குழந்தையையே பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டுக் கொண்டிருந்தார்கள். காற்று மெல்லத் தொட்டிலை அசைத்தவாறிருந்தது.

அவசர அவசரமாக நீராடினாள் கோசலை. ஒரு கணம் கூடத் தன் ஸ்ரீராமனை விட்டுப் பிரிய அவளுக்கு மனம் வருவதில்லை. சீக்கிரம் பூஜையை முடித்துக் கொண்டு மறுபடி அந்தப் பேரழகன் படுத்திருக்கும் தொட்டிலை நோக்கிப் போகவேண்டும். இதோ விரைவில் தசரதரும் தன் பூஜையை முடித்துவிட்டு குழந்தையைப் பார்க்க வந்துவிடக் கூடும்.

நைவேத்தியத்திற்காகப் பொற்கிண்ணத்தில் பாயசம் எடுத்துக் கொண்டு பூஜை அறை நோக்கிச் சென்றாள். ரகுவம்சத்தின் குலதெய்வமான ஸ்ரீரங்கநாதர் சிலை முன் தான் கொண்டுவந்த பாயசக் கிண்ணத்தை வைத்தாள். இறைவனை மலர் தூவி வழிபட்டாள். பின்னர் கண்மூடி மனப்பூர்வமாகப் பிரார்த்தித்தாள்.

`என் தெய்வமே! நீ இந்தப் பாயசத்தை ஏற்றுக் கொள். நான் பாயசத்தை அருந்திப் பிறந்த என் கண்மணி ஸ்ரீராமனை எந்த நோய்நொடியும் தாக்காது பார்த்துக் கொள்!`

உள்ளம்கசிய வேண்டிக் கொண்டு கண்ணைத் திறந்து பார்த்தபோது

திக்கென்றது. இது என்ன ஆச்சரியம்! இது எப்படி நடந்தது? அங்கே தொட்டிலில் உறங்கிய ஸ்ரீராமன் இங்கே இந்தப் பூஜையறையில் பாயசக் கிண்ணத்தின் முன் சிரித்தவாறு அமர்ந்திருந்தான்.

எப்போது தொட்டிலை விட்டு இறங்கி இங்கே வந்தான்? ஒரே ஒருமாதம் மட்டுமே ஆன குழந்தை எப்படித் தானே தொட்டிலை விட்டு இறங்கித் தவழ்ந்து வந்து இங்கே உட்காரும்? இவன் இங்கு வரும்வரை அந்தச் சேடிப்பெண்கள் எல்லாம் அங்கே என்ன செய்துகொண்டிருந்தார்கள்? கோசலை இனம்தெரியாத பரபரப்படைந்தாள்.

அவளைப் பார்த்துக் கலகலவென்று சிரித்த அந்த ராமக் குழந்தை பாயசக் கிண்ணத்தை எடுத்து அப்படியே வாயில் வைத்துக் கடகடவெனக் குடித்தது. கடவுளே! தாய்ப்பால் மட்டுமே குடிக்கும் ஒருமாதக் குழந்தை பாயசத்தை அருந்தலாமோ? வயிற்றுக்கு ஏற்குமோ? அவன் சின்னஞ் சிறு செவ்விதழ்களில் பாயசத்தின் துளிகள் தீற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கோசலை மேலும் பரபரப்படைந்தாள்.

அவன் வாயைத் துடைத்துவிட வேண்டும் என்று அங்குமிங்கும் துணிக்காகத் தேடினாள். எந்தத் துணியையும் காணோம். புடவைத் தலைப்பாலேயே துடைப்போம் என முடிவுசெய்தவளாய் குழந்தையின் பக்கம் மறுபடி திரும்பினாள்.

நாராயணா! இதென்ன சங்கடம். இங்கே தானே இப்போது உட்கார்ந்திருந்தான்? அதற்குள் எங்கே போய்விட்டான்? காலியான பாயசக் கிண்ணம் மட்டும்தான் அங்கே இருந்தது. ராமக் குழந்தையைக் காணவில்லை.

கோசலை மிகுந்த பரபரப்போடு குழந்தையை விட்டிருந்த தொட்டிலை நோக்கி ஓடினாள். சேடிகள் மகாராணியின் பதற்றத்திற்கான காரணம் தெரியாமல் விலகி நின்றார்கள். தொட்டிலுக்குள் பார்த்தாள் கோசலை. குழந்தை விழி மூடி ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தான்!

இதென்ன கூத்து? அதற்குள் மறுபடி இங்கே எப்படி வந்து படுத்துக்கொண்டான்?

கோசலை பணிப்பெண்களை அதட்டினாள்:

`ஏன் இவன் இறங்கி பூஜை அறைக்கு வரும்வரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தீர்கள்? ஒழுங்காகக் குழந்தையைப் பார்த்துக்கொள்ளக் கூடத் துப்பில்லையா உங்களுக்கு?`

ஒரு சேடிப்பெண் மகாராணியையே உற்றுப் பார்த்தாள். பின் தயக்கத்தோடு மெல்லச் சொன்னாள்:

`என்னம்மா ஆயிற்று உங்களுக்கு?` ஏன் அர்த்தமில்லாமல்

ஏதேதோ பேசுகிறீர்கள்? குழந்தையை நாங்கள் அனைவரும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே தானே இருக்கிறோம்? ஒரு மாதக் குழந்தை எப்படியம்மா தானே பூஜை அறைக்கு வரும்? நாங்கள் யாரேனும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தால் தானே குழந்தையால் அங்கே வரமுடியும்?`

அதுதானே? நாம் தான் ஏதோ உளறுகிறோமோ? கோசலைக்குத் தலை சுற்றியது. `இதோ வருகிறேன்!` என்றவாறே மறுபடி பூஜை அறைக்கு வந்தாள். பாயசக் கிண்ணத்தைப் பார்த்தாள். அதில் ஒரு சொட்டுப் பாயசம் கூட மீதி இல்லை. குழந்தை இங்கு வந்து பாயசத்தைச் சாப்பிட்டதை அவள் தன் கண்ணால் பார்த்தாளே? அது எப்படிப் பொய்யாகும்?

மறுபடி தொட்டிலை நோக்கி ஓடினாள். குழந்தையின் உதடுகளைப் பார்த்தாள். அதில் அவள் துடைக்காமல் விட்ட பாயசத் துணுக்குகள் இன்னும் ஒட்டிக் கொண்டிருந்தன. தன் புடவைத் தலைப்பால் அந்தத் துணுக்குகளைத் துடைத்துவிட்டாள் அவள்.

இப்போது உண்மையிலேயே அவளுக்குத் தலை சுற்றத்தான் செய்தது. குழந்தையையே உற்றுப்பார்த்தாள். குழந்தை உறங்கிக் கொண்டுதான் இருந்தது. ஆனால் பாயசத்தின் இனிமையை அனுபவிப்பது மாதிரி நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டது!

அதற்குள் மகாராஜா தசரதர் அங்கே வந்து சேர்ந்தார். சேடிப்பெண்கள் அனைவரும் பணிந்து விடைபெற்று வேறு பணிகளைச் செய்யும் நிமித்தம் உள்ளே சென்றார்கள். ராமக் குழந்தையின் அழகைக் கண்ணாலேயே பருகிய தசரதர் கோசலையைத் திரும்பிப் பார்த்தார். இனந்தெரியாத பதற்றத்துடன் அவள் இருப்பதைப் பார்த்து என்ன நடந்தது என்று வினவினார். கோசலை திகைப்புடன் சொல்லலானாள்:

`பிரபோ. ஓர் அதிசயம் நடந்தது. நான் பூஜை செய்யும்போது நம் குழந்தை தானாக பூஜை அறைக்கு வந்து நைவேத்தியப் பாயசத்தைக் குடித்துவிட்டான். பிறகு மறைந்துவிட்டான். இங்கே நான் ஓடோடி வந்து பார்த்தபோது முன்போல் தொட்டிலிலேயே படுத்துக் கொண்டிருக்கிறான். என்னால் நம்பவே முடியவில்லை.`

தசரதர் கலகலவென்று நகைத்தார்.

`தேவி. ஒரு மாதக் குழந்தை எப்படித் தானே பூஜை அறைக்கு வரும்? உன் கற்பனை வளத்திற்கு ஓர் அளவில்லையா? இன்னும் கூடச் சேர்த்துச் சொல்லேன். நம் குழந்தை ஒரு யானையைக் காப்பாற்றியது. அதற்காக ஒரு முதலையைக் கொன்றது என்றெல்லாம் கூட நீ சொல்லலாமே? நீ கண்ணைத் திறந்துகொண்டே கனவு காண்கிறாய்.

அந்தக் கனவை உண்மை என்று வேறு நம்பத் தொடங்குகிறாய். குழந்தை பிறந்ததிலிருந்து கொஞ்சநாளாகவே பித்துப் பிடித்தாற்போல் தான் தென்படுகிறாய். எங்கு பார்த்தாலும் நம் குழந்தையே இருப்பதாகத் தோன்றுகிறது உனக்கு. அதில் தவறொன்றும் இல்லை. எதற்கும் அரண்மனை வைத்தியரைப் பார்த்து ஆலோசனை கேள். வாரம் ஒருமுறை மறக்காமல் எண்ணெய் தேய்த்து நீராடினால் இதுபோன்ற உஷ்ணத்தினால் தோன்றும் பைத்தியக்காரத்தனமான மனப்பிரமைகள் குறையக் கூடும்!`

அதற்குள் ராமக் குழந்தையை தரிசனம் செய்வதற்காக வசிஷ்ட மாமுனிவர் அங்கே வந்துசேர்ந்தார். தசரதர் எழுந்து அவரை நமஸ்கரித்து வரவேற்றார். குழந்தையை ஆனந்தமாகப் பார்த்து ரசித்தார் வசிஷ்டர். முக்காலமும் உணர்ந்த அவர் எதிர்காலத்தில் இந்தக் குழந்தை நிகழ்த்தப் போகும் ராவண வதத்தை நினைத்து இப்போதே மெய்சிலிர்த்தார். கோசலையைப் பாசத்தோடு பார்த்தார் வசிஷ்டர்.

மகாராணி கோசலை திடீரென ஒரு முடிவு செய்தாள். தனக்குப் பைத்தியப் பட்டம் கட்டுகிறாரே கணவர் தசரதர்? அது உண்மையா இல்லை தான் கண்ட காட்சி உண்மையா? முக்காலமும் உணர்ந்த வசிஷ்டரிடம் இதைப்பற்றிக் கட்டாயம் கேட்டுவிட வேண்டும்.

வசிஷ்டரிடம் ஒருவேண்டுகோள் வைத்தாள் கோசலா தேவி.

`சுவாமி. எங்கள் குலகுருவான தாங்கள் என் பூஜையறைக்கு வந்து எத்தனை காலமாகிறது? அவசியம் இன்று என் பூஜையறைக்கு விஜயம் செய்ய வேண்டும்!`

`அதற்கென்ன தாயே? உன் வழிபாடுகளால் தெய்வ சாந்நித்தியம் அடைந்துள்ள உனது பூஜையறைக்கு வருவதில் எனக்கென்ன தயக்கம்? வா போகலாம்.`

வசிஷ்டர் முன்நடக்க கோசலை பின்தொடர்ந்தாள். தசரதர் கண்மணி ராமனை தரிசித்தவாறு அங்கேயே தொட்டிலை அசைத்துக் கொண்டிருந்தார்.

`எதற்கு என்ன விளக்கம் கேட்க வேண்டி என்னைத் தனியாக பூஜை அறைக்கு அழைத்தாய் தாயே?`

வசிஷ்டர் கோசலையின் குறிப்பை உணர்ந்தவராய் முறுவலுடன் வினவினார்.

`தாங்களேனும் என்னைப் பைத்தியம் என்று கூற மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் தான் தங்களை இங்கே அழைத்தேன்.`

`யார்தான் உன்னைப் பைத்தியம் என்று சொல்ல முடியும்? அப்படிச்

சொன்னவர் மீது நடவடிக்கை எடுப்போம். யார் அப்படிச் சொன்னது என்று சொல்!`

`வேறுயார்? உங்கள் மன்னர் தான்!`

வசிஷ்டர் கலகலவென்று நகைத்தார்.

`சரிதான். மன்னர் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் மன்னரை விட அதிகாரம் உள்ளவர்களால் தான் முடியும். அப்படியானால் நீ தான் நடவடிக்கை எடுக்கவேண்டும்!`

`சுவாமி. கேலியெல்லாம் இருக்கட்டும். உங்களை என் தந்தைபோல் நினைத்து ஒரு விளக்கம் வேண்டி இங்கே அழைத்து வந்திருக்கிறேன்.`

வசிஷ்டர் கண்ணில் பாசம் பொங்க கோசலையைப் பார்த்தார்.

`சந்தேகமென்ன மகளே! உன்னிடம் எனக்கு இருக்கும் பாசம் தந்தைப் பாசம்தான். உன் கணவரின் பெருமையெல்லாம் உன் நற்குணங்களால் வந்ததுதானே? என்ன சந்தேகம் கேள். நான் விளக்கம் தருகிறேன்.`

கோசலை திகைப்புடன் மெல்ல மெல்ல அன்று நடைபெற்ற சம்பவத்தை விவரித்தாள்.

`இதில் என் கற்பனைச் சரக்கு எதுவுமில்லை சுவாமி. இறைவனுக்கு வைக்கப்பட்ட பாயசக் கிண்ணத்தில் ஒரு சொட்டுப் பாயசம் கூட இல்லாமல் அது காலியாயிருந்தது. இதோ பாருங்கள் இந்தக் கிண்ணத்தில் தான் நான் நிவேதனம் செய்தேன்!`

கிண்ணத்தை எடுத்து வசிஷ்டரிடம் காண்பித்தாள் கோசலை. வசிஷ்டர் ஒருவகைச் சிலிர்ப்போடு கோசலை சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

`இதுமட்டுமல்ல சுவாமி. இன்னொரு சாட்சியும் இருந்தது. நான் ஓடிப்போய்க் குழந்தையைப் பார்த்தபோது குழந்தையின் உதடுகளில் பாயசத் துணுக்குகள் ஒட்டிக் கொண்டிருந்தன.`

இதைக் கேட்ட வசிஷ்டரின் விழிகளிலிருந்து கரகரவென பக்திக் கண்ணீர் வழிந்தது.

`கோசலா! இப்போது நான் சொல்வது பெரும் ரகசியம். யாரும் அறியலாகாத தேவ ரகசியம். இதை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று எனக்கு வாக்குறுதி கொடு!`

`அப்படியே ஆகட்டும் சுவாமி. இந்த நிகழ்ச்சியின் பின்னணியை அறிந்துகொள்ள விரும்புகிறேன். என் மனம் குழம்புகிறது!`

`இதில் குழம்ப ஒன்றுமில்லை தாயே! நீ பெருமைப்படத்தான்

வேண்டும். நீ சாதாரணத் தாய் அல்ல. கடவுளின் தாய். `உன் வயிற்றில் வந்து பிறந்திருக்கும் குழந்தை திருமால் தான். நீ வணங்கும் ரங்கநாதன் தான் உனக்குக் குழந்தையாக வந்திருக்கிறான். ரங்கநாதனுக்கு நைவேத்தியம் செய்த பாயசத்தைக் குழந்தை ரங்கநாதன் சாப்பிட்டிருக்கிறான். இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? இது திருமாலின் மனித அவதாரம். என் போன்ற மிகச்சிலருக்கு மட்டுமே இந்த ரகசியம் தெரியும். தன் இறைச்சக்திகளைப் பொதுவாக அவன் காட்ட மாட்டான். என்றாலும் அவன் பக்தையான உனக்குத் தான் கடவுள் என்று உணர்த்துவதற்காக இப்படியொரு திருவிளையாடலை அவன் நிகழ்த்தியிருக்கலாம். இந்தச் சம்பவத்தை யாரிடமும் நீ சொல்லலாகாது. ஆனால் உனக்கு என் முக்கியமான அறிவுரை ஒன்று உண்டு.`

வசிஷ்டர் சொன்னதையெல்லாம் வியப்புடன் செவிமடுத்த கோசலை `சொல்லுங்கள் சுவாமி!` என்று கைகூப்பிக் கேட்டாள்.

`மகளே! வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம் குழந்தை ராமனின் திருப்பாதங்களைப் பற்றிக் கொள். அந்தத் திருப்பாதங்களைப் பற்றும் வாய்ப்பு சுலபத்தில் யாருக்கும் கிட்டாது. உன் பூர்வஜன்ம புண்ணியங்களால் உனக்கு இந்த அரிய பேறு கிட்டியுள்ளது. உன் குழந்தை உன்னை ரட்சிப்பான். உன் இறுதிக்காலத்தில் அவனே உனக்கு மேலான முக்தியையும் அருளுவான்.`

`என் குழப்பமெல்லாம் நீங்கித் தெளிவு கிட்டிவிட்டது சுவாமி. பாக்கியம் பெற்றவள் ஆனேன்!`

பரவசத்தோடு தான் நாள்தோறும் வழிபடும் ரங்கநாதரைக் கீழே விழுந்து நமஸ்கரித்தாள் கோசலை. பிறகு நிமிர்ந்து ரங்கநாதர் சிலையைப் பார்த்தாள். சிலை இருந்த இடத்தில் இப்போது ராமக்குழந்தை வீற்றிருந்தான்! கோசலையைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்தான். கோசலை மகிழ்ச்சியோடு அதைப் பார்த்தாள். மறுகணம் ராமக்குழந்தை ரங்கநாதராகிவிட்டது.

இந்தக் காட்சியைக் கண்ட வசிஷ்டர் பக்திப் பரவசத்தோடு கீழே விழுந்து தானும் ரங்கநாதரை நமஸ்கரித்தார்.

தொட்டிலில் இருந்த குழந்தையைப் பத்திரமாகக் கையில் ஏந்தியவாறு பூஜையறை நோக்கி வந்தார் தசரதர். பூஜையறைக்குள் தசரதர் வந்ததும் அதுதானே தன் நிரந்தர இடம் என்பதுபோல் குழந்தை க்ளுக் எனச் சிரித்த அழகைப் பார்த்து தசரதர், வசிஷ்டர், கோசலை மூவருமே சொக்கினார்கள். குழந்தையின் பாதங்களைப் பற்றி வருடிய கோசலை அர்த்தத்தோடு வசிஷ்டரைப் பார்த்தாள். அவள் செயலைக் கண்களாலேயே ஆதரித்தார் வசிஷ்ட மாமுனிவர்.

2

கைகேயி யார்?

கங்கைக் கரையில் நிஷ்டையில் அமர்ந்திருந்தார் தர்மாங்கதர். பற்றெல்லாம் அறுத்து பற்றற்றான் பற்றினைப் பற்றிக்கொண்ட பெரும் தவமுனிவர். புண்ணியம் பாவம் இரண்டிலுமே அவருக்குப் பற்று போய்விட்டது. இறைச்சிந்தனை அல்லாது வேறு சிந்தனையற்று வாழ்ந்துவந்தார்.

அவர் சேமித்து வைத்திருந்த புண்ணியங்கள் ஒரு மலைபோல் பெருகிக் கிடந்தன. அவற்றின் பலனாகக் கிடைக்கக் கூடிய எந்த சுகத்திலும் அவருக்கு விருப்பமில்லை. புண்ணியம், பாவம் இரண்டையும் கடந்த நிலைக்கு அவர் உயர்ந்து விட்டார்.

இந்திரிய சுகங்களால் என்ன லாபம்? உடலின் ஐம்புலன்களும் சுகங்களைக் காட்டி மனிதனை ஏமாற்றவல்லவா செய்கின்றன? திருமாலைச் சிந்தனை செய்வது தவிர பெறற்கரிய பெரும்சுகம் வேறென்ன உண்டு? அவர் இரவும் பகலும் கடவுள் சிந்தனையிலேயே காலம் கழித்தார். பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனை, அந்த வைகுந்தவாசனை அனவரதமும் நெஞ்சில் நிறுத்தித் தியானித்தார்.

ஏதோ உடல் இருக்கிறவரை அதைப் போஷித்தாக வேண்டுமே? ஊனுடம்பு ஆலயம் என்று சொல்லியிருக்கிறதே? அதன்பொருட்டு எப்போதாவது கொஞ்சம் சாப்பிடுவார். பஞ்சபட்ச பரமான்னம் எல்லாம் இல்லை. வெறும் கனிவர்க்கம் தான் உணவு. உறக்கம் மிகக் குறைவு. எந்தச்

செயல்பாடுகளிலும் அவருக்கு ஈடுபாடில்லை. இறைச்சிந்தனை தவிர வேறு எந்தச் செயலையும் அவர் செய்வதுமில்லை.

கானகத்தில் அக்கம்பக்கத்தில் வசித்த முனிவர்களும் முனிகுமாரர்களும் அவரை தரிசிக்க வருவார்கள். நிஷ்டையில் ஆழ்ந்திருக்கும் அவரையே பார்த்துப் பரவசம் பெறுவார்கள். அவரைப் போன்ற தீவிர மன ஒருமைப்பாடு தங்களுக்கும் வரவேண்டும் தெய்வமே என்று இறைவனைப் பிரார்த்தித்துச் செல்வார்கள்.

கண்ணாடிப் பெட்டிக்குள் மாணிக்கத்தை மறைத்து வைக்க முடியுமா? உடலுக்குள் இருந்த அவரது ஆன்மா என்ற மாணிக்கத்தின் ஒளி அவரது இடைவிடா தியானத்தின் காரணமாக உடலை மீறி வெளியே ஜொலித்தது.

அவர் வசித்த இடத்தைச் சுற்றியிருந்த சுற்றுப்புறமெல்லாம் தர்மாங்கதரின் தெய்வீகப் பொலிவால் புதுச் சோபை பெற்றிருந்தது. நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை என்பதால், அந்தப் பகுதியில் அடிக்கடி மழைபெய்தது.

எனவே அவரைச் சுற்றியிருந்த பிரதேசத்தில் மரங்களும் செடிகொடிகளும் குலுகுலுவெனப் பூத்துக் குலுங்கின. நீரோடைகள் சலசலவெனப் பெருக்கெடுத்து ஓடின. அங்கே வாழ்ந்த மான்களும் மயில்களும் பஞ்சவர்ணக் கிளிகளும் கூட விசேஷ புஷ்டியோடு தென்பட்டன.

அப்படிப்பட்ட தெய்வீக சோபையுடைய அந்த இடத்தில் உலாவ வந்தது ஒரு பெண் பேய். அந்தப் பேயால் அந்த இடத்தின் சோபையைப் பற்றிய வியப்பைத் தாங்க இயலவில்லை. என்ன இப்படி ஒரு செழிப்பு இங்கே? யாரால் இந்தப் பிரதேசத்தில் இத்தகைய மாற்றம்? இதோ அமர்ந்திருக்கும் இந்த முனிவரால் தான் இருக்க வேண்டும். யார் இந்த முனிவர்? இயற்கையைச் செழிக்கச் செய்யக்கூடிய அளவு அவ்வளவு நல்லவரா இவர்? அப்படியானால் நாம் உடனடியாகப் போய் இவரைப் பிடிப்போம்.

அந்தப் பேய் முற்றிலும் முட்டாள்தனமாக இப்படி ஒரு முடிவெடுத்தது. பற்றி எரியும் நெருப்பை ஓர் எறும்பு விழுங்க இயலுமா? அப்படி விழுங்க அந்த எறும்பு ஆவல் கொள்ளுமானால் அதன் நிலைமை என்ன ஆகும்?

அதே கதிதான் அந்தப் பெண் பேய்க்கும் நேர்ந்தது. அவரைப் பற்ற வந்த அந்தப் பேய் தன் உருவம் முழுவதும் பற்றி எரிவது போன்ற உணர்ச்சியால் தத்தளித்துத் தடுமாறியது. எப்படி அந்த தவக்கனலின் சூட்டிலிருந்து தப்பிப்பது என்று அதற்குத் தெரியவில்லை.

அலறி ஓலமிட்டவாறு, முனிசிரேஷ்டரான தர்மாங்கதரையே சரணடைந்தது அது. `தங்களின் பெருமை தெரியாமல் தங்களைப் பிடிக்க எண்ணினேன். என்னை மன்னித்து ரட்சிக்க வேண்டும் சுவாமி! நான் செய்ய நினைத்த அபசாரத்தைப் பொறுத்து என்னைக் காத்தருள வேண்டும்!` என அவரது பாதங்களில் விழுந்து கதறியது.

தன்னை வணங்கிக் கதறிய அந்தப் பேயை தர்மாங்கதர் புன்முறுவலுடன் சாந்தப் படுத்தினார்.

`சொல் அம்மா. நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? உனக்கு இந்தக் கொடூரமான பேயுருவம் எப்படி வந்தது? ஏன் இப்படிக் காற்றில் அலைகிறாய்?` என்று கனிவோடு கேட்டார்.

முனிவரின் அருளால் சற்றே அமைதியடைந்த அந்தப் பெண் பேய், `என் கதை ஒரு சோகக் கதை சுவாமி. என் மதியீனத்தால் தான் நான் இப்படி ஆனேன். நான் முன்னர் கலகை என்ற பெயருள்ள பெண்ணாக இருந்தேன்! மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தேன். மிகுந்த ஆணவம் என் உடன் பிறந்த குணமாக இருந்தது. என் கெட்ட புத்தியால் நானே என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிக் கொண்டேன்!` என்று தன் சரிதத்தைச் சொல்லத் தொடங்கியது.

அழகிய இளம்பெண்ணான கலகையைப் பெண்பார்த்து மிகவும் பிடித்துத் திருமணம் செய்துகொண்டான் வேதம் படித்த ஒரு சான்றோன். அன்பே வடிவானவன் அவன். அதர்ம நெறிகளில் ஒருபோதும் செல்லாதவன். ஆனால் கலகையின் அடிப்படை இயல்பு என்னவென்று அறியாமல் அவளது அழகில் மயங்கி அவளை மணந்துகொண்டான் அந்த அப்பாவி.

அவனை இயன்றவரை இம்சிப்பதே தன் வாழ்வின் நோக்கம் போல் செயல்படலானாள் அவன் மனைவி கலகை. அவள் பிறவி இயல்பே அதுதான். கணவன் எதுசொன்னாலும் அதைக் கட்டாயம் செய்யாமல் இருப்பாள் அவள். கணவன் சொன்னதற்கு ஏறுக்கு மாறாகச் செய்வதை ஒரு தர்மம்போல் கடைப்பிடித்தாள். அவளது இந்த விசித்திரமான போக்கால் அவள் கணவன் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்காது.

`பெண்ணே கலகை! இன்று எனக்கு மிகுந்த சளிப் பிடித்துள்ளது. நேற்று மழையில் வேறு நனைந்துவிட்டேன் இல்லையா? சரியாக மூச்சுக் கூட விட முடியவில்லை என்னால். கண்ணே! இன்று மிளகுக் குழம்பு வை!` என்று அவன் சொல்வான். அன்றுதான், அவன் சீதளத்தை மேலும் அதிகப்படுத்தும் வகையில் பூசணிக்காய்க் குழம்பு வைப்பாள் அவள். `குளிர்கிறதே! குளிக்க சுடுதண்ணீர் கொண்டுவா` என்றால், அன்று மறந்தும் சுடுதண்ணீர் தரமாட்டாள். அவன் பச்சைத் தண்ணீரில் தான்

குளிக்க வேண்டும் என்று அடம் பிடிப்பாள்.

நல்லவேளை. இதோடு நிறுத்தினாயே? எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் சொல்லவில்லையே?` என்று வாய்தவறி அவன் அலுப்புடன் சொல்லிவிட்டால் போதும். `அடடா! அதை மறந்தே போனேனே? தாங்கள் எண்ணெய் தேய்த்துக் குளித்து எத்தனை நாளாகிறது சுவாமி? இன்று நிச்சயம் நீங்கள் எண்ணெய் தேய்த்துக் கொள்ள வேண்டும்!` என்று அன்றுதான் அவனுக்கு பலவந்தமாக எண்ணெய் தேய்த்துவிடுவாள்.

இன்று வெளியே சென்று வரலாம் என்று அவன் புறப்பட்டால் வீட்டிலேயே இருங்கள்! ஏன் வெளியே சுற்றுகிறீர்கள்?` என்று வற்புறுத்துவாள். `கடும் வெய்யிலடிக்கிறது. வீட்டில் இருக்கலாமே?` என்றால் `வெய்யிலாவது ஒன்றாவது? இதற்கெல்லாம் மனிதர்கள் அஞ்சலாமோ? நிலாக் காய்வதுபோல் தானே வெய்யில்? வாருங்கள்! இருவருமாக வெளியே போய்வருவோம்!` என்று அவனை பலவந்தமாக வெளியே இழுத்துச் செல்வாள்.

அக்கம்பக்கத்தினர் அனைவரும் கலகையின் இயல்பைப் பார்த்து நகைத்தனர். அவள் கணவனுக்கோ வாழ்க்கை முற்றிலும் வெறுத்துவிட்டது. அவன் ஒருநாள் தன் மனைவியிடமோ ஊராரிடமோ ஏதொன்றும் சொல்லாமல் திடீரென வீட்டை விட்டுப் புறப்பட்டுவிட்டான்.

வாழ்வை வெறுத்துத் துறவு பூணும் எண்ணத்தில் அவன் சென்றுகொண்டிருந்த போது வழியில் வயதான ஒரு பெரியவரைச் சந்தித்தான். அவனது முகவாட்டத்தைப் பார்த்து என்ன சிக்கல் என்று கனிவோடு விசாரித்தார் அந்தப் பெரியவர். அவரது அன்பான விசாரிப்பு அவனுக்குச் சற்று ஆறுதல் தந்தது.

பெரியவரே! நான் என்னவென்று சொல்வேன்? என் மனைவி ஒரு மிருகம் போன்றவள். அவளோடு என்னால் குடித்தனம் நடத்த முடியவில்லை. அவள் ஒரு பூதம்போல் தோன்றுகிறாள். அவளுடன் நான் மட்டுமல்ல, வேறு யாருமே வாழ இயலாது.` என்றான் அவன்.

அவர் அவனைப் பார்த்து இளநகை புரிந்தார். பின் அமைதியாகச் சொல்லலானார்.

மகனே! மனைவி ஏறுக்குமாறாக இருப்பாளேயாமாகில் கூறாமல் சன்யாசம் கொள் என்று சொல்வதுண்டு. ஆனால் ஏறுக்குமாறாக இருக்கும் மனைவியுடன் வாழ்வதில் தான் இருக்கிறது சாமர்த்தியம். உன் மனைவி மிருகம் போல் இருந்தால் என்ன? காட்டு யானையைக் கூடப் பயிற்சி தந்து அடக்குவதில்லையா? உன் மனைவி பூதம் போன்றவள் என்கிறாய் நீ. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களையும் கூட மகான்கள் அடக்கிக் காட்டியதுண்டே?

அப்படியிருக்க உன் மனைவியை நீ அடக்குவதா பிரமாதம்? மனைவியை எப்படி நடத்த வேண்டும் என்று புத்திபூர்வமாகச் சிந்தித்து அவளுடன் நல்ல வாழ்க்கை வாழ முயல்வாய்! கட்டாயம் உன்னால் அது முடியும். உன் பிரச்னையைச் சரிவர விளக்கு. நான் உன் நல்வாழ்விற்கு வழி சொல்கிறேன்!`

அவரது அன்பான பேச்சு அவனைச் சற்றுச் சிந்திக்க வைத்தது. தான் எதுசொன்னாலும் அதற்கு மாறாகச் செய்கிறாள் தன் மனைவி என்று அவரிடம் ஆதாரங்களுடன் விளக்கினான் அவன். அவர் சற்று நேரம் யோசித்தார். பிறகு ஓர் அருமையான உபாயம் சொன்னார்:

`இனி உன் மனைவியிடம் உனக்கு எது தேவையோ அதற்கு நேர்மாறாக அவளிடம் சொல். அவள் மாற்றிச் செய்தால் அது நீ விரும்பியபடி இருக்கும். உதாரணமாக நீ வெளியே செல்ல விரும்பினால், நான் நிச்சயம் வெளியே செல்ல மாட்டேன் என்று சொல். சுண்டைக்காய் வற்றல் குழம்பு சாப்பிட விரும்பினால் இன்று சுண்டைக்காய் வற்றல் குழம்பு மட்டும் கட்டாயம் செய்யாதே, எனக்குப் பிடிக்காது என்று சொல். வெந்நீர் வேண்டும் என்றால் பச்சைத் தண்ணீர் கொண்டுவா என்று சொல். அவள் கட்டாயம் நீ சொன்னதற்கு மாறாகச் செய்வாள். எனவே நீ விரும்பியது நடந்துவிடும். இதை அவள் அறியாமல் எச்சரிக்கையாகச் செய்யவேண்டும். ஜாக்கிரதை!`

அவன் பெரியவர் சொன்ன இந்த உபாயத்தை மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டு வீடு திரும்பினான்.

வீட்டுக்கு வந்ததும் அவனுக்கு நல்ல பசியெடுத்தது. `பெண்ணே! இன்று நீ சமைக்காதே. நீ சமைத்தால் எனக்குக் கடும்கோபம் வரும். சொல்லிவிட்டேன். நான் இன்று முழுவதும் சாப்பிடப் போவதில்லை!` என்றான் மனைவியிடம்.

மனைவி கலகை `அதென்ன சாப்பிடாமல் இருப்பது? அப்படியிருந்தால் உடம்பு என்னத்திற்காகும்? உடம்பைப் பட்டினி போட்டுக் கெடுப்பதாவது? நீங்கள் சாப்பிடத்தான் வேண்டும்!` என்று அறுசுவை விருந்து சமைத்துப் பரிமாறினாள்.

மகிழ்ச்சியோடு சாப்பிட்ட அவன், `எனக்குக் காற்று வேண்டாம். குளிராக இருக்கிறது. விசிறியால் வீசாதே!` என்றான். `அதென்ன, காற்றுப் படாமல் இருக்கலாமோ? மனிதர்கள் சாப்பிட்ட பிறகு சற்று காற்று வாங்கிவிட்டு உறங்குவதுதானே எங்கும் உள்ள வழக்கம்? ஏன் தான் வழக்கத்திற்கு மாறாகச் சொல்கிறீர்களோ? இருங்கள். விசிறி எடுத்து வருகிறேன்!` என்ற அவள் விசிறியெடுத்து அவனுக்கு விசிறலானாள். இந்த உபாயப்படியே தொடர்ந்து கணவன் நடக்கலானான்.

`இனிமேல் என். வேட்டியை நீ துவைக்காதே. நானே துவைத்துக் கொள்கிறேன்! நீ துவைத்தால் எனக்குப் பிடிப்பதில்லை!` என்றான். `ஓகோ. அவ்வளவு ஆசாரமா நீங்கள்? எங்கள் வீட்டிலும் கூட நாங்கள் ஆசாரம் தான். நான் துவைத்தால் நீங்கள் கட்ட மாட்டீர்களோ? நான் துவைத்தால் உங்கள் வேட்டி வெளுக்காதோ? நீங்கள் துவைத்தால் தான் அதன் அழுக்குப் போகுமோ?` என்று உறுமிய அவள், அவன் வேட்டியையும் அவனது பிற துணிமணிகளையும் அவளே மாங்குமாங்கு என்று துவைக்கலானாள்.

`ஆகா. இதுவரை இந்த உபாயம் அறியாமல் போனோமே!` என்று அவன் ஆனந்தமடைந்தான். என்றாலும் தான் வேண்டுமென்றே இப்படிச் சொல்கிறோம் என்பது ஒருசிறிதும் தெரியாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டான். அவள் செய்கிற செயல்களால் தன்னிடம் தோன்றும் மகிழ்ச்சியை அவன் முகத்தில் காட்டிக்கொள்ளாமல் இருக்கப் பழகிக்கொண்டான்.

அவன் தந்தைக்கு திதி வந்தது. பித்ருக்களுக்குத் திதி கொடுக்கவேண்டியது முக்கியக் கடமை அல்லவா? திதி கொடுக்காவிட்டால் மாபெரும் தோஷங்கள் வந்துசேரும் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றனவே? `நாளை என் தகப்பனாருக்குத் திதி. யாரேனும் திவசம் செய்வார்களோ? வீண் செலவு! எனவே நான் திவசமெல்லாம் செய்யப் போவதில்லை!` என்றான் மனைவியிடம்.

`என்னத்துக்கு திவசம் செய்யாமல் இருக்கவேண்டும்? நல்ல கூத்து இது. ஊர் உலகத்தில் எல்லோரும் திவசம் செய்வதில்லையா என்ன? உங்களுக்கு ஏன் தான் இப்படி புத்தி கெட்டுப் போகிறதோ?` என்ற அவள், விதிப்படி திவசத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்தாள். `வீட்டைப் பெருக்கி மெழுகாதே. இன்று சமைக்காதே!` என்றான் கணவன். `அதென்ன, எதுக்கு அப்படி இருப்பது? நான் என்ன வியாதிக்காரியா?` என்ற அவள் வீட்டைக் கூட்டி மெழுகி தானே சமைக்கவும் செய்தாள். கணவன் எண்ணப்படியே திவசம் மிகச் சிறப்பாக நிறைவேறியது.

திவசத்தின் இறுதியில் பிண்டம் போடுவதுதானே மிக முக்கியமானது! இன்னும் அது ஒன்று மட்டும்தான் பாக்கி. அந்தத் தருணத்தில் அளவற்ற மனநிறைவை அடைந்தான் கணவன். மனைவியிடம் தான் பேசும் வழக்கமான உபாயத்தை மறந்தான். `கலகை. என் அன்பே! நல்ல முறையில் திவசம் கொடுத்துவிட்டோம். வானுலகில் இருக்கும் என் தந்தை மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார். சுத்தமான நீரில் இந்தப் பிண்டத்தைப் போடு! நமக்குச் சகல மங்கலங்களும் உண்டாகும்! திவசத்தின் முக்கியப் பகுதியே பித்ருக்களுக்குப் பிண்டம்

அளிப்பதுதானே?` என்றான்.

`எதற்குச் சுத்தமான நீர்? வேறு வேலையில்லை! பிண்டத்தை அழுக்கு நீரில் போட்டால் போதாதோ?` என்ற அவள் பித்ருக்களுக்குரிய அந்தப் புனிதமான பிண்டத்தைச் சாக்கடை நீரில் போட்டாள்.

சிரத்தையோடு செய்த திவச பலன் முழுவதும் ஒருகணத்தில் பறிபோயிற்றே என்று கடும்கோபம் கொண்ட அவன் பொறுக்கமுடியாத ஆத்திரம் அடைந்தான். அவளை `குடிக்க நீரும் தங்க நிழலும் இன்றி நீ பேயாக அலையக் கடவாய்!` என்று சபித்துவிட்டு வீட்டை விட்டுப் போய்விட்டான். கலகை அன்றுமுதல் பேயாய் அலையத் தொடங்கினாள்.

அந்தப் பேய் சொன்ன தன்னிரக்கம் நிறைந்த வரலாற்றைப் பொறுமையாகக் கேட்டார் தர்மாங்கதர். `என்னை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் சுவாமி!` என்ற அதன் வேண்டுகோளையும் அவர் ஏற்றார். தன்னைச் சரண் என்று வந்தவர்களை எப்பாடு பட்டேனும் காப்பாற்ற வேண்டியது கடமையல்லவா?

புண்ணியத்தாலும் என்ன பயன், இறைச்சிந்தனை மட்டுமே போதும் என்று நிறைவுடன் இருந்த அவர் தன் புண்ணியத்தின் பாதியை அந்தப் பேய்க்குத் தர முடிவெடுத்தார். தன் கைகளில் நீர்விட்டு தனது பாதிப் புண்ணியத்தைப் பேய்க்கு முறைப்படி தத்தம் செய்தார். நீரைக் கரத்திலிட்டு தத்தம் செய்த மறுகணம் பேய் தன் பேயுடல் மாறி மீண்டும் ஒரு பெண்ணாக உருப்பெற்றது. தனக்குப் புது உடல் தந்த தர்மாங்கதரை நன்றியோடு நமஸ்கரித்தாள் அந்தப் பெண்.

அடுத்த கணம் நிகழ்ந்த நிகழ்ச்சி விந்தையானது. வானிலிருந்து ஒளிவீசும் புஷ்பக விமானம் இறங்கி வந்தது. அதிலிருந்த விஷ்ணுவின் அழகிய சேவகர்கள் அவர்கள் இருவரையும் வைகுண்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள். சங்கு சக்கரதாரியாக வைகுண்டத்தில் வீற்றிருந்த திருமால் கனிவோடு இருவரையும் பார்த்தார். லட்சுமி தேவியிடம் அவர்கள் இருவரையும் அறிமுகப்படுத்தினார். பிறகு ஆனந்தத்துடன் சொல்லத் தொடங்கினார்:

`புண்ணியத்தையே தானம் செய்ததாலும் புண்ணியத்தைப் பெற்றதாலும் நீங்கள் இருவரும் வைகுண்டம் வந்துவிட்டீர்கள். தர்மாங்கதரே! புண்ணியத்தைக் கூட லட்சியம் செய்யாமல் எப்போதும் இறைச் சிந்தனையிலேயே தோய்ந்திருக்கும் உம் பக்தியை நான் மெச்சுகிறேன். உமக்கு முக்தி அருளுகிறேன். இந்தப் பெண் அசுவபதி நாட்டு மன்னனுக்கு கைகேயி என்ற பெயரில் மகளாகப் பிறக்கட்டும். நான் கோசலைக்கு மகனாகப் பிறந்தாலும் தான் பெற்ற புண்ணியத்தின் பலனாக என் மேல் அன்புசெலுத்தி என்னை வளர்க்கும்

பாக்கியம் பெறுவாள் இவள். அதுமட்டுமல்ல. இவளின் இயல்பால் இவள் கலகம் செய்து என்னைக் காட்டுக்கு அனுப்பி ராவண வதம் நிகழவும் உதவுவாள்! அந்த வகையில் நிகழவிருக்கும் ராமாயணத்தில் எதிர்காலத்தில் மிக முக்கியப் பங்கு வகிப்பாள் இவள்!` என்று திருவாய் மலர்ந்தருளினார் பரந்தாமன்.

தர்மாங்கதர் மேலும் கலகை மேலும் தேவர்கள் பொழிந்த பூமாரியால் அவர்கள் மனம் குளிர்ந்தது. கைகேயி எப்போது பூமியில் ஜனிக்கப் போகிறாள், எப்போது ராமன் பிறந்து ராவண வதம் நிகழப் போகிறது என தேவர்கள் ஆவலோடு காத்திருக்கத் தொடங்கினார்கள்.



3

சுனயனா தேவியின் கேள்வி!

தம் கையில் உள்ள விஷ்ணு அம்சமான மாபெரும் வில்லைத் தாங்கியவாறு மிதிலை வீதிகளில் விறுவிறுவென்று நடந்துவந்தார் பரசுராமர். வாட்டசாட்டமான தோற்றத்தோடு கம்பீரமாக நடந்துவரும் அவரைப் பார்த்து மக்கள் வணங்கி வழிவிட்டார்கள். அவரைத் தரிசிப்பதே புண்ணியமல்லவா என்று தெருக்களின் இருமருங்கிலும் இருந்த மக்கள் கண்ணகல அவரது ஒளிவீசும் தோற்றத்தைப் பார்த்து பிரமித்தார்கள். தங்கள் மன்னர் ஜனகரின் பெருமையால் அல்லவோ இவரைப் போன்ற உயர்நிலைத் துறவிகள் தங்கள் நாட்டுக்கு வருகை தருகிறார்கள் என்று தங்களுக்குள் மெல்லிய குரலில் பெருமிதம் பொங்கப் பேசிக்கொண்டார்கள்.

பிரம்ம ஞானியான மாமன்னர் ஜனகரைச் சந்தித்து உரையாடிவிட்டுச் செல்லலாம் என்பதுதான் பரசுராமரின் மிதிலை வருகையின் நோக்கம். எப்போதாவது அவர் மிதிலைக்கு ஜனகரைச் சந்தித்துப் பேசவென்றே இவ்விதம் வருவதுண்டு.

பொதுவாக மன்னர்களை அவர் வெறுத்தாலும் ஜனகர் மேல் மட்டும் அவருக்கு மிகுந்த மதிப்புண்டு. அதுசரி. ஜனகரை மன்னர் என்று மட்டும் சொல்லலாமோ? அவர் ராஜரிஷி என்றல்லவோ அறியப்பட்டிருக்கிறார்? அரசராக இருந்தாலும் ஒரு முனிவருக்கே உரியதான பற்றற்ற தன்மையுடன் நாட்டை ஆளும் அவரது கீர்த்தி, இரவில் முழுநிலவின் ஒளி உலகெங்கும் பரவியிருப்பதுபோல எங்கும்

பரவியிருந்தது.

மிக வேகமாக அரண்மனை நோக்கி நடந்தார் பரசுராமர். தம் பெருமையை உணர்ந்து தம்மை நன்கு உபசரிப்பவரும் தமக்குச் சமமாக வேத வேதாந்தக் கருத்துகளைப் பேசுபவருமான ஜனகரைச் சந்திக்கச் செல்வதில் அவர் உள்ளம் மகிழ்ச்சி கொண்டது.

வழிநெடுக ஒரு பார்வை பார்த்தவாறே வந்த அவரது விழிகள் ஆச்சரியத்தில் விரிந்தன. முன்னெப்போதும் அவர் கண்டிராத செழுமையும் வளமும் மிதிலையில் தென்பட்டன. அவர் எத்தனையோ தேசங்களுக்குச் செல்பவர் தான். அவர் ஓர் யாத்திரீகர். ஆனால் எந்த நாட்டிலும் இப்போது மிதிலையில் தென்படும் இத்தகைய பெரும் வளத்தை அவர் பார்க்க நேர்ந்ததில்லை. அவ்வளவென்ன? இந்த மிதிலையிலேயே முன்னர் அவர் வருகை தந்தபோது இத்தகைய வளத்தைப் பார்த்ததில்லை.

செடிகொடிகளில் மலர்கள் உல்லாசமாகத் தங்களுக்குத் தாங்களே சிரித்துக் கொள்கிற மாதிரிக் கொல்லென்று பூத்துச் சொரிந்திருந்தன. மா, பலா, வாழை, தென்னை போன்ற மரங்கள் இலைகளால் அல்ல, பழங்களால் மூடிக் கிடந்தன. பசுக்களின் மடிகளிலிருந்து பால் தானாய்ச் சுரந்துகொண்டிருந்தது. இங்கே இத்தனை வளம் இப்படி அபரிமிதமாகத் தோன்றக் காரணம் என்ன?

வீடுகளில் திறந்திருந்த சாளரங்களின் வழியே சற்றுத் தன் பார்வையைப் படரவிட்டார். அவர் மனம் திகைப்படைந்தது. இல்லங்களில் இரும்புப் பாத்திரங்களுக்கு பதிலாக எல்லோரும் தங்கப் பாத்திரங்களையும் வெள்ளிப் பாத்திரங்களையும் பயன்படுத்தத் தொடங்கியிருந்தார்கள். இதென்ன மண்ணுலகமா, இல்லை விண்ணுலகமா?

இதற்கெல்லாம் என்ன காரணம் என்று யோசித்தவாறே பரசுராமர் ஜனகரின் அரண்மனை வாயிலுக்கு வந்துசேர்ந்தபோது, அந்த வாயிலில் அந்தக் காரணம் பாவாடை, தாவணி கட்டிக்கொண்டு காட்சிதந்தது! ஆம். மகாலட்சுமியின் அவதாரமான சீதாதேவி அங்கே தன் தங்கைகள் மூவருடன் பூப்பந்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

ராஜகுமாரியான சீதையின் தெய்வீக அழகைப் பார்த்து ஞான திருஷ்டியால் அவள் லட்சுமிதேவியின் அவதாரமே என்று கண்டுணர்ந்தார் பரசுராமர். மானசீகமாக அவளைத் தொழுதார். லட்சுமி இருக்கும் இடத்தில் வளம் கொழிப்பதில் என்ன வியப்பு என்று எண்ணிக் கொண்டார். நிலத்தை உழும்போது மண்ணிலிருந்து ஜனக மன்னனுக்கு ஒரு குழந்தை கிடைத்ததையும் அவன் அந்தக் குழந்தையை மிகுந்த பிரியத்தோடு வளர்த்து வருவதையும் அவர் ஏற்கெனவே கேள்விப்

பட்டிருந்தார்.

அதற்குள் பரசுராமரின் வருகை பற்றி அறிந்த ஜனகர் அரண்மனை வாயிலுக்கு வந்து அவரை வரவேற்றார். சீதையை அழைத்துப் பரசுராமரை வணங்கச் சொன்னார். சீதாதேவி இருகரம் கூப்பி வணங்கினாள். பரசுராமரும் கூட ஆசி கூறிக் கையை உயர்த்தாமல் அவ்விதமே சீதையை வணங்கியது ஜனகருக்கு ஆச்சரியம் தந்தது.

`என் புதல்வியை கைகூப்பி வணங்குகிறீர்களே? கையுயர்த்தி ஆசியல்லவா வழங்கவேண்டும்?` சிரித்துக் கொண்டே வினவினார் ஜனகர்.

`எல்லோர் உள்ளத்திலும் இருக்கும் தெய்வம் கைகூப்பி வணங்கத் தக்கதுதான் அல்லவா?` என்று நகைத்தவாறே பதில் சொன்னார் பரசுராமர். சீதை குதித்துக் கொண்டே தன் விளையாட்டைத் தொடர ஓடினாள்.

பரசுராமரும் ஜனகரும் அரண்மனையின் உள்ளே செல்ல எத்தனித்தார்கள். பரசுராமரின் ஆகப்பெரிய விஷ்ணுவில் அரண்மனை வாயிலை விடவும் பிரம்மாண்டமாய் இருந்தது. நூற்றுக்கணக்கான பேர் சுமக்க வேண்டிய அளவு கனம் நிறைந்த அந்த வில்லை அவர் தாம் ஒருவராகவே அல்லவா சுமந்து திரிகிறார்! அந்த வில்லை வாயில்புறத்திலேயே ஓர் ஓரமாகச் சார்த்தி வைத்த பரசுராமர், ஜனகருடன் உள்நடந்தார்.

ஜனகரின் உத்தரவின்பேரில் தமக்கு நடைபெற்ற ஆசார உபசாரங்களை முறுவலுடன் ஏற்றுக்கொண்டார். ஜனகரின் மனைவி சுனயனா தேவி கொண்டுதந்த கனிவர்க்கங்களையும் பாலையும் அருந்திப் பசியாறினார்.

அப்போது சுனயனா தன் கணவரிடம் ஏதோ ஒரு விண்ணபத்தைச் சொல்வதையும் கேட்போம் கேட்போம் என்கிற பொருளில் ஜனகர் தலையசைப்பதையும் பார்த்தார். பின் மெல்லப் பேசலானார்:

`ஜனகரே! மகாராணி என்னிடம் கேட்கும்படி ஏதோ உங்களிடம் அறிவுறுத்துகிறாளே? அது என்ன விஷயம் என்று நான் அறிந்துகொள்ளலாமா? மகளே சுனயனா! நீயே கூட என்னிடம் நேரடியாகக் கேட்கலாமே? என்ன கேட்க விரும்புகிறாய் நீ?`

அதைக் கேட்ட ஜனகர் கலகலவென்று நகைத்தார்.

`சுனயனா! நீ கேட்காமலே கூட என்ன கேட்க விரும்புகிறாய் என்று தெரிந்துகொள்ளும் ஞான திருஷ்டி உடையவர் முனிவர் பெருமானான பரசுராமர். ஆனால் உன் குரலைக் கேட்க வேண்டும் என்று அவர்

விரும்புகிறாற்போல் தோன்றுகிறது. நல்லது. உன் கேள்வியை நான் ஏன் கேட்க வேண்டும்? நீயே கேட்டுவிடு!`

சுனயனா தேவி பரசுராமரைப் பணிந்து நமஸ்கரித்தாள். பின்னர் அந்தத் தவசிரேஷ்டரை நோக்கிக் கூப்பிய கரங்களுடன் பேசலானாள்:

`சுவாமி! நெடுங்காலமாயிற்று தாங்கள் இங்கு வந்து. தங்கள் வருகையால் இன்று மிதிலை சிறப்படைந்தது. மண்மகளாய் சீதாதேவி பிறந்து வளர்ந்துவருவதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். சீதையின் அளவற்ற பேரெழிலைப் பார்த்து என் மனம் கவலை கொள்கிறது. இவளுக்குப் பொருத்தமான பேரழகுடைய ஒருவன் பூமியில் இருப்பானா? எப்படி இவள் திருமணம் நடக்கும்? இதுகுறித்துத் தாங்கள் ஞானதிருஷ்டியால் கண்டு சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். நான் தங்கள் மகளைப் போல. அப்படியானால் சீதாதேவி உங்கள் பெயர்த்தியைப் போல. சீதையின் திருமணம் நல்லபடியாக நடக்குமா சுவாமி?`

பரசுராமர் கனிவோடு சுனயனாவைப் பார்த்தார். தெய்வத்தையே வளர்க்கும் பாக்கியம் பெற்ற அவள் மேல் சற்றுப் பொறாமை கூடத் தோன்றியது அவருக்கு. தன் பெருமையை அறியாமல் பேசுகிறாளே இவள்! உலகையெல்லாம் காத்து ரட்சிக்கும் தாய் அல்லவா சீதாதேவியாகிய லட்சுமிதேவி! அனைத்து உயிர்களையும் பற்றிக் கவலைப்படும் அவளது திருமணம் குறித்து நாம் கவலைப்படுவதாவது?

`சீதாதேவி எனக்குப் பெயர்த்தி அல்ல அம்மா. அவள் என் தாய்!`

பரவசத்தோடு சொன்னார் பரசுராமர். சுனயனா திடுக்கிட்டாள். `என்ன சொல்கிறீர்கள் சுவாமி?` என்று பரபரப்பாகக் கேட்டாள். பரசுராமர் அதற்குள் சுதாரித்துக் கொண்டார். சீதாதேவி லட்சுமியே என்ற அவதார ரகசியத்தைத் தாம் அறிந்துகொண்டாலும் மற்றவர்களுக்குச் சொல்லக் கூடாதல்லவா?

`துறவிகள் எல்லாப் பெண்களையும் தாயாகப் பார்க்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் சொன்னேன் அம்மா!` என்று கூறிச் சமாளித்தார்.

`நல்லது சுவாமி. எங்கள் மகளுக்கேற்ற பொருத்தமான வாலிபன் ஒருவன், இவள் அழகுக்கு நிகரானவன் கிடைப்பானா? இவள் திருமணம் நல்லபடியாக நடக்குமா?` சுனயனா மறுபடி கேட்டாள். பரசுராமர் சிரித்துக் கொண்டார்.

`மகளே சுனயனா! உனக்கு மிகப் பொருத்தமாக ஒரு கணவர் அமையவில்லையா? அதுபோல் உன் மகளுக்கும் ஒரு கணவர்

அமைவார். கவலைப்படாதே.`

`அவர் எப்படிப்பட்டவராக இருப்பார் சுவாமி? எங்களை விட உயர்ந்த இடம் என்றால் எங்களால் சம்பந்தம் செய்துகொள்ள முடியுமா? எங்களுக்காக அவர் இறங்கி வருவாரா?`

`சந்தேகமில்லாமல் உயர்ந்த இடத்திலிருந்து இறங்கி வந்தவர்தான் அம்மா உன் மாப்பிள்ளை. உன் மகளைத் தேடிவருவார் அவர். மூவரில் ஒருவராக இருந்த அவர் இப்போது நால்வரில் ஒருவராகப் பிறந்திருக்கிறார்.`

சுனயானாவுக்கும் ஜனகருக்கும் ஆசி கூறிய பரசுராமர் புறப்பட்டார். தம்பதி இருவருமாக வாயில் வரை வந்து அவரை வழியனுப்பினார்கள். தன் வில்லை எடுத்துக் கொள்ள வேண்டி அது சார்த்தி வைக்கப்பட்டிருந்த இடத்தைப் பார்த்தார் பரசுராமர். அங்கே வில்லைக் காணவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தபோது சீதாதேவி அந்த வில்லைக் கையில் வைத்துக் கொண்டு தன் தங்கைகளை விளையாட்டாய் அச்சுறுத்திக் கொண்டிருந்த காட்சி தென்பட்டது. பரசுராமர் தனக்குள் நகைத்துக் கொண்டார். இந்த வில் திருமாலின் வில். திருமாலின் அவதாரமான ராமனிடம் விரைவில் போகப் போகிறது இது. தன் கணவரின் உரிமைப் பொருள் என்பதால் தான் சீதாதேவிக்கு அந்த வில்லின் மேல் நாட்டம் வந்ததோ என்னவோ?


பரசுராமரைப் பார்த்த சீதாதேவி ஓடோடி வந்து அந்த வில்லை அவரிடம் ஒப்படைத்தாள். நூறுபேருக்குமேல் சேர்ந்து தூக்க வேண்டிய வில்லை சீதை தனியொருத்தியாகத் தூக்கியிருப்பது கண்டு ஜனகரும் சுனயனாவும் வியப்பில் ஆழ்ந்தார்கள்.

வில்லைக் கையில் வாங்கிக் கொண்ட பர்சுராமர், சுனயனாவிடம் சொல்லலானார்:

`மகளே சுனயனா! இவள் அழகுக்குப் பொருத்தமாக மாப்பிள்ளை பார்த்தால் மட்டும் போதாது. அந்த மாப்பிள்ளை இந்த பிரம்மாண்டமான வில்லையே அநாயாசமாகத் தூக்கிய இவளது வலிமைக்கும் பொருத்தமானவனாக இருக்க வேண்டும். அப்படியொருவன் இருக்கிறான். மூவரில் ஒருவனான அவன், இங்கு வரும்போதும் மூவரில் ஒருவனாகத் தான் வருவான். என்னைப் போன்ற ஒரு மகரிஷி சீதாதேவியையும் அவனையும் சேர்த்து வைப்பதற்காக மிதிலை நோக்கி அவனை அழைத்து வருவார். கவலைப்படாதே. விரைவில் உன் மகளின் கல்யாண வேலைகளில் நீ பரபரப்பாகி விடுவாய்.`

சொன்ன பரசுராமர் சீதையைப் பார்த்துச் சிரித்தவாறே அனைவரிடமும் விடைபெற்றுப் புறப்பட்டுச் சென்றார். மறுபடியும் தாம் மிதிலை

வரவேண்டியிருக்கும் என்பதும் அப்போது ஸ்ரீராமனிடம் அவனுக்கு உரிய இந்த விஷ்ணு வில்லைத் தாம் தரவேண்டியிருக்கும் என்பதும் அவருக்குத் தெரியும். தன் மனக்கவலை நீங்கும் வகையில் பேசிய பரசுராமர் சென்ற திசையை நோக்கிக் கைகூப்பித் தொழுதாள் சுனயனா தேவி.



4

பூமியிலிருந்து தோன்றிய நிலவு!

பொன்வெய்யில் வீசிக்கொண்டிருந்த இள மாலை நேரம். மிதிலை அரண்மனையின் வில்லரங்கத்திற்கு வெளியே அந்த நான்கு பெண்களும் கலகலவென்று சிரித்தவாறே பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் உற்சாகமும் துள்ளலும் அவர்களிடையே நிலவிய பாசமும் பார்க்க ரம்மியமான காட்சியாக இருந்தன.

வழிவழியாக வந்த சிவதனுசு தனியே ஒரு பூஜையறையில் வைக்கப்பட்டிருந்தது. வில்லரங்கம் என்றே அந்த அறையை எல்லோரும் குறிப்பிட்டார்கள்.

நாள்தோறும் அதிகாலையில் வில்லுக்குப் பூஜை செய்வார் ஜனக மகாராஜா. மற்றபடி அந்த அறையில் நடமாட்டமிராது.

அந்த வில்லரங்க அறைக்கு வெளியே தான் சீதை, ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி ஆகிய அந்த நான்கு பெண்களும் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சற்றுத் தொலைவில் இருந்த நந்தவனத்தில் மனைவி சுனயனாவோடு நடைபயின்று கொண்டிருந்த ஜனகர், தொலைவிலிருந்தே அந்தப் பெண்கள் பந்து விளையாடும் காட்சியைக் கண்டு ரசித்தார்.

எல்லோருமே அழகுதான். ஆனால் சீதையின் அழகு தனி. மூன்று நட்சத்திரங்களிடையே ஒரு நிலவு மாதிரித் தோன்றியது சீதையைப் பார்க்கும் போது.

தான் நிலத்தை ஏர்பூட்டி உழுதபோது தன் தங்கக் கலப்பையின் நுனியில் பூமியிலிருந்து தானே தோன்றிய பெண்ணல்லவா சீதை? வானத்தில் தான் நிலவு தோன்றும். இது பூமியிலிருந்து தோன்றிய நிலவு.

தனக்கு சீதை புதல்வியாகக் கிடைத்த அந்த நாள் எப்பேர்ப்பட்ட அதிர்ஷ்டகரமான நாள்! சிரித்துக் கொண்டார் ஜனகர்.

`நாதா! தன்னந்தனியாய்ச் சிரிப்பானேன்? என்னிடமும் சொல்லிவிட்டுச் சிரித்தால் நானும் சேர்ந்து சிரிப்பேனல்லவா?`

சுனயனா அன்போடு கேட்டாள்.

`அதோபார். நான்கு பெண்களும் பந்து விளையாடுகிறார்கள். அவர்களில் சீதையைப் பார். நட்சத்திரங்களிடையே நிலவு மாதிரித் தோன்றவில்லை? சீதை பூமியிலிருந்து தோன்றியவள். ஆதலால் அவளை பூமியிலிருந்து தோன்றிய நிலவு என்று நினைத்தேன். சிரித்துக் கொண்டேன்.`

சுனயனா தானும் அந்த உவமையை ரசித்து மகிழ்ந்தாள்.

`பிரபோ! என் வயிற்றில் பிறந்த மகள் ஊர்மிளை அழகுதான். உங்கள் தம்பி பெண்களான மாண்டவி, சுருதகீர்த்தி இருவரும் கூட நல்ல அழகுதான். ஆனால் இந்த மூன்று பெண்களுடைய அழகும் மானிட அழகு. நம் மகள் பூமியின் புதல்வி சீதையின் அழகோ தெய்வீக அழகு. அவள் அழகிற்கு இணையாக யாரையும் சொல்ல இயலாது.`

சுனயனா சொன்னதை ஒப்புக்கொண்டவாறே ஜனகர் யோசித்தார். நான்கு பெண்களுமே கல்யாண வயதை எட்டிவிட்டார்கள். இவர்களுக்கு மாப்பிள்ளை பார்த்தாகவேண்டும். முக்கியமாக சீதைக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டும்.

இவள் அழகுக்கு ஏற்ற பேரழகன் எங்கே இருக்கிறான்? அவன் யார்? தெரிந்துகொள்ள வேண்டுமானால் விரைவில் இவளுக்கு சுயம்வரம் நடத்த வேண்டியதுதான்.

ஜனகர் தன் கருத்தைத் தன் மனைவி சுனயனாவிடம் தெரிவித்தார். சுனயனாவும் சுயம்வரம் நடத்தும் திட்டத்தை ஆதரித்தாள்.

பேசியவாறே அவர்கள் இருவரும் தங்கள் நடைப்பயிற்சியை முடித்துக் கொண்டு அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

பந்து விளையாட்டு தீவிரமடைந்தது. ஒருவரையொருவர் கேலி செய்துகொண்டும் கிண்டல் செய்துகொண்டும் தாவித் தாவிப் பந்தைப் போட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார்கள் நான்கு பெண்களும்.

சீதை தன்னிடம் வந்த பந்தை ஓங்கி ஒரு தட்டுத் தட்டினாள். சீதையால் தட்டப்பட்ட பந்து மிகுந்த உற்சாகத்தோடு பறந்துசென்றது. வில்லரங்க அறைக்குள் போய் விழுந்தது.

சீதை வியர்த்து விறுவிறுத்துப் போயிருந்தாள். தன் வியர்வையை முந்தானையால் ஒற்றியெடுத்தவாறே, அவள் நின்றுகொண்டே சற்று ஓய்வெடுத்தபோது, மீதி மூன்று பெண்களும் வில்லரங்க அறைக்குள் சென்று பந்தைத் தேடினார்கள்.

என்ன சங்கடம்! பந்து வில்லுக்குக் கீழேபோய் மாட்டிக் கொண்டிருந்தது. வில்லை நகர்த்தினாலொழியப் பந்தை எடுக்க முடியாது.

தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு `ஆட்டம் இன்றைக்கு இவ்வளவு தான்!` என்றவாறே அவர்கள் சலிப்போடு வந்தபோது, சீதை விஷயத்தை விசாரித்து அறிந்தாள்.

`இதற்காக ஆட்டத்தை நிறுத்தவேண்டிய தேவை என்ன வந்தது இப்போது? வில்லை நகர்த்தி வைத்துவிட்டுப் பந்தை எடுக்க வேண்டியதுதானே? விளையாட்டைத் தொடரலாமே?` என்றாள் சீதை. மீதி மூன்று பெண்களும் நகைத்தார்கள்.

`என்ன சொல்கிறாய் சீதா? விஷயம் தெரிந்துதான் சொல்கிறாயா? அறுபதினாயிரம் வீரர்கள் சேர்ந்து தூக்கினால் தான் வில் ஓர் அங்குலம் நகரும். அப்படியிருக்க இந்தப் பந்தை எடுக்க இப்போது அறுபதினாயிரம் வீரர்களைக் கூப்பிடச் சொல்கிறாயா?`

சீதை பதிலெதுவும் சொல்லாமல் மூன்று பெண்களும் பின்தொடர வில்லரங்க அறைக்குள் நுழைந்தாள். இடது கையால் வில்லை எடுத்து சுவர் ஓரமாகச் சாய்த்து வைத்துவிட்டு, பந்தை எடுத்தாள். `வாருங்களடி. தொடர்ந்து விளையாடலாம்!` என்றவாறே வில்லரங்க அறைக்கு வெளியே நடந்தாள்!

ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி மூவரும் மிகுந்த வியப்படைந்தவர்களாய் அவளைப் பின்தொடர்ந்தார்கள்.

மறுநாள் வில்லுக்குப் பூஜைசெய்ய வேண்டி வில்லரங்கத்திற்கு வந்தார் ஜனகர். அறுபதினாயிரம் பேர் சேர்ந்து தூக்க வேண்டிய பிரம்மாண்டமான வில், தரையிலிருந்து எடுக்கப்பட்டு சுவரில் ஓர் ஓரமாகச் சாய்த்து வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தார்.

நேற்று இப்படிச் செய்யுமாறு தான் ஏதும் உத்தரவிடவில்லையே? ஏன் வீரர்கள் கூடி இப்படிச் செய்திருக்கிறார்கள்? அவர் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

பாராச் சேவகனை அழைத்தார். அறுபதினாயிரம் வீரர்கள் எப்போது இங்கு வந்தார்கள் என்று விசாரித்தார். அவன் ஆச்சரியமடைந்தான்.

`அப்படியெல்லாம் யாரும் வரவில்லையே மகாராஜா! நேற்று ராஜகுமாரிகள் தான் இங்கே பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். பந்து வில்லரங்கத்தின் உள்ளே போனபோது அவர்கள் தான் அதை எடுத்துக் கொண்டு வெளியே வந்து மீண்டும் விளையாடினார்கள்!`

கேட்கக் கேட்க ஜனகருக்குத் தலைசுற்றுவது போல் இருந்தது! நான்கு பெண்களையும் விசாரிக்க வேண்டி, அவர்களை உடனே அழைத்துவர உத்தரவிட்டார்.

நால்வரும் அவர் முன் வந்து நின்றார்கள்.

`நேற்று வில்லரங்க அறைக்கு யார் வந்தது? வில் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருக்கிறதே?` என்று விசாரித்தார் ஜனகர். சீதை கலகலவென்று சிரித்தவாறே முன்னே வந்தாள்.

`நான்தான் அப்பா பந்தை எடுப்பதற்காக வில்லை எடுத்து ஓர் ஓரத்தில் வைத்தேன். பிறகு அந்த வில்லை இருந்த இடத்திலேயே வைக்க மறந்துவிட்டேன் போலிருக்கிறது. அதற்கென்ன? இப்போது வைத்தால் போயிற்று!` என்றவாறே ஜனகர் முன்னிலையிலேயே வில்லை எடுத்து மறுபடி அது இருந்த இடத்தில் வைத்தாள் சீதை!

அந்தக் காட்சியைக் கண்கூடாக நேரில் பார்த்த ஜனகர் திகைப்பின் உச்சத்தை அடைந்தார். தாம் காண்பது கனவா இல்லை நனவா!

`சீதா! உன்னைச் சாதாரண ராஜாவுக்கு மனைவியாக்கக் கூடாது. நீ அசாதாரணமான வலிமை பெற்றவள். எனவே நீ அநாயாசமாகத் தூக்கிய இந்த வில்லை யார் துணையுமில்லாமல் தானே எடுத்து யார் நாணேற்றுகிறாரோ அவர்தான் உனக்கு மங்கல நாண் பூட்டக்கூடிய மாப்பிள்ளை!`

ஜனகர் இப்படிச் சொன்னபோது `போங்களப்பா!` என்று வெட்கப்பட்டுக் கொண்டே தன் தங்கைகளையும் இழுத்துக் கொண்டு ஓடி மறைந்தாள் சீதை.

ஆனால் தங்கைகள் அவளைச் சீண்டினார்கள். ஊர்மிளை நகைத்தவாறே சொல்லலானாள்:

`அடி சீதா. இப்படியொரு நிபந்தனையை விதித்துவிட்டாரே தந்தை. மேருமலை போன்ற பிரம்மாண்டமான இந்த வில்லைத் தன்னந்தனியாய்த் தூக்கக் கூடிய ஒருவன் இந்தப் புவியில் யார் இருக்கக் கூடும்? எனவே உனக்குக் கல்யாணமாகாது. நீ தான் மூத்தவள். உனக்குப் பின்தான் எங்களுக்கு மாப்பிள்ளை பார்ப்பார்கள். ஆகையால் எங்களுக்கும்

கல்யாணமாகாது! என்னடி செய்வது இப்போது?`

இதைக் கேட்டு மாண்டவியும் சுருதகீர்த்தியும் நகைத்தார்கள். சீதை சிரித்தவாறே சொல்லலானாள்:

`அதனால் என்ன? நாம் நான்கு பேரும் ஆனந்தமாக இதே மிதிலையில் வாழ்ந்துகொண்டு தொடர்ந்து பந்து விளையாடலாம். திருமண வாழ்க்கை நம்மைப் பிரிக்காது! நல்லதுதானே?`

சற்றுநேரம் யோசனையோடு இருந்த ஊர்மிளை பிறகு சொன்னாள்:

`சீதா! நீ விளையாட்டாகச் சொல்கிறாய். நான் உண்மையாகவே கவலைப்படுகிறேன். நமக்கு மணவயது வந்தாகிவிட்டது. எப்படியும் திருமணம் நடத்திப் புகுந்த வீட்டுக்கு அனுப்பி வைப்பார்கள். அதில் சந்தேகமில்லை. சகோதரிகளாக நாம் நால்வரும் ஆனந்தமாக இருக்கும் இந்த வாழ்வு விரைவில் ஒரு முடிவுக்கு வந்துவிடுமா?`

சற்றுநேரம் யோசித்த சீதை பிறகு சொன்னாள்:

`ஏன் அப்படி முடிவுக்கு வரவேண்டும்? நாம் அனைவரும் ஒரே இடத்தில் வாழ்க்கைப் பட்டால் மீண்டும் நாம் சேர்ந்திருப்போம் அல்லவா?`

`ஒரே ராஜகுமாரனுக்கு நாம் நால்வரும் மனைவிகளாக வேண்டும் என்கிறாயா? அப்போதுதானே அது சாத்தியம்?`

`அடி பைத்தியக்காரி! என்னைத் தவிர இன்னொருத்தியை ஏறெடுத்துப் பார்ப்பவனை நான் மணந்துகொள்வேனா என்ன?`

`அப்படியானால் நாம் நால்வரும் ஒரே இடத்தில் வாழ்க்கைப்பட வேறு என்ன வழி இருக்கிறது?`

`நம்மைப் போலவே நான்கு சகோதரர்கள் ஒரு குடும்பத்தில் இருந்து அவர்கள் நால்வரும் இந்த மிதிலையின் மாப்பிள்ளைகள் ஆனால் அது சாத்தியம் தானே?`

இதைக் கேட்ட உடனே ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி மூவரும் சம்மணமிட்டுத் தரையில் அமர்ந்து பிரார்த்திக்கத் தொடங்கினார்கள்.

`என்ன பிரார்த்தனை செய்கிறீர்களடீ என் செல்லத் தங்கைகளே?` என்று கேட்டாள் சீதை. `நாம் நால்வரும் ஒரே குடும்பத்தில் வாழ்க்கைப் பட வேண்டும் என்று லட்சுமிதேவியைப் பிரார்த்திக்கிறோம்!` என்றார்கள் அவர்கள்.

`உங்கள் வேண்டுதலை லட்சுமிதேவி ஏற்றுக் கொண்டாள். உங்கள் பிரார்த்தனை பலிக்கட்டும்.` என்று லட்சுமிதேவி போலவே கையை

வைத்துக்கொண்டு விளையாட்டாக ஆசிவழங்கினாள் சீதாதேவி. அது உண்மையிலேயே லட்சுமிதேவியின் ஆசிதான் என்பதையும் அது கட்டாயம் பலிக்கப் போகிறது என்பதையும் அறியாத மற்ற மூவரிடமிருந்தும் கலகலவென்று நகைப்பொலி எழுந்தது.

சீதை வைகுந்தத்தில் உறையும் லட்சுமிதேவியின் அவதாரமே என்பதை அறிந்த தேவர்கள், வானிலிருந்தவாறே கைகூப்பி இந்த உரையாடலையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

ராவணனை ஸ்ரீராமன் வதம் செய்யும் நேரம் கொஞ்சம் கொஞ் சமாக நெருங்குவதை எண்ணி அவர்கள் அத்தனை பேரின் மனமும் மகிழ்ச்சியில் துள்ளியது.



5

இடம் மாறிய வில்!

உலகம் வியந்த அந்த அசாதாரணமான நிகழ்ச்சி நடந்து முடிந்தது. ராமன் ஜனகர் சுட்டிக்காட்டிய சிவ தனுசை வளைக்கப் போனான்.

அது படீரென்ற சப்தத்துடன் முறிந்தே விட்டது. சீதை ராமன் தோள்களில் மணமாலையைச் சூட்டினாள்.

சீதையின் தோழிகள் கலகலவென்று சிரித்தவாறே பேசலானார்கள்.

`அடீ சீதா! இந்த வில் ராமனைப் பார்த்ததும் யார் இந்தப் பேரழகன் என்று வியந்திருக்கும். இவனைச் சுற்றிப் புனித ஒளி பரவுகிறதே? எதற்கும் இவன் காலைத் தொட்டுக் கும்பிட்டுக் கொள்வோம் என்று முடிவு செய்திருக்கும். ஏற்கெனவே முதுகு வளைந்த அது ராமன் காலைத் தொட்டுச் சரணாகதி அடைவதற்காக மேலும் வளைய முயன்றிருக்கலாம். அந்த முயற்சியில் அதன் முதுகெலும்பு முறிந்துவிட்டது போல் இருக்கிறது. தானாய் முறிந்த வில்லை இப்போது ராமன் முறித்தான் என்கிறார்களோ?`

இந்த விளக்கத்தைக் கேட்டு சீதை, ராமன் இருவர் முகத்திலும் மெல்லிய முறுவல் படர்ந்தது. அதற்குள் ஒரு தோழி சொன்னாள்:

`சீதா! வில்லால் முடியாதது உன்னால் முடியுமே? நீ உன் பிராணநாதரின் காலைத் தொட்டு வணங்குவாயாக!`

சீதை அப்படி வணங்குவதற்குள் சற்றுத் தயக்கம் காட்டினாள்.

`என்னடி தயங்குகிறாய்? தேவர்களும் முனிவர்களும் விழுந்து வணங்கும் பரம்பொருளின் தாமரைப் பூம்பாதங்கள் போல் அல்லவா உன் நாயகரின் பாதங்கள் தென்படுகின்றன? நீ வணங்காவிட்டால் சற்றுத் தள்ளி நில். நாங்களாவது வணங்கிக் கரைசேர்கிறோம்!`

சீதை இதற்கு நாணத்தோடு பதில் சொல்லலானாள்:

`நான் வணங்கத்தான் விரும்புகிறேன். ஆனாலும் அச்சமாக இருக்கிறது! இவை மாய வேலைகள் தெரிந்த பாதங்கள் போல் தோன்றுகிறது. கானகத்தில் நடந்து வரும்போது கல்லைப் பெண்ணாக்கிய பாதங்கள் இவை என்கிறார்களே? இப்போது நான் பாதங்களைத் தொடப்போக அவை பெண்ணைக் கல்லாக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?`

சீதை இப்படிச் சொன்னதும் தோழிகள் எல்லோரும் கலீரென நகைத்தார்கள். ராமன் முகத்தில் இளமுறுவல் தோன்றியது.

இவ்விதம் மெல்லிய குரலில் உல்லாச உரையாடல்கள் நடந்துகொண்டிருந்த அதே நேரத்தில் யாருமே எதிர்பாராத வேறொரு சம்பவம் நிகழ்ந்தது.

ஜமதக்னி முனிவரின் புதல்வரான பரசுராமர் அங்கே வந்து நின்றார். பற்பல ஆண்டுகளாய்ச் செய்த தவத்தின் பேரொளி அவர் முகத்தைப் பிரகாசப் படுத்தியது.

அவர் கண்கள் கோவைப் பழமாய்ச் சிவந்திருந்தன. விழிகளிலிருந்து நெருப்புக் கங்குகள் தெறிப்பதைப் போல் கோபம் கொட்டிக் கொண்டிருந்தது.

பரசுராமர் சிவதனுசு அங்கே இரண்டு துண்டுகளாக இருப்பதைக் கண்டார்.

`நான் வழிபடும் சிவபெருமானின் இந்தப் புராதன வில்லை உடைத்தவன் யார்? யாராயிருந்தாலும் என் முன்னே வரட்டும். அவனை நான் உண்டு இல்லை என்று பார்த்துவிடுகிறேன்.` என உறுமினார்.

சாந்தமான குரலில் ராமபிரான் `என்னால் தான் அந்த வில் உடைபட்டது சுவாமி!` என்று பணிவுடன் தெரிவித்துக் கொண்டான்.

`சிவதனுசை முறித்தவன் என் பகைவனே. என்னுடன் போருக்கு வா. உன்னை அழித்துவிட்டு வேறுவேலை பார்ப்பேன்!` என்று உறுமினார் பரசுராமர்.

அவர் தன் அண்ணனைப் போருக்கு அழைப்பதைப் பார்த்த லட்சுமணன் கோபத்துடன் அவரை அணுகினான். அவரை ஏளனம் செய்து அவர் சீற்றத்தைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க முடிவு செய்தான்.

`சுவாமி. நாங்கள் சின்னக் குழந்தைகளாக இருந்தபோது எத்தனையோ பொம்மை வில்லையெல்லாம் உடைத்ததுண்டே? அதையெல்லாம் தாங்கள் அறிய மாட்டீர்கள் போலிருக்கிறது. அப்போதெல்லாம் தாங்கள் கோபம் கொண்டதே இல்லையே? இது இன்னொரு பொம்மை வில் போல் தானே? பல்லாண்டுகளாக போருக்குப் பயன்படாமல் பூஜையில் உள்ள வில்லை பொம்மை வில் என்று தானே சொல்ல முடியும்? இது உடைந்துபோனதைப் பற்றி இத்தனை கோபம் ஏன்? சொல்லுங்கள். வேண்டுமானால் இதுபோன்ற வேறு ஒரு பொம்மை வில்லை உங்களுக்குச் செய்துதர ஏற்பாடு செய்கிறோம்!`

இந்த ஏளன வார்த்தைகளைக் கேட்ட பரசுராமரின் கோபம் எல்லை மீறியது.

`அடேய் முட்டாள். உனக்கு நாவை அடக்கத் தெரியவில்லையே? சிவபெருமானின் வில்லை பொம்மை வில்லோடு ஒப்பிடுகிறாய்! உயிரோடு இருக்க வேண்டும் என்று உனக்கு ஆசை இல்லையா?`

லட்சுமணன் அவரது உணர்ச்சிகளை மேலும் தூண்டும் வகையில் கடகடவென்று நகைத்தான்.

`சுவாமி! இந்த வில் ஒடிந்தால் என்ன, ஒடியாமல் இருந்தால் என்ன? அதனால் யாருக்கென்ன லாபம் அல்லது நஷ்டம்? இந்தப் புராதன வில்லை யாரும் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. இடத்தை அடைத்துக் கொண்டு இது இருப்பானேன்? ஒடித்துவிட்டால் நல்லதுதானே? உண்மையில் ஒடிக்கவும் இல்லை. அது ஏற்கெனவே உளுத்திருந்திருக்க வேண்டும். என் அண்ணா தொட்டதும் அது ஒடிந்துவிட்டதோ என்னவோ? இதற்காக நீங்கள் ஏன் கோபம் கொண்டு உங்கள் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்கிறீர்கள்? சாந்தமாக இருக்க வேண்டிய உங்களைப் போன்ற துறவிகள் கோபம் கொள்வதால் துறவிகளுக்குரிய பெருமையே போய்விடுகிறது பாருங்கள். அமைதி கொள்ளுங்கள் சுவாமி!`

லட்சுமணனின் சீண்டுகிற பேச்சு எரிகிற கொள்ளியில் எண்ணெய் வார்த்தது போல் ஆயிற்று. பரசுராமர் கொதித்தெழுந்தார்.

`அடேய். என் கையில் உள்ள கோடாரியை நீ பார்க்கவில்லையா? அரச குலத்தவரை வேரோடு கருவறுப்பதற்காகவே நான். தாங்கியுள்ள கோடாரி இது. சிறுவனே! உன் உயிரை விட்டு உன் பெற்றோரைத்

துயரில் ஆழ்த்தாதே!`

அதற்குள் விஸ்வாமித்திரர் குறுக்கிட்டு பரசுராமரிடம் பேசலானார்:

`பரசுராமரே! இவன் சிறுவன். இவனது வார்த்தைகளை நீங்கள் பெரிதாய்ப் பொருட்படுத்தலாமா? விட்டுவிடுங்கள்!`

`ஏதோ நீங்கள் சொன்னதற்காக விட்டுவிடுகிறேன். இந்தச் சிறுவனைச் சற்றுப் பேசாமல் இருக்கச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் அழிந்துபோவான்!`

விஸ்வாமித்திரர் தனக்குள் நகைத்துக் கொண்டார். லட்சுமணனின் வயதைப் பற்றிப் பரசுராமர் பேசுகிறாரே தவிர அவன் வீரத்தைப் பற்றி அவர் அறியவில்லையே?

தாடகை, மாரீசன், சுபாகு போன்றோர் விஷயத்தில் ராம லட்சுமணர்களின் வீரச் செயல்களை அவர் நேரில் கண்டவர் அல்லவா?

லட்சுமணன் விடாமல் பரசுராமரை மேலும் சீண்டலானான்:

`வாய்ச்சொல்லில் வீரம் காட்டுவது போர் வீரருக்கு அழகல்ல. கையில் உள்ள ஆயுதத்தால் வீரத்தைக் காட்ட வேண்டும். ஆனால் பாவம் வயோதிகர் நீங்கள். உங்களிடம் வீரத்தை எதிர்பார்ப்பது சரியல்ல. நல்லது. மேலும் உங்கள் தற்பெருமை முழுவதையும் பேசி முடியுங்கள்!`

இந்தப் பேச்சைக் கேட்டு வெகுண்ட பரசுராமர் தன் கையில் இருந்த கோடாரியை உயர்த்தினார். லட்சுமணன் நகைத்தான்:

`சுவாமி! கோபத்தினால் லாபமென்ன? இந்த முறிந்த வில் உங்கள் கோபத்துக்கு அஞ்சி மீண்டும் பழையபடி ஒன்றாக ஒட்டிக் கொள்ளுமா? உங்களுக்கு முறிந்த வில் மீது அபாரமான ஆசை இருக்கிறது. நல்லது. ஒரு கைதேர்ந்த தச்சனை அழைத்து இந்த வில்லைப் பழையபடி ஒட்டச் செய்து உங்களுக்கே கொடுக்க ஏற்பாடு செய்துவிடலாம். வெறும் வார்த்தைகளில் வீரம் காட்டி உங்கள் சக்தியை வீண்செய்ய வேண்டாம்.`

பரசுராமரின் கோபம் பெரும் வேகம் கொண்டது. `இவனை என் கண்பார்வையிலிருந்து அகற்றுங்கள்!` என்று கூச்சலிட்டார் அவர்.

`இதற்கு இவ்வளவு ஆத்திரப் படுவானேன் சுவாமி? உங்கள் கண்ணை நீங்கள் மூடிக்கொண்டால் போதும். உங்கள் கண் பார்வையிலிருந்து நான் அகன்று விடுவேனே?` என்று சிரித்தவாறே சொன்னான் லட்சுமணன்.

பரசுராமர் லட்சுமணன் வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேச இயலாமல் தத்தளித்தார். `ராமா! உன்னையும் லட்சுமணனையும் வென்றுவிட்டுப் பிறகுதான் இங்கிருந்து செல்வேன்!` என்றார். ராமன் அமைதியாகப்

பேசலானான்:

`சுவாமி! தாங்கள் ஷத்திரியர்களிடம் கொண்ட சீற்றம் சரியல்ல. ஷத்திரியர்கள் அனைவரையும் மாய்க்க வேண்டும் என்ற தங்கள் நோக்கமும் சரியல்ல. யார் தவறுசெய்தாலும் தண்டிக்க வேண்டியதுதான். யாரோ என்றோ செய்த தவறுக்காக அந்த இனத்தில் பிறந்த அத்தனை பேரையும் அழிப்பேன் என்று உறுதி பூணுவது பகுத்தறிவுக்குப் பொருத்தமானதல்ல. நான் எந்தத் தவறும் செய்யவில்லையே? தாங்கள் வயதில் பெரியவர். தங்களைப் போரில் வெல்வது எனக்கு ஒரு பொருட்டல்ல. ஆனால் என் மரியாதைக்குரிய தங்களுடன் நான் போர் செய்ய விரும்பவில்லை!`

ராமபிரானின் பணிவான இன்சொல்லைக் கேட்டவுடன் பரசுராமர் சிந்தனையில் ஆழ்ந்தார். லட்சுமணன் மேல் தனக்குக் கோபம் வருவதுபோல் தான் காட்டிக் கொண்டாலும் இனந்தெரியாத அன்பு அவன் மேல் தோன்றுவது ஏன் என்றறியாமல் திகைத்தார்.

ராமனைப் பார்க்கப் பார்க்க அவன் மேல் பாசம் பொங்குவது ஏன் என்றும் அவரால் அறியக் கூடவில்லை.

பரசுராமரின் உணர்ச்சிப் போராட்டத்தைப் பார்த்து வானத்து தேவர்கள் நகைத்துக் கொண்டார்கள்.

அவர் கையில் இருப்பது விஷ்ணு வில் அல்லவா? அது உரிய இடமான ராமன் கைக்குப் போய்ச் சேர வேண்டியது அவசியமல்லவா? தேவர்கள் ஆவலோடு காத்திருந்தார்கள்.

பரசுராமர் சாந்தமடைந்தார். லட்சுமணனைப் பார்த்து `குழந்தாய்! தற்பெருமை பேசுவதையும் ஷத்திரியர்களை அழிப்பதையும் இன்றோடு விட்டுவிட்டேன். நீ என் கண்ணைத் திறந்தாய்!` என்று பரிவுபொங்கக் கூறினார். `நான் தவறாகப் பேசியிருந்தால் மன்னியுங்கள் சுவாமி!` என்று லட்சுமணன் பரசுராமரைப் பணிந்தான்.

பரசுராமர் மலர்ச்சியுடன் ராமரைப் பார்த்து `ராமா! நான் அந்தணன். நீ ஷத்திரியன். என் கையில் இருக்கும் இந்த வில், உன் கையில் இருக்க வேண்டியது அல்லவா?` என்றார்.

அவர் இதைச் சொல்லி முடித்த மறுகணம் யாரும் எதிர்பாராத ஆச்சசரியகரமான ஒரு நிகழ்ச்சி நடந்தது.


பரசுராமர் கையில் இருந்த வில், சடாரெனப் பரசுராமர் காலில் விழுந்து பணிந்தது! மறுகணம் ராமபிரானின் திருக்கரத்தில் போய்த் தானே பொருந்திக் கொண்டது.

பரசுராமர் இந்த விந்தையான செயலைப் பார்த்துத் திகைத்தார்.

`ராமா! நீ வாழ்க. உன் கரத்திலிருக்கும் வில்லால் அரக்கர்களை வதம் செய்வாயாக. நான் தவம் செய்வதன் பொருட்டு விடைபெறுகிறேன்!`

என்று சொல்லி அந்த இடத்தை விட்டு நீங்கினார். கூட்டம் முழுவதும் மகிழ்ச்சி கலந்த ஆச்சரியத்தோடு அவர் விலகிச் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றது.

ராம பிரானின் கையில் இருக்க வேண்டிய விஷ்ணுவில் பரசுராமரிடமிருந்து அவன் கைக்கு வந்துவிட்டதால் அந்த வில்லில் பூட்டப்படும் அம்புகளால் ராவண வதம் நிகழ்வது உறுதி என்று தேவர்கள் மனம் மகிழ்ச்சி அடைந்தது.



6

ராமன் கொடுத்த குறிப்பு!

தேவலோகத்தில் அவசரக் கூட்டம் கூடியிருந்தது. இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் எல்லோரும் ரகசியமாகக் குழுமியிருந்தார்கள்.

ரகசியமாகத்தான் சேர்ந்து பேச முடியும். வெளிப்படையாக எங்கும் அவர்கள் கூடிப் பேச முடியாத சூழல்.

அவர்கள் ஒன்று கூடிப் பேசுகிறார்கள் என்பதை ராவணன் அறிந்தால் அவர்கள் கதி அதோகதி தான். ராவணனுக்கு அஞ்சி அஞ்சி வாழ்ந்து அவர்கள் கடும் சலிப்படைந்திருந்தார்கள்.

`தேவேந்திரா! இன்னும் எத்தனை காலம் நாம் இப்படிப் பயந்து பயந்து வாழ்வது?` என்று தளர்ச்சியுடன் கேட்டான் வருணன். வாயு, எமன் முதலான தேவர்கள் அனைவர் முகங்களிலும் மாறாத கவலைக் குறி.

இந்திரன் ஒரு பெருமூச்சோடு சொன்னான்:

`நாம் ராவணன் செய்துவரும் அட்டகாசங்களைப் பற்றித் திருமாலிடம் முறையிட்டோம். அவர் தான் ராவணனை வதம் செய்து நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்றும் அவரிடம் கேட்டுக் கொண்டோம். மனிதர்களைத் தவிர வேறுயாராலும் அழிக்க இயலாதவாறு அவன் சிவபெருமானிடம் வரம் பெற்றிருக்கிறான். எனவே மனித வடிவில் தான் அவனை அழிக்க முடியும். அவனை அழிப்பதன் பொருட்டுத் திருமால் மனித வடிவில் அவதரிக்க

ஒப்புக் கொண்டார். அவதரித்தும் விட்டார். இனிமேல் நாம் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. பொறுமையாகக் காத்திருக்க வேண்டியதுதான்.`

எமன் சலிப்புடன் பேசலானான்:

`என்ன தேவேந்திரா! பொறுமை பொறுமை என்கிறாய்? பொறுமைக்கு ஓர் எல்லை இல்லையா? இன்னும் எத்தனை காலத்திற்குப் பொறுமை காப்பது? நவக்கிரகங்களைப் படிகளாக்கி அந்தக் கிரகங்களின் மேல் கால்மிதித்து ஏறிச் சென்று தன் சிம்மாசனத்தில் அமருமளவு அவன் அகங்காரமும் அட்டகாசமும் அதிகமாகியுள்ளன. இதே வகையில் அவன் பலமும் புகழும் பெருகுமானால் நாளை தேவர்களின் சங்கடங்கள் இன்னும் அதிகமாகுமே அன்றிக் குறையாது. அரக்கர் இனத்தைத் தவிர வேறுயாரும் வாழவே கூடாது என்பதுபோல் அல்லவா அவன் நடந்துகொள்கிறான்!`

`நாமென்ன செய்வது? திருமால் அவனை வதம் புரியும் வரை நாம் காத்திருக்க வேண்டியதுதான்!`

`இன்னும் எத்தனை காலத்திற்குக் காத்திருப்பது? திருமால் அவனை வதம் செய்வதற்குள் அவன் நம்மை வதம் செய்துவிடாமல் இருக்க வேண்டுமே?`

இந்திரன் அமைதியாகப் பேசலானான்:

`நண்பர்களே! பிரச்னையில் உள்ள சிக்கல்களை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். திருமால் மனிதப் பிறவி எடுத்துவிட்டார். மனிதப் பிறவி எடுத்த பிறகு அவரது செயல்கள் மனிதருக்கு ஏற்ற வகையில் தான் இருக்குமே தவிர அவரைக் கடவுளாக அவர் காட்டிக் கொள்வது இயலாது. எனவே அவரிடம் இப்போது நாம் போய், எப்போதுதான் வதம் செய்யப் போகிறீர்கள் என்று கேட்கவும் இயலாது. மனித வடிவம், மனித மனம் இவற்றோடு அவர் வாழ்ந்து வருகிறார். உரிய காலத்தில் கட்டாயம் ராவண வதம் நிகழும் என்று நான் நம்புகிறேன். நமது பொறுமைக்கு இப்போதைய காலகட்டம் ஒரு சோதனை. நாம் அங்கலாய்ப்பதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை.`

எமன் குறுக்கிட்டான்:

`தேவேந்திரா! திருமால் மனித வடிவம் எடுத்த பிறகு ராவணனை வதம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தையே மறந்துவிட்டாரோ என்று எனக்கு சந்தேகம் எழுகிறது. நமது துயரங்களை அறிந்தவர் திருமால். அவர் இத்தனை மெத்தனமாக இருப்பது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.`

`ஸ்ரீராமர் மூலப் பரம்பொருளின் வடிவம். அனைத்தையும் ஆழ்மனத்தில் அறிந்தே இருப்பார். ஆனால் அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள மாட்டார். மனித வடிவில் இருப்பதால் அப்படிக் காட்டிக் கொள்வது முறையும் அல்ல.`

இப்போது வாயு குறுக்கிட்டான்.

`ராவண வதத்திற்கு உதவுவதற்காக என் மகன் ஆஞ்சநேயன் கானகத்தில் வளர்ந்து காத்துக் கொண்டிருக்கிறான். ராமன் இன்னும் கானகமே வரவில்லையே? எனக்கென்னவோ மூன்று தாய்மார்களின் பாசத்தில் மயங்கி நமக்கு அளித்த வாக்குறுதியையே திருமால் மறந்துவிட்டாரோ என்று தோன்றுகிறது!`

`அப்படி இருக்க இயலாது. முதலில் சீதா கல்யாணம் நடைபெற வேண்டும். அதன் பிறகு கைகேயியின் சூழ்ச்சியால் ராமன் காட்டுக்குச் செல்லவேண்டும். சீதையோடுதான் ராமன் கானகம் செல்வான். அப்போது ராவணன் சீதையைக் கவரும்போது ராமனுக்கு ராவணனை வதம் செய்ய ஒரு நியாயமான காரணம் கிடைக்கும். இதெல்லாம் நாம் ஏற்கெனவே யோசித்து முடிவு செய்தது தானே? அடுத்தடுத்து என்னென்ன நடக்க வேண்டும் என்பதெல்லாம் நாம் முன்னரே திட்டமிட்டது தானே?`

`ஆனால் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளை நாம் திட்டமிட்டோமே தவிர அவற்றிற்குக் காலக் கெடு நிர்ணயிக்கவில்லை. ராமர் இன்னும் குழந்தையாகவே அயோத்தியில் இருப்பது என்ன நியாயம்?`

`இல்லை. ராமர் இனியும் குழந்தை இல்லை. அடுத்தடுத்த நிகழ்ச்சிகளில் மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சி விரைவில் நடக்கப் போகிறது. அதுதான் சீதா கல்யாணம். ராவணன் ராமனின் மனைவியைத் தூக்கிக் கொண்டு போகவேண்டுமானால் ராமனுக்குத் திருமணம் ஆனால் தானே அது இயலும்? நாளை சீதாகல்யாணம் என்று சற்று முன்னர் தான் நாரதர் வந்து தகவல் சொன்னார். சீதாகல்யாணம் நடந்துவிட்டால் அடுத்தது கைகேயி சூழ்ச்சிதான். சீதையோடு ராமர் வனம் செல்ல வேண்டியதுதான். எனவே கவலை வேண்டாம். இன்னும் கொஞ்சம் பொறுமை காப்போம். நாளை நாம் சீதா கல்யாணத்தை வானிலிருந்து பார்த்து மகிழ்வோம்.`

சற்றே சிந்தனையில் தோய்ந்த வாயு சொன்னான்:

`நாள்தோறும் நம் கவலைகள் அதிகமாகின்றன. எனவே மனத்தால் அந்த மூலப் பரம்பொருளின் வடிவமான ராமரையே பிரார்த்திப்போம். நாளை சீதாகல்யாணம் முடிந்ததும் விரைவில் ராவண வதம் நிகழ்த்தப்படும் என்பதற்கான ஏதேனும் ஒரு மறைமுகக் குறிப்பை

ராமபிரான் நமக்கு வழங்க வேண்டும் என்று மானசீகமாகக் கேட்டுக் கொள்வோம். ராமபிரான் மனித வடிவில் இருந்தாலும் நம் எண்ணத்தைப் புரிந்துகொண்டு அவதார தத்துவத்திற்கு எந்த இடர்ப்பாடும் ஏற்படாமலேயே ராவண வதம் விரைவில் நிகழ்த்தப்படும் என்பதற்கான ஒரு குறிப்பை நமக்கு உணர்த்துவார் என நான் நம்புகிறேன்.`

தேவேந்திரன் `வாயு பகவான் சொல்வது சரிதான்!` என்றவாறே ராமபிரானை தியானிக்கலானான். மற்ற எல்லாத் தேவர்களும் கூட ராமனைத் தியானித்தனர்.

பின்னர் சீதா கல்யாணத்தைக் காண்பதன் பொருட்டு அவர்கள் புறப்பட்டனர்.

விஸ்வாமித்திரர் கேட்டுக் கொண்டபடி மிதிலையில் ஜனகர் அரசவையில் ராமன் அந்த சிவதனுசைக் கையில் எடுத்தார். அதன் ஒரு முனையைத் தன் இடது கால் கட்டை விரலால் மிதித்துக் கொண்டு மறுமுனையில் நாணேற்றத் தொடங்கினார்.

வானுலகில் அருபமாய்க் குழுமியிருந்த தேவர்களும் மண்ணுலக மக்களும் அடுத்து என்ன நிகழப் போகிறது என்று ஆவலாய்க் காத்திருந்தார்கள்.

வில் ராமபிரான் மூலப் பரம்பொருளே என்பதை உணர்ந்துகொண்டது. அந்தப் பரம்பொருள் தன் ஒரு முனையை இடக்காலால் அழுத்திக் கொண்டிருக்கிறதே? இந்தப் பரம்பொருளால் தொடப்பட்டதை விடப் பெரிய பேறென்ன இருக்கிறது? இந்தப் பரம்பொருளின் பாதத்தை நாம் தொட்டுப் பணிந்துவிட வேண்டும். அப்படிப் பணிந்தால் நமக்கு முக்தி நிச்சயம்.

இவ்விதம் நினைத்த வில், ராமன் நாணேற்றும் போது ராமனே எதிர்பாராத வகையில் நன்றாக வளைந்துவந்து அவன் பாதத்தை தன் மேற்பக்க முனையால் தொட்டது.

மூலப் பரம்பொருளை வணங்கியவர்கள் முக்தி அடைவது நிச்சயமல்லவா? அந்த வில் படீரென முறிந்து உண்மையிலேயே ராமன் அருளால் முக்தி அடைந்துவிட்டது!

ராமபிரான் வில்லை எடுத்ததை எல்லோரும் பார்த்தார்களே தவிர அடுத்த கணம் அது உடைந்த சப்தத்தைத்தான் கேட்டார்கள்.

`என் தாய்தந்தையிடம் சொல்லி அவர்களின் அனுமதி பெற்ற பிறகுதான் திருமணம் புரிந்துகொள்வேன்!` என ஸ்ரீராமன் சொல்லிவிட்டார். உடனடியாக அயோத்திக்கு ஆள் அனுப்பித் தகவல் சொல்லப்பட்டது.

தசரதரும் கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய மூவரும் மற்றும் ஏராளமான மந்திரி பிரதானிகளும் விவரமறிந்து மிதிலையில் வந்து குழுமினார்கள்.

`சீதா கல்யாணம் வைபோகமே!` என்று பின்னாளில் எல்லோரும் பாடும்படி அந்தத் திருமண வைபவம் அத்தனை அருமையாக நடைபெற்றது.

ராவண வதத்தை நோக்கிய ஒரு செயல் நடந்துவிட்டது. சீதையை ராமன் கரம்பற்றி விட்டார். இனி அடுத்தடுத்த செயல்கள் நடக்க வேண்டும் என வானில் யாரும் அறியாதவாறு அருபமாய்க் குழுமியிருந்த தேவர்கள் மனத்தில் பிரார்த்தித்துக் கொண்டனர்.

சீதையின் கழுத்தில் மங்கல நாணை அணிவித்த ராமபிரான், தம்பதி சமேதராய் யாரையோ நமஸ்கரிக்க வேண்டித் தேடிச் சென்றார்.

யாருக்கு சீதாராமனாக ராமபிரான் முதல் வணக்கம் செலுத்தப் போகிறார்? சபை அதை அறிய ஆவலோடு காத்திருந்தது.

தேவர்களும் கூட அதை அறிய வேண்டிக் காத்திருந்தார்கள்.

ராமபிரான் விஸ்வாமித்திரரையோ வசிஷ்டரையோ நாடிச் செல்லவில்லை. ஏன் தசரதரையும் கடந்து சென்றார் ராமர். கோசலை, சுமித்திரையையும் கூடக் கடந்துதான் சென்றார்.

சீதையைக் கரம் பற்றியவாறு நடந்த அவர், கைகேயி அருகில் வந்ததும் மலர்ச்சியோடு கைகேயி மாதாவைப் பார்த்தவாறே நின்றார். சீதாதேவியிடம் `என் அன்னை கைகேயியை முதலில் வணங்குவோம் வா!` என்ற ராமர் கைகேயியின் பாதங்களில் விழுந்து பணிந்தார்.

கைகேயி மகிழ்ச்சியோடு ராமபிரான் சிரசில் அட்சதை தூவி ஆசீர்வதித்தாள். அதன் பின் ராமபிரானின் கடைக்கண்கள் ஆகாயத்தை யாரும் அறியாதவாறு ஒரு பார்வை பார்த்து மீண்டன.

`ராவண வதம் என்ற எதிர்கால நிகழ்ச்சியில் முதல் கட்டமாக சீதா கல்யாணம் முடிந்துவிட்டது. அடுத்த கட்டமாக கைகேயியின் சூழ்ச்சி ஆரம்பமாகப் போகிறது, எனவே தேவர்கள் கவலை கொள்ளத் தேவையில்லை` என்ற குறிப்பைத் தான் கைகேயியை வணங்கியதால் ராமன் தெரிவிக்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட தேவர்கள் நிறைவடைந்தார்கள்.

யாரும் அறியாமல் வானில் குழுமியிருந்த அவர்கள் அனைவரின் கைகளும் ராமனைத் தொழுதன.

`என் மகன் ராமனுக்கு எப்போதுமே கைகேயி தேவி மீது பாசம் அதிகம்!` என்றார் தசரதர்.

`இருக்க வேண்டியதுதானே? பெற்ற தாயினும் மேலாகப் பாசம் காட்டி ராமனை வளர்த்த தாய் அல்லவா கைகேயி மாதா?` என்று சொல்லி முறுவல் பூத்தார் ஜனகர்.

ஆனால் ராமபிரானின் உண்மையான உள்ளக் கிடக்கையைப் புரிந்துகொண்டனர் ஞான திருஷ்டி கொண்ட வசிஷ்டரும் விஸ்வாமித்திரரும். அவர்கள் கண்கள் ஒன்றோடொன்று மொழியில்லாமலே பேசிக் கொண்டன.

ராவண வதத்திற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடப்பதை எண்ணி அவர்கள் நெஞ்சம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது.



7

ராமன் கேட்ட வரம்!

கைகேயிக்குப் பிள்ளை யார், பரதனா, ராமனா? இப்படி அரண்மனையிலும் அயோத்தியிலும் எல்லோரும் கேட்டு நகைப்பதுண்டு.

ஏனென்றால் கைகேயியின் செயல்கள் அப்படியிருந்தன. சதா ராமன் நினைவிலேயே அவள் ஆழ்ந்திருந்தாள். ராமா ராமா என்று ராமனையே சுற்றிக் கொண்டிருந்தாள்.

ஒரு கணமேனும் கோசலை, ராமனை இடுப்பில் வைத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அப்படி இடுப்பில் வைத்துக் கொள்ள கைகேயி விட்டால் தானே? ராமனைத் தூக்கிக் கொண்டே நடந்தாள் கைகேயி.

கைகேயியின் முகத்தில் அடிக்கடித் தென்படும் உள்ளார்ந்த பூரிப்பையும் அளவற்ற மலர்ச்சியையும் கவனித்து விட்டார் வசிஷ்டர். ராமனையே அவள் எப்போதும் சுற்றிச் சுற்றி வருவதையும் பார்த்துவிட்டார். அவருக்கு ஒரு சந்தேகம் வந்தது.

ராமன் கடவுள் தான் என்பதை அவர் அறிவார். முக்காலமும் உணர்ந்த அவர் பரம்பொருளின் இந்த ராமாவதாரம் எதன் பொருட்டு என்பதைக் கூட அறிவார்.

ஆனால் அது தேவரகசியம் அல்லவா? எனவே அதை யாரிடமும் அவர் வெளிப்படுத்தியதில்லை.

இப்போது கைகேயி நடந்துகொள்ளும் நடவடிக்கைகளைப் பார்த்தால் அவளுக்கும் அந்த ரகசியம் தெரியும் போல் இருக்கிறதே? ராமனை அவள் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுவதும் ஆனந்தத்தில் திளைப்பதும் ஏதோ சாதாரணக் குழந்தையைப் பார்த்து நேர்ந்ததுபோல் தெரியவில்லையே?

தான் வயிற்றில் சுமந்து பெற்ற பரதனைக் கூட அவள் அதிகம் கண்டுகொள்வதில்லையே?

முற்பிறவிப் புண்ணியத்தின் பலனாக ராமனைப் பற்றிய ரகசியத்தை அவள் அறிந்திருப்பாளோ? வசிஷ்டரின் சந்தேகம் மெல்ல மெல்ல வலுத்தது.

ஒருநாள் யாருமில்லாத சந்தர்ப்பத்தில், ராமனைத் தூக்கிக் கொண்டு தன் எதிரே வந்த கைகேயியின் விழிகளை உற்றுப் பார்த்தார் அவர். கண்ணாலேயே `இவன் யார் என்று தெரிந்துகொண்டு விட்டாயா மகளே?` என்று விசாரித்தார்.

`ஆம் சுவாமி!` என அவள் தலைவணங்கி அவர் ஆசியை வேண்டினாள்.

வலக்கரத்தால் ஆசி வழங்கிய அவர், அதே வலக்கரத்தின் ஆள்காட்டி விரலால் தன் உதடுகளைப் பொத்திக் காட்டி, இந்த தேவ ரகசியத்தை யாரிடமும் வெளிப்படுத்தி விடலாகாது எனவும் அறிவுறுத்தினார்.

காலம் தான் என்ன வேகமாக ஓடுகிறது! கைகேயியின் பராமரிப்பில் ராமன் விறுவிறுவென வளர்ந்தான். குருகுலம் சென்று வசிஷ்டரிடம் வில்வித்தை கற்றான்.

கற்றானா? கற்பதாக நடித்தான். எல்லாம் ஒரு நாடகம். மனித வடிவில் தான் ராவணனைக் கொல்லமுடியும். அப்படி வரம் வாங்கி வைத்திருந்தான் ராவணன். எனவே மனித வடிவெடுத்து வந்துள்ளது பரம்பொருள்.

மனிதர்கள் செய்யும் எல்லாச் செயலையும் அந்தப் பரம்பொருள் செய்யவேண்டாமா? உலகமே ஒரு நாடக மேடை. இந்த நாடக மேடையைப் படைத்தவனே இதில் வந்து நடிக்கிறானே?

பரம்பொருள் மனிதனாய் நடிக்கும் நடிப்பைப் பார்த்து வசிஷ்டர் நகைத்துக் கொண்டார்.

விஸ்வாமித்திரர் வந்து ராம லட்சுமணர்களை அழைத்துக்கொண்டு போனபோது அதிகம் துயரடைந்தவள் கைகேயி தான்.

வசிஷ்டருக்கு ராமாயணத்தில் அடுத்து என்னென்ன நிகழப் போகிறது என்பது கூடத் தெரியும். ஆனால் கைகேயி ராமன் பரம்பொருள் என்பதை உணர்ந்திருந்தாளே தவிர அவதார நோக்கத்தையும் அடுத்து நிகழவுள்ள சம்பவங்களையும் அவள் அறியவில்லை.

ராமன் விஸ்வாமித்திரருடன் போன நாளிலிருந்து கைகேயி சரிவரச் சாப்பிடாமல் இருப்பதை அவளது தோழிகள் தசரதரிடம் வந்து முறையிட்டார்கள். உண்ணா நோன்பிருந்து பரம்பொருளின் அருளைப் பெற முயலும் ஒருவகையான தவம் அது என்பதை வசிஷ்டர் மட்டும் தானே அறிவார்?

அரண்மனை வைத்தியர் கைகேயியின் கையில் பட்டுத் துணிபோட்டு நாடி பார்த்து ராமனைப் பிரிந்த துயரைத் தவிர அவளுக்கு வேறு வியாதி ஏதுமில்லை என்று நகைத்தவாறே அறிவித்துச் சென்றார்.

கோசலை கைகேயியின் ராம பாசத்தைப் பார்த்துப் பெருமிதம் அடைந்தாள். அதே நேரம் கைகேயியின் உடல் மெலிவதைப் பார்த்துக் கவலையும் அடைந்தாள்.

இப்படியான சூழலில் தான் அந்த நற்செய்தி வந்தது.

ராமன் ஜனகரின் வில்லை ஒடித்தே விட்டானாமே? ராமனுக்குக் கல்யாணம் நடக்கப் போகிறதாமே? அரண்மனையில் உள்ளவர்கள் மட்டுமல்ல, அயோத்தி முழுவதுமே திரண்டு மிதிலை சென்றது.

கைகேயி சர்வாலங்கார பூஷிதையாகச் சென்றாள். அவளுக்குப் பரம்பொருளின் மனைவியைப் பார்க்கும் ஆவல்.

சீதையைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தாள் கைகேயி. அவளுப் பரம்பொருளின் ஒரு கூறுதான் என்பதைப் பார்த்தவுடனேயே புரிந்துகொண்டு விட்டாள். மருதாணி இடும் சாக்கில் அவளது காலைப் பற்றிக் கொண்டாள்.

`அம்மா! ஒரு தாய் தன் மகளின் காலைப் பிடிக்கலாமா? என் கணவரின் தாயான தாங்கள் எனக்கும் தாயல்லவா?` என்று நாசூக்காகச் சொல்லி, தான் இப்போது மானிடப் பெண்தான் என்பதை மறைமுகமாக வலியுறுத்தி கைகேயியிடமிருந்து காலை விலக்கிக் கொண்டாள் சீதாதேவி.

பிறகு தன் கணவரைக் கடைக்கண்ணால் பார்த்து கைகேயிக்குத் தாங்கள் இருவரும் யார் எனத் தெரியுமா எனக் கணவரிடம் பார்வையாலேயே விசாரித்தாள்.

குறுமுறுவலுடன் தெரியும் எனப் பார்வையாலேயே பதில் சொன்னான் ராமபிரான்.

மிக விமரிசையாகத் திருமணம் நடந்து முடிந்தது. எல்லோரும் ராமன் திருமணமானபின் தன் முதல் வணக்கத்தை யாருக்குச் செலுத்தப் போகிறான் என அறியக் காத்திருந்தார்கள்.

`வா சீதா!` என சீதையை அழைத்த ராமன், முதலில் கைகேயியை நமஸ்கரித்தான். அந்தக் காட்சியைப் பார்த்துக் கோசலை மிக மகிழ்ந்தாள். தன் மகனைப் பெற்ற தாய்தான் தானே தவிர, மற்றபடி எல்லா வகையிலும் ராமனை வளர்ப்பவள் கைகேயி தானே? கோசலையின் முகத்தில் ஓடிய பெருமித ரேகைகளைப் பார்த்து தசரதர் நிறைவடைந்தார்.

ஆனால் கைகேயி பதற்றத்தோடு கால்களை இழுத்துக் கொண்டாள். யார் காலில் விழுந்தால் முக்தியே கிடைக்குமோ அந்தப் பரம்பொருள் தன் காலில் விழுவதாவது! என்ன சங்கடம் இது! அவள் பாதங்கள் கூசின.

`தர்மமே வடிவான உனக்கு ஆசி வழங்கும் தகுதி எனக்கில்லை ராமா! உனக்கு என்ன வேண்டும் கேள். நான் தரக்கூடியதாக எதையாவது கேள்! நீ கேட்டதைத் தந்து நான் நிறைவெய்துவேன்!` என்றாள் கைகேயி.

சீதாதேவி ராமபிரான் தன் தாயிடம் என்ன கேட்கப் போகிறார் என்றறியக் காத்திருந்தாள்.

`நான் விரும்பிய தின்பண்டத்தை எல்லாம் எனக்கு ஊட்டி வளர்த்த என் அன்புத் தாயாரல்லவா தாங்கள்? எனக்கு வேண்டியதை இந்த சபையில் அல்ல, தங்களிடம் தனியே கேட்டுப் பெறுவேன்.!` என்று கூறினான் ராமன்.

அப்படித் தனியே தன் தாயிடம் இவர் என்னதான் கேட்டுப் பெறப்போகிறாரோ?

சீதாதேவியின் மனம் கேள்வி கேட்டது.

சீதா கல்யாணம் முடிந்து அனைவரும் அயோத்தி திரும்பினர். புது மருமகளை வரவேற்கும் வகையில், அயோத்தி விழாக்கோலம் பூண்டது. தெருவெல்லாம் கோலங்கள். வீடெங்கும் மாவிலைத் தோரணங்கள். மக்கள் மனத்தில் மகிழ்ச்சி வெள்ளம்.

அரண்மனையில் பரிசுப் பொருள்கள் இடைவெளியில்லாமல் கொடுக்கப்பட்டுக் கொண்டே இருந்தன. மக்களுக்கு அவற்றை அள்ளி அள்ளிக் கொடுத்த அரண்மனை ஊழியர்களின் கரங்கள் கொடுத்துக் கொடுத்தே சிவந்தன.

ராமன் தன் தேவியோடு முதன்முதலில் யார் வீட்டுக்குப் போகப் போகிறான்? அதை அறிய வேண்டிப் பலரும் ஆவலோடு காத்திருந்தார்கள்.

கோசலையிடம் கைகேயி, ராமன் முதலில் தன் அரண்மனைக்கு வரவேண்டும் என்று விண்ணப்பித்தாள். கோசலை நகைத்தாள்.

`திருமணம் முடிந்ததும் முதலில் யாரை என் மகன் நமஸ்கரித்தானோ அவள் வீட்டுக்கு அவன் முதலில் செல்வதுதானே நியாயம்?` என குறுமுறுவலுடன் கோசலையும் ஒப்புக் கொண்டாள்.

கைகேயியின் அரண்மனை ராமனையும் சீதாதேவியையும் வரவேற்கத் தயாரானது.

அரண்மனையின் ஒவ்வோர் அலங்காரத்தையும் கைகேயி தானே நேரில் மேற்பார்வையிட்டுச் செய்து முடித்தாள். தன் அரண்மனையின் பூஜையறையை விசேஷமாக அலங்கரித்தாள். சீதாராமனின் வருகைக்காக வாயிலில் ஆரத்தியோடு காத்திருந்தாள்.

ராமனது தூய திருப்பாதங்கள் கைகேயியின் அரண்மனையைத் தேடிவந்தன. தன் மனைவி சீதாதேவியோடு அவன் தன் இல்லம் தேடி வருவது கண்டு கைகேயியின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது.

ஆரத்தியெடுத்து அவர்களை வரவேற்றாள் அவள். அவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு தன் பூஜையறை நோக்கிச் சென்றாள்.

பூஜையறையில் அவர்களை மணையில் அமரச் செய்தாள். கதவைச் சார்த்தினாள். அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதை அறிந்துகொண்ட ராமர் குறுமுறுவல் பூத்தார்.

`தாயே! இந்த வடிவை நான் தாங்கியிருக்கும்போது தாங்கள் என் தாய். தங்களைத் தான் நான் நமஸ்கரிக்க வேண்டுமே தவிரத் தாங்கள் என்னை நமஸ்கரிக்கலாகாது!` என்ற ராமபிரான் சீதையோடு கைகேயியை நமஸ்கரித்தார்.

ராமனையும் சீதையையும் ஒருசேர அணைத்துக் கொண்ட கைகேயி தான் பெற்ற பிறவிப் பயனை அடைந்தாள்.

`நீதான் எல்லோருக்கும் எல்லாம் தருகிறாய். இந்தப் பிறவியில் நீ எனக்கு மகனானதால் நான் உனக்கு ஏதேனும் தர விரும்புகிறேன். உனக்கு ஆசி வழங்கும் தகுதி எனக்கு மட்டுமல்ல, யாருக்கும் இல்லையே ராமா? உனக்கு என் பக்தியைத் தவிர வேறு எதைத் தருவேன்?` என கைகேயி ஆனந்தக் கண்ணீர் மல்க விம்மினாள்.

மருமகளான சீதை தன் மாமியாரை ஒரு குழந்தை போல் அணைத்து அமைதிப் படுத்தினாள். ராமன் சிரித்தவாறே சொல்லலானான்:

`உங்களால் எனக்கு ஒன்று செய்ய முடியும் அம்மா. நான் மணமானதும் முதல் வணக்கத்தை உங்களுக்கு அளித்து தனியே உங்களிடம் எனக்கு வேண்டியதைக் கேட்டுப் பெறுவேன் என்று சொன்னேன் அல்லவா? அதைக் கேட்கவே இப்போது உங்களைத் தேடி வந்தேன்.`

`சொல் ராமா! நான் என்ன செய்ய வேண்டும்?`

`மாமன்னர் தசரதரிடம் இரண்டு வரங்கள் கேட்க வேண்டும். பரதன் நாடாள வேண்டும் என்று ஒரு வரம். அதை விட முக்கியமான வரம் நான் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும் என்ற வரம். இந்த வரங்களின் மூலம் நான் வனம் செல்லும் நிலை உருவாகும். ராவண வதம் நிகழ்த்துவதும் சாத்தியமாகும். விரைவில் எனக்கு மகுடாபிஷேகம் செய்யத் தந்தை முடிவெடுப்பார். அந்தத் தருணத்தில் இந்த வரங்களை நீங்கள் கேட்க வேண்டும் தாயே! வரத்தைக் கேட்க வேண்டும் என்ற வரத்தை உங்களிடம் கேட்டுப்பெறவே வந்தேன்!`

கைகேயி திகைத்தாள். மாறாத பழியை ஏற்படுத்தும் செயலாக அல்லவா இருக்கும் அது.

ஆனால் பரம்பொருளே தன்னிடம் வரம் கேட்கிறதே! பரம்பொருளின் எல்லையற்ற நாடகத்தில் தான் ஓர் அற்பப் பதர். தனக்குப் பழி நேர்கிறது என்பதா முக்கியம்? பழி என்ன புகழ் என்ன? எதனால் என்ன லாபம்? இந்தப் பிறவிப் பெருங்கடலில் கரைசேர உதவும் பரம்பொருள் இது.

இந்தப் பரம்பொருள் சொன்னபடி நடப்பதை விட இந்தப் பிறவி பெற்ற பயன் வேறு என்ன இருக்க முடியும்?

`அப்படியே செய்கிறேன் ராமா!` என வாக்குறுதி அளித்தாள் கைகேயி.

ராவண வதம் நெருங்குவதை எண்ணியும் அதற்கான ஏற்பாடுகள் அடுத்தடுத்து நடப்பதை எண்ணியும் தேவர்கள் மனம் அளவற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்தது.

8

அருந்ததியின் சாபம்!

அருந்ததி தன் கணவர் வசிஷ்டரின் வருகைக்காக ஆசிரமத்தில் காத்திருந்தாள். இன்று ஏதோ மனத்தை வருந்தவைக்கும் ஒரு நிகழ்ச்சி நடக்கப் போகிறது என்று அவள் உள்ளுணர்வு சொல்லிற்று. வழக்கமாக வரும் நேரத்திற்கு வராமல், கணவரின் வருகை காலதாமதப் படுவது அவள் கவலையை அதிகரித்தது.

நேற்று மாலை வசிஷ்டர் சரியான நேரத்திற்கு அரண்மனையிலிருந்து திரும்பிவிட்டார். அரண்மனைத் தகவல்களாக அவர் அவளிடம் பகிர்ந்துகொண்ட செய்திகள் அவள் மனத்தில் மகிழ்ச்சி அலைகளைத் தோற்றுவித்தன.

ராமனுக்கு மகுடாபிஷேகம் என்ற செய்தி யாருக்குத்தான் ஆனந்தம் தராது? அயோத்தி மாமன்னர் தசரதர் தன் மூத்த மகனுக்குப் பட்டம் கட்டுவது என்று முடிவு செய்துவிட்டாராமே? அந்த முடிவை அவர் அறிவித்தபோது சபையே ஆர்ப்பரித்ததாமே?

இந்தச் செய்தி அயோத்தி நகர வீதிகளில் முரசறைந்து சொல்லப் பட்டதாம். விவரமறிந்து அயோத்தியே இப்போது ஆனந்தத்தில் தத்தளிக்கிறதாம். வசிஷ்டர் மலர்ந்த முகத்துடன் சிரித்தவாறே இதைச் சொன்னார்.

அருந்ததியின் மனமும் பூரிப்பில் விம்மியது. கௌசல்யை, கைகேயி, சுமித்ரை ஆகிய மூவர் மட்டும்தானா ராமனின் தாய்கள்? ஒருவகையில்

ராமனது குரு பத்தினியான அருந்ததியும் கூட ராமனுக்குத் தாய்போன்றவள் தானே?

வசிஷ்டரது குருகுலத்தில் எத்தனையோ மாணவர்கள் படித்திருக்கிறார்கள். ஆனால் அங்கே படித்த ராமன் மேல் அருந்ததிக்கு எழுந்த மட்டற்ற பாசம் போல், இதுவரை வேறு எந்த மாணவனிடமும் அவளுக்குப் பாசம் எழுந்ததில்லை.

ராமா ராமா என்று அவள் வாஞ்சையோடு ராமனை நொடிக்கு நூறுதரம் அழைக்கும்போது, கேட்கும் வசிஷ்டர் மனம் நிறையும்.

உச்சரித்தவர்களையெல்லாம் புனிதப்படுத்தும் திருநாமம் அல்லவா அது? அதைச் சொல்லச் சொல்ல மனம் தூய்மையடையுமே? ராமன் மேல் தன் மனைவி காட்டும் பாசத்தை எண்ணியெண்ணி அவர் பெருமிதம் கொள்வார்.

ராமன் யார் என்பதை வசிஷ்டர் மட்டும் தான் அறிவார். மூலப் பரம்பொருள் ராமனாக வந்து தன்னை முற்றிலும் மறைத்துக் கொண்டு ராமாயண நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறது என்பது பரம ரகசியமல்லவா? அவரது தவ வலிமை அந்த ரகசியத்தை அறியும் சக்தியை அவருக்குத் தந்திருக்கிறது.

அந்த ரகசியத்தை அவர் வேறு யாரிடமும் பகிர்ந்து கொள்ளலாகாது. மனைவியிடமோ, மன்னர் தசரதரிடமோ கூட அவர் அந்த உண்மையைச் சொன்னதில்லை. இறைவனே தன்னை ஒளித்துக் கொண்டு வாழும்போது தனக்குத் தெரிந்த ரகசியத்தைச் சொல்லி இறைவனின் நோக்கத்திற்கு எதிராகத் தான் செயல்படலாமா?

அவர் கண்ணைத் திறந்துகொண்டும் ராமனைப் பார்ப்பார். கண்ணை மூடிக்கொண்டும் அகக்கண்களால் ராமனையே பார்ப்பார். அப்படி ராம வடிவத்தில் மூலப் பரம்பொருளைத் தியானம் செய்தவாறு வாழ்ந்துவந்தார் அவர்.

அதனால் அல்லவோ விஸ்வாமித்திரர் ராம லட்சுமணர்களைத் தம்முடன் அனுப்ப வேண்டும் என்ற கேட்டபோது அவர்களை அனுப்புமாறு வசிஷ்டரும் தசரதரிடம் பரிந்துரைத்தார்? ராமனைப் பிரிவது தசரதருக்கு மட்டும்தானா கஷ்டம்? அவருக்கும் கூடக் கஷ்டம் தான். ஆனால் ராமாயணம் முழுமையாக நடந்தாக வேண்டுமே? சீதையை ராமன் திருமணம் செய்துகொண்டால் தானே ராமாயணம் தொடரும்? தேவர்கள் மகிழும் வகையில் ராவண வதம் பின்னால் நிகழும்?

ராமன் சீதையைத் திருமணம் செய்துகொண்டதும் அருந்ததியின் பாசம் இரட்டிப்பாகிவிட்டது. ராமனின் மனைவி சீதையைத் தன் மருமகள்

போலவும் மகள் போலவும் அவள் கருதத் தலைப்பட்டாள்.

சீதையின் நீண்ட கூந்தலை வாரிப் பின்னிவிடுவது, சீதையின் கன்னத்தில் திருஷ்டிப் பொட்டு வைப்பது என்று சீதை அருந்ததியைச் சந்திக்க வரும் சந்தர்ப்பங்களில் அருந்ததி செய்யும் அமர்க்களங்கள் கொஞ்சநஞ்சமல்ல. `அருந்ததி அம்மா! இப்போதெல்லாம் நீங்கள் என்னுடன் பேசுவதை விடவும் அதிகமான நேரம் சீதையுடன் தான் பேசுகிறீர்கள்!` என்ற ராமனே செல்லமாக அங்கலாய்க்கும் அளவு அருந்ததியின் சீதைப்பாசம் அளவு கடந்திருந்தது.

அருந்ததி ஆசிரமத்தின் வாயிலை மீண்டும் மீண்டும் பார்த்தவாறிருந்தாள். வசிஷ்டர் காலையில் வழக்கம்போல் தான் தசரத மகாராஜாவின் அரண்மனைக்குச் சென்றார். பொதுவாக இந்த நேரத்திற்குள் அவர் திரும்பி விடுவார். அப்படியிருக்க இன்று அவர் வருகை தாமதமாவதன் காரணம் என்ன?

நேற்று ராமனுக்குப் பட்டாபிஷேகம் என்று முடிவானதாகச் சொன்னார். அதனாலேயே அருந்ததியின் பரபரப்பு இன்று இன்னும் கூடுதலாக இருந்தது. அடுத்த நடவடிக்கை என்ன? என்றைக்குப் பட்டாபிஷேகம்? முகூர்த்த நாள் எது? அதையெல்லாம் வசிஷ்டர் மூலமாக அறியும் ஆவலோடு அவள் காத்திருந்தாள்.

அப்போதுதான் ஆசிரமத்தின் வெளிப்படலைத் திறந்துகொண்டு வசிஷ்டர் உள்ளே நுழைந்தார். அருந்ததி பரபரப்போடு வசிஷ்டரை நோக்கி வந்தாள்:

`நாதா! ஏன் இன்று தாமதமாக ஆசிரமத்திற்கு வருகிறீர்கள்? என் கண்மணி ராமனின் முடிசூட்டுவிழா ஏற்பாடுகளெல்லாம் எந்த அளவில் இருக்கின்றன? நாளும் நேரமும் குறித்துவிட்டீர்களா? மன்னர் அதை அறிவித்து விட்டாரா? எனக்கு இப்போதே அரண்மனைக்குப் போய் ராமனைப் பார்க்கவேண்டும் போல் இருக்கிறது.`

பரபரப்போடு படபடவென்று பேசிய தன் மனைவி அருந்ததியை வசிஷ்டர் பரிவோடு பார்த்தார். பின் மெல்லச் சொல்லலானார்:

`தேவி! நாம் ஒன்று நினைக்கிறோம். தெய்வம் வேறொன்று நினைக்கிறது. நம் திட்டங்கள் முழுமையாக மாற்றப்படுகின்றன. இறுதியில் நிறைவேறப் போவதென்னவோ இறைவனின் திட்டம் தான்.`

`ஏன் வித்தியாசமாகப் பேசுகிறீர்கள்? இப்போது என்ன திட்டம் மாறியிருக்கிறது?`

`ராமனுக்குப் பட்டாபிஷேகம் இல்லை. விரைவில் பரதன் தான் பட்டம் கட்டிக் கொள்ளப் போகிறான். ராமன் பதினான்கு ஆண்டுகள்

காட்டுக்குப் போய்விட்டான். சீதையும் லட்சுமணனும் தாங்களே விரும்பி ராமனுடன் கானகம் சென்று விட்டார்கள்.`

அருந்ததி விக்கித்து நின்றாள்.

`என்ன சொல்கிறீர்கள் பிரபோ? இதெல்லாம் ஏன் நிகழ்ந்தது? எப்படி நிகழ்ந்தது?`

`இதெல்லாம் தெய்வம் நடத்தும் நாடகம் தேவி. இதன் பின்னணியில் கைகேயியின் செயல்கள் உள்ளன. தான் எப்போதோ கேட்ட இரண்டு வரத்தை இப்போது பயன்படுத்தி விட்டாள் அவள். ராமன் கானகம் செல்லவும் பரதன் நாடாளவுமாக அவள் தசரதரிடம் வரம் பெற்றிருக்கிறாள்.`

`என்ன ஆச்சரியம்? உலகம் அவளைத் தூற்றவில்லையா? அயோத்தி அவளை இகழவில்லையா?`

`உலகின் தூற்றுதலைப் பற்றி அவள் அக்கறை கொள்ளவில்லை.`

`நல்ல வேடிக்கை இது. நான் இப்போதே சென்று கைகேயியைச் சந்தித்து வருகிறேன்.`

`அவளைச் சந்தித்து என்ன ஆகப்போகிறது? எல்லாம் முடிந்துவிட்டது. சுமந்திரர் உள்பட எத்தனையோ பேர் சொல்லியும் கேட்காதவள் இனி நீ சொல்லித்தான் கேட்கப் போகிறாளா? ராமன் கானகம் சென்றுவிட்ட பிறகு இனி நாம் செய்யக் கூடியது என்ன? தசரதர் மனம் உடைந்து படுத்திருக்கிறார். அவர் மூர்ச்சையாகி விட்டார். அவரது நிலையை நினைத்தால் பரிதாபமாகவும் கவலையாகவும் இருக்கிறது தேவி!`

`நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் கைகேயியைப் பார்த்து விட்டுத்தான் வரப்போகிறேன். இதோ இப்போதே புறப்படுகிறேன்.`

`அப்படியானால் நானும் உடன்வருகிறேன் தேவி!`

வசிஷ்டரும் அருந்ததியுமாக விறுவிறுவென்று கைகேயியின் அரண்மனை நோக்கி விரைந்தார்கள். அவர்கள் இருவரையும் பார்த்த காவலர்கள் மரியாதையோடு விலகி வழிவிட்டார்கள்.

கைகேயியின் அரண்மனை இருண்டு கிடந்தது. விரைவில் நேரப்போகும் அமங்கலத்தை அந்த இருள் அறிவிப்பதுபோல் தோன்றியது. தசரத மாமன்னர் செயலோய்ந்தவராய் தளர்ந்து மயங்கிக் கிடந்தார். அருகில் கைகேயி எதையும் லட்சியம் செய்யாதவளாய் அமர்ந்திருந்தாள்.

அருந்ததி சீற்றத்துடன் கைகேயியைப் பார்த்தாள். கைகேயி

ஏதொன்றும் பேசவில்லை. `நான் கேள்விப் பட்டதெல்லாம் நிஜம் தானா?` என்று கோபம் குலையாத குரலில் கேட்டாள் அருந்ததி. அப்போதும் கைகேயி எதுவும் பேசவில்லை. அதெல்லாம் உண்மைதான் என்று சொல்லாமல் சொல்கிற மாதிரி அலட்சியமாக அமர்ந்திருந்தாள் அவள். அருந்ததி கடும் சினத்தோடு பேசலானாள்:

` கைகேயி! உன்மேல் இந்த அயோத்தி வைத்திருந்த மரியாதையை நீ இழந்தாய். ஒரு செயல் செய்யும் முன் அதன் பின் விளைவுகள் அனைத்தையும் யோசித்துச் செய்ய வேண்டும். உன் பேராசை தான் உன் பிடரியைப் பிடித்துத் தள்ளியிருக்கிறதே தவிர உன் மகனைப் பற்றிக் கூட நீ சரிவர அறியவில்லை. குருகுல வாசத்தில் பரதனை வளர்த்தவள் நான் என்ற முறையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். உன்னை விட பரதனை நான் நன்கறிவேன். ராமன் கானகம் செல்லவும் பரதன் நாடாளவுமான இந்த ஏற்பாட்டுக்கு நீ ஆசைப்படலாம். ஆனால் தன் தலையில் மகுடம் தாங்க பரதன் ஒருபோதும் முன்வர மாட்டான். ராமனை அவன் தெய்வமாகக் கருதுபவன். அதை அறியாத முட்டாளாக இருக்கிறாய் நீ!`

கைகேயி இகழ்ச்சிப் புன்முறுவலுடன் சொன்னாள்:

`எனக்கு யாரும் உபதேசம் செய்ய வேண்டிய அவசியமில்லை. நான் என்ன செய்ய வேண்டும், எதை எப்போது செய்ய வேண்டும் என்பதையெல்லாம் அறிந்தவள் தான். இந்தக் கைகேயியை யாரும் சாமான்யமாக எடைபோட வேண்டாம்.`

கைகேயியின் நிஷ்டூரமான பேச்சைக் கேட்ட அருந்ததியின் சீற்றம் எல்லை கடந்தது.

`கைகேயி! நீ என் ராமனை என்னிடமிருந்து பிரித்தாய். என் அன்பான சீதையை என்னிடமிருந்து பிரித்தாய். நீ வாங்கிய வரங்களின் தலையில் இடிவிழட்டும். அந்த வரங்களால் இவ்வளவு கெடுதல்கள் நேரும் என்றால் அந்த வரங்களின் தலையில் நெருப்பு வைத்துக் கொளுத்துவதே நல்லது.. போகட்டும். நடந்தது நடந்துவிட்டது. அதை இனி யாரும் மாற்ற இயலாது. எல்லோர் மனத்திலும் கசப்பை ஏற்படுத்திய உன்னை என்னால் பொறுத்துக் கொள்ள இயலாது. நான் தவவலிமை மிக்க உயர்ந்த பத்தினி என்பது உண்மையானால் என் தவத்தைப் பயன்படுத்தி உன்னைச் சபிக்க விரும்புகிறேன். என் சீற்றம் எல்லை கடந்திருக்கிறது. என் சாபம் என்ன என்பதை உன் காதாரக் கேட்டுக் கொள்.`

சாபம் என்ற வார்த்தை வந்ததும் கைகேயி திடுக்கிட்டுப்போய் நிமிர்ந்து பார்த்தாள். அவளை சர்வ அலட்சியமாகப் பார்த்த அருந்ததி

சீற்றத்துடன் முழங்கினாள்:

`கைகேயி! இனி வருங்காலங்களில் மக்கள் தங்கள் பெண் குழந்தைகளுக்கு தசரத மாமன்னரின் மனைவியர் பெயர்களான கௌசல்யா, சுமித்ரா என்பதையெல்லாம் வைப்பார்கள். ஆனால் ராமனையும் சீதையையும் லட்சுமணனோடு சேர்த்துக் காட்டுக்கு அனுப்பிய கொடூரமான செயலைச் செய்த உன் பெயரை மட்டும், யாரும் தங்கள் குழந்தைகளுக்கு ஒருபோதும் வைக்க மாட்டார்கள். இது மனமார உனக்கு நான் தரும் சாபம். எதிர்கால உலகம் இந்தச் சாபம் பலிக்கும்போது அதன் உண்மையை உணர்ந்து கொள்ளும். கைகேயி என்ற பெயரில் இனி உன்னைத் தவிர உலகில் எந்தப் பெண்ணும் எந்தக் காலத்திலும் இருக்க மாட்டாள்.

சொல்லிவிட்டு அருந்ததி விறுவிறுவென்று ஆசிரமத்தை நோக்கி நடந்தாள். வசிஷ்டர் தன் மனைவியைத் தொடர்ந்து தாமும் ஆசிரமம் நோக்கிச் சென்றார். அருந்ததியின் விந்தையான சாபத்தைக் கேட்ட கைகேயியின் மனம் துணுக்குற்றது.



9

சுமந்திரர் காத்திருப்பார்!

உத்தரவுப்படி, சுமந்திரர் ராம லட்சுமணர்களையும் சீதாதேவியையும் தேரில் ஏற்றிக் கொண்டார். உத்தரவிட்டது யார்? கைகேயியா, தசரதரா? சுமந்திரர் மனம் கடும் எரிச்சலடைந்தது.

அரண்மனை வாயிலில் தளர்ச்சியுடன் நின்றிருந்த தசரதரை ஏறிட்டுப் பார்க்காமலே தேரைச் செலுத்தத் தொடங்கினார் சுமந்திரர்.

தேர் கானகத்தை நோக்கி வேகமெடுத்து ஓடத் தொடங்கியது. தன்னை விட்டு ராமன் பிரிந்துசெல்வதைக் கண்டு, அரண்மனை வாயிலில் கோசலையின் கைத்தாங்கலில் நின்றிருந்த தசரதர் மயங்கிச் சரிந்தார்.

அந்தக் காட்சியையும் கௌசல்யை அவரை மெல்ல எழுப்பிக் கைகொடுத்து அரண்மனையின் உள்ளே அழைத்துச் சென்ற காட்சியையும் பார்த்த அயோத்தியின் ஆண்கள் மேல்துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு குலுங்கினர். பெண்கள் முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு அரற்றினர்.

அனைவரும் துக்கத்தைத் தாளமுடியாத பரிதவிப்புடன், கூட்டம் கூட்டமாக ராமன் சென்ற தேரைப் பின்தொடர்ந்து ஓடலாயினர்.

ராமபிரான் கானகம் செல்லக் காரணமான கைகேயியை நினைத்து விரல்களை நெட்டி முறித்துச் சாபமிட்டவாறே ரதத்தைத் தொடர்ந்து

ஓடினர் பற்பலர்.

அயோத்தி மக்கள் விழிகளிலிருந்து வற்றாத ஜீவநதிபோல் பொங்கிப் பெருகிய கண்ணீரைக் கண்டார் தேரோட்டியும் மந்திரியுமான சுமந்திரர். இத்தனை மக்கள் துயரவசப்படும் படியான ஒரு செயலைச் செய்கிறோமே என்று அவர் மனம் தவித்துக் கலங்கியது.

தாமும் கண்ணீரைச் சொரிந்தவாறே அவர் குதிரைகளின் லகானை இழுத்துச் சொடுக்கினார். புரவிகள் அதிவேகம் கொண்டன. சீதாதேவி விழுந்து விடாமல் இருக்க ராமனின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

ஆனால் ஓடிய தேரின் வேகத்திற்கு ஈடுகொடுத்து மக்களும் வேகவேகமாகத் தேரைப் பின்தொடர்ந்து ஓடினார்கள். `ராமா ராமா! திரும்பிவிடு! திரும்பி விடு!` என்ற குரல்கள் தொடர்ந்து எங்கும் எழுந்தன.

ஓடுகிற தேரில் இருந்தவாறே ராமன் திரும்பி மக்களைப் பார்த்தான். `என் அன்பான அயோத்தி ஜனங்களே! நீங்கள் அனைவரும் என்மேல் வைத்திருக்கும் இத்தனை பிரியத்தையும் இனிமேல் பரதனிடம் வையுங்கள். அவனே இனி உங்கள் ராஜா. அவன் உங்கள் எல்லோரையும் கண்போலக் காப்பாற்றுவான். தயவுசெய்து அனைவரும் ரதத்தைப் பின்தொடராமல் நகரத்திற்குத் திரும்பிச் செல்லுங்கள்!` என்று ராமன் கைகூப்பி மக்களைக் கேட்டுக்கொண்டான்.

ஆனால் யாரும் திரும்பிச் செல்வதாகத் தெரியவில்லை. ராமனை விட்டுப் பிரிய யாருக்கும் மனமில்லை. கன்றுக் குட்டியைக் காட்டி பசுவை இழுத்துக் கொண்டு போவதுபோல், தங்களின் உத்தமமான குணங்கள் என்னும் கயிற்றினால் கட்டி அயோத்தி மக்கள் அனைவரையும் ராம லட்சுமணர்கள் இழுத்துக் கொண்டு போவதைப் போல் தோன்றியது அந்தக் காட்சி.

சுமந்திரர் இத்தனை மக்களும் வருந்தும்படியான ஒரு செயலைச் செய்கிறேனே என்று மீண்டும் மீண்டும் எண்ணியெண்ணி மருகினார். ஏன்தான் தேரோட்டியாக இருக்கிறோமோ என்று வாழ்விலேயே முதன்முறையாக தன் தொழிலைக் குறித்து வருத்தம் கொண்டார். தேர் எவ்வளவு வேகமாகச் சென்றாலும் மக்கள் விடாமல் தேரைப் பின்தொடர்வது கண்டு மெய்சிலிர்த்தார்.

அதற்குள் அவர்கள் செல்லும் வழியில் புனிதமான தமஸா நதி குறுக்கிட்டது. தேரை நிறுத்தினார் சுமந்திரர். மக்கள் ஆர்ப்பரிப்புடன் ராமபிரானைச் சூழ்ந்துகொண்டார்கள்.

களைத்திருந்த குதிரைகளை இளைப்பாறுவதற்காக ரதத்திலிருந்து

அவிழ்த்துவிட்டார் சுமந்திரர். அவற்றை ஆற்றில் நீராடி புல் அருந்தி ஓய்வெடுக்குமாறு விட்டுவிட்டார். பின் கதறி அழும் மக்கள் கூட்டத்தைப் பார்த்துத் தன் விழிகளிலிருந்த வழிந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த இயலாமல் மறுபடி மறுபடிக் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

இரவு மெல்ல மெல்லத் தன் இருளைப் பரப்பத் தொடங்கியது. மக்களெல்லாம் ராமன் இருக்குமிடமே எங்களுக்கு அயோத்தி என்று கருதியவாறு அந்த ஆற்றங் கரையிலேயே ஆங்காங்கே படுத்து உறங்கத் தொடங்கினார்கள்.

வனவாசத்தின் முதல் ராத்திரியான அன்று லட்சுமணன் மிருதுவான இலைகளால் ராமனுக்கும் சீதாதேவிக்கும் படுக்கும் இடம் தயாரித்தான். ராமனும் சீதையும் அதில் படுத்து உறங்கினார்கள்.

லட்சுமணன் ராமபிரானின் கல்யாண குணங்களை சுமந்திரரிடம் விவரிக்கத் தொடங்கினான். அதை ஆனந்தமாகக் கேட்டவாறே சுமந்திரர் லட்சுமணனைப் போலவே தானும் இரவு முழுவதும் கண்விழித்திருந்தார்.

மக்களனைவரும் தங்களைக் காப்பாற்ற ராமபிரான் அருகில் தான் இருக்கிறான் என்ற நம்பிக்கையோடு உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்கள்.

அதிகாலையில் அனைவருக்கும் முன்பாக ராமனும் சீதையும் எழுந்தார்கள். மக்கள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான் ராமபிரான். அவன் விழிகள் கசிந்தன.

`லட்சுமணா! இவர்கள் நம்மேல் அளவற்ற பிரியம் வைத்திருக்கிறார்கள். வீடு வாசல் போன்ற எதையும் லட்சியம் செய்யாமல் இங்கேயே படுத்துறங்கும் இவர்களைப் பார். இவர்கள் நம்மைக் கானகம் போக விடுவார்கள் என்று எண்ணுகிறாயா? இவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போதே நாம் இவர்களை விட்டுவிட்டு வெகுதூரம் ரதத்தில் ஏறிச் சென்றுவிடுவோம். இல்லாவிட்டால் இந்த அன்புத் தளையிலிருந்து நம்மால் தப்ப முடியாது.` என்ற ராமன், அதிக ஓசையில்லாமல் தேரை எடுக்குமாறு சுமந்திரரிடம் கூறினான்.

ராம லட்சுமணர்களும் சீதையும் மெல்ல ஓசை எழக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடன் தேரில் ஏறிக் கொண்டார்கள்.

தேரைச் செலுத்தத் தொடங்கும் முன் ஒருகணம் சுமந்திரர், அங்கே கூட்டம் கூட்டமாக உறங்கும் மக்களை மறுபடி பார்த்தார். அவர் மனம் நெகிழ்ந்து விம்மியது.

இதோ இத்தனை மக்களையும் நான் அயோத்திக்குத் திரும்பும்போது எப்படிச் சந்திப்பேன், இவர்களுக்கு என்ன சமாதானம் சொல்வேன் என்று அவர் உள்ளம் கதறியது. ஆனால் ஏதொன்றும் பேசாமல்

ராமபிரானின் கட்டளைக்குப் பணிந்து தேரைச் செலுத்தலானார் அவர்.

சற்றுதூரம் வரை அதிக ஓசையில்லாமல் மெல்லச் சென்ற தேர் பின்னர் வேகம் கொண்டது. திடீரென்று தேரை நிறுத்தச் சொன்னான் ராமன்.

`சுமந்திரரே! நாங்கள் சற்று இறங்கி ஓய்வெடுக்கிறோம். நீங்கள் ரதத்தில் ஏறி வடக்குமுகமாகக் கொஞ்ச தூரம் மண்ணில் சுவடு ஏற்படுமாறு தேரை ஓட்டிச் செல்லுங்கள். நானும் இப்போது உங்களோடு வந்தால் பதினான்கு ஆண்டுகள் அயோத்தி நோக்கித் திரும்பக் கூடாது என்ற என் விரதத்திற்கு பங்கமாகும். எனவே நீங்கள் மட்டும் செல்லுங்கள். சிறிது தொலைவு சென்ற பிறகு திரும்புங்கள். அப்படித் திரும்பி வரும்போது, மக்கள் நீங்கள் திரும்பி வந்ததைக் கண்டுபிடிக்க முடியாதபடி மெல்ல புல்மேல் ரதத்தைச் செலுத்திக் கொண்டு இங்கு வாருங்கள். புல்லில் ரதம் திரும்பி வந்த சுவடு தெரியாது. நாம் அயோத்திக்குத் திரும்பிவிட்டதாக மக்கள் நினைத்துக் கொண்டு அவர்கள் அயோத்தி திரும்புவார்கள். இல்லாவிட்டால் நம்மைத் தேடிக்கொண்டு அவர்கள் மேலும் மேலும் நம்மையே பின்தொடர்வார்கள்.`

ராமன் சொன்ன யுக்தியை ஏற்றுக்கொண்டு சுமந்திரர் தேரை அப்படியே சற்றுதூரம் செலுத்திவிட்டு பின் மண்பாதையில் அல்லாமல் பாதையோரம் இருந்த புல்மேல் தேரைச் செலுத்திக்கொண்டு வந்துசேர்ந்தார். பின்னர் ராம லட்சுமணர்களும் சீதையும் மீண்டும் தேரில் ஏறி அமர தேர் மறுபடி வேகம் கொண்டு புறப்பட்டது.

தேர் கோசல தேசத்தைத் தாண்டி, வேதசுருதி என்ற புண்ணிய நதியையும் தாண்டி மேலே மேலே சென்றது. அதன் பின்னர் கோமதி நதியைத் தாண்டி, ஸ்யந்திகா என்னும் நதியையும் கடந்தார்கள்.

பிறகு கங்கா நதிக்கரைக்கு வந்தார்கள். அந்த தெய்வ நதியின் கரையில் சிருங்கிபேரபுரம் என்னும் இடத்திற்கு வந்துசேர்ந்தார்கள். ராமன் சுமந்திரரைப் பிரியமாய்ப் பார்த்து, `கங்கைக் கரையில் அதோ பூக்களுடன் ஒரு பெரிய புங்கைமரம் உள்ளதல்லவா? அதனடியில் எங்களை இறக்கிவிடுங்கள்` என்று கேட்டுக் கொண்டான். வனம் சமீபிப்பதை அறிந்து இனி சுமந்திரரிடமிருந்து விடைபெற வேண்டும் என ராமன் நிச்சயித்தான்.

ராமபிரான் சொன்னபடியே சுமந்திரர் ராம லட்சுமணர்களையும் சீதாதேவியையும் அந்தப் பெரிய புங்க மரத்தடியில் இறக்கிவிட்டார். பின் தேரிலிருந்து இறங்கி ராமனை நோக்கிக் கைகூப்பியவாறு நின்றார்.

இனி இந்த மூவரும் கானகத்தில் பதினான்கு ஆண்டுகள் தனித்து வாழவேண்டுமே என்று எண்ணிய அவரிடம் ஒரு பெருமூச்சு எழுந்தது.

அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

`எல்லாம் விதியின் செயல் சுமந்திரரே! தாங்கள் அறியாததல்ல. கைகேயிமாதா மேல் தாங்கள் கோபம் கொள்ள வேண்டாம். மனத்தைத் தேற்றிக் கொள்ளுங்கள்!` என்றான் ராமன். சுமந்திரர் ஒரு விம்மலோடு சொன்னார்:

`ஸ்ரீராமா! அயோத்தி மக்கள் இந்நேரம் எழுந்து தேரைக் காணாமல் திகைத்திருப்பார்கள். தேர்ச் சுவட்டைப் பின்பற்றி தேர் அயோத்திக்கு ராமனுடன் திரும்பிவிட்டது என்று எண்ணி அயோத்தி சென்றிருப்பார்கள். அவர்கள் அனைவரும் என்னைக் காணக் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களை எப்படிச் சந்திப்பேன்?`

ராமன் அவரை ஆதரவோடு பார்த்தான்.

`சுமந்திரரே! துயரவசப்பட்டுக் கதறும் மக்களை நீங்கள் சந்தித்துத்தான் ஆகவேண்டும். எவ்விதமாவது அவர்களைச் சமாதானப் படுத்தவும் வேண்டும்.`

`எவ்விதம் சமாதானப் படுத்துவேன்? என் உள்ளம் உடைகிறது ராமா! எனக்கு ஏன் இந்த நிலை? உன்னை அழைத்துச் சென்று மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்தும் நிலை எனக்கு என்று கிட்டும்?`

`காத்திருக்க வேண்டும் நீங்கள். வேறு வழியில்லை.`

`எத்தனை நாள் காத்திருக்க வேண்டும் ராமா? பதினான்கு ஆண்டுகளா?`

`அல்ல. நான் பரதனைப் பற்றி நன்கு அறிவேன். பதினான்கு ஆண்டுகள் முடிந்து நான் அயோத்தி திரும்பும்போது என் அன்பான பரதன் உங்களைத் தேரோட்ட விடமாட்டான். தானே எனக்குத் தேரோட்ட முனைவான். என்னைப் பிரிந்து பதினான்கு ஆண்டுகள் பரதன் உயிரோடு இருக்க வேண்டுமே என்பதுதான் என் கவலை!`

`அப்படியானால் உங்களைத் தேரில் அழைத்துச் சென்று மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்த நான் எத்தனை நாள் காத்திருப்பது ராமா?`

`அடுத்த அவதாரம் வரை!`

`என்ன!` திகைப்போடு சுமந்திரர் ராமபிரானைப் பார்த்தார். ராமன் அவரைப் பரிவோடு உற்று நோக்கியபோது ராமன் முகத்தில் தெய்வீகப் புன்முறுவல் ஒன்று பூத்தது.

மொழியால் சொல்ல இயலாத கோடானுகோடி விஷயங்களை மௌனத்தாலேயே அந்தப் புன்னகை, சுமந்திரருக்குச் சொல்லிவிட்டது. ராமபிரான் மூலப்பரம்பொருளே என்பதை உணர்ந்த சுமந்திரர்

பரவசத்துடன் இருகரம் கூப்பித் தொழுதார். ராமபிரான் சொல்லத் தொடங்கினான்:

`சுமந்திரரே! இந்த நாடகத்தில் இன்று உங்கள் வேடம் இப்படி. அடுத்த நாடகம் கிருஷ்ணாவதாரம். அப்போது நீங்கள் அக்ரூரர் என்ற மகானாகப் பிறப்பீர்கள். இன்று அயோத்தி மக்கள் என்னைப் பிரிய சிரமப்பட்டு வடித்த கண்ணீரைப் பார்த்துக் கலங்கினீர்களே? கிருஷ்ணாவதாரத்தில் கம்சனை வதம் செய்யும் முன் என்னை நீங்கள் தான் தேரில் ஏற்றிக் கம்சன் வாழும் வடமதுரைக்கு அழைத்துச் செல்வீர்கள். அப்போது அதே தேரில் இந்த என் தம்பி லட்சுமணன் என் அண்ணன் பலராமனாக என்னுடன் வருவான். கம்ச வதத்தின் பொருட்டு என்னை நீங்கள் தேரில் அழைத்துவருவதால் வடமதுரை மக்களெல்லாம் அன்று உங்களைப் பார்த்து ஆனந்தம் அடைவார்கள். இன்று மக்களின் கதறலைப் பார்த்து உங்கள் மனத்தில் விளைந்துள்ள துக்கம் அன்று மக்கள் அடையும் மகிழ்ச்சியைப் பார்த்து நீங்கள் பெறும் ஆனந்தத்தால் சரிசெய்யப்படும்!`

சுமந்திரர் வியப்போடு ராமபிரான் சொல்வதைக் கேட்டார்.

பின் இருகரம் கூப்பியவாறே மூலப் பரம்பொருளை உணர்ந்த நிறைவோடு, `எல்லாமே தங்கள் சித்தப்படித்தான் நடக்கிறது என்பதைப் புரிந்துகொண்டேன் சுவாமி!` என்று நெகிழ்ச்சியுடன் ராமபிரானைப் பணிந்தார்.

அந்தக் காட்சியைப் பார்த்த சீதையாகிய திருமகளும் லட்சுமணனாகிய ஆதிசேஷனும் கையுயர்த்தி சுமந்திரருக்குத் தாங்களும் ஆசி கூறினார்கள்.

வானிலிருந்து தேவர்களின் கரங்கள் அவர்கள் நால்வரின் மேலும் மலர் தூவின. தங்கள் மேல் விழும் மலர்கள் தாங்கள் நின்றிருக்கும் புங்க மரத்தின் மலர்கள் அல்ல என்றுணர்ந்த சுமந்திரரின் கரம், அந்த தேவலோக மலர்களில் ஒன்றை எடுத்து பக்தியுடன் கண்ணில் ஒற்றிக் கொண்டது.

10

அந்தத் தாய் யாரோ?

சுனயனா தேவி அதிர்ச்சியில் உறைந்து உட்கார்ந்திருந்தாள். ஜனக மன்னரின் பட்ட மகிஷியாக அரசவையில் சிம்மாசனத்தில் அவரருகே கம்பீரமாக வீற்றிருந்த அவள், முற்றிலும் மனந் தளர்ந்தவளாய் தன் காலுக்குக் கீழே பூமி கிடுகிடுவென்று நடுங்குவதுபோல் உணர்ந்தாள்.

அயோத்தியிலிருந்து வந்த செய்திதான் அவளை அப்படி அதிர வைத்தது. தசரதரிடம் கைகேயி கேட்ட கொடுமையான வரத்தால் ராமன் வனத்திற்குப் போனதாகவும் அவனுடன் சீதையும் லட்சுமணனும் வனம் சென்றிருப்பதாகவும் ஒற்றன் தெரிவித்தான்.

சீதை இன்னும் பதினான்கு ஆண்டுகள் முடியுமட்டும் வனத்தில் தான் வாழ்வாள் என்று அந்த ஒற்றன் சொன்னபோது, அரசவை முழுவதும் தாளமுடியாத துயரத்தில் தோய்ந்தது.

இதெல்லாம் நடந்து மிகச்சில நாட்களே ஆகியிருப்பதாகவும் தன் மாமாவான கேகய மன்னனின் நாட்டுக்குச் சென்ற பரதன் கூட இன்னமும் அயோத்தி திரும்பவில்லை என்றும் ஒற்றன் மேலும் சொன்னான்.

ராமன் வனம் சென்ற அதிர்ச்சியில் தசரத மாமன்னர் காலமாகிவிட்டதாகவும் இன்னும் அவரது அந்திமக் கிரியை கூட நடைபெறவில்லை என்றும் அவன் தொடர்ந்து சொன்னபோது, சபை தசரதர் மேல் கொண்ட அளவற்ற மரியாதையால் பெரும் சோகத்தோடு மௌனம் காத்தது.

தன் மகள் சீதை குறித்த செய்தியைக் கேட்டுத் தனது மனம் நடுங்குவதை சுனயனாவால் உணர முடிந்தது.

மகளுக்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்டுத் தாய் மனம் நடுங்குவது இயல்புதானே?

ஆனால் அவள் காலின் கீழே பூமியும் மெல்ல நடுங்குவதுபோல் தோன்றுகிறதே? இந்த உணர்வு பிரமையா இல்லை உண்மையா? இந்த அநியாயம் பொறுக்காமல் பூகம்பம் வரப் போகிறதா என்ன?

தான் வளர்ப்புத் தாய் தான் என்பதையும் சீதாதேவியின் உண்மைத் தாய் பூமாதேவி தான் என்பதையும் சுனயனாவின் மனம் அப்போது உணரவில்லை.

வளர்ப்புத்தாய் என்பதையே மறந்து உண்மைத் தாயாகவே மாறித்தானே அவள் சீதைமேல் பாசம் கொண்டு பரிதவிக்கிறாள்?

வளர்ப்புத் தாயின் மனமே இப்படி நடுங்குமானால் பெற்ற தாயின் மனம் இன்னும் அதிகம் நடுங்காதா என்பதையும் அவள் எண்ணிப் பார்க்கவில்லை.

சற்று நேரத்தில் அவள் காலின் கீழிருந்த பூமியின் நடுக்கம் நின்றது. அந்த நில நடுக்கம் தன் பிரமைதான் என்பதாக சுனயனா அப்போது எண்ணிக் கொண்டாள்.

அவள் ஏதோன்றும் பேசாது கண்களைத் துடைத்துக் கொண்டு, மெல்ல எழுந்து தன் அந்தப்புரம் நோக்கிச் சென்றாள்.

ஜனகர் `அடுத்த நடவடிக்கை என்ன என்று பின்னர் ஆராயலாம். இப்போதைக்கு சபை கலையலாம்!` என்று உத்தரவிட்டார். பின் அவ்வரும் சுனயனாவை ஆறுதல் படுத்தும் நோக்கில் தாமும் அந்தப்புரம் சென்றார்.

சுனயனாதேவி தாள முடியாத துக்கத்தில் தோய்ந்தவளாய் சற்று நேரம் மௌனமாய் அமர்ந்திருந்தாள். ஜனகர் சலனமேதும் இல்லாது அவளையே பார்த்தவாறிருந்தார்.

ராஜரிஷி அல்லவா அவர்? அவர் மனத்தை எந்தத் துக்கமும் பாதிக்காது என்று எண்ணிய சுனயனா பெருமூச்செறிந்தாள். பிறகு` மெல்லச் சொல்லலானாள்:

`உடனடியாக ஜோதிடரைக் கூப்பிடுங்கள் நாதா. இந்த நிலைமையின் பின்னணி என்ன என்பதை ஜோதிடரிடம் கேட்டு அறிவோம். நான் சீதையின் ஜாதகச் சுவடியை எடுத்துவரச் சொல்கிறேன். பதினான்கு ஆண்டு வனவாசம் என்பது மிக நீண்ட காலம் அல்லவா?`

தளர்ந்த மனத்தோடு சொன்ன சுனயனா, தன் பணியாளை அழைத்து, சீதாதேவியின் ஜாதகம் எழுதப்பட்ட ஓலைச்சுவடியை உடனடியாக எடுத்துவரச் செய்தாள்.

ஜனகர் கையைத் தட்டி ஒரு பணியாளை வரச்செய்து, அரண்மனையின் பிரதான ஜோதிடருக்குப் பல்லக்கு அனுப்பி அவரை உடன் அழைத்துவர ஏற்பாடு செய்தார்.

ஜோதிடர் வந்துசேரும் வரை ஏதொன்றும் பேசாமல் மௌனம் காத்தாள் சுனயனா. ஜனகர் தாமும் மௌனமாகவே அமர்ந்திருந்தார்.

விரைவில் அயோத்தி சென்று பரதனைச் சந்தித்து அவனுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும் என்று அவர் மனத்தில் நினைத்துக் கொண்டார். இப்போதைய சூழ்நிலையில் அதிகம் பாதிக்கப்பட்டவன் பரதன் தான்.

சிறிதுநேரத்தில் ஜோதிடர் வந்துசேர்ந்தார். மிதிலையின் பிரதான ஜோதிடர். அவரைத் தேடி வெளி தேசங்களிலிருந்தெல்லாம் ஆட்கள் வருவதுண்டு. அவரது புகழ் எங்கும் பரவியிருந்தது.

அவர் ஜாதகம் பார்த்துப் பலன் சொன்னால் அது தேவ வாக்கு என்று மக்கள் நம்பினார்கள்.

ஜோதிடருக்கு விருந்துபசாரம் செய்த சுனயனா, பின்னர் தன் செல்ல மகள் சீதையின் ஜாதகத்தை அவரிடம் கொடுத்தாள்.

தற்போதைய வனவாச நிலைமையை எடுத்துச் சொல்லி ஜாதகத்தை ஆராயச் சொன்னாள்.

சீதையின் ஜாதகச் சுவடியைக் கையில் வாங்கிக் கொண்ட ஜோதிடர், மகாராணி சுனயனாவை மரியாதை கலந்த பரிவோடு பார்த்தார். பின் ஆதரவாய்ச் சொல்லலானார்:

`மகாராணி! சீதாதேவியின் ஜாதகத்தில் வனவாச ப்ராப்தி யோகம் உண்டு என்பது நான் சீதையின் திருமணத்திற்கு முன்பாகவே தங்களுக்குத் தெரிவித்ததுதானே? அந்தக் காலம் இப்போது வந்துவிட்டிருக்கும். அவ்வளவே. கவலைப்படத் தேவையில்லை!`

ஜோதிடர் மெல்ல ஜாதகக் கட்டங்களைப் பார்த்துக் கணக்கிட்டார். பின்னர் தணிவான குரலில் சொன்னார்:

`தாயே! தாங்கள் மனம் கலங்கக் கூடாது. இந்த ஜாதகப்படி உள்ள பலனை விருப்பு வெறுப்பில்லாமல் நான் சொல்கிறேன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். சீதாதேவிக்கு வாழ்வில் இரண்டு வனவாசங்கள் நேரும் என்கிறது ஜாதகம். ஒன்று இப்போது நடக்கிறது.

இன்னொரு வனவாசமும் அவரது வாழ்வில் நடக்கும் என்பதை ஜாதகம் காட்டுகிறது!'

`மேலும் ஒரு வனவாசமா!`

சுனயனா நெட்டுயிர்த்தாள். ஜனகர் எதுவும் சொல்லாமல் அமைதி காத்தார்.

சற்றுநேரம் பேசாமல் இருந்த சுனயனா, பின்னர் மனத்தைத் தேற்றிக் கொண்டவளாய்க் கேட்டாள்:

`ஜோதிடரே! அந்த இரண்டு வனவாசங்களுக்கும் இடையே என்ன வேறுபாடு என்பதை ஜாதகம் காட்டுமா?`

`ஏன் காட்டாது? காட்டுமம்மா! ஆனால் ஜோதிடம் சொல்வது கொஞ்சம். முழுப்பலனையும் எந்த ஜோதிடனாலும் சொல்லிவிட இயலாது. கொஞ்சம் கோடிகாட்டலாம் அவ்வளவே. ஜோதிடம் என்பது ஒரு விஞ்ஞானம். இறையருள் அந்த விஞ்ஞானத்தையும் தாண்டிச் செயல்படும் ஆற்றலுடையது. எனவே இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு அமைதியாய் இருங்கள். இந்த இரு வனவாசங்களில் ஒன்று சீதாதேவியின் வாழ்வில் முற்பகுதியில் நடக்கும். பெரும்பாலும் இப்போது நடப்பது அதுவாகத்தான் இருக்கும். இன்னொரு வனவாசம் அவரது வாழ்வின் பிற்பகுதியில் நடக்கும். முற்பகுதியில் நடக்கும் வனவாசத்தில் அவள் கணவனது பாதுகாப்பில் இருப்பாள். பிற்பகுதியில் நடக்கும் வனவாசத்தில் அவளுக்குத் தாயின் அரவணைப்பு கிட்டும்.`

இதைக்கேட்டு சுனயனா முகத்தில் மெல்லிய மகிழ்ச்சி ஏடாய்ப் பரவியது.

இப்போது அவள் கணவனின் பாதுகாப்பில் தானே வனத்திற்குச் சென்றிருக்கிறாள்? எனவே கவலைப்பட ஒன்றுமில்லை.

அவளது வாழ்வின் பிற்பகுதியில் நிகழும் வனவாசத்திலோ அவள் தாயின் அரவணைப்பில் இருக்கப் போகிறாள். எனவே தன்னோடு தான் இருப்பாள்.

தன்னோடு அவள் இருக்கும்போது அவள் மனத்தில் மகிழ்ச்சி அன்றி வேறு உணர்வுகள் தோன்றாமல் தன்னால் பார்த்துக் கொள்ள முடியும். அது போதுமே? அதைவிட வேறென்ன வேண்டும்?

தனக்கு ஆறுதல் அளித்த ஜோதிடருக்கு வழக்கத்தை விடக் கூடுதலான பரிசுகளை அளித்து வழியனுப்பி வைத்தாள் சுனயனா தேவி.

பின்னர் திரும்பிவந்த அவள் அதிகம் பேசாமல் அமர்ந்திருந்த ஜனகரைப் பார்த்து, `ஏன் நாதா? சீதையின் இரண்டாம் வனவாசத்தின்

போது தாயின் அரவணைப்பில் இருப்பாள் என்று ஜாதகம் சொல்கிறதே? அப்படியானால் சீதையுடன் நானும் கொஞ்சகாலம் வனத்தில் வாழ்வேன் என்றுதானே பொருள்? நீங்களும் நானுமாக சீதையுடன் அப்போது வனத்திற்குச் சென்றுவிட்டால் போகிறது!` என்றாள்.

சீதையுடன் வாழும் காலம் மறுபடியும் தனக்குக் கிட்டும் என்ற மகிழ்ச்சியில் அவள் உள்ளம் திளைத்தது.

ஜனகர் அவளை ஆதரவாய்ப் பார்த்துவிட்டுச் சொன்னார்:

`அப்போதைய நிலைமை எப்படி இருக்கிறதோ அதற்குத் தக்கவாறு அப்போது முடிவெடுப்போம் தேவி! இப்போதைய நிலைபற்றி இன்று யோசிப்போம். லட்சுமணனின் மனைவியும் நம் மகளுமான ஊர்மிளை அயோத்தியில் தனித்திருக்கிறாள் இப்போது. உன் மைத்துனன் குசத்வசனின் புதல்விகளான பரதனின் மனைவி மாண்டவியும் சத்துருக்கனனின் மனைவி சுருதகீர்த்தியும் என்ன செய்வதென்றறியாது திகைத்திருப்பார்கள். அவர்கள் எல்லோரும் நம் குழந்தைகளும் தானே? அவர்களையும் நாம் பார்த்து எத்தனை காலமாகிறது? ராமன் கானகத்திற்கு அனுப்பப்பட்டது குறித்து, பரதன் மிகுந்த துயரத்தில் இருப்பான். அவனும் நமக்கு ஒரு மாப்பிள்ளை அல்லவா? அவனைப் போய்ப் பார்ப்போம் வா. அவனது மாமாவின் கேகய நாட்டிலிருந்து அயோத்திக்கு வரும் பரதன், கட்டாயம் கானகம் சென்று ராமனைச் சந்திப்பான் என்று என் உள்மனம் சொல்கிறது. அப்படியானால் அவனோடு நாமும் கானகம் சென்று சீதையைப் பார்த்துவிட்டு வரலாம்!`

சுனயனாவின் முகம் ஜனகரின் யோசனையைக் கேட்டுப் பளிச்சென மலர்ந்தது. அயோத்தியில் மாண்டவி, சுருதகீர்த்தி, ஊர்மிளை ஆகியோரைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டும். அதோடு சீதையை நேரில் பார்க்கும் வாய்ப்பும் கிட்டக் கூடும் என்று எண்ணி அவள் உள்ளம் மகிழ்ந்தது.

அவள் அயோத்திப் பயணத்திற்குத் தயாராகத் துணிமணிகளை எடுத்துவைத்துக் கொள்ளும் எண்ணத்தில் தன் தனியறைக்கு விரைந்து சென்றாள்.

தன்னந்தனியே அமர்ந்திருந்த ஜனகரைப் பார்த்துக் கொண்டே இருந்தது காலம்.

இரண்டாம் வனவாசத்தின் போது சீதாதேவி தாயின் அரவணைப்பில் இருப்பாள் என்று ஜாதகம் காட்டுவது உண்மைதான். ஆனால் ஜாதகம் சொல்லும் அந்தத் தாய் வளர்ப்புத் தாயான சுனயனா அல்ல, பெற்ற தாயான பூமாதேவி.

பூமித்தாயின் அரவணைப்பில் சீதாதேவி வ்னத்தில் வாழப்போவது மட்டுமல்ல, சீதாதேவியே விரும்பி பூமிக்குள் மறையவும் போகிறாள்.

இவை அனைத்தையும் தெரிந்துகொண்டிருந்த காலம், `பேதைமை நிறைந்த சுனயனா இந்த உண்மையை அறியவில்லை என்பது சரி. ஆனால் ராஜரிஷியும் தீர்க்கதரிசியுமான ஜனகர் கூட இந்த எதிர்கால உண்மையை அறியவில்லையே!` என்று எண்ணி உள்ளூற நகைத்துக் கொண்டது.



11

ராமரையே ராமநாமம் சொல்லச் சொன்னவர்!

கானகத்தில் ராமனும் சீதையும் லட்சுமணனும் வாசம் செய்துகொண்டிருந்த காலம். அவர்கள் அப்போது வசித்துக் கொண்டிருந்த அந்த அழகிய இடத்தின் பெயர் பஞ்சவடி.

அகஸ்திய முனிவர் தான் `பஞ்சவடிக்குச் செல்லுங்கள், மிக அழகான இடம், அங்கே நீங்கள் வசிக்கலாம்!` என்று அவர்களிடம் பரிந்துரைத்தார். ஆனாலும் இவ்வளவு அழகான இடமாக இருக்கும் என்று அவர்கள் மூவரும் நினைத்திருக்கவில்லை.

பஞ்சவடி என்ற பெயருக்குப் பொருத்தமாக ஐந்து மரங்கள் ஐந்து மூலைகளில் வளர்ந்திருந்தன. பிரம்மாண்டமான மரங்கள். எத்தனையோ காலமாக அந்த வனத்தில் அவை காலூன்றியிருக்க வேண்டும். காவல் காத்து நிற்கும் தேவதைகளைப் போல அவை விழுதுகளை ஊன்றி நின்றுகொண்டிருந்த அழகே அழகு.

சீதை அந்த விழுதுகளில் சிலவற்றை இணைத்துக் கட்டி அதில் ஊஞ்சல் ஆடினாள். ராமனை அதில் உட்கார வைத்து ஆட்டுவித்தாள்.

`நீ சொன்னபடியெல்லாம் ஆடுகிறேன் பார்!` என்று சொல்லி ராமன் சிரித்தான்.

லட்சுமணன் அந்த இடத்தில் என்ன அழகாக பர்ணசாலை கட்டிவிட்டான்! அரண்மனையை விட அழகாக இருந்தது பர்ணசாலை.

ராமனும் சீதையும் தங்குவதற்குத் தனி இடம். லட்சுமணன் தங்குவதற்குத் தனி இடம். சமையல் வேலைகளைக் கவனிக்க ஒரு தனி இடம்.

லட்சுமணன் கட்டிய பர்ணசாலையின் அழகை மெச்சி ராமன் தன் தம்பியை அன்போடு கட்டிக் கொண்டான். இந்தக் கலையை எல்லாம் எப்படி எப்போது கற்றுக் கொண்டாயப்பா என்று வியப்போடு வினவினான்.

ஐந்து மரங்களின் நிழல் பர்ணசாலையைக் குளுகுளுவென்று வைத்திருந்தது. ராமன் இருக்கும் பிரதேசம் குளுமையாக இருக்கக் கேட்கவேண்டுமா என்ன? அவன் தோற்றம், சொல், செயல் எல்லாமே குளுமை தானே?

சீதை ராமனைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தாள். அரண்மனையில் எப்போதும் ராமபிரானைச் சுற்றிக் கூட்டமாக இருக்கும். தன் மனைவியைத் தனியே சந்திக்கக் கூட அவகாசம் ஏது? அன்பாக நாலு வார்த்தை பேசுவதற்குள் ஆயிரம் பேர் ராமனைத் தேடி வருவார்கள்.

இங்கே ராமன் முற்றிலும் சீதாராமனாக அல்லவா வாழ்ந்து வருகிறான்!

அன்று ராமன் ஆலமரத்தடியில் அமர்ந்துகொண்டிருந்தான். சீதை பர்ணசாலை வாசலில் நின்று கொண்டு அங்கே கழுத்தை நீட்டி நீட்டி நடந்துகொண்டிருந்த மயில்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ராமன் சீதையையே கவனித்துக் கொண்டிருந்தான்.

`என்ன பார்க்கிறீர்கள்?` என்று கேட்டாள் சீதை. `இல்லை எது மயில் என்று தெரியவில்லை, அதுதான் உன்னையும் மயிலையும் பார்த்துக் குழம்பிக் கொண்டிருக்கிறேன்!` என்றான் ராமன்.

சீதை வெட்கத்தோடு சிரித்துக் கொண்டாள்.

அப்போது அவர்கள் இருக்குமிடத்திற்கு ஒல்லியாக ஒரு முனிவர் வந்தார். அவர்களை வியப்போடு பார்த்தார். யார் வந்திருக்கிறார்கள் என்று பார்க்க லட்சுமணனும் அங்கே தேடி வந்தான்.

அந்த முனிவரையே ராமன் ஆச்சரியத்தோடு பார்த்தான். என்ன ஒளி அவர் முகத்தில்! பல்லாண்டுகளாக அனுசரித்த பிரம்மச்சரியத்தின் பொலிவு. தவத்தால் விளைந்த கனிவு. ஒரு குழந்தைமை கலந்த வெகுளித்தனம் இயல்பாக அவரிடம் படிந்திருந்தது.

முழுவதும் நல்ல குணங்களாலேயே செய்யப்பட்ட உருவம் போல் இருந்தது அவரது தோற்றம். அந்த முனிவர் தான் முதலில் பேசத்

தொடங்கினார்.

`யார் நீங்கள்? மூன்று பேராக ஏன் இங்கே வந்திருக்கிறீர்கள்? இங்கெல்லாம் வரக்கூடாது என்று உங்களை உங்கள் அப்பா அம்மா கண்டிக்கவில்லையா? என்ன சங்கடமடா இது! அரக்கர்கள் நடமாடும் இடம் அல்லவா இது? உங்களைப் பார்த்தால் மிகவும் நல்லவர்கள் போல் தெரிகிறது. இந்த இடத்தில் எப்படி இருப்பீர்கள்? பர்ணசாலையை எல்லாம் பார்த்தால் இங்கேயே தங்க வந்தவர்கள் போல் தென்படுகிறது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும் தெரிகிறதா?`

வந்த முனிவர் வெகுளியாகப் பேசிக்கொண்டே போனார். ராமன் மெல்ல நகைத்தான்.

`சுவாமி. நாங்கள் யாத்ரீகர்கள். ஏதோ கொஞ்ச நாள் இங்கே தங்கலாம் என்று வந்தோம்.`

`கொஞ்ச நாளா? பர்ணசாலை கட்டியிருக்கிற நேர்த்தியைப் பார்த்தால் கொஞ்ச நாள் தங்க வந்தவர்களாகத் தெரியவில்லையே? எப்படியோ போகட்டும். இருக்கும் நாட்களில் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் தெரிகிறதா? ராட்சஸர்கள் நடமாடுகிற பூமி இது. ஞாபகமிருக்கட்டும்.`

`அதுசரி. நீங்கள் யார் ஸ்வாமி? எதற்காக இந்த இடத்திற்கு வந்திருக்கிறீர்கள்?`

`நல்ல கேள்வி கேட்டாய் போ. இதெல்லாம் நாங்கள் இருக்கிற இடம் தானே? நாங்கள் தபஸ்விகள். முனிவர்கள் எங்கே வசிப்பார்கள்? தனிமை நிறைந்த கானகத்தில் தானே? நான் எதற்காக இங்கே வந்திருக்கிறேன் என்று கேட்டாயே? அதில் ஒரு ரகசியம் இருக்கிறது. உங்களைப் பார்த்தால் நல்ல ஆட்களாகத் தெரிகிறது. அதனால் சொல்கிறேன்.`

சீதை ஆவலோடு கேட்டாள்:

`என்ன ரகசியம் அது? எதற்காக வந்திருக்கிறீர்கள் பெரியவரே?`

வந்த துறவி சீதையைப் பார்த்தார்.

`அம்மா. பார்க்க மகாலட்சுமி மாதிரி இருக்கிறாய். தீர்க்க சுமங்கலீபவ. நான் வந்திருப்பது ராம காரியத்தின் பொருட்டாக!`

லட்சுமணன் `என்னது ராம காரியமா?` என்று திகைப்போடு கேட்டான்.

`ஆமப்பா. நான் யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அகஸ்திய முனிவரின் தம்பி நான். தெரிகிறதா? அவர் சற்றுக் குள்ளம். நான் சற்று உயரம். அவர் சற்றுப் பருமன். நான் சிறிது ஒல்லி.

இந்த வேறுபாட்டைப் பார்த்து நான் அவர் தம்பியில்லை என்று நினைக்காதீர்கள். அவர் தம்பியே தான் நான். அவர் தான் ராமகாரியமாக என்னை இங்கே அனுப்பினார்! என் அண்ணா பெரிய தபஸ்வி. எனக்கு என்னவோ அத்தனை தவச்சக்தி ஏற்படவில்லை. அவருக்கு ராமரே நேரில் காட்சி கொடுத்தாராம். சொல்லியிருக்கிறார். எனக்கும் ராமர் காட்சி கொடுப்பாரா என்று என் அண்ணாவிடம் கேட்டேன். தபஸ் பண்ணு, காட்சி கிடைக்கும், நீ இவ்வளவு வெகுளியாக இருக்கிறாயே, ராமருடைய காட்சி கிடைத்தால் கூட நீ அது ராமர் தான் என்று புரிந்துகொள்வாயோ இல்லையோ என்கிறார் அவர். என் அப்பன் ராமன் என்றைக்கு எனக்குத் தரிசனம் தரப்போகிறானோ தெரியவில்லை!`

லட்சுமணன் குறுக்கிட்டான்.

`சுவாமி. நீங்கள் ராமர் ராமர் என்று சொல்கிறீர்களே? அந்த ராமர்....

லட்சுமணன் மேலே தொடர்வதற்குள் ராமன் குறுக்கிட்டான்.

`லட்சுமணா. அதெல்லாம் இருக்கட்டும். நீ சற்றுச் சும்மா இரு. முதலில் அவரைப் பேச விடு.` என்று சொல்லி தன்னைப் பற்றி எதுவும் தெரிவிக்க வேண்டாம் என்று ஜாடை செய்துவிட்டு வந்த முனிவரிடம் விசாரிக்கலானான்.

`முனிவரே. உங்கள் பெயர் என்னவோ? `

`எனக்குத் தெரியாத கேள்வியைக் கேட்டால் நான் எப்படிப் பதில் சொல்வது? என்னை எல்லோரும் அகஸ்தியர் தம்பி என்று கூப்பிடுவார்கள். என்னை அண்ணா என்று கூப்பிடும் வயதுள்ளவர்கள் கூடத் தம்பி அண்ணா என்று அழைக்கிறார்கள். நான் என் பெயர் என்னவென்று கண்டேன்? ஏதோ ஒரு பெயர் ! எந்தப் பெயராக இருந்தால் என்ன? ராம என்ற நாமத்தை அல்லவா திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும்? என் பெயரைச் சொல்வதற்குப் பதில் ராமா என்று கூப்பிடுங்களேன். நான் ஏன் என்று கேட்டுவிட்டுப் போகிறேன். எதற்குச்சொல்கிறேன் என்றால் வாழ்க்கையை வீண் பண்ணக் கூடாது பாருங்கள். ராமா என்று நீங்கள் சொன்னால் கூப்பிட்ட உங்களுக்குப் புண்ணியம். அந்த ராமநாமத்தை நான் காதால் கேட்டால் கேட்ட எனக்குப் புண்ணியம். இதென்னடா பார்க்க அசடு மாதிரி இருக்கிறான், இப்படி புத்திசாலித்தனமாகப் பேசுகிறான் என்று பார்க்கிறீர்களா? இதெல்லாம் என் அண்ணா அகஸ்தியர் கற்றுத் தந்தது தான் எனக்கு. பெரிய புத்திசாலித்தனம் எல்லாம் எனக்குக் கிடையாது. ஏதோ மனதால் ராமனைச் சரணடைந்து வாழ்ந்து வருகிறேன். அவ்வளவுதான்.`

ராமரையே ராமநாமம் சொல்லச் சொன்ன அந்தத் துறவியைப் பார்த்து லட்சுமணன் கனிவோடு கேட்டான்.

`அதெல்லாம் சரி. நாங்கள் கொஞ்ச நாள் முன்னர் அகஸ்தியரின் ஆசிரமத்திற்கு வந்தோமே. அவருடைய தம்பி என்கிறீர்கள். உங்களை அந்த இடத்தில் காணோமே?`

`நல்ல நியாயம் போங்கள். வருகிறவர்கள் போகிறவர்களிடம் எல்லாம் பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரம் ஏது? என் அண்ணா சொல்லியிருக்கிறார். அப்படியெல்லாம் நேரத்தை வீண் பண்ணாதே. அந்த நேரத்தில் நாலு ராமநாமம் சொல்லு என்று. ராமநாமம் சொல்லிக் கொண்டே தான் இருக்கிறேன். ஆனாலும் அந்த ஸ்ரீராமன் பிரத்யட்சமாகக் காணோம்.`

ராமன் கலகலவென்று சிரித்தான்.

`ராமன் பிரத்யட்சமாவது இருக்கட்டும். ஏதோ அண்ணா சொன்னார், இங்கே ராமகாரியமாக வந்தேன் என்றீர்களே? அதென்ன ராம காரியம்?`

`அதுவா? அதுதான் ரகசியம். உங்களைப் பார்த்தால் மிக நல்லவர்களாகத் தெரிகிறது. அதனால் சொல்கிறேன். வேறு யாரிடமும் சொல்லிவிடாதீர்கள். சீக்கிரம் ராமன் இங்கே வரப் போகிறானாம். ராமன் வந்தால் இந்தப் பஞ்சவடி பிரதேசத்தில் தான் தங்குவானாம். அதனால் ராட்சஸர்கள் இந்த இடத்திற்கு வராதபடிக்கு கடுமையான மந்திர ஜபம் செய்துவருகிறேன். என்னால் முடிந்த மட்டும் ஜபித்து இந்தத் தர்ப்பைப் புல்லை இந்தப் பிரதேசத்தின் எல்லையில் நான் தூவிவிட்டேன் என்றால் என் அப்பன் ராமன் வரும்போது ராட்சஸத் தொல்லை இல்லாமல் இங்கிருக்கலாம். இந்த ராட்சஸர்கள் மகாபாவிகள். இங்கே நுழைந்துவிட்டார்களானால் அவர்கள் உபத்திரவம் தாங்க முடியாது. இதோ லட்சுமிதேவி மாதிரி இருக்கிறாளே இந்தப் பெண், இதுபோன்ற பெண்களைப் பார்த்தால் அவர்கள் ஏதாவது கடப நாடகம் ஆடித் தூக்கிக் கொண்டு கூடப் போய்விடுவார்கள். ராமன் ஜாக்கிரதையாக இருப்பான். அவனுடன் தான் அவன் தம்பி லட்சுமணனும் வருவானே? ஆனால் நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள். எதற்குச் சொல்கிறேன் என்றால் காலம் ஒன்றும் முன்பு போல் இல்லை. எங்களைப் போன்ற ரிஷிகள் கூட நிம்மதியாக தவம் செய்ய முடியவில்லை. ராமன் இங்கே வந்தால் தான் எல்லாப் பிரச்னைக்கும் தீர்வு வரும். சரி சரி. ஜாக்கிரதையாக இருங்கள். இதற்கு மேல் நான் சொல்ல ஒன்றும் இல்லை. இந்தப் பெண்ணைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் உங்களிடம் பேசி நேரத்தை வீணாக்கிவிட்டேன் என்று என் அண்ணா கோபித்துக் கொள்வார். உங்களிடம் பேசிய நேரத்தில் நாலு ராம நாமம் சொல்லக் கூடாதோ என்பார். அவர் சொல்வது சரிதானே? வரட்டுமா? ராம ராம...`

ஜபித்தவாறே தர்ப்பைப் புல்லைத் தூவிக்கொண்டு அவர் வேகமாக நடந்துசென்றார்.

சீதாதேவி அவர் சென்ற திக்கையே பாசத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு ராமரிடம் திரும்பிச் சொன்னாள்:

`பிரபோ. எனக்கு என் அப்பா ஜனக மகாராஜாவையே பார்த்ததுபோல் இருக்கிறது! என்ன அன்பு. என்ன பக்தி!`

லட்சுமணன் ராமரிடம் கேட்டான்.

`ஏன் அண்ணா நீங்கள் தான் ராமர் என்று அவரிடம் ஏன் தெரிவித்துக் கொள்ளவில்லை?`

ராமன் தழதழப்போடு சொன்னான்:

`லட்சுமணா! கள்ளம் கபடமில்லாத வெள்ளை உள்ளம் படைத்த தூய துறவி. வயோதிகர். என் மேல் தான் எத்தனை பிரியம் அவருக்கு. அவருடைய வயதுக்கு நான் அல்லவா அவரிடம் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும்? நான் யார் என்று தெரிந்துவிட்டால் அவர் எனக்கு மரியாதை காட்டத் தொடங்கிவிடுவாரே? அவரது பாசத்தை நான் மனமார அனுபவிக்க விரும்பினேன். உனக்கு ஞாபகமிருக்கிறதா? உத்தானுபாதர் என்ற முதியவர் ஒருவர் அயோத்தியில் என்மேல் எத்தனை அன்பு செலுத்திவந்தார். நான் தெய்வம் என்கிறார் இவர். அப்படி நான் தெய்வம் என்றால் என்னைத் தெய்வமாக்குவது இதோ இவரைப் போன்ற நல்லவர்களின் தூய பக்தியும் பாசமும் தானே? அவர் என்னைத் தரிசிக்க வில்லையே என்கிறார். ஆனால் இன்று இவரை தரிசிக்கக் கிடைத்ததல்லவா என் பாக்கியம்?`

ராமன் இதைச் சொல்லி முடித்தபோது மெல்லிய சிலுசிலுப்புடன் லேசான மழை பெய்யத் தொடங்கியது.

அந்தப் பிரதேசம் மேலும் குளுமை பெற்றது.

12

மனத்தை மயக்கும் பேரழில்!

அவள் வனப்பு மிக அசாத்தியமானதாய் இருந்தது. மெல்லிய இடை. நீண்ட நயனங்கள். பார்ப்பவர் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் பொன்னிற மேனி. அடர்ந்த கருங்கூந்தல்.

தோற்றத்தில் அழகாக இருந்தது மட்டுமல்ல. ஏராளமான ஆபரணங்களை வேறு அணிந்துகொண்டிருந்தாள். தங்கம், வெள்ளி, வைரம், வைடூர்யம் எல்லாமே அவளது உடலை அலங்கரித்தன. தலையில் நெற்றிச் சுட்டி, கழுத்தில் அட்டிகை, கைகளில் வளையல், இடையில் மேகலை, காலில் கொலுசு என அவள் அணியாத அணி என்று ஏதும் இருப்பதாய்த் தெரியவில்லை.

அவளது அண்ணன் மாபெரும் அரசன் என்கிறபோது அவளிடம் செல்வத்திற்கு என்ன குறை? அவளைக் கணவனை இழந்த கைம்பெண் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.

அவளது மூக்கில் ஓர் அழகிய முத்து புல்லக்கு தொங்கிக் கொண்டிருந்தது. காதுகளில் வசீகரமான இரண்டு குண்டலங்கள்.

ஆடிக்கொண்டிருந்த அந்தப் புல்லக்கு, அசைந்து கொண்டிருந்த அந்தக் குண்டலங்களுடன் ஏதோ பேசினாற்போல் இருந்தது. தங்களுக்கு ஆதாரமான பிடிமானமாக வாய்த்துள்ள இடம் தொடர்ந்து நிலைக்குமா, இல்லை நிலைக்காமல் போய்விடுமா என்ற கவலையுடன் அவை பேசிக் கொண்டனவோ

என்னவோ!

அந்தப் பேரழகி வைத்த விழி வாங்காமல் எதிரே தன்னைச் சிறிதும் கவனியாது மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்தவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். எதிரே நிற்கும் பெண்ணைப் பார்க்காமல் தலையைக் குனிந்து மண்ணைப் பார்க்கும் இவன் என்ன மனிதன்!

அவனது அழகைப் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பித்துப் பிடித்தது. காமத்தால் விளைந்த பெருமூச்சு அவள் உடலைத் தகித்துக் கொண்டிருந்தது.

மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்தவன் வேறு யாருமல்ல, இலக்குவனே தான். ராமபிரானும் சீதையும் இலக்குவன் கட்டிக் கொடுத்த குடிலின் உள்ளே ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். இலக்குவன் வேலியோரம் இருந்த ஒரு மரத்தின் அடியில் மண்ணைத் தோண்டியவாறிருந்தான்.

அந்த மரத்தின் அடியில் ஓர் எலுமிச்சைச் செடி வளர முயன்று தோற்றுக் கொண்டிருந்தது. மரத்தின் வேரும் நிழலும் அதன் வளர்ச்சியைத் தடைசெய்தன. அந்தச் செடியைப் பிடுங்கி வேறோர் இடத்தில் நட்டால் எலுமிச்சை மிக நன்றாக வளரும். அதன்பொருட்டு அந்தச் செடியை அவன் மண்ணோடு பெயர்த்துக் கொண்டிருந்தான்.

`என்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாயா?`

கொஞ்சும் குரலில் கேட்டாள் அவள். அரக்க குலப் பெண்ணான சூர்ப்பனகை, நினைத்த வடிவெடுக்கும் வல்லமை உடையவள் ஆயிற்றே? முறம் போன்ற காதுகளை உடைய அவள் இப்போது பேரழகியாக வடிவெடுத்து இலக்குவனிடம் பேச முற்பட்டாள்.

இலக்குவன் மிகுந்த அலட்சியத்துடன் அவளைத் திரும்பிப் பார்த்து `என்ன வேண்டும் உனக்கு? எதற்கு இங்கே வந்தாய்?` என்று பாம்பைப் போல் சீறினான். ஆதிசேஷன் என்ற பாம்பின் அவதாரம் தானே அவன்? பிறவிக் குணம் போகுமா என்ன?

சூர்ப்பணகை, `நீதான் வேண்டும் கண்ணா! என்னை மணம் புரிந்துகொள்ள மாட்டாயா?` என்றாள் காதலுடன். அது காதல் அல்ல. காமம்.

இலக்குவன் அவள் நிலையைப் பார்த்துத் தனக்குள் நகைத்துக் கொண்டான். வெட்கத்தை முற்றிலும் துறந்தவளாகத் தென்படுகிறாளே! அவளிடம் சற்றே விளையாட்டாகப் பேச எண்ணினான்.

`பெண்ணே! நான் ஓர் அடிமை. வாழ்நாள் அடிமை. என் எஜமானர் உள்ளே குடிலில் இருக்கிறார். நான் முற்றிலும் அவருக்குக்

கட்டுப்பட்டவன். அவர் சொன்னால்தான் நான் எதற்கும் உடன்பட இயலும். வேண்டுமானால் அவரைப் போய்க் கேட்டு அனுமதி வாங்கி வா!`

இலக்குவன் கலகலவென்று சிரித்தவாறே நகைப்புடன் இந்த வாக்கியங்களைச் சொன்னதும் அவள் பரபரப்படைந்தாள். இவன் அண்ணனாமே? அவன் எப்படி இருக்கிறான் என்று பார்ப்போம்.

அவள் குடிலின் உள்ளே போக எத்தனித்தாள். அதற்குள் என்ன பேச்சுச் சத்தம் என்று யோசித்தவாறே குடிலின் உள்ளிருந்து ராமன், சீதை இருவரும் வெளியே வந்தார்கள். சீதை யார் இந்தப் பெண் என்று அஞ்சியவாறு ராமன் பின்னால் நின்று கொண்டாள்.

ராமனது பேரழகைப் பார்த்த சூர்ப்பணகை பிரமிப்பில் ஆழ்ந்தாள். அவனது விந்தையான நீலவண்ணம் அவளைப் பேச்செழாமல் திகைக்க வைத்தது. என்ன அழகு! என்ன அழகு! இப்படியோர் அழகை இந்தப் புவி இதுவரை கண்டதில்லையே?

`யாரம்மா நீ?` பரிவோடு கேட்டான் ராமபிரான்.

`என்னை சூர்ப்பணகை என்று அழைப்பார்கள். உங்கள் தம்பியை மணந்துகொள்ளும் ஆவலோடு வந்தேன் நான். கேடுகெட்ட எலுமிச்சைச் செடியைக் கவனிக்கும் அவன் எலுமிச்சை நிறத்தில் உள்ள என்னைக் கவனிக்கவில்லை. சரியான அண்ணாப் பித்தாக இருக்கிறான். எதுவும் உங்களைக் கேட்டுத்தான் செய்வானாம். நல்ல வேடிக்கை! அவரவர்க்கு என்று தனிப்பட்ட அபிப்ராயம் இருக்க வேண்டாமோ? அதுபோகட்டும். நீங்கள் என்னை மணந்துகொண்டாலும் சரிதான். சகோதரர் இருவரில் யாரோ ஒருவருக்கு என்னை அர்ப்பணித்துக் கொள்கிறேன். சரிதானே? எப்போது நம் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம்?`

ராமன் சூர்ப்பணகையின் பேச்சைக் கேட்டுக் கலகலவென்று சிரித்தான். தாளவியலாத காமம் பெண்மையின் பல மெல்லிய உணர்வுகளை அழித்துவிடுகிறதே! அவன் மெல்லச் சொல்லலானான்:

`பெண்ணே! இதோ பார். நான் மனைவியுடன் இருக்கிறேன். என் தம்பி தான் மனைவியை ஊரில் விட்டு வந்திருக்கிறான். எனவே நீ அவனை மணப்பது தான் சரியாக இருக்கும்.`

சொல்லிவிட்டு இலக்குவனைப் பார்த்துக் கலகலவென்று நகைத்தான் ராமன். இலக்குவன் தானும் பெருங்குரலெடுத்து நகைத்தான். சகோதரர்கள் இருவரும் தன்னை வைத்துக்கொண்டு விகடம் செய்கிறார்கள் என்ற உண்மை சூர்ப்பணகைக்கு உறைக்கவில்லை. காமம் அவள் கண்ணை மறைத்தது.

ராமன் தன்னை மணக்க மறுப்பதன் காரணம் சீதை போன்ற ஒரு பேரழகி அவன் பக்கத்தில் இருப்பது தான் என்று தப்புக் கணக்குப் போட்ட அவள், சீதையை உடனடியாக அப்புறப் படுத்த முடிவுசெய்தாள். அப்போதுதான் ராமன் தன்னை மணப்பான் என்று எண்ணினாள். அப்படி முடிவு செய்தாளே ஒழிய அதனால் தனக்கு நிகழவிருக்கும் விபரீதத்தை அவள் ஒருசிறிதும் உணரவில்லை.

சடாரென்று ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சீதையைத் தூக்க முயன்றாள். தன் தாயே போன்ற அண்ணியை ஒருத்தி தூக்குவதாவது! அடுத்த கணம் சைகை மூலம் ராமனிடம் அனுமதி பெற்று சூர்ப்பணகையின் மூக்கையும் காதுகளையும் அம்பால் அரிந்தான் இலக்குவன்.

சீதையைத் தூக்கும் எண்ணத்தை உடனடியாகக் கைவிட்ட சூர்ப்பணகை அடுத்த கணம் ஓவென்று உரத்த குரலெடுத்து அழலானாள். மீண்டும் ராமனையே வைத்த விழி வாங்காமல் பார்த்தாள். தன் உடல் வேதனையைக் கூட மறக்கச் செய்கிறதே இவன் அழகு. என்ன அழகு இது! பார்ப்பவர் கண்ணை, வேறு எதையும் பார்க்கவிடாமல் தடுக்கிறதே! மணந்தால் இவனையே மணக்க வேண்டும்.

மறுபடி மிகுந்த பவ்வியமாக ராமனை அணுகினாள். ஆடுகிற மாட்டை ஆடியும் பாடுகிற மாட்டைப் பாடியும் கறக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே! இவனிடம் பணிவு தான் செல்லும். பணிவையே அஸ்திரமாக்கி இவனை வீழ்த்துவோம். இருகரம் கூப்பி ராமபிரானிடம் வேண்டினாள்.

`பிரபோ! தங்களைப் பார்த்தாலே தெரிகிறது. தாங்கள் தர்மப் பிரபு என்று. தர்மத்தைக் காப்பது தங்கள் கடமை அல்லவா? பாருங்கள். உங்கள் தம்பி என் மூக்கையும் காதுகளையும் அறுத்துவிட்டான். இனி மூக்கில்லாத என்னை யார் திருமணம் செய்துகொள்வார்கள்? உங்கள் தம்பி செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டியது உங்கள் பொறுப்புத்தான் அல்லவா? எனவே நீங்கள் என்னை மணந்துகொள்வதே சரியானது.`

அவளது வாதத்தைக் கேட்ட ராமன் மீண்டும் கலகலவென்று நகைத்தான்.

`பெண்ணே! முன்பாவது நீ மூக்கோடு இருந்தாய். இப்போது உன்னை மணந்துகொண்டு நான் அயோத்திக்குச் சென்றால் போயும் போயும் மூக்கில்லாத பெண்தானா உனக்குக் கிடைத்தாள் என்று என் நண்பர்களெல்லாம் என்னைக் கேலி செய்யமாட்டார்களா?`

சூர்ப்பணகை சீதையின் பேரழகைப் பார்த்து ஒருமுறை பெருமூச்செறிந்துவிட்டுப் பிறகு சொன்னாள்.

`ஏன் இப்போது கூட இடையே இல்லாத ஒரு பெண்ணைத்தானே நீ மணந்து கொண்டிருக்கிறாய்? அது மட்டும் எப்படி? இதற்குக் கேலி செய்யாத உன் நண்பர்கள் என்னை மணந்தால் மட்டும் கேலி செய்வார்களா என்ன?`

சீதை தன் மிக மெலிந்த இடையின் அழகை சூர்ப்பணகை பொறாமையுடன் மறைமுகமாகப் புகழ்வதைக் கேட்டு நாணினாள். அதற்குள் இலக்குவன் கடும் சீற்றத்தோடு அவளிடம் உறுமினான்:

`பெண்ணே! இந்த இடத்தை விட்டு உடனடியாக விலகிச் சென்றுவிடு. இது லட்சுமணனின் கட்டளை. கால தாமதம் செய்யாதே! மூக்கும் காதும் போனதோடு போகட்டும். உயிரே போகுமளவு நீ நடந்துகொள்ள மாட்டாய் என்று நினைக்கிறேன்.`

அவன் சீற்றத்தைக் கண்ட சூர்ப்பணகை பெருங்குரலெடுத்து அழுதவாறே அதே தண்டக வனத்தில் இருந்த தனது சகோதரர்களான கர தூஷணர்களைத் தேடி ஓடினாள்.

`உங்கள் சகோதரியின் மூக்கை ஒருவன் அரிந்த பின்னரும் அவன் உயிர் வாழலாமா? இந்த நியாயத்தைக் கேட்க ஆள் இல்லையா? ஆண்கள் என்று உங்களை நீங்கள் சொல்லிக் கொள்கிறீர்களே? அதுபற்றி உங்களுக்கு வெட்கமாயில்லை? எனக்கு உடன் பிறந்தவர்கள் இருந்தென்ன, இல்லாமல் இருந்தென்ன? இரண்டும் ஒன்று தான்.` என்று கோபமும் வருத்தமும் கலந்து நாடக பாணியில் கதறினாள்.

கர தூஷணர்கள் ரத்தம் சொட்டச் சொட்டத் தங்கள் எதிரே வந்து நிற்கும் சூர்ப்பணகையின் புதிய கோலத்தைக் கண்டு திகைத்தார்கள். தங்கள் சகோதரியின் மூக்கை அறுக்கும் தைரியம் எவருக்குண்டு என்று ஆச்சரியப்பட்டார்கள். எதிரி தங்களின் வல்லமை பற்றி அறியாத முட்டாளாயிருக்க வேண்டும். இதோ போருக்குப் புறப்பட வேண்டியதுதான்.

பதினான்காயிரம் அரக்கர்களைக் கொண்ட பெரும் சேனையைத் திரட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். இதுவரை அவர்கள் எங்கும் தோல்வியைச் சந்தித்ததில்லை. எனவே வெற்றி உறுதி என்று மனப்பால் குடித்தவர்களாய் கானகத்தில் நடக்கத் தொடங்கினார்கள்.

அவர்கள் நடந்த இடங்களில் தரை அவர்களின் பாதங்களின் கீழே கிடுகிடுவென நடுங்கியது. வில், அம்பு, வேல், வாள் போன்ற ஏராளமான போர்க்கருவிகளைத் தாங்கியவர்களாய் திம் திம் என்று நடந்துசென்றார்கள். சூர்ப்பணகை ராம லட்சுமணர்கள் இருக்கும் இடத்தைக் காட்ட வேண்டி அந்தச் சேனைக்கு முன்னே வழிகாட்டிக் கொண்டு சென்றாள். போர் முடிந்ததும் தன் கையில் சிக்கப் போகும்

இரண்டு அழகிய ஆண்களைப் பற்றிய கனவு அவள் கண்களில் மிதந்தது. சேனை ஆர்ப்பரித்தவாறே லட்சுமணன் கட்டிய குடிலை நோக்கி விரைந்தது.

ஆனால் இதற்கு முன்பே இப்படியோர் ஆபத்து வரக் கூடும் என எண்ணிய ராமன் தன் மனைவி சீதையைத் தனியான ஒரு குகைக்கு அனுப்பிவிட்டான். தம்பி லட்சுமணனை அண்ணி சீதைக்குக் காவல் இருக்குமாறும் ஏற்பாடு செய்தான். லட்சுமணனுக்கு அண்ணனின் வெற்றியில் ஒருசிறிதும் சந்தேகமில்லை என்பதால் அவன் அண்ணியைக் காவல் காக்க விரைந்தான். சீதை இருந்த குகைக்கு வெளியே வில்லேந்தி எல்லாவித ஆபத்துகளையும் எதிர்நோக்கியவனாய் மிகுந்த எச்சரிக்கையுடன் காத்திருந்தான்.

அரக்கர்கள் செய்யும் அட்டகாசங்களால் மான்களும் முயல்களும் இன்னும் பல மிருகங்களும் அஞ்சி நடுங்கின. சீதா தேவி இருந்த குகைக்குள் அவை அடைக்கலம் வேண்டிப் புகுந்தன. பரிவோடு அவைகளைப் பார்த்த இலக்குவன் அவற்றைத் தடுக்கவில்லை.

கருணையே வடிவான அன்னை சீதா தேவி அவற்றிற்கு அபயமளித்தாள். மான்களையும் முயல்களையும் அன்போடு தடவிக் கொடுத்தாள். சீதாப் பிராட்டியின் அண்மையில் இன்னதென்றறியாத பரவசத்தை உணர்ந்தவைகளாய் விலங்குகள் ஆனந்தக் கண்ணீர் பெருக அந்தக் குகையில் செதுக்கி வைத்த சிலைபோல் நின்றன.

ராமன் வில்லோடும் அம்போடும் யுத்த சன்னத்தனாய் குடிலை விட்டு கம்பீரமாக வெளியே வந்தான். `பிடியுங்கள்! வெட்டுங்கள்!' என்று கூப்பாடு போட்ட அரக்கர்களைப் பார்த்து பதற்றமே இல்லாமல் மெலிதாய் முறுவல் பூத்தான். அரக்கர்கள் சரசரவென்று ராம பிரானைச் சூழ்ந்து கொண்டார்கள்.

திடீரென அரக்கர்களிடையே ஒரு விந்தையான மௌனம் நிலவியது. அவர்கள் ராமபிரானின் பேரெழிலைப் பார்த்துப் பேச்செழாமல் திக்பிரமித்து நின்றார்கள். ராமன் மீது அம்பு போடவோ அவனை வெட்டவோ யாரும் துணியவில்லை. அது மட்டுமல்ல. அவன் அழகைப் பார்த்த பின் எதற்கு அங்கே வந்தோம் என்பதே அவர்களுக்குச் சுத்தமாய் மறந்துவிட்டது!

கர தூஷணர்களும் கூட ராமனது பேரெழிலைக் கண்ணால் பருகியவர்களாய் மனம் மயங்கி நின்றார்கள். சூர்ப்பணகையும் கூட மெய்ம்மறந்து நின்றாள். இப்படிச் சில கணங்கள் கழிந்த பின்னர் சூர்ப்பணகை மெல்லச் சொன்னாள்:

`சகோதரர்களே! இத்தகைய பேரெழிலை நீங்கள் இந்தப் புவியில்

வேறு எங்காவது பார்த்ததுண்டா? அதனால் தான் சொல்கிறேன். தயவுசெய்து ராமனை ஒன்றும் செய்துவிடாதீர்கள். அவனைக் கட்டிப் பிடித்து என்னிடம் தாருங்கள்!`

கரதூஷணர்கள் மெல்ல உணர்வு வந்தவர்களாய் சூர்ப்பணகையிடம் சொல்லலானார்கள்:

`சகோதரி! உண்மையிலேயே இத்தகைய பேரெழிலை நாம் யாரும் எங்கும் பார்த்ததில்லை. இந்த எழிலைப் பார்க்கும்போது நம்மையறியாமல் நம் மனத்தில் ஒரு சாந்தி உண்டாகிறது. இந்த ராமனைக் கட்டி எடுத்துவந்தால் நாம் எப்போதும் பார்த்துப் பார்த்து ரசிக்கலாம். சாந்தி அடையலாம். எனவே இவனைக் கொல்லாமல் எடுத்துச் செல்வதே நம் திட்டம். அடேய். யாரங்கே. இவன் யார் எங்கிருந்து எதன் பொருட்டு வந்திருக்கிறான் என்பதை இவன் அருகே சென்று விசாரித்து வா!`

கட்டளையைக் கேட்டு ஒரு தூதன் ராமபிரான் அருகே சென்றான். தாங்கள் யார் என்று விசாரித்தான். ராமனின் அண்மையில் செல்லச் செல்ல தன் மனம் ராமன்பால் ஈர்க்கப்படுவதை உணர்ந்து வியந்தான். ராமனது பேரெழில் குறித்து ஆச்சரியப்பட்டவனாய் ராமன் சொன்ன பதில்களைக் கேட்டுவந்து கர தூஷணர்களிடம் சொன்னான். `அவன் பெயர் ராமனாம். நம் போன்ற அரக்கர்களை வதம் செய்யவே வந்திருக்கிறானாம்!`

இதைக் கேட்ட கர தூஷணர்களின் மனத்தில் கடும்கோபம் எழுந்தது.

`இனியும் சும்மா இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. எறியுங்கள் ஈட்டிகளை!`என்று கர தூஷணாதியர்கள் உத்தரவிட்டதும் சிலர் வேல், ஈட்டி போன்ற ஆயுதங்களை ராமரை நோக்கி எறிந்தார்கள். அடுத்த கணம் ராமபிரான் எய்த ஒரே ஓர் அம்பால் அத்தனை ஆயுதங்களும் தவிடுபொடி ஆகின. அரக்க வீரர்கள் புறமுதுகிட்டுப் பின்னங்கால் பிடரியில் பட ஓடத் தொடங்கினார்கள்.

இதைக் கண்டு கரதூஷணர்கள் கடும் சீற்றமடைந்தார்கள். அவர்களிடமிருந்து உரத்த குரலில் ஆணை புறப்பட்டது.

`புறமுதுகிட்டு ஓடுபவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் நம் வீரர்களாலேயே கொல்லப்படுவார்கள்.`

இந்தக் கட்டளை செவியில் விழுந்த மறுகணம், ஓடியவர்கள் மீண்டும் களத்திற்குத் திரும்பினார்கள். இறப்பது உறுதியெனில் ராமபிரான் கரத்தாலேயே இறப்போம் என்று அவர்கள் எடுத்த முடிவு அவர்களின் கண்ணில் தெரிந்தது.

இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்த ராமன் தன்னளவில் ஒரு முடிவு செய்தான். நாம் ஏன் இவர்களைக் கொல்ல வேண்டும்? இவர்களை இவர்களாலேயே அழிப்போம் என நினைத்தான். பகைவரை மயங்கித் திகைக்க வைக்கும் `சம்மோகனா` என்ற அஸ்திரத்தைக் கூட்டத்தை நோக்கிச் செலுத்தினான்.

சம்மோகன அஸ்திரத்தால் தாக்குண்ட மறுகணம் அரக்கர்கள் கண்ணில் விந்தையான ஒரு மாயத் தோற்றம் ஏற்பட்டது. அருகில் நின்ற சக அரக்கனே ராமன் போல் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தோன்றத் தொடங்கியது! கர தூஷணர்களோ `ராமனைக் கொல்லுங்கள்! கொல்லுங்கள்!` என்று கட்டளை பிறப்பித்துக் கொண்டே இருந்தார்களே? அவர்கள் தங்கள் அருகே நின்ற அரக்கனையே ராமன் எனக் கருதிக் கொல்லலாயினர்.

இவ்விதம் அரக்கர் சேனை ஒருவரையொருவர் கொன்று அழிந்தது. அரக்கர்கள் ஒவ்வொருவர் இறக்கும்போதும் ராமனின் தெய்வீக எழிலால் கவரப்பட்டவர்களாய் `ராமா! ராமா!` என்று கூவிக்கொண்டே இறந்தனர். அந்தக் காடெல்லாம் அரக்கர்களின் சிதைந்த உடல்களாலும் அங்க அவயவங்களாலும் நிறைந்தது. எங்கும் ரத்த் ஆறு பெருகி ஓடியது.

போர் முடிந்ததும் சீதையும் இலக்குவனும் ஓடோடி வந்தார்கள். `இத்தனை அரக்கர்களையும் நீங்கள் ஒருவராகவே நின்றா அழித்தீர்கள்?` என்று தாளாத வியப்போடு கேட்டாள் சீதை. ராமன் திருமேனியில் புண்பட்டிருக்கிறதோ என்று அவள் கண்கள் ஆராய்ந்தன. அவ்விதம் காயமேதும் காணப்படாதது கண்டு அவளது மனம் ஆறுதல் அடைந்தது.

`அரக்கர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் ஆற்றல் மிக்கவர்கள். அதன்பொருட்டு அவர்களுக்கு என் உதவி தேவைப்படவில்லை!` என்று சொல்லி மனம்விட்டுச் சிரித்தான் ராமபிரான். ராமனின் சிரிப்பில் லட்சுமணனின் சிரிப்பும் கலந்தது. அந்தப் பிரதேசத்தை விட்டுத் தன்னந்தனியே மிக விரைவாக ஓடிக்கொண்டிருந்த சூர்ப்பணகையைப் பார்த்தாள் சீதாதேவி. அவள் முகத்திலும் மெல்லிய முறுவல் படர்ந்தது.

13

சொர்க்கம் புகுந்தார் சரபங்கர்!

ராமனும் சீதையும் லட்சுமணனும் மந்தாகினி நதிக்கரையின் ஓரமாக உள்ள கானகத்தில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

கானகத்தின் அழகிய இயற்கைக் காட்சிகள் அவர்களை மெய்ம்மறக்கச் செய்தன.

வனத்தில் அந்தப் பிரதேசம் மட்டும் மிகுந்த அழகோடு விளங்கிற்று.

இங்கே யாரோ பெரிய தபஸ்வி இருக்க வேண்டும்,

அவரது தவ மகிமையால்தான் இப்பகுதி விசேஷ எழிலோடு திகழ்கிறது என்ற ராமன், அங்கே ஏதேனும் ஆசிரமம் தென்படுகிறதா என்று தேடினான்.

சற்று தூரத்தில் ஓர் அழகிய எளிமையான குடில் இருப்பதை அவர்கள் கண்டார்கள்.

அந்தக் குடிலின் உள்ளே ஏதேனும் சக்திவாய்ந்த மாணிக்கக் கல் இருக்கிறதா என்று தெரியவில்லை.

ஏனென்றால் குடிலின் உள்ளிருந்து புறப்பட்ட தெய்வீக ஒளியால் குடிலின் கூரைகளெல்லாம் தங்கத்தில் வேயப்பட்டது போலத் தகதகத்துக் கொண்டிருந்தன.

குடிலை நோக்கி மூவரும் நடந்தார்கள்.

அப்போதுதான் அந்த விந்தையான காட்சி அவர்கள் கண்ணில் தென்பட்டது.

குடிலின் மேலே அந்தரத்தில் ஒரு தேர் வந்து நின்றது. கறுப்புக் குதிரைகள் பூட்டிய தேர்.

அதிலிருந்து இறங்கி ஒரு தேவ புருஷன் ஆசிரமத்தின் உள்ளே நுழைந்தான்.

அவன் ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தான். அவனைச் சுற்றிப் பல தேவர்களும் தேவ கன்னியரும் உடன் சென்றார்கள்.

தேவ புருஷன் அந்த ஆசிரமத்தின் உள்ளே நுழைவதற்கு முன்னால் கடைக்கண்ணால் ஸ்ரீராமரைப் பார்த்துவிட்டான்.

உள்ளே சென்ற தேவ புருஷன் மிகக் குறுகிய காலத்திலேயே வெளியே வந்து மறுபடி அந்த அந்தரத்தில் நின்ற தேரில் ஏறிக் கொண்டான்.

உடன் வந்தவர்கள் அனைவரும் அந்தத் தேர்த் தட்டுகளில் ஏறி அமர்ந்தனர்.

மறுகணம் அந்தத் தேர் விண்ணில் பறந்து கண்ணில் படாது மறைந்தது...

******

ராம லட்சுமணர்கள் சீதாதேவியோடு குடிலின் உள்ளே நுழைந்தார்கள்.

அங்கே முகத்தில் பேரமைதி தவழ தவமே உருக்கொண்டது போல் ஒரு முனிவர் அமர்ந்திருந்தார்.

அவரைச் சுற்றிப் பொங்கிப் பெருகிய ஒளி அந்தப் பிரதேசம் முழுவதையும் வெளிச்சமாக்கியது.

அந்த ஒளிதான் குடிலின் கூரையைக் கூடப் பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தது.

ராம லட்சுமணர்களும் சீதையும் அவரை வியப்போடும் மரியாதையோடும் பார்த்தார்கள்.

முனிவர் `என் அன்பே! ராமா! வந்து விட்டாயா!` என்று நா தழுதழுக்கக் கூறியவாறே எழுந்து ராமனைக் கட்டி அணைத்துக் கொண்டார்.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுபட்டு நிற்கும் அந்தக் காட்சியைக் கண்டு சீதையும் லட்சுமணனும் விழிகளைத் துடைத்துக் கொண்டார்கள்.

எத்தகைய மனிதர்களெல்லாம் என் மேல் பிரியம் செலுத்துகிறார்கள்

என்று எண்ணி ராமன் நெகிழ்ச்சி அடைந்தான்.

`அளவற்ற தவப் பொலிவோடு தென்படுகிறீர்கள். என்மேல் மட்டற்ற பக்தி செலுத்துகிறீர்கள். தாங்கள் யார் சுவாமி? நான் அறியலாமா?` என்று ராமன் மரியாதையோடு கேட்டான்.

எல்லாம் அறிந்த பரம்பொருளுக்கு என்னைத் தெரியாதா என்றெண்ணி நகைத்துக் கொண்ட முனிவர் சொல்லலானார்:

`ஸ்ரீராமா! என்னைச் சரபங்கர் என்று அழைப்பார்கள். நீ கானகம் வருவாய், உன்னைத் தரிசிக்க வேண்டும் என்றே இத்தனை நாள் தவம் செய்து காத்துக் கொண்டிருந்தேன். என் முழுத்தவத்தின் பயனை உன்னை தரிசிக்க முடிந்ததன் மூலம் இன்று பெற்றுவிட்டேன். நான் இனி அடையவேண்டிய பேறு வேறொன்றும் இல்லை!`

லட்சுமணன் வியப்போடு சரபங்கரைப் பார்த்தான்.

இவரது அளவற்ற தவப் பெருமையைக் கானகத்தில் எல்லா முனிவர்களும் புகழ்ந்து பேசுகிறார்களே?

அவர் இவர்தானா என்ற வியப்பும் மதிப்பும் லட்சுமணன் விழிகளில் தென்பட்டன.

உபவாசங்களால் மெலிந்தும் தவத்தால் உறுதி நிறைந்தும் இருந்த சரபங்கரின் முதுகை ஆதரவாகத் தடவிக் கொடுத்த ராமன், `சுவாமி! சற்றுமுன் தங்களைச் சந்திக்க ஆகாயத் தேர் ஒன்றில் யாரோ வந்து சென்றார்களே? அந்த அரிய காட்சியைக் கண்டேன் நான். வந்தது யார் என்று நான் அறியலாமா?` என்று கேட்டான்.

சரபங்கர் சொல்லத் தொடங்கினார்:

`ஸ்ரீராமா! வந்தது தேவேந்திரன் தான். நீ ஒரு காரணத்திற்காக இந்த பூமியில் தோன்றியிருக்கிறாய். அந்தக் காரணம் நிறைவேறும் வரை உன்னைத் தேவேந்திரன் சந்திக்கலாகாது.அதனால் தான் அவன் உன்னைப் பார்த்தும் பாராமல் புறப்பட்டுச் சென்றுவிட்டான். அவன் என்னிடம் ஒரு வேண்டுகோளை வைத்தான். நான் அவன் வேண்டுகோளை மறுத்து அவனை அனுப்பிவிட்டேன்!`

`என்ன வேண்டுகோள் அது சரபங்கரே?`

`பிரம்மதேவன் சொல்லி என்னைத் தன் தேரில் வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்லத்தான் அவன் வந்தான். ஆனால் நான் அவனுடன் வர இயலாது என மறுத்துவிட்டேன்.`

`தவத்தின் பயனே வைகுண்ட பதவி பெறுவது தானே? அப்படியிருக்க

அதற்கு அழைப்பு வந்தும் தாங்கள் அதை மறுத்தது ஏன் சுவாமி?`

`வைகுண்டத்திற்கு நான் ஏன் செல்ல வேண்டும் ராமா? வைகுண்டமே விரைவில் என்னைத் தேடிவரப்போகிறது என்பதை நான் அறிவேன். என் ஞானக் கண்ணால் நான் கண்டறிந்த விஷயம் இதோ உண்மையாகி விட்டது. வைகுண்டத்தில் இருப்பவன் நீ. இன்று நீ இந்த ஆசிரமம் வந்திருக்கிறாய். நீ இருக்குமிடம் வைகுண்டம் தானே? இன்று என் ஆசிரமமும் வைகுண்டம் ஆகிவிட்டது.`

இதைச் சொல்லும்போதே சரபங்கர் விழிகளிலிருந்து பக்திக் கண்ணீர் பெருகியது.

`ராமா! என் தவப்பயன் முழுவதையும் உனக்குத் தரவிரும்புகிறேன். பெற்றுக்கொள். உன்னைத் தரிசித்த இந்த அனுபவமே எனக்குப் போதும்.`

`சரபங்கரே! உங்கள் தவப்பயன் இறைவனைப் போய்ச் சேரட்டும். உங்கள் தவ ஆற்றலால் உலகில் சுபிட்சம் நிலவட்டும். நான் ஷத்திரியன் அல்லவா? யாரிடமிருந்தும் எதையும் நான் பெறலாகாது. எனக்கு இந்தக் கானகத்தில் தங்குவதற்கு சௌகரியமான ஓர் இடம் தேவை. அது எது என்பதை நீங்கள் காட்டினீர்களானால் அதுவே பெரிய உபகாரம்.`

சரபங்கர் சாந்தி தவழும் முகத்துடன் சற்றுநேரம் யோசித்தார்.

முக்காலங்களையும் உணர்ந்த தீர்க்கதரிசி அல்லவா அவர்?

விரைவில் மாரீச வதம் நிகழவேண்டும் என்பதை அவர் அறிவார்.

அதற்கு ஏற்ற இடத்திற்கு ராமனை அனுப்புவதுதான் நல்லது என்பதை அவர் உணர்ந்தார். மெல்லச் சொல்லலானார்:

`ராமா! இங்கே அருகிலேயே சுதீஷ்ணர் என்றொரு புண்ணிய புருஷர் இருக்கிறார். அவரிடம் செல்வாய். அவர் உனக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்வார். நீ தங்குவதற்கு ஏற்ற ஓர் இடத்தையும் காட்டுவார். மலர்கள் தெப்பத்தைப் போல் மிதந்துகொண்டிருக்கும் இந்த மந்தாகினி நதிக்கரை வழியாக மேற்கே போ. சுதீஷ்ணரின் ஆசிரமத்தை நீ அடைந்துவிடலாம். ஆனால் சற்று நேரம் நீ இங்கே தங்கவேண்டும். உன் முன்னிலையில் நிகழவேண்டிய ஒரு சம்பவம் இருக்கிறது!`

`அது என்ன சம்பவம்?`

ராமன் திகைப்போடு கேட்டான்.

`ஸ்ரீராமா! உன்னை தரிசித்துவிட்டேன். உன் தரிசனத்திற்காகத்தான் இந்திரன் வந்தபோதும் அவனது கோரிக்கைக்கு உடன்படாது அவனைத்

திரும்ப அனுப்பினேன். இப்போது என் ஆன்மா உடல் கூட்டை விட்டு விலகி முக்தி அடைய விரும்புகிறது. பாம்பு பழைய சட்டையை உரிப்பதுபோல் என் உடலை நான் துறக்கப் போகிறேன் ராமா! உடல் இன்றில்லாவிட்டாலும் என்றேனும் ஒருநாள் அழியக் கூடியது. ஆன்மா அழிவற்றது. என் ஆன்மாவைக் கடைத்தேற்று!`

******

சீதா ராம லட்சுமணர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவர் குடிலின் வெளியே வந்தார்.

விறகுகளை அடுக்கி அக்கினியை மூட்டினார்.

ராமனைக் கைகூப்பி வணங்கியவாறே சடசடவென எரிந்த அந்த அக்கினியில் சடாரெனப் பிரவேசித்தார்.

மாறாத புன்முறுவலுடன் கைகூப்பியவாறே நின்ற அவருடைய தோல், எலும்பு, மாமிசம், ரத்தம், முடி போன்றவை நெருப்பில் எரிந்தன.

அந்த மகான் அக்கினி குண்டத்திலிருந்து கிளம்பி நெருப்பைப் போல் ஜொலிக்கக் கூடிய முப்பது வயதுள்ள வாலிபனின் உருவத்தை எடுத்தார்.

அதைக் கண்டு சீதா ராம லட்சுமணர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

ராமபிரானைக் கைகூப்பி வணங்கியவாறே ஆகாயத்தில் கலந்து மறைந்தார் அவர்.

இந்த விந்தையான காட்சியைப் பார்த்த ராமன் ஒரு குறிப்போடு தன் மனைவி சீதையைப் பார்த்தான்.

`எதிர்காலத்தில் நீயும் இதுபோல் அக்கினிப் பிரவேசம் செய்ய வேண்டியிருக்கும், மக்களின் சந்தேகத்தைத் தீர்ப்பதன் பொருட்டாக உன்னை நெருப்பில் குதிக்கச் செய்ய வேண்டி வரும்!`

என்பதை அவன் விழிகள் சொல்லாமல் சொல்லின.

அந்தப் பார்வையைக் கண்ட சீதை தானும் அதற்கு பதிலாக ஒரு பார்வையை வீசினாள்.

`நீங்கள் சொன்னால் எதில் வேண்டுமானாலும் குதிப்பேன். நெருப்பில் குதிப்பது ஒரு பொருட்டல்ல!` என்று சீதையின் பதில் பார்வை சொல்லாமல் சொல்லிற்று.

14

குகனும் பரதனும்!

எல்லோர் பாவங்களையும் கழுவித் தூய்மைப்படுத்தும் கங்கை சலசலவெனப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தாள். புகழ்பெற்ற இதிகாசமான ராமாயணத்தின் சில நிகழ்ச்சிகள் தன் கரையில் நடப்பதில் அவளுக்குத் தாங்க இயலாத பெருமை. அந்தப் பெருமையில் அவள் நீர்நெஞ்சம் பூரித்தது.

தந்தையின் கட்டளையைத் தலைமேல் கொண்ட ராமன் கங்கையைத் தாண்டித் தான் கானகத்திற்குப் போனான். குகனின் ஓடத்தில் ராமன், லட்சுமணன், சீதை மூவரும் பயணம் செய்தபோது சீதாதேவி கங்கா மாதாவை மலர்கள் தூவி வழிபட்டாள்.

`தாயே கங்கா. பதினான்கு ஆண்டுகள் கழித்து எந்தச் சிக்கலுமில்லாமல் நாங்கள் மூவரும் உன்னைத் தாண்டி மறுபடி அயோத்திக்குச் செல்ல நீதான் அருள்புரிய வேண்டும் அம்மா!` என்று அவள் பிரார்த்தித்துக் கொண்டாள்.

சீதாதேவி சமர்ப்பித்த பூக்களைத் தன் நீர்க் கூந்தலில் அணிந்துகொண்டு மகிழ்ச்சியோடு அன்று பாய்ந்து ஓடினாள் கங்கை. அவள் எழில் அன்று கூடுதலாயிருந்தது.

இன்றும் கங்கைக்குப் பரவசம் தான். ராமாயணத்தின் இன்னொரு முக்கியமான காட்சி அல்லவா இப்போது அரங்கேறிக் கொண்டிருக்கிறது! பரதன் ராமனை அழைத்துவரும் நோக்கத்தில் இதோ கங்கைக் கரைக்கு வந்து நின்றுகொண்டிருக்கிறான்.

எப்பேர்ப்பட்ட உத்தமமான தம்பி. அவனைப் பார்த்த நிறைவில் கங்கையின் ஏற்கெனவே குளிர்ந்த மனம் மேலும் குளிர்ந்தது. பரதனுடன் வந்திருந்த சத்துருக்கனன், வசிஷ்டர் முதலானோரையும் கணக்கற்ற பொதுமக்களையும் ஓடுகிற ஓட்டத்தில் கடைக்கண்ணால் பார்த்துப் பார்த்து அவள் மகிழ்ந்தாள்.

இக்கரைக்கும் அக்கரைக்கும் இடையே பரந்து ஓடிக்கொண்டிருந்த கங்கை அக்கரையில் இருந்த குகனை நோக்கித் தன் பார்வையைத் திருப்பினாள்.

படைவீரர்கள் வந்துசொன்ன செய்தியைக் கேட்டு குகனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ராமனைச் சந்தித்ததிலிருந்து ராமன் நினைவாகவே வாழ்ந்துவரும் அவன் மனத்தில் கடும் கோபத்தைத் தூண்டிவிட்டது அந்தச் செய்தி.

என்னது! கானகத்திற்கு ராமபிரானைத் தேடி பரதன் வருகிறானா? அண்ணனைக் காட்டுக்கு அனுப்பியது போதாது என்று காட்டிலும் வந்து அவனைத் துன்புறுத்தப் போகிறானாமா?

என்ன தம்பி இவன்! உத்தமமான ராமச்சந்திர மூர்த்திக்கா இப்படியொரு தம்பி! இவனைக் கேள்வி கேட்க ஆளில்லையா?

லட்சுமணனும் தம்பி. இவனும் தம்பி. இருவரிடையே தான் எத்தனை வேறுபாடு! ராமன் காட்டுக்குப் போகிற போது கூடவே வருகிற ஒரு தம்பி. தன் தாய் மூலம் ராமனைக் காட்டுக்கு அனுப்பச் சொல்லிவிட்டு, பிறகு காட்டிற்கும் தேடிவந்து அவனுடன் போர்தொடுக்க நினைக்கும் ஒரு தம்பி.

குகனின் மூச்சுக் காற்றில் உஷ்ணம் சரசரவென ஏறியது. கைகேயி பதினான்கு ஆண்டுகள் ராமன் வனவாசம் செய்யுமாறு வரம் கேட்டு ராமனைக் காட்டுக்கு அனுப்பியதில் பரதனின் ஒருசிறு பங்கு கூட இல்லாமல் இருக்குமா என்ன?

முன்கூட்டியே திட்டமிட்டிருப்பார்கள் கைகேயியும் பரதனும். ஆசை. நாட்டை ஆளும் பதவி ஆசை. சரிதான். ஆசை யாரைவிட்டது? எல்லோரும் ஸ்ரீராமபிரானா என்ன? என்ன கொடுமை! முடிசூட்டுவிழா நிகழும் நாளன்று அதை நிறுத்தி `நீ அல்ல மன்னன். உன் தம்பி தான் மன்னன். நீ காட்டுக்குப் போக வேண்டும்!` என்று சொல்ல எத்தனை கல்நெஞ்சம் வேண்டும்! பரதன், தான் அந்தத் திட்டத்தில் சம்பந்தப் படவில்லை என்று காட்டுவதற்காகவே தன் மாமா வீட்டிற்குப் போவதுபோல் கேகய நாட்டிற்கு அந்த சந்தர்ப்பத்தில் போயிருக்க வேண்டும். எல்லாமே முன்கூட்டிய ஏற்பாடாய்த் தான் இருக்கும்.

பாவம் தசரதர்! மனைவிக்குத் தந்த வரம் என்ற விலங்கில் வசமாகச் சிக்கிக் கொண்டுவிட்டார்!

இப்போது அயோத்திக்குத் தரும்பி வந்ததும் தன் முன்கூட்டிய திட்டம் பலித்திருப்பதை அறிந்து மகிழ்ந்திருப்பான் பரதன். அதுசரி. அயோத்தியில் மகுடம் சூடி அரசனாக வாழவேண்டியது தானே? மறுபடியும் ராமபிரானைத் தேடிக் காட்டுக்கு வரவேண்டிய அவசியம் என்ன?

ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு இதுவரை செய்த கொடுமைகள் போதாதா? இன்னும் வேறு பாக்கி இருக்கிறதா என்ன?

ஏராளமான பேர்களோடு வந்திருக்கிறானாமே? அப்படித்தான் சொல்கிறார்கள் கங்கையின் இக்கரையிலிருந்து அக்கரை சென்று கூட்டத்தைப் பார்த்துவிட்டு வந்த குகனின் வீரர்கள். வந்திருக்கும் கூட்டம் படைவீரர் கூட்டமாகத் தான் இருக்க வேண்டும்.

முட்டாள் பரதன். ராமனுக்குக் கானகத்தில் படை எதுவும் இல்லை, அவனை வென்று விடலாம் என்று நினைக்கிறான் போலும். ராமனின் இன்னொரு தம்பியான குகனின் படைகள் ராமனின் படைகள் தான் என்பதை அவன் அறியவில்லை!

`படைவீரர்களே! அனைவரும் ஒன்றுதிரண்டு தயாராக இருங்கள். நாம் விரைவில் பரதனுடன் மோத வேண்டியிருக்கும். எதற்கும் அக்கரைக்குச் சென்று அவனை நேரில் பார்த்து இரண்டு வார்த்தை கேட்டுவிட்டு வருகிறேன்.`

குகன் ஓடத்தில் ஏறி அமர்ந்தான். அக்கரையைப் பார்த்தான். தொலைவில் தென்பட்ட பெருந்திரளான கூட்டம் அவன் சீற்றத்தை அதிகப்படுத்தியது.

கங்கையில் ஓடம் விரைந்து செல்லத் தொடங்கியது. துடுப்புகள் சலசல என்ற சப்தத்துடன் கங்கை நீரைக் கிழித்துப் படகை விரைவுபடுத்தின.

குகன் சொல்வதனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த கங்கை கலகலவென மனத்திற்குள் சிரித்துக் கொண்டாள். வெகுளியான குகனின் மனத்தை ரசித்தவளாய் நீர்த்திவலைகளை குகன் மேல் வாரி இறைத்தாள். தன்னையே வாழ்வாதாரமாகக் கொண்டு படகுசெலுத்தி வாழும் அவன் மேல் தன் மகனே போன்ற பிரியம் உண்டு கங்கா மாதாவுக்கு. அவனது பேதைமை நிறைந்த உள்ளம் அவளைப் பரவசப்படுத்தியது.

ராமபிரான் மேல் எத்தனை அன்பு இவனுக்கு. அதனால் அல்லவா பரதனைப் பற்றிக் கூடத் தப்புக் கணக்குப் போடுகிறான்!

இவனது எண்ணத்தை அறிந்தால் பரதன் துடிதுடித்துப் போவானே? பரதனை யார் எப்படி சமாதானப் படுத்தப் போகிறார்கள்? கங்கை தன் மெல்லிய அலைகளை நிறுத்திக் கொண்டு சலனமற்ற அமைதியில் ஆழ்ந்தாள்.

திடீரெனத் தன்மேல் நீர்த்திவலைகள் வாரி இறைக்கப்பட்டதையும் பின்னர் திடீரென கங்கை சலனமில்லாமல் ஓடுவதையும் பார்த்து இந்த விந்தைகள் ஏன் என்று அறியாமல் குகன் திகைத்தான். அவன் படகு வேகவேகமாக எதிர்க்கரை நோக்கி விரைந்தது.

கரை நெருங்க நெருங்க அங்கே குகன் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது.

அதோ நின்றுகொண்டிருப்பவன் யார்? பரதனா இல்லை ராமனே தானா? ராமனைப் போலவே தென்படுகிறானே? அதே ஜாடை. அதே தவக்கோலம். ராமனுடன் போர்தொடுக்க வருவான் என்றால் தவக்கோலத்தில் வரவேண்டிய அவசியம் என்ன?

மூன்று தாய்மார்களும் ஏராளமான பொதுமக்களும் அல்லவா வந்திருக்கிறார்கள்? படைவீரர்களையே காணோமே? பரதன் போருக்காக வந்திருப்பதாய்த் தெரியவில்லை. பின் எதன்பொருட்டு வந்திருக்கிறான்?

கரைசேர்ந்ததும் குகன் மெல்லப் படகை விட்டு இறங்கினான். அந்தக் கூட்டம் முழுவதும் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தது. அவர்களிடையே முகப்பொலிவோடு நின்ற முனிவரை நோக்கினான். அவர் தான் ராமபிரானின் குலகுரு வசிஷ்டராக இருக்க வேண்டும்.

முதலில் அவரைச் சென்று வணங்கினான். தான் இன்னார் என்பதைத் தெரிவித்துக் கொண்டான். ஸ்ரீராமனைத் தான் சந்தித்த விவரங்களைக் கூறினான். மறக்காமல் தான் ராமன் அடிமை என்பதையும் அறிவித்துக் கொண்டான்.

வசிஷ்டர் அவனைக் கையுயர்த்தி ஆசீர்வதித்தார். பரதனிடம் அவனை அறிமுகப்படுத்தினார்.

`பரதா! இவன்தான் வேடன் குகன். ராமன் கானகம் செல்லும்போது ஓடம் செலுத்தி உதவியவன். இவனிடம் விடைபெற்றுத்தான் ராமன் கானகத்தின் உள்ளே சென்றிருக்கிறான்!'

பரதன் கண்களில் நீர்மல்க குகனை வாரி அணைத்துக் கொண்டான்.

`நண்பனே குகா! ராமபிரான் உன்னை நாடிவந்தபோது என்னென்ன எல்லாம் நடந்தன என்பதை எனக்கு நீ சொல்ல வேண்டும். ராமபிரான் எங்கு சென்றிருப்பார் என்பதையும் எனக்குத் தெரிவிக்க வேண்டும். எப்படியாவது அவரைக் கண்டு அவரை மறுபடி உடனே அயோத்திக்கு அழைத்துப் போகத்தான் நான் வந்திருக்கிறேன். அயோத்தி சிம்மாசனம் அவருக்கே உரியது. நான் அவர் தம்பி மட்டுமல்ல. உன்போல் நானும் அவர் தொண்டன்!`

பரதன் இதைச் சொல்லச் சொல்ல குகனின் விழிகளில் நீர் திரையிட்டது.

ஆகா. என்ன வார்த்தை சொல்கிறான் பரதன்! ஆயிரம் ராமர்கள் கூட இவனுக்கு இணையாக மாட்டார்கள் போல் இருக்கிறதே? ராமபிரான் மேல் என்ன பக்தி! என்ன பாசம்! இந்த பரதனையா சந்தேகப்பட்டேன்? இவனைப் பற்றி எவ்வளவு மோசமாக நினைக்கத் துணிந்தேன்!

என் நினைப்புக்குப் பிராயச்சித்தம் உண்டா? ராமபிரானுக்குத் தம்பியாகப் பிறந்தவர்கள் எப்படித் தவறு செய்வார்கள்? இந்தச் சின்ன விஷயம் எனக்குத் தெரியாமல் போய்விட்டதே? குகனின் விழிகளிலிருந்து கரகரவெனக் கண்ணீர் வழிந்தது.

`குகனே! ஏன் அழுகிறாய்? ` பரதன் வாஞ்சையுடன் கேட்டான்.

`என்னை மன்னித்தேன் என்று ஒருவார்த்தை சொல்ல வேண்டும் நீங்கள். அப்போதுதான் என் அழுகை நிற்கும்!`

`உன்னை நான் எதற்கு மன்னிக்க வேண்டும்?`

`பிரபோ. நான் ஏழை வேடன். என் புத்தி மிகவும் குறைவு தான். தங்களைப் போல் அறிவாளி அல்ல நான். யார் எப்படிப்பட்டவர் என்றெல்லாம் சரிவர ஊகிக்கத் தெரியவில்லை எனக்கு. தாங்கள் ராமபிரான் மேல் போர் தொடுக்கத் தான் வருகிறீர்கள் என நினைத்து நான் உங்களுடன் போர் தொடுப்பதற்காக எதிர்க்கரையில் படையை எல்லாம் திரட்டிவிட்டேன்! ராமபிரான் மீது என்னிலும் அதிகமான பக்தியை நீங்கள் செலுத்துவதை இப்போது அறிந்துகொண்டேன். எனவே நான் உங்களைப் பற்றி எண்ணிய அந்தத் தப்பான எண்ணத்திற்காக இப்போது அழுகிறேன் பிரபோ!`

இதைக் கேட்ட பரதன் தானும் அழலானான். அவன் அருகே நின்ற கைகேயி, கௌசல்யை, சுமித்ரை மூவரும் பரதன் அழுவதைப் பார்த்து என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார்கள்.

சத்துருக்கனன் `அண்ணா. ஏன் அழுகிறீர்கள்? அமைதியாய் இருங்கள்!` என்று சமாதானப்படுத்த முயன்றான். வசிஷ்டர் `பரதா! உன் கண்ணில் இப்போது கண்ணீர் வழிவதன் காரணம் என்ன?` என்று பரிவோடு கேட்டார். பரதன் விம்மியவாறே சொல்லத் தொடங்கினான்.

`உயர்வான நற்குணங்கள் படைத்த இந்த வேடன் கூட என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையே? அப்படியானால் மக்கள் எல்லோரும் என்னை இப்படித்தானே தவறாய்ப் புரிந்துகொள்வார்கள்? ஏன் என் அண்ணா ராமபிரானும் லட்சுமணனும் கூட குகன் நினைத்ததைப் போல் நினைக்க வாய்ப்பு உண்டல்லவா? அதை எண்ணிப் பார்த்தேன். இப்படியொரு பிறவியாய் நான் பிறந்தேனே என்று எண்ணி என் விழிகளில் கண்ணீர் வடியத் தொடங்கியது.`

விம்மி விம்மி அழுதவாறே பரதன் இதைச் சொன்னபோது அந்தக் கூட்டம் முழுவதும் கலங்கிக் கண்ணீர் வடித்தது.

பரதனின் கண்ணீரைப் பார்த்துக் கொண்டே இருந்தாள் கங்கா மாதா. அவனை யாராலும் சமாதானப்படுத்த முடியாது. எனவே, தான் சமாதானப் படுத்துவோம் என்று முடிவு செய்தாள்.

`கண்மணி பரதா!` என்று குளிர்ந்த குரலில் அழைத்தாள். கங்கை நதிநீர்ப் பரப்பிலிருந்து இனிமையாக ஒரு பெண்குரல் ஒலிப்பதைக் கேட்டு எல்லோரும் வியப்போடு கங்கையைப் பார்த்தார்கள். நீர் தொடர்ந்து பேசிற்று:

`பரதா! ராமபிரான் உன்னைச் சரியாகவே புரிந்துகொண்டிருக்கிறார். அதைப் பற்றி நீ கவலை கொள்ளாதே. லட்சுமணன் உன்னைத் தவறாகப் புரிந்துகொண்டாலும் உன் மனத்தின் நிலையை ராமபிரான் லட்சும்ணனுக்கு உணர்த்தி அவனுக்கும் புரியவைப்பார். நீ ராமன் மேல் செலுத்தும் அன்பைப் போல் ராமன் உன்மேல் செலுத்தும் அன்பும் முன்போல அப்படியே தான் இருக்கிறது. கலங்காதே! உன் பழிச்சொற்கள் விலகி உனக்குப் புகழ் ஓங்கப் போகிற காலம் இது. விழிநீரைத் துடைத்துக்கொள்.`

இப்படிச் சொன்ன அந்தக் குளிர்ந்த குரல் மெல்லமெல்லத் தேய்ந்து அடங்கியது. கங்கையே பரதனை சமாதானப்படுத்தியதை அறிந்து தேவர்கள் பரதன் மேல் பூமாரி பொழிந்தார்கள். பரதன் மகிழ்ச்சியோடு தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். `பரதன் வாழ்க!` என்று குகன் குரல்கொடுத்தான். மக்கள் கூட்டம் அதை எதிரொலித்தது.

15

ஜனகர் சொன்ன தீர்ப்பு!

ஆனாலும் இப்படியொரு கல் நெஞ்சா! ராஜசபை திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தது. செய்தி கேட்டு எல்லோரும் திடுக்கிட்டார்கள். சொல்ல இயலாத துயரத்தில் ஆழ்ந்தார்கள். மாமன்னர் ஜனகரோ அமைதியாக வீற்றிருந்தார். முகத்தில் எந்தச் சலனமும் இல்லை.

அது கல்நெஞ்சின் காரணத்தால் அல்ல. அவர் பற்றற்ற நிலையை அடைந்து பல ஆண்டுகள் ஆகின்றன. அவர் ராஜரிஷி. ராஜாவாய் இருந்துகொண்டே ரிஷியாய் இருப்பவர். ஒருவகையில் ரிஷிகளின் ராஜா.

மிதிலை தீப்பற்றி எரிகிறது என்று சொன்னால் கூடப் பதற்றப்படாதவர் என்ற புகழெல்லாம் சரிதான். அது நாடு. ஆனால் வந்திருக்கும் சேதியோ அவரது புதல்வியைப் பற்றி. அயோத்தியிலிருந்து ஓடோடி வந்து சேதி சொன்னவன் விம்மி விம்மிக் கரைகிறான். ஜனகர் முகத்தில் பூரண அமைதி!

வந்தவன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மறுபடி சொல்கிறான்.

`பிரபோ! இப்படியொரு சேதியைத் தங்களிடம் சொல்ல நேர்ந்தது பற்றி என் மனம் துயரவசப் படுகிறது. அவர்கள் அயோத்தியிலிருந்து புறப்பட்டு விட்டார்கள். கானகம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். கைகேயிப் பிராட்டியின் சூழ்ச்சி இது என மக்கள் பேசிக் கொள்கிறார்கள். தசரத மாமன்னர் மூர்ச்சை அடைந்துவிட்டாராம்.

பரதன் ஊரில் இல்லை. இப்போது அயோத்தி வந்திருக்க வேண்டும். நமது நாட்டு மாப்பிள்ளை ராமச்சந்திர மூர்த்தியும் லட்சுமண ராஜாவும் நம் மிதிலைச் செல்வியுமாக கானகத்தில் கல்லிலும் முள்ளிலும் இந்நேரம் நடந்து கொண்டிருப்பார்கள்...`

வந்தவன் விம்முகிறான். ஜனகர் மெல்லிய முறுவலுடன் அவனை ஆறுதல் படுத்துகிறார்.

`சகோதரா! மிதிலை நகரில் வாழும் குடிமகனான உனக்கு ராஜகுமாரி சீதாதேவி மேல் இத்தனை பாசம் இருப்பது நிறைவு தருகிறது. ஆனால் எதற்கும் கலங்காத திட மனதை நீ பயிற்சியால் அடைய முயல வேண்டும். வாழ்க்கை இறைவன் நடத்தும் நாடகம். ஒரு திரை மாறி மறு திரை விழும். காட்சிகள் மாறிக் கொண்டே தான் இருக்கும். காட்சிகளை விமரிசிக்க நமக்கு உரிமையில்லை. அவன் ஆட்டுவிக்கிறபடிப் பாத்திரங்கள் ஆடுகிறார்கள். அந்தச் சூத்திரதாரியின் கையில் இருக்கும் கயிற்றுக்கு நாம் கட்டுப்பட்டே ஆகவேண்டும். அயோத்தியில் மணம்செய்து கொடுத்த உன் மகளைப் பார்க்கச் சென்ற நீ, என் மகளைப் பற்றி அறிந்து விரைந்துவந்து சேதி சொன்னாயே, உன் கடமை உணர்ச்சியைப் பாராட்டுகிறேன்.`

யாரோ இன்னொருவர் மகளைப் பற்றிப் பேசுவதுபோல் தன் சொந்த மகளைப் பற்றி ஜனகர் பேசுவதை சபை அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது.

`யார் அங்கே? நம் தேர்ச் சாரதியை அழைத்து வா!` ஜனகர் உத்தரவிட்டார். சாரதி ஓடோடி வந்தான்.

`தேரில் குதிரைகளைப் பூட்டு. உடனடியாக அயோத்தி செல்ல வேண்டும். நான் பரதனை நன்கு அறிவேன். ராமனைப் பிரிந்து பரதன் மனம் கலங்கியிருப்பான். அவனை ஆறுதல் படுத்த வேண்டும்.`

அயோத்தியிலிருந்து வந்தவன் சொல்கேட்டு பரதன் மேல் கடும் சீற்றம் கொண்டிருந்த சபை, ஜனகரது வித்தியாசமான கோணத்தைக் கண்டு வியப்போடு மௌனம் காத்தது. ஜனகர் ராஜரிஷி மட்டுமா! தீர்க்கதரிசியும் அல்லவா!

ஜனகர் அயோத்தி போய்ச் சேர்வதற்குள் என்னவெல்லாம் நடந்துவிட்டன! தசரதர் காலமாகிவிட்டார். அவர் காலமான பிறகு தான் கேகய நாட்டிலிருந்து பரதன் வந்துசேர்ந்தானாம். பரதன் ஈமச் சடங்குகளைச் செய்யக் கூடாது என்று சொல்லிவிட்டுக் காலமானாராம் தசரதர்.

வசிஷ்டர் சொன்ன இந்தச் செய்தி கேட்டு பரதன் மூர்ச்சை அடைந்து விழுந்தான். ஜனகர் தான் அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

எத்தனை நல்ல பிள்ளை இந்த பரதன்! அவனுக்கு வாழ்நாள் முழுதும் ஆறாத மனக்காயத்தை உண்டுபண்ணிவிட்டு தசரதர் தம் வாழ்வைத் துறந்துவிட்டாரே! ஜனகர் பரதனின் நெஞ்சைத் தடவிக் கொடுத்து ஆறுதல் படுத்தியவாறே பரிவோடு சொன்னார்:

`மகனே! கலங்காதே! உன்னைத் தவறாய்ப் புரிந்துகொண்ட தந்தையின் உத்தரவு இது. உன் மனச்சாட்சிப் படி நீ ராமனுக்கு ஒரு தீங்கும் நினைத்தவனல்ல. அதுபோதும். ஒவ்வொருவரும் தன் மனத்திற்கு நேர்மையாகத் தான் வாழவேண்டும். அடுத்தவர் அபிப்ராயங்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.`

பரதன் ஜனகரின் பாதம் பணிந்து ஒரு வேண்டுகோள் வைத்தான்.

`கானகம் சென்று அண்ணாவை மறுபடி அயோத்திக்கு அழைத்து வரலாம் என்றிருக்கிறேன். தாங்களும் என்னுடன் வரவேண்டும். தங்கள் உடனிருப்பு என் வேண்டுகோளுக்குத் தெம்பு தரும்!`

ஜனகர் உடன்பட்டார்.

கானகம் மக்கள் கூட்டத்தால் நிரம்பியிருந்தது. தசரதனுக்கு ஈமச் சடங்குகளைச் சத்ருக்கனன் மூலம் முடித்த பிறகு பரதன் தம்பியோடும் மூன்று தாய்மாரோடும் ஜனகரோடும் குலகுரு வசிஷ்டரோடும் காட்டுக்கு வந்து ராமன் வாய்ச்சொல்லுக்காகக் காத்திருந்தான். தன் தந்தைக்குரிய நீத்தார் கடனெல்லாம் இயற்றிவிட்டுத் தன் தேவியோடும் இலக்குவனோடும் அன்பு பொங்க பரதனைப் பார்த்தவாறே அமர்ந்திருந்தான் ராம பிரான்.

`அண்ணா வந்துவிடு! அயோத்தி வந்துவிடு! வந்து அரசாட்சியை ஏற்றுக்கொள்!`

சற்றுமுன் பரதன் கதறிய கதறல் காற்று வெளியில் இன்னும் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. ராமபிரானின் பாதங்களைத் தன் கண்ணீரால் குளிப்பாட்டிய அவன் செய்கையை மரத்துப் பட்சிகளும் மான்களும் மயில்களும் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தன. அயோத்தி மக்களும் மூன்று தாய்மார்களும் சத்துருக்கனனும் பேச்சிழந்து அமர்ந்திருந்தார்கள்.

என்ன தெளிவு இந்தத் தம்பியிடம்! அரச போகம் குறித்த இச்சை அவனை ஒரு சிறிதும் அசைக்கவில்லையே! ஆயிரம் ராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா! குகன் எத்தனை சரியாகக் கணித்துச் சொன்னான்! ஜனகர் பரதன் செயல் கண்டு விளைந்த பெருமிதப் புன்முறுவலோடு நிர்மலமான முகத்துடன் வீற்றிருந்தார். பரதனும் அவரது ஒரு மாப்பிள்ளை அல்லவா! அவரது மாப்பிள்ளைகள் தர்ம நியாயங்களை அனுசரிப்பதில் ஒருவருக்கொருவர் போட்டி போடுபவர்கள்.

சற்றுநேரம் அமைதி காத்த ராமன் பின் மெல்லப் பேசலானான்:

`தம்பீ பரதா! என்னைக் கானகம் போகச் சொன்னவர் தந்தை. அவர் தம் விருப்பப்படிப் போகச் சொன்னாரா, தாயார் கைகேயி விருப்பப்படிப் போகச் சொன்னாரா என்பது பற்றி ஆராய்வது அநாவசியமானது. தந்தை சொல்லே மந்திரம். அதன்படி கானகம் வந்துவிட்டேன். தந்தை காலமானபின் அவர் சொல்லை மாற்றும் உரிமை நமக்கு உண்டா? தம் விருப்பப்படி அவர் சொல்லாவிட்டாலும் தாயார் விருப்பப்படியே சொன்னதாய்க் கொண்டாலும் இப்போது தாயாரே எண்ணத்தை மாற்றிக் கொண்டாலும் சொன்ன சொல் சொன்னது தான் அல்லவா? அது அவர் முத்திரையைத் தாங்கி வந்த சொல்தானே? அதை மீறுவது சரியா? அவர் காலமானபின் அந்தச் சொல்லை மீற நமக்கு உரிமையுண்டா?`

அனைவரும் செய்வதறியாது வியப்போடு ராமன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர். தசரதராமன் மேலும் சொல்லலானான்:

`இது ஒரு தர்ம - சங்கடம். நம்முன் எழுந்துள்ள இந்தக் கேள்வி, தர்மத்தை அனுசரிப்பது பற்றிய சங்கடம் குறித்த கேள்வி. இதற்கு ராஜரிஷியான சமநிலை தவறாத ஸ்ரீ ஜனகரைத் தவிர வேறு யார் தீர்ப்புச் சொல்லமுடியும்? `

ஜனகர் சொல்லும் தீர்ப்பே சரியாக இருக்க முடியும் என்ற மரியாதையோடு வசிஷ்டர் ஜனகரைப் பார்த்தார். `சீதையின் தந்தையல்லவா! எப்படியும் சீதை நலனில் அவருக்கு அக்கறை இருக்கத் தானே இருக்கும்? ஜனகர் ராமபிரானை நாட்டுக்கு வரச்சொல்லி விடுவார்` என்ற நினைப்பில் பொதுமக்கள் ஆவலோடு ஜனகரைப் பார்த்தார்கள். சற்றுநேரம் தியானத்தில் ஆழ்ந்த ஜனகர் சாந்தி தவழும் முகத்தோடு தீர்மானம் நிறைந்த குரலில் சொல்லலானார்:

`காலஞ்சென்ற தந்தையின் சொல் ஒரு கட்டளை. அவர் காலமான பின் அந்தக் கட்டளையை ரத்து செய்யும் உரிமை யாருக்கும் இல்லை. பிதாவின் ஆணைகளை விமர்சிப்பதில் அர்த்தமில்லை. அவைகள் கேள்வி கேட்கப் பட வேண்டியவை அல்ல. பின்பற்றப் பட வேண்டியவை. ராமன் பதினான்கு ஆண்டு கானகத்தில்தான் வசிக்கவேண்டும். என் மகள் சீதையும் ராமனுடனேயே இருக்கக் கடமைப் பட்டிருக்கிறாள்.`

மெய்த்திருப்பதம் மேவென்ற போதிலும் இத்திருத் துறந்து ஏகென்ற போதிலும் ஒன்று போலவே இருக்கும் ராமபிரானின் சித்திரத் தாமரை முகம் இப்போதும் மலர்ச்சியுடன் ஒளி வீசியது. ராவண வதத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த தேவர்கள் ஜனகரின் தீர்ப்பால் மகிழ்ச்சியடைந்து ஒருவருக்கொருவர் முறுவலைப் பரிமாறிக் கொண்டார்கள்.

16

பரதனைத் தேடிவந்த தேவேந்திரன்!

காட்டு விலங்குகள் மட்டுமே அதிகமிருக்கும் அந்தக் கானகம் இப்போது மனிதர்களால் நிறைந்திருந்தது. அயோத்தி நகரின் மக்களெல்லாம் கானகத்தில் தற்காலிகக் கூடாரங்களை அமைத்துக் கொண்டு தங்கியிருந்தார்கள். எப்படியாவது பரதன் ராமனை சமாதானம் செய்து அயோத்திக்கு அழைத்து வந்துவிடுவான் என்று அவர்கள் நம்பினார்கள்.

ராஜமாதாக்கள் கௌசல்யை, கைகேயி, சுமித்திரை ஆகியோர் தனிக் கூடாரத்தில் தங்கியிருந்தார்கள். பரத சத்துருக்கனர்களுக்கு மட்டும் இன்னொரு தனிக் கூடாரம். அதுபோலவே வசிஷ்டர் வேறொரு கூடாரத்தில் தங்கியிருந்தார்.

பரதன் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான். பக்கத்தில் சலனமே இல்லாமல் சத்துருக்கனன் உறங்குவது அவனிடம் பெருமூச்சை எழுப்பியது. குழந்தை போன்ற மனமுடையவன் சத்துருக்கனன். எல்லாம் ராமன் செயல் என்று அனைத்தையும் ராமனிடம் ஒப்புவித்து விட்டு நிச்சலனமாக உறங்குகிறான். தன்னால் அது முடியவில்லையே?

பழி வருமானால் பழியும் ராமன் செயல்தான் என்று ஏற்கும் மனப்பக்குவம் வரவேண்டும். அத்தகைய உன்னத மனப்பக்குவம் தன்னிடம் இல்லை. அதனால்தான் ஊரார் பழிசொல்வார்களே என்று அஞ்சி ராமனிடம் அரசாட்சியை ஏற்குமாறு வேண்டிக்கொள்ள கானகம் வந்தேனோ?

அரசாளும் பொறுப்பு எனக்கு வருவதும் ராமன் செயல் என்று நான் உணரவில்லையோ?

அல்ல, அல்ல. ராமன் அருகில் இல்லாமல் என்னால் வாழ இயலாது. சில நாட்கள் ராமனைப் பிரிந்து கேகய நாடு சென்றேனே, அப்போதே என்மனம் எவ்வளவு துயரில் ஆழ்ந்தது? தந்தை காலமானதால் கேகய நாட்டுக்கு என்னை அழைத்துவர அயோத்தியின் தேர் அனுப்பப்பட்டது. அது வராதிருந்தாலும் கூட நான் வெகு சீக்கிரம் அயோத்தி வந்திருப்பேன். ராமனைப் பிரிந்து வாழும் ஒவ்வொரு கணமும் ஒரு யுகம் போல் அல்லவா தோன்றுகின்றது! ராமன் என் அண்ணன் அல்ல. என் தெய்வம். இதை எப்படி யாரிடம் நான் சொல்வேன்?

நள்ளிரவில் உறக்கம் வராத பரதன் தன் கூடாரத்தை விட்டு வெளியே வந்தான். காட்டு விலங்குகள் தாக்கக் கூடாது என்பதற்காக ஆங்காங்கே நெருப்பு கொளுத்தப்பட்டு எரிந்துகொண்டிருந்தது. காவலர்கள் பலர் கையில் வில், ஈட்டி இவற்றோடு கூடாரங்களைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். சற்றுத் தள்ளியிருந்த வசிஷ்டரின் கூடாரத்தை நோக்கி மெல்ல நடந்தான் பரதன்.

வசிஷ்டர் அந்த இரவின் மோனத்தில் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். பரதன் காத்திருந்தான். சற்று நேரம் கழித்து மெல்ல அவர் கண் திறந்தார். பரதன் நள்ளிரவில் தன்னைத் தேடி வந்திருப்பதைப் பார்த்தார். பரதன் மேல் வாத்சல்யம் பெருகியது அவருக்கு. `உட்கார் குழந்தாய்!` என்று அவனைத் தன்னருகே அமர்த்திக் கொண்டார். `எதன் பொருட்டு என்னைத் தேடிவந்தாய் மகனே?` என்று அன்போடு வினவினார்.

பரதன் விம்மியவாறே கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

`ராமண்ணாவைப் பிரிந்து என்னால் உயிர் வாழ இயலும் என்று தோன்றவில்லை. ராமண்ணா கட்டாயம் அயோத்தி வரவேண்டும். ஆனால் தந்தை கட்டளை என்று வர மறுத்துவிட்டால் என்ன செய்வது?`

வசிஷ்டர் சிரித்தவாறே சொன்னார்:

`நல்லது. அப்படியானால் நீ கானகத்தில் தங்கிவிடு!`

பரதன் திகைத்தான்.

`அது சாத்தியமா?`

`கேட்டுப் பார். நாளை உன் வாக்கு வன்மையைப் பயன்படுத்து. இன்னும் என்னென்ன வகையில் எல்லாம் ராமனுடன் நீ நிரந்தரமாக இருக்க இயலுமோ அத்தகைய வேண்டுகோள்களையெல்லாம் முன்வை ஆனால் ராமன் யார் என்று நீ அறிவாய் அல்லவா?`

ராமன் கடவுள் என்ற தேவ ரகசியத்தைத் தன்னால் ஓரளவு ஊகிக்க முடிந்துவிட்டது என்பதால் எதுவும் சொல்லாமல் பரதன் மௌனம் காத்தான். வசிஷ்டர் பரதன் தோளில் தட்டியவாறே மெல்லச் சொன்னார்.

`குழந்தாய்! விஸ்வாமித்திரர் ராமனை அழைத்துப் போனார் அல்லவா? அப்போது என் அஞ்ஞான மனம் ஒரு கணம் பிரிவுத் துயரில் ஆழ்ந்தது. மறுகணம் நான் ஓர் உண்மையை உணர்ந்தேன். என் துயரம் முற்றிலுமாக விலகிவிட்டது!`

`என்ன உண்மை சுவாமி?`

`என் ஆசிரமத்தில் கண்மூடி தியானத்தில் ஆழ்ந்தேன். என்ன ஆச்சரியம்! ஸ்ரீராமன் திருவுருவம் நேரில் பார்ப்பதை விடவும் இன்னும் அழுத்தமாகவும் ஆழமாகவும் என் மனக்கண்ணில் காட்சி தந்தது. நீயும் அவ்விதம் ராமனைக் காணப் பழகவேண்டும்.`

`ஆனால் தங்களுக்குள்ள அத்தனை மனப்பக்குவம் எனக்கில்லையே சுவாமி?`

`அத்தகைய மனப்பக்குவம் வரவேண்டும் என ராமனையே பிரார்த்திப்பாய் குழந்தாய்!`

பரதன் வசிஷ்ட மாமுனிவரின் பாதாரவிந்தங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கி விடைபெற்றான்.

மறுநாள் காலை சபை கூடியது. பரதன் பேசத் தொடங்கினான். அனைவரும் மௌனம் காத்தனர்.

`ஸ்ரீராமா! நானும் சத்துருக்கனனும் அப்பா சொன்னபடி உனக்கு பதிலாக கானகத்தில் வசிக்கிறோம். நீ லட்சுமணனோடு அயோத்தி திரும்பு. இல்லாவிட்டால் லட்சுமணனை ராஜ்ய பரிபாலனம் ஏற்கச் சொல். நான் உன்னோடு கானகத்தில் வசிக்கிறேன். இல்லாவிட்டால் நீயும் அண்ணியும் மட்டும் அயோத்தி திரும்பி நாட்டை ஆளுங்கள். நாங்கள் மூவரும் அப்பா சொன்னபடி உனக்கு பதிலாக கானகத்தில் வசிக்கிறோம். ஏதாவது ஒரு வழிசொல் அண்ணா! கருணை காட்டு.`

ராமன் பரதனையே பார்த்துக் கொண்டிருந்தான். பகவான் பக்தனுக்குக் கட்டுப்பட்டவன். வா என்றால் அவன் பக்தனுடன் வரக் கடமைப்பட்டவன். பரதன் தன் தம்பி மட்டுமல்ல. தன் பக்தன். இது வெளியே தெரியாது. ஆனாலும் உண்மை இதுதான். ஒரு பக்தன் ஆண்டவனிடம் ஒரு வேண்டுகோளை முன்வைக்கும்போது அறநெறிகளைக் கூடப் புறந்தள்ளிவிட்டு பக்தனின் வேண்டுகோளுக்கு மனம் இரங்க வேண்டியது கடவுளின் கடமை. இப்போது என்ன செய்வது?

`இதுபற்றி நாளை முடிவெடுப்போம் பரதா. நீயும் சிந்திப்பாய். நானும் சிந்திக்கிறேன்.` ராமன் மெல்ல எழுந்தான். சபை கலைந்தது.

தேவர்கள் திகைப்பில் ஆழ்ந்தார்கள். ராவண வதத்திற்காக கூனியின் நாவில் சரஸ்வதியைக் குடியேற வைத்து கைகேயி மனதை மாற்றி ராமனைக் கானகம் வரவைப்பதற்குள் படாத பாடு பட்டாயிற்று. இப்போது பக்தர் வேண்டுகோளே முக்கியம் என்று பகவான் நடப்பதானால் ராவண வதம் எப்படி நிகழும்?

அன்றிரவு பரதன் முன் தோன்றினான் தேவேந்திரன். தேவேந்திரனைப் பார்த்து வியப்புடன் கைகூப்பினான் பரதன்.

`பரதா! ஒரு தேவ ரகசியத்தை உனக்குத் தெரியப்படுத்துகிறேன். ராமபிரான் புவியில் அவதாரம் எடுத்திருப்பது ராவணனை வதம் செய்வதற்காகத் தான். நீ உன் அளவுகடந்த பக்தியால் வற்புறுத்தினால் ராமன் உன்னுடன் புறப்பட்டு வந்தாலும் வந்துவிடுவார். தந்தை சொல்லைக் காப்பாற்றுவது, பக்தன் வேண்டுகோளை ஏற்பது இரண்டில் எதைச் செய்வது என்ற தர்மசங்கடம் நேர்ந்தால் ராமபிரான் உன் வேண்டுகோளைத் தான் ஏற்பார். எனவே நீ ராமபிரான் அயோத்தி வருவதுகுறித்து அதிகம் வற்புறுத்தக் கூடாது. ராமன் கானகத்திலேயே இருக்கும் வகையில் நீதான் கருணை காட்ட வேண்டும்!`

`தேவேந்திரப் பிரபோ! நான் கருணை காட்டுவதா? என்ன பெரிய பேச்செல்லாம் பேசுகிறீர்கள்? நான் எளிய ராமபக்தன். அவ்வளவே.`

`ராம பக்தர்கள் தான் எல்லாரிலும் பெரியவர்கள் பரதா! அவர்கள் ராமனை விடவும் பெரியவர்கள். அதை நானும் அறிவேன். நான் கூட உன்னளவு ராமபக்தி கொண்டவன் அல்ல என்றே எனக்குத் தோன்றுகிறது. உன் பக்தி அளவிடற்கரியது. எனவே தான் உன்னிடம் இந்த வேண்டுகோள்.`

`தேவேந்திரரே! ராம பக்தனான என்னை ராமனைப் பிரிந்து பதினான்கு ஆண்டுகள் வாழச் சொல்கிறீர்களே? இது என்ன நியாயம்?`

`ராவண வதத்தின் பொருட்டாக நீ இந்தத் தியாகத்தைச் செய்துதான் ஆக வேண்டும். ஆனால் நீ நினைக்கும் போதெல்லாம் ராமன் உன் உள்ளத்தில் காட்சி தர வேண்டும் என்று அந்தப் பரம்பொருளிடமே வரம் கேள். தேவர்கள் மனிதர்களிடம் உதவி கேட்க மாட்டார்கள். நீ மனிதன் அல்ல. ராம பக்தன். அதாவது நீ ராமனை விடப் பெரியவன். அதனால் தேவர்கள் அனைவரும் என்மூலமாக உன்னிடம் இந்த வேண்டுகோளை வைக்கிறார்கள்.`

தேவேந்திரன் உருவம் காற்றில் கலந்து மறைந்தது. பரதன் வியப்பில் ஆழ்ந்தான்.

மறுநாள் சபை மீண்டும் கூடியது. அனைத்தும் அறிந்த ராமபிரான் பரதனைப் பார்த்துக் குறுமுறுவல் பூத்தான்.

`பரதா! என் அன்பே! நான் தந்தை சொல்படி கானகத்தில் வசிக்க விரும்புகிறேன். ஆனால் உன் சொல் எதுவானாலும் அதற்குக் கட்டுப்படுகிறேன். தந்தை சொல்லை என்னை மீறச் செய்த பாவம் உன்னைத் தாக்காதபடி ஏதேனும் உபாயம் சொல்வாயாக.`

`தங்கள் பாதுகைகளைத் தாருங்கள் பிரபோ. பாதுகைகளுக்கு மகுடம் சூட்டி உங்கள் பிரதிநிதியாக அரசாள்வேன். பதினான்கு ஆண்டுகளை ஒவ்வொரு நாளாக எண்ணிக் கொண்டிருப்பேன். அந்தக் காலக் கெடு முடிந்ததும் தாங்கள் அயோத்தி வந்துவிட வேண்டும். அதுவரை நான் நினைக்கும் போதெல்லாம் என் உள்ளத்தில் தாங்கள் காட்சி தரவேண்டும்!`

கடைசி வாக்கியத்தைச் சற்றே மெல்ல ராமன் மட்டும் கேட்கிற வகையில் சொன்னான் பரதன். ராமன் பாதுகைகளை பரதனிடம் அளித்தான். ராமபிரான் காலில் இருந்த பாதுகைகள் பரதன் தலையில் ஏறிக் கொண்டன. ராம் ராம் என்ற குரல் மக்களிடையே நெகிழ்ச்சியுடன் எழுந்தது.

இப்போது தன் தாய் கைகேயியைப் பார்த்தான் பரதன். கைகேயியும் தேவர்கள் விருப்பப்படித் தான் இயங்கியிருக்கிறாள் என்பதை உணர்ந்த அவன் முகத்தில் முன்னிருந்த வெறுப்பு மறைந்து பாசம் தோன்றியது.



17

மரம் கேட்ட வரம்!

அந்த நண்பகலிலும் கூட எந்தவித வெளிச்சமும் இல்லாமல் ஆசிரமத்தை இருட்டு ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. பட்டப் பகலில் எப்படி ஆசிரமம் இவ்வளவு இருட்டாக இருக்கிறது என்பதுதான் ஆச்சரியமாக இருந்தது.

அயோத்தியை விட்டுப் பிரிந்துவந்த அந்தப் பதினான்கு ஆண்டு வனவாசத்தில் ராமன், சீதை, லட்சுமணன் மூவரும் அந்த ஆசிரமத்தில் தானே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

லட்சுமணன் பார்த்துப் பார்த்துக் கட்டிய ஆசிரமம் அல்லவா அது!

மூங்கில் கம்புகளை அவனே தேவையான அளவில் வெட்டி எடுத்து வந்தான். மேலே கூரைகளை அழகாகப் பின்னி மேய்ந்து பரப்பினான். நாற்புறமும் தடுப்பு வேலிகளை ஒரு சீராக அமைத்தான். வாயிற்புறத்தில் அழகிய மூங்கில் கதவு ஒன்றையும் அமைத்தான்.

ஆசிரமத்தின் பக்கவாட்டில் அழகழகான சாளரங்களையும் அமைத்தான். நல்ல வெளிச்சமும் காற்றும் வருகிற வகையிலும் அதே நேரம் எவ்வளவு மழை பெய்தாலும் ஒழுகாத வகையிலும் ஆசிரமம் மிகக் கச்சிதமாகக் கட்டப்பட்டு விட்டது.

அவன் ஆசிரமத்தைக் கட்டி முடித்ததும் அதை உள்ளும் புறமும் சுற்றிப் பார்த்த ராமபிரான் மிகுந்த வியப்படைந்தார். இந்தக் கலையையெல்லாம் நீ எப்போது கற்றுக்கொண்டாய் லட்சுமணா என்று

மகிழ்ந்து தன் தம்பியைச் கட்டித் தழுவிப் பாராட்டினார். சீதையும் கூட அந்த அழகிய ஆசிரமத்தைப் பார்த்துப் பார்த்து வியப்படைந்தாள். அவள் அன்போடு வலக்கரம் உயர்த்தி தன் மைத்துனன் லட்சுமணனை மனமார ஆசீர்வதித்தாள்.

`நீங்கள் வீடுபேறு தரும் தெய்வம் என்று உங்களை இந்தக் கானகத்தில் வாழும் முனிவர்கள் வணங்குகிறார்கள். வீடுதரும் உங்களுக்கே வீடு தந்துவிட்டார் உங்கள் தம்பி!` என்று நகைத்தவாறே சொன்னாள்.

ராமபிரான் சீதாதேவியின் சாதுரியமான பேச்சைக் கேட்டு மனம் மகிழ்ந்தார்.

அப்படி அழகாகக் கட்டப்பட்ட ஆசிரமத்தில் தான் அவர்கள் ஆனந்தமாக வசித்துவந்தார்கள். ஆனால் இன்று இதென்ன நண்பகலில் ஆசிரமத்தின் உள்ளே இத்தனை இருள்?

சாளரங்கள் திறந்துதானே இருக்கின்றன! அப்படியிருந்தும் வெளிச்சத்தைத் தடுப்பது எது? இது ஏதேனும் அரக்கனின் மாய வேலையாக இருக்குமோ?

ராமபிரானும் சீதாதேவியும் லட்சுமணனும் ஆசிரமத்தை விட்டு வெளியே வந்து ஆராய்ந்தார்கள். ஆகா. அவர்களுக்கு அப்போதுதான் உண்மை புரிந்தது. இது அரக்கனின் வேலை அல்ல. ஒரு மரத்தின் வேலை என்று.

ஆசிரமத்தின் அருகாக புளியமரம் ஒன்று மிகப் பெரிதாக வளர்ந்திருந்தது. அந்தப் புளிய மரத்தின் இலைகள் ஒவ்வொன்றும் வாழை இலை போல அவ்வளவு பெரிதாக இருந்தன.

வட்ட வட்டமான அந்த மாபெரும் இலைகள் மரமெல்லாம் அடர்ந்து தென்பட்டதால் சூரியனின் கிரணங்கள் அந்த இலைகளைத் தாண்டி ஆசிரமத்தின் உள்ளே வருகைதர இயலவில்லை. அப்படி இடைவெளியே இல்லாமல் மரத்தை இலைகள் மூடிக் கிடந்தன.

`இதென்ன லட்சுமணா, நேற்று இந்தப் புளியமரத்தில் இலைகள் இவ்வளவு அடர்த்தியாகத் தென்படவில்லை. இன்று இத்தனை இலைகள் மரத்தின் ஓர் இடம் விடாமல் எப்படி முளைத்தன?`

லட்சுமணன் யோசித்தவாறே சொன்னான்:

`இல்லை அண்ணா! நேற்று இவ்வளவு அடர்த்தியாக இல்லாவிட்டாலும் ஓரளவு அடர்த்தியாகத்தான் தென்பட்டன. ஆனால் நம் ஆசிரமத்தின் சாளரங்களின் அருகாக இருந்த கிளைகளில் இலைகள் நேற்று இத்தனை செறிவாகத் தென்படவில்லை. இன்று அந்தப் பகுதியில்

இலைகள் நேற்றுப் பெய்த மழையின் காரணமாகச் செழித்து வளர்ந்துவிட்டன. புளிய மரத்தின் இலைகள் மிகப் பெரிதாக இருப்பதால் அவை நம் ஆசிரமச் சாளரத்தின் வெளிச்சத்தையே மூடிவிட்டன. இந்தப் பிரச்னையைச் சமாளிக்க ஒரு வழி இருக்கிறது. அப்படிச் செய்துவிட்டால் சாளரத்தின் வழியே சூரிய வெளிச்சம் எப்போதும் நன்றாகக் கிட்டும்!`

`அது என்ன வழி லட்சுமணா?`

ராமபிரான் ஆவலுடன் கேட்டார்.

லட்சுமணன் நகைத்தவாறே சொன்னான்.

`அத்துமீறி இலைகளை வளர்த்து நம் ஆசிரம வெளிச்சத்தைக் குலைத்த குற்றத்திற்காக அதன் கிளைகளை வெட்டிவிட வேண்டியதுதான். ஏன் அந்தப் புளிய மரத்தையே கூட வெட்டித் தள்ளி விடலாம்!`

லட்சுமணன் இப்படிச் சொன்னதைக் கேட்டுச் சீதை பதறினாள்.

`அது அழகான புளிய மரம். அதன் காற்று ஆனந்தமாக இருக்கிறது நமக்கு. அதன் கிளைகளையோ மரத்தையோ வெட்ட வேண்டாம். அதன் கிளையை வெட்டுவது என்பது யாரோ ஒரு மனிதரின் கையை வெட்டுவதுபோல் தோன்றுகிறது எனக்கு. அப்படிச் செய்யாமல் இந்தப் பிரச்னையை வேறு எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்கலாமே?`

ராமபிரான் இப்போது நகைத்தார். பிறகு புன்முறுவல் மாறாத முகத்துடன் சொன்னார்:

`சீதா! உன் கருத்துப் படிப் பார்த்தால் கிளையையும் வெட்ட முடியாது. மரத்தையும் வெட்ட முடியாது. அப்படியானால் இலைகளைத் தான் வெட்ட வேண்டும். இலைகளை வெட்டினாலும் பயனில்லை. அவை மீண்டும் மீண்டும் துளிர்த்துக் கொண்டே தான் இருக்கும். மிகப் பெரிய வடிவிலான இந்த இலைகள் சாளரத்தின் வெளிச்சத்தைக் கட்டாயம் தடுக்கும்!`

லட்சுமணன் சிறிது யோசித்துவிட்டுச் சொன்னான்:

`அண்ணிக்கு இந்த மரத்தை வெட்டுவதில் விருப்பமில்லை என்று தெரிகிறது. நல்லது. மரத்தின் இலைகள் மிகப்பெரிதாக இருப்பது தானே பிரச்னையை ஏற்படுத்துகிறது? இந்த இலைகள் அனைத்தையும் மிகச் சிறியதாக மாற்றிவிடுகிறேன்.`

லட்சுமணன் வில்லை வளைத்தான். அம்பை நாணில் ஏற்றினான்.

காதுவரை நாணைச் செலுத்தி ஏதோ ஒரு முக்கியமான மந்திரத்தை முணுமுணுத்தவாறு அஸ்திரத்தைச் செலுத்தினான்.

அடுத்த கணம் லட்சுமணன் வில்லிலிருந்து பாய்ந்து புறப்பட்ட அம்பு சரசரவென எல்லா இலைகளையும் சின்னஞ்சிறியதாக வெட்டித் தள்ளியது. பின்னர் அமைதியாக லட்சுமணனின் அம்பறாத் தூணியில் வந்து உட்கார்ந்துகொண்டது!

சீதை மிகுந்த வியப்போடு அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரே அம்பு. அது ஒவ்வொரு இலையையும் தாக்கி அதன் சுற்றளவைக் குறைத்து ஓர் இலை விடாமல் எல்லா இலைகளையும் சின்னஞ்சிறியதாக மாற்றி விட்டதே!

லட்சுமணன் வெட்டித் தள்ளிய இலையின் மீதிப் பகுதிகள் மண்ணில் எங்கும் பச்சைக் கம்பளி விரித்தாற்போல் படர்ந்திருந்தன.

லட்சுமணனைப் பெருமை பொங்கப் பார்த்த ராமபிரான் சீதையிடம், என் தம்பியின் ஆற்றலைப் பார்த்தாயா என்று கண்களாலேயே வினவினார்.

அப்போது முற்றிலும் விந்தையான ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்தப் புளிய மரத்தில் உறைந்திருந்த வனதேவதை ஒளிவீசும் தோற்றத்துடன் வெளிப்பட்டாள். அவள் ராம லட்சுமணரையும் சீதாப் பிராட்டியையும் கரம் கூப்பி வணங்கினாள்.

தானே ஒவ்வொரு மரமாகவும் செடியாகவும் கொடியாகவும் வனங்களில் வசிப்பதாகச் சொன்ன அவள், தன்னை வெட்டாது காத்த சீதாதேவிக்குத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள். இனி யுகங்கள் தோறும் புளிய மரங்கள் மிகச் சிறிய இலைகளோடு தான் திகழும் என்றும் லட்சுமணனின் வில்லாற்றலுக்குப் புளிய மரத்தின் சிறிய இலைகள் என்றென்றும் சான்றாக நிற்கும் என்றும் அவள் அறிவித்தாள்.

லட்சுமணனைக் கைகூப்பித் தொழுத அவள் ராமபிரானிடம் ஒரு விந்தையான வேண்டுகோளை முன்வைத்தாள்.

`பிரபோ! உண்மையில் தாங்கள் யார் என்பதை நான் அறிவேன். தெய்வமாகிய தங்களையே சரணடைந்து வாழ்வது என்று முடிவு செய்த லட்சுமணர், தன் மனைவி, தாய் உள்ளிட்ட எல்லா பந்த பாசங்களையும் விட்டுவிட்டார். தங்களுடன் கானகத்திற்குப் புறப்பட்டு வந்தார். இந்த லட்சுமணரது குணத்தின் பெருமையை எனது பழத்தின் மூலம் நான் உலகிற்கு உணர்த்த விரும்புகிறேன்.

எல்லாப் பழங்களும் எவ்வளவு பழுத்தாலும் தோலோடு இணைந்தே உள்ளன. தோலிடம் உள்ள பிடிப்பை விட முடியாமல் இருக்கின்றன. ஆனால் இனி என் புளிய மரத்தில் பழுக்கும் புளியம்பழங்கள் மட்டும் லட்சுமணனைப் போல் இருக்கட்டும். லட்சுமணர் எப்படி பந்த

பாசங்களை தெய்வமாகிய உங்களுக்காக உதறினாரோ அதுபோல் என் பழத்தின் சதைப் பகுதி உள்ளிருந்து கொண்டே மேலே உள்ள தன் ஓட்டை உதறட்டும்.

புளியம் பழம் கனியக் கனிய அதன் உள்ளிருக்கும் சதைப் பகுதியும் வெளிப்புறத்தில் உள்ள ஓடும் ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் பிரியட்டும். தெய்வத்தைத் தவிர மீதமுள்ள உறவுகள் மேல் பற்றில்லாமல் இருப்பதுதான் தெய்வத்தை அடையும் வழி என லட்சுமணன் கைக்கொண்ட நெறியைப் புளியம்பழங்கள் கால காலத்திற்கு உலகில் வாழும் அனைவருக்கும் உணர்த்தட்டும். இந்த வேண்டுகோளைத் தாங்கள் நிறைவேற்ற வேண்டும் சுவாமி!'

தன்னைப் பணிந்து வனதேவதை கேட்ட வேண்டுகோளைச் சிரித்தவாறே செவிமடுத்தார் ராமபிரான்.

பின்னர் அப்படியே ஆகட்டும் என்று வனதேவதையை நோக்கித் தன் வலது கரத்தை உயர்த்தி ஆசி கூறினார்.

அன்றுதொட்டு லட்சுமணனின் வில்லாற்றலுக்குச் சான்றாகப் புளிய மரத்தின் இலைகள் சின்னஞ்சிறிய வடிவை எடுத்துக் கொண்டன.

லட்சுமணனின் பண்பு நலனுக்குச் சான்றாக புளியம்பழங்கள் உள்ளிருந்தவாறே மேலுள்ள ஓட்டை விட்டுப் பிரிந்தன.

இன்றும் கூட நாடெங்கும் வளர்ந்துள்ள புளிய மரங்களில் பழுக்கும் புளியம்பழங்களை அசைத்தால் உள்ளே ஓட்டை விட்டுப் பிரிந்த சதைப்பகுதி கடகடவென உருளும் சப்தத்தைக் கேட்கலாம்.

அந்த சப்தம் புளியம்பழம் தன் பாஷையில் லட்சுமணனின் பெருமையைச் சொல்லும் சப்தம் தான்!

18

அவனல்லவோ தியாகி!

உள்ளார்ந்த விம்மலுடனும் கண்களில் கண்ணீருடனும் பரதன் ராமனைப் பார்த்துக் கொண்டிருந்தான். ராம பரத சந்திப்பை சுற்றியிருந்த அனைவரும் நெகிழ்ச்சியோடு தரிசித்துக் கொணடிருந்தனர். அயோத்தி மக்களும் அரச குடும்பத்தினரும் பரதன் வாழ்ந்துவந்த நந்திகிராமத்தில் கூடியிருந்தார்கள்.

பதினான்கு ஆண்டுகள் ராமனின் பாதுகைக்கு முடிசூட்டி ராமனின் பிரதிநிதியாய் நாட்டை ஆண்ட பரதன்! இவனைப் போல் இன்னொருவன் உண்டா? இருக்க இயலுமா? ராமன் பரதனைக் கட்டி அணைத்துக் கொண்டபோது வானுலகிலிருந்து தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

சீதாதேவி, லட்சுமணன், அனுமன், சுக்கிரீவன், வீடணன், அங்கதன் உள்ளிட்ட பலர் இந்தக் காட்சியைக் கண்டு மெய்ம்மறந்து நின்றிருந்தார்கள். ஆனால் பரதனின் விம்மல் மட்டும் நின்றபாடில்லை.

`ஏன் அழுகிறாய் பரதா? அதுதான் நான் வந்துவிட்டேனே? உன் கண்களைத் துடைத்துக்கொள்!`

`நீ வந்துவிட்டாய் ராமா! நீ வராமல் இருந்தால் நான் உயிர் விட்டிருப்பேன். ஆனால் நான் அழுவது வேறு காரணத்திற்காக. இத்தனை நாட்கள் நாள்தோறும் இரவு என்னுடைய எந்த துரதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி அழுதுகொண்டிருந்தேனோ அந்த நினைவில் தான் இப்போதும் அழுகிறேன்!`

`நீ அதிர்ஷ்டசாலிதான். உன்னையே நீ ஏன் துரதிர்ஷ்டசாலி என்று நினைத்துக் கொள்ள வேண்டும்?`

`அண்ணா! நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் எங்கள் எல்லோரையும் விட லட்சுமணன் தான் அதிர்ஷ்டசாலி. அவனளவு அதிர்ஷ்டத்தை அண்ணி கூடப் பெற்றதில்லை!`

குறுமுறுவல் பூத்தவாறே ராமன் கேட்டான்:

`எப்படிச் சொல்கிறாய் பரதா?`

`ராமா! அண்ணி சீதாதேவி கூட திருமண வயதுக்குப் பிறகுதான் உன் வாழ்வில் உன்னோடு இணைந்தார். அப்படியிருந்தும் பதினான்கு ஆண்டு வனவாச காலத்தில் ஓராண்டு உன்னைப் பிரிந்து வாழவேண்டிய நிலைமை அவருக்கு நேர்ந்துவிட்டது. நான், சத்துருக்கனன் எல்லோருமே பதினான்கு ஆண்டுகள் உன்னைப் பிரிந்திருந்தோம். அனுமன் உள்ளிட்ட மற்ற வானரங்கள், வீடணன் எல்லோரும் உன்னைத் தாமதமாகத் தான் அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். ஆனால் என் தம்பி லட்சுமணனைப் பார் அண்ணா. அவன் பிறந்ததிலிருந்து உன்னோடு தான் இருக்கிறான். உன்னை எப்போதும் அவன் பிரியவில்லை. அவன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்.`

ராமன் கலகலவென்று சிரித்தவாறே கேட்டான்:

`ஏன் பரதா? நீ லட்சுமணனது அதிர்ஷ்டத்தைப் பார்த்துப் பொறாமைப்படுகிறாயா?`

`இந்த விஷயத்தில் எனக்குப் பொறாமை இல்லை ராமா! லட்சுமணன் உன்னுடனேயே எப்போதும் இருக்கும் பேறுபெற்றால் என்ன? எனக்கு மகிழ்ச்சியே. நான் உன்னையே எப்போதும் நினைக்கும் பேறுபெற்றிருக்கிறேன். அதுபோதும் எனக்கு.`

`அப்படியானால் ஏன் அழுகிறாய்? உன் கண்ணீரைத் துடைத்துக் கொள்!`

`நான் அழுவது அதன் பொருட்டு அல்ல. நான் என் மகத்தான துரதிர்ஷ்டத்தை எண்ணி அழுகிறேன்!`

`என்ன துரதிர்ஷ்டம் நேர்ந்துவிட்டது உனக்கு? அதுதான் நான் வந்துவிட்டேனே?`

`அண்ணா! ஒருவன் நல்லவனாக இருப்பது முக்கியம் தான். அதோடு அவனை நல்லவன் என்று மற்றவர்கள் புரிந்துகொள்வதும் மிக முக்கியம். இல்லாவிட்டால் அவன் பிறவியெடுத்ததே வீண் தான்.`

`உன்னை எல்லோரும் நல்லவன் என்றுதான்

புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஏன் வீணாகக் கவலைப்படுகிறாய்?`

`இல்லை அண்ணா இல்லை. பதினான்கு ஆண்டுகளாக நான் பட்ட மனவேதனை எனக்குத்தான் தெரியும். என்னை நல்லவன் என்று நிரூபிக்க நான் சிரமப்பட வேண்டியிருந்தது. ஆனால் லட்சுமணனுக்கு அந்த சிரமம் நேரவில்லை. என்னைப் பெற்ற தாயான கைகேயியே என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.`

`ஏன் அப்படிச் சொல்கிறாய் பரதா?`

`சரியாகப் புரிந்துகொண்டிருந்தால் உன் வனவாசம் நடந்திருக்குமா? உன்மேல் நான் வைத்திருக்கும் பிரியத்தை என் அன்னை சரிவர உணராததால் தானே எனக்கு மகுடாபிஷேகம் என்றும் உனக்கு வனவாசம் என்றும் வரம் வாங்கினார்?`

கூட்டத்தின் முன்னணியில் இருந்து, இதைக் கேட்ட கைகேயி வெட்கித் தலைகுனிந்தாள். கூனி மந்தரை தன் தலையில் போட்டிருந்த முக்காட்டை இன்னும் சற்று இறக்கி விட்டுக் கொண்டு தலைகுனிந்தாள்.

`போகட்டும்.விடு. மீண்டும் மீண்டும் பெற்ற தாயின் மனத்தை வேதனைப் படுத்தாதே! மந்தராதேவியின் நாக்கு பேசிய பேச்சை கைகேயி மாதா நம்பிவிட்டார். அது அவர் பிழை அல்ல. விதியின் பிழை!`

`என் தாய் இருக்கட்டும் அண்ணா! நம் தந்தை தசரதர் என்னை முழுவதுமாகப் புரிந்துகொள்ளவில்லையே? அவர் கைகேயி மாதாவிடம் கேட்டிருக்க வேண்டாமா? நீ கேட்கும் வரங்களை என் பரதன் ஒப்புக்கொள்ள மாட்டான் என்று அவர் தீர்மானமாகச் சொல்லியிருக்க வேண்டாமா? அவருக்கு என்னைப் பற்றிப் புரிந்த லட்சணம் அவ்வளவுதான். நான் அவருக்கு இறுதிச் சடங்கு செய்யக் கூடக் கூடாது, சத்துருக்கனன் தான் செய்ய வேண்டும் என்றல்லவா அவர் சொல்லிவிட்டு மரணமடைந்தார்? உன்னை வனத்திற்கு அனுப்பும் சூழ்ச்சியில் என் பங்கு ஒருசிறிதும் இருக்க வாய்ப்பில்லை என்பதை என்னைப் பெற்ற தந்தையான அவர் ஏன் அனுமானிக்கவில்லை? ஏன் என்னை நல்லவன் என்று அவர் நம்பவில்லை? ஒருவன் நல்லவனாக இருந்தும் மற்றவர்கள் அவனைக் கெட்டவன் என்று கருதுவது எவ்வளவு பெரிய கொடுமை தெரியுமா அண்ணா?`

`பரதா! காலமானவரைப் பற்றி நாம் ஏதும் குறைசொல்லக் கூடாது. யுத்தம் முடிந்ததும் அவர் வானில் தோன்றினார். உன்னைத் தன் மகனாக ஏற்க ஒப்புக் கொண்டார். இப்போது உன்னை அவர் புரிந்துகொண்டு விட்டார். நம் தந்தையைப் பற்றிக் குறைசொல்வதை விட்டுவிடு.`

`சரி அண்ணா. அதுபோகட்டும். ஆனால் இந்த லட்சுமணன்? நாமெல்லாம் ஒன்றாகத் தானே விளையாடி வளர்ந்தோம்? குருகுலத்தில் கூட வசிஷ்ட முனிவரிடம் ஒன்றாகத் தானே கல்வி பயின்றோம்? என்னைப் பற்றி லட்சுமணனுக்குத் தெரியாதா? கேட்கப்பட்ட இரு வரங்களுக்கும் என் சகோதரன் பரதன் ஒப்புக் கொள்ள மாட்டான் என்றல்லவா அவன் எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும்? ஆனால் அப்படிச் செய்யவில்லையே, அவனுமல்லவா சேர்ந்து கொண்டு என்னைத் திட்டியிருக்கிறான்?`

சொல்லிவிட்டு பரதன் பெருமூச்செறிந்தான். ராமன் லட்சுமணனைப் பார்த்தான். லட்சுமணன் தலைகுனிந்தான். பரதன் மேலும் சொல்லத் தொடங்கினான்.

`அண்ணா! நீ கானகம் சென்றாய் என்றறிந்து கோசல மாதாவைச் சந்திக்கப் போனேன். அன்பே வடிவான அவர் அன்று என்னை என்ன கேட்டார் தெரியுமா? உன் அம்மா செய்த செயலை நீ அறிந்திருப்பாயே என்று கேட்டார். என் உள்ளத்தில் வேலைப் பாய்ச்சிய கேள்வி. ராமா! தாய் கோசலா தேவியும் நான் நல்லவன் என்று புரிந்துகொள்ளவில்லை.`

இதைக் கேட்டவாறு நின்றிருந்த கோசலை வெட்கத்துடன் தலைகவிழ்ந்தாள். பரதன் தொடர்ந்தான்.

`அண்ணா. குலகுரு வசிஷ்டர் நம்மைப் பற்றி அறியாதவரா என்ன? சத்துருக்கனன்தான், தந்தை தசரதருக்குக் கொள்ளி வைக்க வேண்டும் என்று அவர் சொன்னார். அது, மறைந்த நம் தந்தையின் கட்டளை. எனவே நான் அழுதவாறே அதற்குச் சம்மதித்தேன். ஆனால் கொள்ளி வைக்கப்பட்ட பிறகு அவர் என்னிடம் என்ன கேட்டார் தெரியுமா? நீ எப்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்கப் போகிறாய் என்று கேட்டார். அயோத்திக்கு அரசன் வேண்டுமே, என்ன செய்யலாம் என்றல்லவா அவர் கேட்டிருக்க வேண்டும்? நான் ஆட்சிப் பொறுப்பை விரும்புவேன் என்று அவருமல்லவா என்னைப் பற்றித் தப்புக்கணக்குப் போட்டுவிட்டார்? முக்காலமும் உணர்ந்த ஞானி என்கிறார்கள் அவரை. ஆனால் நான் நல்லவன் என்பதை மட்டும் அவர் உணரத் தவறிவிட்டார்!`

இதைக் கேட்டுக்கொண்டிருந்த குலகுரு வசிஷ்டர் தலைகவிழ்ந்தார்.

`இவர்களெல்லாம் இருக்கட்டும் அண்ணா. நான் உன்னைக் கூட்டிப் போகும் ஆசையில் கானகத்திற்கு வந்தேன். அங்கே வழியில் குகனைச் சந்தித்தேன். குகன் எனக்கு முன்பின் பரிச்சயமில்லாதவன். என்னோடு ரத்த சம்பந்தமில்லாதவன். ஆனால் அவன் நான் உன்னுடன் போர் தொடுக்க வந்ததாக எண்ணிப் படையுடன் என்னை நோக்கி வந்தான். நான் உன் பகைவன் என்ற எண்ணத்தை அவன் மனத்தில் விதைத்தது

யார்?`

ராமன் லட்சுமணனைப் பார்த்தான். அப்போது லட்சுமணனின் ஏற்கெனவே குனிந்திருந்த தலை மேலும் குனிந்தது.

`அண்ணா! முன்பின் அறிமுகமில்லாத அன்னியனான குகன் கூட என்னை நல்லவன் என்று எண்ணவில்லையே என்ற எண்ணத்தில் என் கண்ணீர் வற்றாமல் இன்றளவும் பெருகிக் கொண்டிருக்கிறது!`

இதைக் கேட்டு வேடன் குகன் விம்மியவாறே தானும் தலைகுனிந்தான்.

ராமன் பரதன் தோள்களைத் தட்டிக் கொடுத்தான்.

`பரதா! இனி நீ கண்ணீர் பெருக்க வேண்டாம். நீ நல்லவன் என்பதை உலகம் இப்போது மிக நன்றாக உணர்ந்துகொண்டு விட்டது. இதோ நீ என்பால் கொண்ட பக்தியின் காரணமாகத் தலைநிமிர்ந்து நிற்கிறாய். உன்னைத் தவறாகப் புரிந்துகொண்ட மாதா கைகேயி, மாதா கோசலை, லட்சுமணன், குலகுரு வசிஷ்டர், குகன் எல்லோரும் தலைகவிழ்ந்து நின்றுகொண்டிருக்கிறார்கள். ஓர் உண்மை தவறாகப் புரிந்துகொள்ளப் படலாம். ஆனால் உண்மை தன் வெளிச்சத்தை ஒருநாளும் பரப்பாமல் இராது.`

ராமபிரான் இப்படிச் சொன்னதும் பரதனின் வருத்தத்தைப் போக்கும் வகையில் மாதா கைகேயி, கோசலை, வசிஷ்டர், லட்சுமணன், குகன் எல்லோரும் ஆதரவோடு பரதனைப் பார்த்துப் புன்னகை செய்தார்கள். ராமபிரான் மேலும் சொல்லலானான்:

`நீ தியாகி பரதா. என் மேல் கொண்ட பக்தியால் வரும் புகழையும் சேர்த்துத் தியாகம் செய்துவிட்ட தியாகி நீ. எதிர்காலத்தில் புவியில் ஏனக்கு ஆலயங்கள் தோன்றும். அந்த ஆலயங்களில் என்னோடு சீதைக்கும் லட்சுமணனுக்கும், அனுமனுக்கும் சிலைகள் இருக்கும். அனுமனுக்குத் தனிக்கோயில் வழிபாடு கூட நடக்கும். ஆனால் என்னோடு இருக்கும் சிலைகளில் உன் சிலை இருக்காது. ஏன் தெரியுமா?`

`ஏன்?` என்று கேள்விக்குறியோடு எல்லோரும் ராமபிரானைப் பார்த்தார்கள். ராமன் நகைத்தவாறே சொல்லலானான்:

`ஏனென்றால் நீ வேறு நான் வேறு அல்ல. என் சிலைதான் உன்சிலை. நீதான் நான். உனக்கென்று தனிச்சிலை தேவையில்லை!` என்றவாறே புல்லரிப்புடன் நின்ற பரதனைக் கட்டித் தழுவி அணைத்துக் கொண்டான் ராமன். `பரதன் வாழ்க!` என்ற மக்களின் முழக்கம் விண்ணை எட்டியது.

19

ஒரு புல்லாங்குழலின் கதை!

பக்திப் பரவசம் விழிகளில் நீராய் வழிய ராமனையே பார்த்துக் கொண்டிருந்தாள் சபரி. தவத்திலும் ராம ஜபத்திலும் கடந்துபோன ஆண்டுகள் எத்தனை எத்தனை! இன்றுதான் தவத்தின் பயன் கிட்டியிருக்கிறது. இதோ தன் கண்ணெதிரே ராமன் தோன்றிவிட்டார்!

சபரியை ராமபிரானும் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான். கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய மூன்று அன்னையரின் மட்டற்ற பாசத்தில் வளர்ந்தவன் அல்லவா அவன்! அவன் சாப்பிட வரவில்லை என்றால் மூன்று தாய்மார்களும் சாப்பிடாமலே இரவு எந்நேரமானாலும் காத்திருப்பார்களே! அவர்கள் பொழிந்த பாச மழையில் திக்குமுக்காடிக் கொண்டிருந்தவனுக்கு இந்த வனவாசத்தில் இப்போது இல்லாமல் போனது அந்தத் தாய்ப்பாசம் தான்.

மற்ற எல்லாம் இல்லாது போனாலும் அவற்றைப் பற்றி மனம் அதிகம் ஏங்கவில்லை. ஆனால் தன் மேல் உயிரையே வைத்திருந்த அம்மாக்களைப் பிரிந்தது தான் இந்த வனவாசத்தின் மிகப்பெரும் துயரம்.

அந்தத் துயரத்தைத் தீர்க்க வந்த பெண்மணியா இந்த சபரி! இந்த மூதாட்டியின் விழிகளில் தான் எத்தனை பாசம்! எத்தனை கனிவு! அவன் கீழே விழுந்து சபரியை நமஸ்கரித்தான். லட்சுமணனும் நமஸ்கரித்தான்.

`தெய்வமே! நானல்லவோ உங்களை நமஸ்கரிக்க வேண்டும்!`

சபரி அவ்விருவரையும் வாரி அணைத்துக் கொண்டாள்.

ராமன் மனம் பூரிப்பில் நிறைந்தது. கோசலை ராமனைப் பெற்ற தாய். அவள் தன் சொந்த மகன் மேல் அன்பு செலுத்துவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. சீராட்டிப் பாராட்டிப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்த வளர்ப்புத் தாய்களான கைகேயியும் சுமித்திரையும் பாசம் செலுத்துவதிலும் கூட எந்த வியப்புமில்லை. ஆனால் சபரி செலுத்துகிற இந்த நெஞ்சுகொள்ளாத பாசம்! இதுநாள்வரை தன்னை ஒருமுறை கூடப் பார்த்தே இராத மூதாட்டி! ஆனால் கனவிலும் நனவிலும் தன்னையே நினைத்து வாழ்ந்து வருபவள். ராமன் சபரியின் அன்பை எண்ணித் திகைப்பில் ஆழ்ந்தான்.

அந்தக் கணத்தில் சபரி மதங்க மகரிஷியை நினைத்து மனத்தில் வணங்கிக் கொண்டாள். அவர் அல்லவோ அவளது குருநாதர்! இந்த ஆசிரமத்தில் ஒரு சாதராணப் பணியாளாக வந்தவளை ராம நாமத்தை உபதேசம் செய்து ராம பக்தையாக உருவாக்கிய பெருமை அவருக்குத்தான் உரியது அல்லவா?

அவரது தவச் சக்தி இந்த ஆசிரமமெங்கும் நிறைந்திருக்கிறது. அதனால் தான் ராமனுக்காகத் தான் கடித்துக் கடித்து ருசிபார்த்துத் தேர்ந்தெடுத்த கனிகளெல்லாம் இத்தனை ஆண்டுகள் ஆகியும் எந்த விதத்திலும் கெட்டுப்போகாமல் அப்படியே அன்றுதான் பறித்த கனிபோல் இருக்கின்றன!

மதங்க மகரிஷி சொர்க்கம் புகுந்த போது, சபரியும் தன் குருநாதருடன் உயிர்துறக்க விரும்பினாள். தடுத்தார் அவர். `உன்னைத் தேடி ஸ்ரீராமன் வருவான். அவனை தரிசித்து அதன் பின் நீ சொர்க்கத்திற்கு வா!`என்று கூறிவிட்டு விண்ணுலகம் ஏகினார்.

அன்றுமுதல் சபரியின் தவ வாழ்வு ராமநாமத்தை ஜபம் செய்வதாகவே அமைந்தது. என்று வருவாய் ராமா என்ற வினா அவள் உள்ளத்தில் எப்போதும் கேட்டுக் கொண்டே இருந்தது. ராமபிரான் உண்பதற்காக கனிகளைப் பறித்து வைத்துக் கொண்டு காத்திருந்தாள் அவள்.

எந்த மரத்தில் எந்தக் கனி பழுக்கிறது, அந்தக் கனியில் எந்தக் கனி அதிகச் சுவை நிறைந்தது என்பதையெல்லாம் அனுபவ அறிவால் அறிந்தாள். ஒவ்வொரு நாளும் கனிகளைத் தேடித் தேடிச் சேகரிப்பதும் அவற்றைக் கடித்துக் கடித்து ருசி பார்த்துத் தேர்ந்தெடுப்பதும் பின் அவற்றைச் சேமிப்பதுமாக அவள் காலம் கழிந்தது. கனிகள் ஏராளமாகச் சேர்ந்துவிட்டன. ஆனால் என் அப்பன் ராமன் இன்னும் வரக் காணோமே! அவள் ஆசிரம வாயிலைப் பார்த்துப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தாள்.

குருநாதர் மதங்க மகரிஷி உடன் இல்லாத வெறுமை அவளை வாட்டியது. எப்போர்ப்பட்ட மகான் அவர்! ஜாதி மத பேதங்களைப் பாராதவர். முக்தி எல்லோருக்கும் உரியது என்ற கருத்துடையவர். யார் தூய தவ வாழ்வு வாழ்ந்தாலும் சொர்க்கத்தை அடையலாம் என்ற மனப்போக்கு கொண்டவர். அவரே வியந்து கொண்டாடும் அந்த ராமபிரான் எப்படித்தான் இருப்பார்?

மதங்க மகரிஷி சொன்ன வர்ணனைகளைக் கேட்டுக் கேட்டு அவள் மனத்தில் ஒரு சித்திரத்தை வரைந்து வைத்திருந்தாள். நீலவண்ண மேனி. நீண்ட கைகள். தாமரை போன்ற விழிகள். அடியவர்கள் சரண் புகும் கமலப் பாதங்கள். ஸ்ரீராமா! உள்ளத்தில் தோன்றும் நீ என்று நேரில் வரப் போகிறாய் அப்பா?

அவள் கனவு அன்று பலித்தது. இதோ ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் தரிசனம் கிட்டி விட்டது. தெய்வமே நேரில் வந்த பின்னும் ஏன் பித்துப் பிடித்தாற்போல் தெய்வத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்! என் ராமனையும் லட்சுமணனையும் உபசரிக்க வேண்டாமா? கானகமெல்லாம் நடந்து நொந்திருக்குமே அந்தப் பாதங்கள். அவற்றின் வலி சற்றேனும் தீர அவர்களை ஆசனமிட்டு அமரச் சொல்ல வேண்டாமா? சபரி பரபரப்படைந்தாள்.

`உட்கார் ராமா உட்கார். என் கண்ணே! இந்தப் பாயில் அமர்ந்துகொள். லட்சுமணா! நீயும் உடன் அமர்ந்துகொள். எங்கெங்கோ அலைந்து திரிந்து வந்திருப்பீர்கள். உங்கள் பாதங்கள் நோகுமே?`

சபரி விரித்த பாயில் ராம லட்சுமணர்கள் அமர்ந்துகொண்டார்கள். லட்சுமணன் சபரி செலுத்தும் அன்பைக் கண்டு நெகிழ்ந்தான். `இவள் நம் நான்காவது தாய்!` என்று ராமன் லட்சுமணனிடம் சொன்னதைக் கேட்டு சபரியின் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

சபரி தான் சேகரித்து வைத்திருந்த எச்சில் கனிகளை ராமனுக்குக் கொடுத்தாள். அவற்றைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு வாயில் போட்டுக்கொண்டான் ராமபிரான்.

`ஏன் அண்ணா கனிகளைக் கண்ணில் ஒற்றிக் கொள்கிறீர்கள்?` என்று கேட்டான் லட்சுமணன்.

`சபரியின் எச்சில் கங்கையை விடவும் புனிதமானது லட்சுமணா! மூச்சுவிடுவதைப் போல் எப்போதும் ஓயாமல் அவள் சொல்லும் கடவுள் நாமம் அந்த எச்சிலில் தானே ஊறி ஊறிச் சொல்லப்படுகிறது! அதனால் தான் இந்தக் கனிகளைக் கண்ணில் ஒற்றிக் கொண்டேன்!`

`உண்மை தான் அண்ணா!` என்றவாறே லட்சுமணனும் கனிகளைக்

கண்ணில் ஒற்றிக் கொண்டு சாப்பிட்டான். ராமன் பேச்சையும் செய்கையையும் பார்த்த சபரி திடீரென மிகுந்த வருத்தமடைந்தாள்.

`தவறு செய்துவிட்டேன் ராமா! பெரிய தவறு செய்துவிட்டேன்.` அவள் கழிவிரக்கத்தோடு புலம்பினாள்.

`தாயே! தாங்கள் எந்தத் தவறும் செய்திருக்க வாய்ப்பில்லை. எதன் பொருட்டு இத்தனை துயரம் கொள்கிறீர்கள்?`

ராமன் பரிவு பொங்கக் கேட்டான்.

`நீ ராஜ வம்சத்தில் பிறந்த மன்னனல்லவா? தங்கத் தட்டில் நெய்ச்சோறு உண்ணும் உனக்கு இந்த எளிய கனிகளை நான் தந்து உபசரித்ததே அதிகப் பிரசங்கித் தனமானது. அது போகட்டும். என் அன்பின் மிகுதியால் நல்ல கனிகளாக உனக்குத் தர வேண்டும் என்று அவற்றைக் கடித்து எச்சில் படுத்திக் கொடுத்தேனே! இந்தச் செயலை நான் செய்திருக்கக் கூடாது ராமா! என் தெய்வம் நீ! உனக்கு நான் அளிக்கும் கனிகள் நிவேதனப் பொருள்கள். தெய்வத்திற்கு எச்சில் பொருளையா படைப்பார்கள்? நான் என்ன செய்வேன்! உன் மேல் கொண்ட பாசம் என் அறிவுக் கண்ணை மறைத்துவிட்டது. பின்னாளில் எல்லோரும் ராமபிரானுக்குச் சபரி எச்சில் கனி தந்தாள் என்று என்னை ஏளனம் செய்யும் செயலைச் செய்துவிட்டேனே?`

சபரியின் விழிகளில் துயரத்தால் விளைந்த கண்ணீர் பெருகியது. ராமபிரான் தன் திருக்கரங்களால் அந்தக் கண்ணீரைத் துடைத்தான்.

`தாயே! அதையெல்லாம் யோசிக்க இயலாத அளவு தாங்கள் என்மேல் பாசம் கொண்டுவிட்டீர்கள். தங்களின் உதட்டிலிருந்து இந்தக் கனிகளில் பட்டிருப்பது எச்சில் அல்ல தாயே. அதுவே அமிர்தம். இந்தக் கனிகளில் ஒட்டியிருக்கும் அந்த அமிர்தம் தான் என்னை எந்நாளும் வாழவைக்கப் போகிறது. பக்தர்களின் பக்தியால் தானே ஆண்டவனின் ஆயுள் வளர்கிறது! தங்களுக்கு என்ன வரம் வேண்டும் தாயே?`

சபரி நெகிழ்ச்சியுடன் பேசினாள்.

`வரமா! எனக்கு உன் தரிசனத்தைத் தவிர வேறு என்ன வரம் வேண்டும்? அதுவே கிட்டிவிட்டது. மறுஜன்மத்திலும் உன்னைப் பார்த்துக் கொண்டே இருக்கும் வரத்தைக் கொடு. அதுபோதும் எனக்கு!`

அவளது வரத்தைக் கேட்டு லட்சுமணன் உள்ளம் உருகியது. ஏதையும் எதிர்பாராமல் ராம தரிசனத்தையே வரமாகக் கேட்கும் இந்த மூதாட்டியின் பக்திமனம் எல்லோரையும் விஞ்சி விட்டதே!

ராமன் நகைத்தவாறே சொன்னான்:

`நீ கேட்டபடியே ஆகட்டும் தாயே! நான் அடுத்த அவதாரத்தில் கண்ணனாகப் பிறப்பேன். இப்போது பக்தியுடன் எனக்கு எச்சில் கனி தந்த நீ புல்லாங்குழலாகப் பிறப்பாய். அப்போது என் வாய் எச்சில் உன்மேல் பட்டுக் கொண்டே இருக்கும். பக்தி கலந்த உன் ஸ்பரிசத்தால், என் எச்சில் கலந்த மூச்சுக் காற்று ஆனந்தமான கீதத்தை இசைக்கும். அந்தப் பாடலெல்லாம் மறைமுகமாக உன் பக்தியின் பெருமையையே பறைசாற்றிக் கொண்டிருக்கும். பக்தனாகிய ஜீவாத்மாவும் பரம்பொருளாகிய பரமாத்மாவும் கொள்ளும் புனித உறவில் எந்த பேதத்திற்கும் இடமில்லை என்பதை மக்கள் உணரட்டும்!`

ராமபிரானின் கரம் மூதாட்டி சபரியின் தலையைப் பாசத்தோடு தடவியது.



20

சீதை படைத்த மெழுகுபொம்மை!

தன் முன் பணிவோடு வணங்கி நின்ற சீதையையே பார்த்துக் கொண்டிருந்தாள் சீதை!

தான் மானிட அவதாரத்தில் இருந்தாலும் தெய்வம் என்பதைத் தானே உணரும் நேரங்கள் எப்போதேனும் சீதைக்கு நேர்வதுண்டு. தேவர்கள் தங்களின் நோக்கமான ராவண வதம் நிறைவேறும் பொருட்டு அத்தகைய நினைவு ஏற்படுமாறு பிரார்த்திக்கிறார்கள் போலும்.

சில கணங்கள் முன்னால் சீதைக்குத் தன் தெய்வீக ஆற்றலைப் பயன்படுத்தி ஒரு செயல் செய்ய வேண்டும் என்று தோன்றியது. ஸ்ரீராமன் பொன்மானைத் தேடிக் கானகத்தின் உள்ளே சென்றிருக்கிறார். மைத்துனன் லட்சுமணனோ ஆசிரம வாயிலில் காவலுக்கு நிற்கிறான்.

`சீதா! லட்சுமணா!` என்று ராமனது குரலைப் போலத் தன் குரலை மாற்றி, மாரீச மான் கத்திய ஒலி அந்த ஆசிரமப் பகுதியில் எதிரொலித்தது.

சீதை, `லட்சுமணா, உன் அண்ணாவைத் தேடிச்செல். அவர் ஆபத்தில் சிக்கியிருக்கிறார்!` என்று அறிவுறுத்தினாள். லட்சுமணனோ அண்ணாவை யாராலும் வெல்ல இயலாது, இது அரக்கர்களின் வேலை என்று திடமாகத் தெரிவித்துவிட்டான். அண்ணியைக் காப்பாற்ற வேண்டியது அண்ணா தனக்கிட்ட நிரந்தரப் பணி என்றும் அண்ணியைத் தனியே விட்டுவிட்டுத் தான் செல்ல இயலாதென்றும்

திட்டவட்டமாகக் கூறிவிட்டான். இப்போது என்ன செய்வது?

சீதை மௌனமாக ஆசிரமத்தின் உள்ளே வந்தாள். வாயில் கதவைத் தாழிட்டாள். சாளரத்தையும் மூடினாள். பின் தன் தெய்வீக ஆற்றலைப் பயன்படுத்தி அச்சு அசல் தன்னைப் போலவே அமைந்த மெழுகு பொம்மை ஒன்றைத் தோற்றுவித்தாள். பின் அதற்கு உயிர் கொடுத்தாள். தன் கடந்த கால நினைவுகள் அனைத்தும் அந்த மெழுகு பொம்மையின் உள்ளத்தில் பதியுமாறு செய்தாள்.

. உயிர்பெற்ற பொம்மை எழுந்து நடந்துவந்து, சீதையின் காலில் விழுந்து வணங்கியது.

`தாயே! எதன் பொருட்டு என்னை உற்பத்தி செய்தீர்கள்? தாங்கள் எனக்கு இடும் பணி என்ன?`

சீதை அதன் குரலைக் கேட்டு வியந்தாள். குரலும் கூட சீதையின் குரல் போலவே அப்படியே இருந்தது.

`அன்பான மெழுகு பொம்மையே! நீ மெழுகு பொம்மை என்பதை உன்னையும் என்னையும் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்கள். நான் ஒரு காரணத்தின் பொருட்டாகவே உன்னைப் படைத்தேன். ராவண வதம் நடைபெற்றாக வேண்டும். பொன்மானைத் தேடி ஸ்ரீராமர் போயிருக்கிறார். ராவணன் இங்கு வந்து என்னை எடுத்துச் செல்ல முனைவான். அப்போது லட்சுமணன் இங்கிருப்பது சரியல்ல. இங்கே என் மைத்துனன் இருந்தால் ராவணன் என்னைத் தூக்கிச் செல்ல முயலமாட்டான். லட்சுமணனின் வீரதீரப் பிரதாபங்களை சூர்ப்பணகை ராவணனிடம் தெரிவித்திருப்பாள். இந்த சந்தர்ப்பத்தை விட்டுவிட்டால், ராவணன் என்னைத் தூக்கிச் செல்லும் வகையில் தனியாக நான் இருக்கும் சந்தர்ப்பமே நேராது. என்னை ராவணன் தூக்கிச் சென்றால் தான் ராவணனை அழிப்பதற்கு ராமபிரானுக்கு ஒரு காரணம் கிட்டும்.`

`அப்படியானால் லட்சுமணனைத் தாங்கள் எவ்விதம் ராமபிரானைத் தேடிக் கானகம் செல்லுமாறு அனுப்புவீர்கள் அம்மா?`

`அதை நான் செய்யமாட்டேன். நீதான் செய்ய வேண்டும். அதுதான் உனக்கிடப்படும் முதல் பணி. பின்னர் இலங்கையில் ராவண வதம் முடியும் வரை நீ அசோகவனத்தில் சிறையிருப்பாய். ராவணனை வென்ற பின்னர் உன்னைப் பார்த்த ராமபிரான் நீ நானல்ல என்பதை ஒரு பார்வையில் உணர்ந்துவிடுவார். உன்னை அக்கினிப் பிரவேசம் செய்யச் சொல்வார். நீ மெழுகு பொம்மை. அக்கினியில் நீ உருகிக் கரைந்த பின், நெருப்பிலிருந்து நான் வெளிப்படுவேன். இதுவே என் திட்டம்.`

`அப்படியே ஆகட்டும் அம்மா. ஆனால் ராவணன் தூக்கிச்

செல்வதற்கும் முன்பாக லட்சுமணனைக் கானகத்திற்குள் அனுப்ப வேண்டும் என்றும் அதையும் நான் தான் செய்ய வேண்டும் என்றும் சொன்னீர்களே? அதை எப்படி நிறைவேற்றுவது?`

சீதை ஒரு பெருமூச்சோடு சொல்லலானாள்:

`சொல்லத்தகாத வார்த்தைகளை லட்சுமணனை நோக்கிச் சொல்லவேண்டும். அவன் என் மகன்போன்றவன் பதுமையே! அவன் என்மீது ஆசைப்படுவதாக நீ சொல்ல வேண்டும். ஒரு மகனைப் பார்த்து ஒரு தாய் அத்தகைய வார்த்தைகளைச் சொல்லலாமா? என்னை இந்தக் கானகத்தில் பாதுகாத்து வரும் என் மகனின் மனத்தை நோகவைக்கும் வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்பவில்லை. அதனால் தான் உன்னை முன்கூட்டியே படைத்தேன். உண்மையில் லட்சுமணனைக் கானகத்திற்கு அனுப்பிய பின் உன்னை நான் படைத்திருந்தாலும் போதுமானது. ஆனால் என் அன்புமகன் குறித்த அபவாதத்தை நான் பேச விரும்பவில்லை.`

`தாங்கள் பேச விரும்பாததை நான் பேசவேண்டும் என்கிறீர்களே அம்மா?`

`ஆம். என்ன செய்வது? நீ பதுமை. இட்ட பணியை நிறைவேற்றி விடுவாய். நீ பதுமையே ஆயினும் நீ சொல்லும் சொற்கள் கொடும் சொற்கள். அதற்குரிய தண்டனையை நீ அனுபவிக்க வேண்டும். அது இயற்கை விதி. எனவேதான் அந்தச் சொற்களுக்குத் தண்டனையாக நீ நெருப்பில் கரையப் போகிறாய்.`

`தங்கள் சித்தம் தாயே! ஆனால் இரண்டு சீதைகள் இருப்பது எப்படி?`

`நீ தான் இருப்பாய். நான் விண்ணுலகம் சென்றுவிடுவேன். நீ அக்கினியில் கரைந்தபின் நான் விண்ணுலகிலிருந்து மறுபடி மண்ணுலகம் வந்து நெருப்பிலிருந்து வெளிப்படுவேன். முதலில் குழந்தையாய் மண்ணில் தோன்றினேன். இப்போது இள வயதினளாய் நெருப்பிலிருந்து தோன்றுவேன்.`

`தாங்கள் எப்போது வைகுந்தம் செல்வீர்கள் அம்மா?`

`இதோ இப்போதே. அதற்குள் நீ நான் சொன்னபடி சரியாகப் பணிபுரிகிறாயா என்று சரிபார்க்க வேண்டியிருக்கிறது!`

மெழுகு பொம்மையுடன் சீதை பேசிக் கொண்டிருக்கும் வேளையில் ஆசிரம வாயில் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. சீதாதேவி வாயிற்கதவைத் திறக்காமல் சாளரக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள். அங்கே லட்சுமணன் நின்று கொண்டிருந்தான்.

`அண்ணி! உள்ளே ஏதோ பேச்சுக்குரல் கேட்டாற்போல் இருந்தது. தாங்கள் நலமாகத் தானே இருக்கிறீர்கள்? அதை அறியவே கதவைத் தட்டினேன்?`

லட்சுமணன் சொன்ன வாக்கியங்களைக் கேட்ட சீதை ஏதொன்றும் பேசாமல் சாளரக் கதவை மூடினாள். மெழுகு சீதையிடம் நீ பேசு என்று கையசைத்தாள். மெழுகுப் பதுமை சீதாதேவியை வணங்கி, தனக்கிட்ட முதல் பணியைச் செய்யத் தொடங்கியது.

`லட்சுமணா! உன்னிடம் கொண்ட அச்சத்தால் தான் ஆசிரமக் கதவை மூடிக் கொண்டேன். அதனால் தான் சாளரக் கதவையும் மூடிக் கொண்டேன். நான் நினைத்தது சரியாகவே இருக்கிறது. நீ தனித்திருக்கும் என்னைத் தொந்தரவு செய்யும் நோக்கில் ஆசிரமக் கதவைத் தட்டித் திறக்கச் சொல்வாய் என்று எதிர்பார்த்தேன். நான் நினைத்தபடியே தான் நீ நடந்துகொள்கிறாய்.`

`அண்ணீ! நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று புரியவில்லையே?`

`எப்படிப் புரியும் லட்சுமணா? காமம் உன் கண்ணை மறைக்கும்போது என் வார்த்தைகள் புரிய வாய்ப்பில்லை அல்லவா? உன் தாய்க்கு இணையான என்மேல் நாட்டம் கொள்ளலாமா?`

லட்சுமணன் காதைப் பொத்திக் கொண்டான்.

`என்ன வார்த்தை பேசுகிறீர்கள் அண்ணி?`

`பேசாமல் என்ன செய்ய? உன் உள்மனத் தந்திரங்களை இப்போதுதானே உணர்ந்துகொண்டேன். நான் ராமபிரானுடன் வந்தது மாதிரி உன் மனைவி ஊர்மிளையையும் உன்னுடன் வரச்சொல்ல வேண்டியதுதானே? ஆனால் அவள் வந்தால் உன் திட்டத்திற்குத் தடையாக இருப்பாள் என்று தானே அவளை வரவேண்டாம் என்று சொல்லியிருக்கிறாய்? இதெல்லாம் இப்போதுதானே புரிகிறது எனக்கு?`

`கடவுளே! அண்ணி! உங்களுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?`

`பைத்தியம் பிடித்திருப்பது எனக்கல்ல லட்சுமணா! உனக்கு! ஆம். உனக்குத்தான் என் மேல் பைத்தியம் பிடித்திருக்கிறது. மிதிலையில் என்னைப் பார்த்தவுடனேயே நீ என்மேல் ஆசை கொண்டிருக்க வேண்டும். என்ன செய்ய? விஸ்வாமித்திரர் முதலில் உன் அண்ணனை வில்லை வளைக்கச் சொல்லிவிட்டார். ஸ்ரீராமரும் வில்லை வளைத்து எனக்கு மாலையிட்டுவிட்டார். உன் எண்ணம் நிறைவேற எத்தனை நாட்கள் பொறுமையுடன் காத்திருந்திருக்கிறாய் நீ? உன் எண்ணம் நிறைவேறும் என்று மட்டும் நினைக்காதே. நீ என்னை நெருங்கினால் நான் உயிரை விட்டுவிடுவேன்.`

`அண்ணி! முட்டாள்தனமாக ஏதேதோ பேசுகிறீர்கள்! ராமண்ணா வரத் தாமதம் ஆவது உங்களைப் பேதலிக்கச் செய்துவிட்டது போலிருக்கிறது!`

`உன் ராமண்ணா இனி எங்கே வரப்போகிறார்? அவர் வரக்கூடாது என்பதுதானே உன் திட்டம்? சீதா லட்சுமணா என்று அவர் அலறிய குரலைக் கேட்டும் காதில் அது விழாததுபோல் நிற்கிறாயே நீ?`

`அண்ணி! என் அண்ணாவை உலகில் யாரும் வெல்ல இயலாது. தேவையில்லாத குழப்பத்தில் ஆழாதீர்கள். இது ஏதோ ராட்சஸர்களின் மாய வேலை. சற்றுப் பொறுங்கள். அண்ணா நம்மைத் தேடி வந்துகொண்டிருப்பார்.`

`என் மனம் எந்த அளவு பதைபதைக்கிறது என்பதை நீ அறியமாட்டாய்! லட்சுமணா. இப்போது நீ உன் அண்ணாவைக் காப்பாற்றப் போகப் போகிறாயா இல்லையா? ஒருகணம் நீ தாமதித்தாலும் நான் இப்போதே இந்த ஆசிரமத்தின் உள்ளேயே நெருப்பு மூட்டி அதில் விழுந்து இறந்துவிடுவேன். என்னை அடையலாம் என்று மட்டும் கனவு காணாதே!`

லட்சுமணன் திகைத்தான். இப்போது என்னதான் செய்வது? அண்ணியின் மனம் பேதலித்துவிட்டது. அண்ணாவுக்கு ஆபத்து என்று தவறாக அண்ணி கருதிக்கொண்டிருக்கிறார். நான் இங்கே இருக்க இருக்க அண்ணியின் வேதனை அதிகம்தான் ஆகும். ஒருவேளை தான் சொன்னபடி நெருப்பு மூட்டி அதில் விழுந்துவிட்டால்? கடவுளே! ராட்சஸர்கள் நடமாடும் இடம் அல்லவா இது? அண்ணியை எப்படித் தனியாக விட்டுச் செல்வது?

வேறுவழியில்லை. நான் உடனடியாக ராமண்ணாவைத் தேடிப் போகாவிட்டால் சிக்கல் நேரும். ஒரு கோட்டை வரைவோம். இந்தக் கோட்டைத் தாண்டி வெளியே வரக்கூடாது என்று அண்ணியிடம் சொல்வோம். இந்தக் கோட்டிற்குள் அரக்கர்கள் நெருங்காதவாறு மந்திரங்களால் வேலி அமைப்போம்.

லட்சுமணன் விறுவிறுவென்று கையிலிருந்த அம்பினால் ஒரு நீண்ட கோட்டை வரைந்தான்.

`அண்ணி! கதவைத் திறந்து சற்று வெளியே வாருங்கள்.`

`நான் வரமாட்டேன். உன் அண்ணா வந்தால் தான் வருவேன்.`

`நல்லது. என் அண்ணாவோடு விரைவில் திரும்புவேன். அண்ணீ! இங்கே உங்களைப் பாதுகாக்க ஒரு கோடு வரைந்திருக்கிறேன். கோட்டைத் தாண்டி நீங்கள் வெளியே வரக் கூடாது. இதை மட்டும் மறக்காமல் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். யார் வந்தாலும்

கோட்டைத் தாண்டி விடாதீர்கள். எந்த அரக்கனும் இந்தக் கோட்டைத் தாண்டி உள்ளே வர முடியாது. உங்கள் மனம் குழம்பியிருக்கிறது. அரக்கர்கள் பல்வேறு மாறுவேஷங்களில் வருவார்கள். யாரையும் நம்பாதீர்கள்.`

`பேசிக்கொண்டே நிற்கிறாயே லட்சுமணா? உடனே உன் அண்ணாவைத் தேடிச் செல். அவரைக் காப்பாற்று!`

`அவரை நான் காப்பாற்றவாவது! அவரல்லவா எல்லோரையும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்? நல்லது அண்ணி. உங்கள் சித்தப்படியே ஆகட்டும். நான் கானகத்தின் உள்ளே செல்கிறேன். வரும்போது அண்ணாவோடு வருவேன். கோட்டைத் தாண்டாதீர்கள். எச்சரிக்கையாக இருங்கள்.`

சாளரத்தை லேசாய்த் திறந்த சீதை லட்சுமணன் வேகவேகமாகக் கானகத்தினுள் செல்வதைப் பார்த்தாள். மெழுகுபொம்மை மீண்டும் சீதாதேவியைப் பணிந்தது.

`தாங்கள் சொன்னபடி நான் சரியாக நடந்துகொண்டேனா அம்மா?`

`சரியாகத் தான் நடந்துகொண்டாய்!`

சீதாதேவி கலங்கிய விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

`ஏனம்மா கண் கலங்குகிறீர்கள்?` பதுமை கேட்டது.

`உத்தமமான பிள்ளை இந்த லட்சுமணன். சுமித்ராதேவி செய்த தவப்பயனால் பிறந்த மகன். என் மேல் உயிரையே வைத்திருக்கிறான். அவனுக்கு அவன் தாயார் சுமித்திரை கூட முக்கியமல்ல. நானே அவனது தாய் என்று நினைப்பவன். என் பாதங்களை நாள் தோறும் மனத்தில் எண்ணிப் பூஜிப்பவன். என் பாதங்களைத் தவிர என் முகத்தைக் கூட ஏறெடுத்தும் பாராதவன். கொலுசைத் தவிர நான் வேறு என்ன அணிகலன் அணிந்திருக்கிறேன் என்பது கூட அவனுக்குத் தெரியாது. அப்படிப்பட்டவன் இன்று என்னென்ன வார்த்தையையெல்லாம் கேட்டுக் கலங்குகிறான்? இதை நினைத்தேன். என் கண்ணில் கண்ணீர் வழிகிறது.`

`இது கண்ணீர் விட வேண்டிய தருணம் அல்ல தாயே! ராவணன் வருவதற்குள் தாங்கள் வைகுண்டம் செல்ல வேண்டும்!`

சீதை ஒரு பெருமூச்சோடு சொன்னாள்.

`பதுமையே! இந்த அநாகரிகமான வாக்கியங்களை நீ சொன்னாய் அல்லவா? அதன் பொருட்டு உனக்கு அக்னிப் பிரவேச தண்டனை கிட்டிவிடும். ஆனால் இப்படிச் சொல்லச் செய்தவள் நான் அல்லவா? கருவியை விடக் கர்த்தாவுக்குத்தானே அதிக தண்டனை தரப்படும்?

எனக்கு என்ன தண்டனை காத்திருக்கிறதோ? இந்த வனவாசம் போதாது என்று தன்னந்தனியாக இன்னொரு வனவாசம் நான் அனுபவிக்க வேண்டி வருமோ என்னவோ? நல்லது. எச்சரிக்கையாக இரு. மறக்காமல் லட்சுமணன் கிழித்த கோட்டைத் தாண்டு. இல்லாவிட்டால் ராவணனால் உன்னை எடுத்துச் செல்ல இயலாது. என் மைத்துனன் மாவீரன். அவன் போட்ட கோடும் அவன் வீரத்தின் அடையாளம் தான்.`

`எல்லாம் தங்கள் சித்தப்படியே நடக்கும் அம்மா!`

மெழுகு பொம்மையின் தலையில் கைவைத்து ஆசீர்வதித்த சீதை விண்ணில் கலந்து மறைந்தாள். மெழுகுபொம்மை ராவணனை வரவேற்கத் தயாரானது.



21

வடிவம் ஒன்று, வார்த்தை வேறு!

அசோக வனத்தில் துயரமே உருவாக அமர்ந்திருந்த சீதாதேவி, தன்னைச் சுற்றி அரக்கிகள் பேசும் பேச்சுகளை வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள். திரிஜடை சீதாப்பிராட்டியை ஆதரவுப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஓர் அரக்கி இன்னோர் அரக்கியிடம் சொன்ன பேச்சைக் கேட்டு அந்தத் துயரச் சூழலிலும், சீதையின் முகத்தில் மெல்லிய முறுவல் படர்ந்தது. ஐந்து கண்களையும் மூன்று கைகளையும் உடைய் அந்த அரக்கி சொன்னாள்:

`நம் மன்னர் என்ன அழகைக் கண்டு இந்த மானுடப் பெண்ணிடம் காதல் கொண்டாரோ? நாமெல்லாம் முறம்போல ஒரு காது, சின்னதாய் இன்னொரு காது, குட்டையும் நெட்டையுமாய்ப் பலவிதக் கைகள், பல்வேறு அளவுகளில் இரண்டு மூன்று மூக்குகள் இப்படியெல்லாம் இருக்கிறோம். நம்மை, நம்மிடம் உள்ள அவயவங்களின் வித்தியாசத் தன்மை காரணமாக உற்று உற்று மீண்டும் மீண்டும் பார்த்து ரசிக்க முடியும். இவளைப் பார். ஒரு கண்ணைப் போலவே தான் இன்னொரு கண் இருக்கிறது. இரண்டு காதுகளும் ஒன்று போலவே இருக்கின்றன. கைகள் கூட அதிக எண்ணிக்கையில் இல்லை. ஒரே மாதிரியான இரண்டு கைகள் தான். இவளைப்போய்ப் பேரழகி என்றால் எப்படி?`

அவளது பேச்சை மற்ற அரக்கிகள் அவளை ஆமோதித்தார்கள்! அதற்குள் ஓர் அரக்கி சீதை தன்

பேச்சைக் கேட்கிறாளா என்று ஓரக்கண்ணால் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் பிறகு பக்கத்திலிருந்தவளிடம் பேசத் தொடங்கினாள். அவள் தன் காதில் விழவேண்டும் என்று தான் ஏதோ பேசுகிறாள் என்பதைப் புரிந்துகொண்ட சீதை, தன் காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

`இந்த சீதைக்குத் தந்தை ஒருவன் இருக்கிறானாம். ஜனகன் என்பது அவன் பெயராம். மிதிலையை அரசாளும் மன்னனாம் அவன். நம் ராவண மகாராஜா நேற்று மிதிலைக்குப் போய் ஜனகனைப் போரில் வென்று விட்டாராம். வரும்போது ஜனகனையும் கைகால்களில் விலங்கிட்டு அழைத்து வந்திருக்கிறாராம்!`

சீதை திடுக்கிட்டவளாய் அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள். பேச்சு மேலும் தொடர்ந்தது. கைநிறைய வெற்றிலையையும் பாக்கையும் எடுத்து வாயிலிட்டு மாவு அரைப்பதுபோல் அரைத்துக் கொண்டிருந்த இன்னோர் அரக்கி முன்னவளிடம் கேட்டாள்.

`இவள் அப்பன் ஜனகனை எதற்கு இங்கே அழைத்து வந்திருக்கிறார்களாம்?`

`அந்த ஜனகனை விட்டு இவளுக்கு நல்ல புத்தி சொல்வதற்குத் தான். ராவண ராஜா சொல்லித்தான் கேட்கவில்லை. தன் அப்பா சொன்னாலாவது இவள் ராவணேஸ்வரரைத் திருமணம் செய்துகொள்ளச் சம்மதிப்பாளா என்று பார்க்கத்தான் ஜனகன் இங்கே வரவிருக்கிறான்.`

சீதை திகைப்புடன் திரிஜடையைப் பார்த்தாள். தணிவான குரலில் கேட்டாள்:

`திரிஜடா! இந்த அரக்கிகள் சொல்வதெல்லாம் உண்மையாக இருக்குமா?`

சற்று நேரம் அமைதி காத்த திரிஜடை பின் மெல்லச் சொன்னாள்:

`அம்மா! இந்தச் செய்தி உண்மையா பொய்யா என்று எனக்குத் தெரியவில்லை. நான் இதுபற்றிக் கேள்விப்படவில்லை. ஆனால் என் பெரியப்பா ராவணேஸ்வரர் ஒரே இரவுக்குள் மிதிலை சென்றுவரக் கூடிய ஆற்றல் உடையவர் தான். அத்தகைய புஷ்பக விமானம் ஒன்று அவரிடம் உள்ளது. அதில் ஏறினால் எந்த இடத்திற்கும் மிக வேகமாகப் போய்வர முடியும்.`

`அப்படியானால் நேற்றிரவு உன் பெரியப்பா மிதிலை சென்று வந்திருக்க வாய்ப்பிருக்கிறது என்கிறாயா?`

`தெரியவில்லையே அம்மா! அவர் பல நாடுகளுக்கு அடிக்கடி திக்விஜயம் செய்வார். அந்த நாடுகளின் செல்வத்தையெல்லாம் கொள்ளை அடிப்பார். இலங்கையின் செல்வம் முழுவதும் பிற

நாட்டினரிடமிருந்து அபகரித்துச் சேர்த்தவை தான் அம்மா. மிதிலைக்குச் சென்று அவர் உங்கள் தந்தையைச் சிறைப்பிடித்தாரா இல்லையா என்பது இன்னும் சற்று நேரத்தில் தெரிந்துவிடும்.`

திரிஜடையின் பதிலைக் கேட்ட சீதை, திகிலுடன் காத்திருந்தாள். ஆனால் அப்படி ராவணன் மிதிலைக்குச் சென்றாலும் தன் தந்தை, ராவணனிடம் தோற்றிருக்க வாய்ப்பில்லை என்றே அவளுக்குத் தோன்றியது.

அதற்குள் பரிவாரங்களுடன் ராவணன் வரும் சப்தம் கேட்டது. மேனகை வெற்றிலைப் பெட்டியை ஏந்திவர, ரம்பை திலோத்தமை போன்றவர்கள் சாமரம் வீசிவர, மாலை மங்கின வேளையில் ராவணன் சீதையைத் தேடிவந்தான். அவனைச் சுற்றியிருந்தவர்கள் எல்லாம் ஓர் எல்லையில் தங்கிவிட சீதாதேவியைக் காவல் காத்துக் கொணடிருந்த அரக்கிகளும் விலகி வழிவிட்டுத் தள்ளி நிற்க ராவணன் சீதையை நோக்கி வந்தான்.

இரண்டு படை வீரர்கள் கூடவே விலங்கிட்டுக் கட்டப்பட்ட ஓர் உருவத்தை இழுத்துக் கொண்டு வந்தார்கள். அந்த உருவத்துக்கு உரியவரைப் பார்த்து சீதை அதிர்ச்சி அடைந்தாள். அரக்கிகள் சொன்னதுபோல அது ஜனகரே தான்.

`தந்தையே! என்ன ஆயிற்று உங்கள் வீரம்? இந்த ராவணனால் கட்டப்படும் நிலை உங்களுக்கு ஏன் நேர்ந்தது? மிதிலை மன்னருக்கு ஓர் உதவி தேவை என்றால் என் மைத்துனர்கள் பரதனும் சத்துருக்கனனும் ஓடோடி வந்திருப்பார்களே? நீங்கள் ஏன் அவர்களை உதவிக்கு அழைக்கவில்லை?`

சீதை கண்ணீர் விட்டுக் கதறி அழுதவாறே மயங்கிக் கீழே விழுந்தாள். ராட்சசிகள் அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து அவளது மயக்கத்தைத் தெளிவித்தார்கள்.

`அன்பே சீதா! நீ ஏன் மயங்குகிறாய்? உன் தந்தையை நான் ஒன்றும் செய்யமாட்டேன். அவர் உனக்குப் பயன்படக் கூடிய அறிவுரையைச் சொல்லப் போகிறார். அதற்காகத்தான் அவரை இங்கு கூட்டி வந்தேன். அவரது அறிவுரைப்படி நடப்பதாக நீ சொல். உடனடியாக உன் தந்தையை விடுதலை செய்துவிடலாம். நானும் நீயும் திருமணம் செய்துகொண்டு ஆனந்தமாக வாழலாம்.

சீதாதேவி திகைப்புடன் தன் தந்தையைப் பார்த்தாள். ஜனகர் பேசலானார்:

`சீதா! ராவணேஸ்வரரை மணம் புரிந்துகொள்ள ஏன் தயங்குகிறாய்?

ஈரேழு பதினான்கு உலகங்களையும் வென்று இலங்கையின் மாமன்னனாகத் திகழும் ராவணேஸ்வரர் எங்கே? கேவலம் காட்டில் சுற்றித் திரியும் உன் கணவன் ராமன் எங்கே? ராமன் எதிர்காலத்தில் அயோத்தியின் மன்னனாவான் என்றல்லவோ உன்னை அவனுக்கு மணம் செய்துகொடுத்தேன்? தர்மம் நியாயம் என்று வாழ்க்கைக்கு உதவாத ஏதேதோ பைத்தியக்காரத்தனமான சித்தாந்தங்களைப் பேசிக்கொண்டு அவன் தன் நாட்டைத் தம்பியிடம் கொடுத்துவிட்டுக் கோழைபோல் காட்டுக்கு வந்திருக்கிறான். அவனுடன் இணைந்து இத்தனை காலம் வாழ்ந்ததால் நீ பெற்ற பயன் என்ன? கல்லிலும் முள்ளிலும் நடக்கும் கானக வாழ்க்கைக்காகவா அவனுக்கு உன்னை நான் திருமணம் செய்துகொடுத்தேன்? இதோ மூவுலகையும் வெற்றி கண்டுள்ள ராவணேஸ்வரரை நீ திருமணம் செய்துகொள். சந்தோஷமாக நீ வாழ்வாய். நீ இவரைத் திருமணம் செய்துகொண்டால் என் விடுதலையும் உறுதி. யோசித்து நடந்துகொள். தேவையற்ற பந்தங்களை அறுத்துக் கொண்டால் தான் எதிர்காலத்தில் நாம் விரும்பிய நல் வாழ்க்கையை அடைய முடியும். காலச் சூழலுக்கு ஏற்றவாறு வாழ்க்கையை மாற்றிக் கொள்பவர்களே புத்திசாலிகள்.`

சற்றுநேரம் ஜனகரையே உற்றுப் பார்த்த சீதாதேவி திடீரென்று உரத்த குரலெடுத்து நகைத்தாள். பின்னர் ஜனகரை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்த பிறகு ராவணனிடம் பேசலானாள்:

`மிதிலையில் என் சுயம்வரம் நடந்தது ஞாபகமிருக்கிறதா ராவணா? என் சுயம்வரத்தில் நிபந்தனைப் பொருளாக வைக்கப்பட்ட வில்லைத் தரையை விட்டுத் தூக்கக் கூட முடியாமல் கீழே போட்டுவிட்டு ஓடியவன் தானே நீ? என் தந்தையைப் போன்ற ஒரு மாய உருவை சிருஷ்டித்துக் கொண்டுவந்து என்முன் நிறுத்தி என் தந்தை என்கிறாயே? என்ன தைரியம் உனக்கு? இப்படி நீ என் மனத்தைச் சித்திரவதைப் படுத்தியது என் கணவருக்குத் தெரிந்தால் உன் பத்துத் தலைகளில் ஒரு தலை கூட உனக்கு மிச்சமிருக்காது. ஜாக்கிரதை.`

ராவணன் திகைத்தான். அதற்குள் சீதையின் கோபாவேசச் சொற்களைக் கேட்டுப் பதறிய ஜனகன் உருவம் மெல்ல மறைந்து ஜனகன் வடிவில் மாறி நின்ற மருத்தன் என்ற அரக்கனின் உருவம் தோன்றியது.

அவனைப் பார்த்து ராவணன் திட்டத் தொடங்கினான்.

`முட்டனே! மாரீசனும் நீயும்தான் யாரைப் போல வேண்டுமானாலும் மாறும் ஆற்றல் பெற்றவர்கள். மாரீசன் ராமன் விட்ட அம்பால் கொல்லப்பட்டுவிட்டான். எனவே நீ கச்சிதமாக ஜனகன் உருவை எடுப்பாய் என்று நம்பி உன்னை அவ்வித உரு எடுக்கச் சொன்னேன்.

ஆனால் சரிவர உரு எடுக்காமல் சீதையின் கண்களில் நீ வேறு ஆள் என அறிவுறுத்திவிட்டாயே? இதுதானா உன் உருமாறும் ஆற்றலின் லட்சணம்?`

`இல்லை பிரபோ. நான் முழுமையாகத் தான் உரு மாறினேன். ஆனால் சீதை எவ்விதம் கண்டுபிடித்தாள் எனத் தெரியவில்லை.`

இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சீதை கலகலவென நகைத்தாள்.

`உரு மாறியதெல்லாம் முழுக்க முழுக்க அப்படியேதான் இருந்தது. ஆனால் வாயிலிருந்து வந்த சொற்கள் தான் ஜனகரல்ல என்பதைத் தெளிவுபடுத்தின. கைவிலங்கிட்டால் மட்டுமல்ல, உயிரே போனாலும் கூட அதர்ம நெறியை அறிவுறுத்த மாட்டார் என் தந்தை. அப்படியிருக்க அதர்ம வழியில் செல் என அவர் அறிவுறுத்தியபோதே அது அவரல்ல என்பதை நான் கண்டுகொண்டேன்.`

`சரிதான். நாளை உன்னை வேறுவிதத்தில் சம்மதிக்க வைக்கிறேன்!`

உறுமியவாறே ராவணன் அந்த இடத்தை விட்டு நீங்கினான். ராவணனுடன் வந்த அனைவரும் அவனைப் பின்தொடர்ந்து சென்றனர்.

திரிஜடை சீதையிடம் கேட்டாள்:

`உங்கள் தந்தையும் என் தந்தை விபீஷணர் போலத்தானா அம்மா? தர்ம நெறியிலிருந்து மீறவே மாட்டாரா?`

`ஆம் திரிஜடா! கானகம் வந்த என் மணாளரை மீண்டும் அயோத்திக்கு அழைத்துச் செல்ல என் மைத்துனன் பரதன் காட்டுக்கு வந்தான். அப்போது அவனுடன் என் தந்தை ஜனகரும் வந்தார். கானகம் போகச் சொன்ன அப்பா தசரதர் வானுலகம் போய்விட்டார், இப்போது அவர் சொல்லை மீறி நான் அயோத்தி திரும்பலாமா என்று என் கணவர் ஸ்ரீராமர் என் தந்தையைத்தான் கேட்டார். அதற்கு என் தந்தை என்ன சொன்னார் தெரியுமா?`

`சொல்லுங்கள் தாயே!

`என் கணவர் கானகத்தில் பதினான்கு ஆண்டுகள் வாழவேண்டும் என்பது மட்டுமல்ல. அவரது மனைவியான நானும் அவருடன் சேர்ந்து கானகத்திலேயே வாழவேண்டும், அதுதான் தர்மம் என்று எடுத்துச் சொன்னார் என் தந்தை. அத்தகைய தர்மப்பிரபுவான என் தந்தையா அதர்மத்தை உபதேசிப்பார்? தர்ம நெறிப்படி வாழும் தந்தையைப் பெற்ற வகையில் நாம் இருவருமே அதிர்ஷ்டசாலிகள் திரிஜடா!` என்று சீதாதேவி சொன்னபோது திரிஜடையின் மனம் விபீஷணரை எண்ணிப் பெருமிதம் கொண்டது.

22

தேவர்கள் தந்த பரிசு!

உலகங்களில் ஒன்று பாக்கியில்லை. திக்விஜயமாக ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் ஒவ்வொன்றாகச் சென்றுகொண்டிருந்தான் ராவணேஸ்வரன். அவன் படைகள் `ராவணன் வாழ்க!` என உரத்துக் குரல் கொடுத்தவாறு அவனைத் தொடர்ந்து கொண்டிருந்தன.

ஒவ்வோர் இடத்திலும் மன்னர்களை வென்றான். அவனிடம் தோற்றவர்கள் பலர். அவனைக் கண்டதுமே பதறி அவன் காலடியில் வீழ்ந்தவர்கள் பலர். அவன் வருகிறான் என்றறிந்ததுமே அஞ்சி அரியாசனத்தை அப்படியே விட்டுவிட்டு ஓடியவர்கள் பற்பலர். அப்படிப்பட்டதாக இருந்தது பரவியிருந்த அவனது வீரத்தின் புகழ்.

அவ்விதம் வரும் வழியில் திருமாலை எண்ணி அவரையே கைப்பிடிக்கும் நோக்கத்தோடு தவம் செய்துகொண்டிருந்த வேதவதியைப் பார்த்தான் ராவணன். பேரழகியான அவளைப் பார்த்ததும், அவன் கண்களில் காமம் கொப்பளித்தது. எவ்வளவோ கெஞ்சியும் அவள் இணங்காததால், புனிதம் மிகுந்த தவச்செல்வியான வேதவதியின் கையைத் தீய நோக்கத்தோடு அவன் தொட்டான். அடுத்த கணம் வேதவதி கடும் சீற்றத்தோடு பொங்கி எழுந்தாள்.

`அடேய் அரக்கனே! பிரம்மன் கொடுத்த வரங்களால் செருக்கடைந்து திரியும் மூடனே! என்னைத் தொட்டதன் விளைவுகளை நீ அறிய

மாட்டாய். விதியே அவ்வாறு உன்னை என் மேனியைத் தீண்ட வைத்தது. என்னைத் தொட்ட உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன். மீண்டும் பிறந்துவந்து நான் விரும்பிய திருமாலைத் திருமணம் செய்துகொண்டு அவர் மூலமே உன்னை அழிப்பேன்!'

வேதவதி இவ்விதம் சூளுரைத்த போது வானத்தில் மேகங்கள் இடிமுழக்கம் செய்தன. அரக்கர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் மனம் மகிழ்ந்தார்கள். தங்களின் வேள்விகளுக்குத் தடையாக அரக்கர்கள் இருந்ததால் அரக்கர் குலம் அழியப் போவதை எண்ணி முனிவர்கள் ஆனந்தம் கொண்டார்கள்.

வேதவதி பூமியை நோக்கித் தன் கையால் சைகை செய்ய நெருப்பு சடசடவென மண்ணிலிருந்து தானே எழுந்தது. எரிமலையாய்ப் பொங்கிய நெருப்பில் வேதவதி சிவந்த கண்களோடு தலைவிரி கோலமாகக் குதித்தாள். அடுத்த கணம் அவள் சாம்பலானாள். நெருப்பு காற்றில் சுழன்று வீசி அணைந்தது.

அரக்கர் கோமானாக எங்கெங்கும் அட்டகாசம் செய்துகொண்டு வெற்றியல்லாது வேறறியாமல் வாழ்ந்த ராவணன் மனம் துணுக்குற்றது. ஒருகணத்தில் தன்முன்னால் ஒரு பெண் தன்னை எதிர்த்து முழங்கி நெருப்பில் குதிப்பதாவது! அவள் சாகும்போது சூளுரைத்தாளே! அது உண்மையாகுமா? அவன் மனத்தில் முதல் முறையாகக் கலக்கம் தோன்றியது. ஆனால் அதை மறைத்தவனாய் ஆர்ப்பாட்டத்தோடு திக்விஜயத்தைத் தொடர்ந்தான்.

மருத்தன் என்ற மன்னன் வேள்வி செய்கிறானாமே? அங்கே தேவர்களெல்லாம் அவிர்ப்பாகம் பெறுவதன் பொருட்டுக் கூடியிருக்கிறார்களாமே? யார் அந்த மருத்தன்? கேட்டவாறே திம் திம் என மருத்தனின் வேள்விச் சாலை நோக்கி நடந்தான். அவன் படைகள் ஆர்ப்பரித்தவாறே அவனைத் தொடர்ந்தன.

வேள்விச் சாலையின் ஒருபுறம் மயில்கள் திரிந்துகொண்டிருந்தன. அங்கிருந்த பொய்கையில் அன்னப் பறவைகள் கூட்டம் கூட்டமாக நீந்திக் கொண்டிருந்தன. காகங்கள் மரங்களில் அமர்ந்து தங்கள் முதுகை அலகால் கோதிக் கொண்டிருந்தன. மரத்தைப் பற்றிக் கொண்டிருந்த பச்சோந்திகள் தங்கள் தலையை நீட்டி நீட்டி, ராவணன் அட்டகாசமாக வருவதை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தன.

அங்கே வீற்றிருந்த தேவர்கள் அளவு கடந்த அச்சத்தால் உடல் நடுங்கினார்கள். முக்கோடி வாழ்நாளும் முயன்று பெற்ற வரம் உடைய ராவணன் தங்களைக் கண்டால் தங்கள் கதி அதோகதி தான். இப்போது என்ன செய்வது? இங்கிருந்து எப்படித் தப்பிப்பது?

இந்திரன் யோசித்தான். ஏற்கெனவே அகலிகை மேல் இச்சை கொண்டு கௌதமரின் ஆசிரமத்தில் பூனை வடிவெடுத்த அனுபவம் அவனுக்கு உண்டே? அன்று கௌதமரின் சாபத்தால் அல்லவா அவன் உடலில் ஆயிரம் கண்கள் தோன்றின? இன்று நம்மை நாமே காப்பாற்றிக் கொண்டாக வேண்டும். இப்போது ராவணன் கண்ணில் படாமல் தப்பிக்க என்ன வடிவம் எடுப்பது?

இந்திரனின் பார்வையில் அழகிய மயில் கூட்டங்கள் தென்பட்டன. சடாரென ஒரு மயிலின் வடிவெடுத்த இந்திரன் பறந்துபோய் அவற்றின் இடையே நின்று கொண்டான். பிற மயில்கள் வியப்போடு அவனைப் பார்த்தன. அவன் அச்சத்தைப் புரிந்துகொண்டன. அஞ்ச வேண்டாம் என்பதுபோல் அவனைக் கனிவுடன் நோக்கிய அவைகள் ராவணன் கண்ணில் அவன் படாதவாறு அவனைச் சுற்றி நின்று மறைத்துக் கொண்டன.

இந்திரனின் தந்திரத்தைப் பார்த்த வருணன் தானும் ஏதேனும் ஓர் யுக்தியைப் பின்பற்ற விரும்பினான். பொய்கையில் நீந்திக் கொண்டிருந்த அன்னப் பறவைகளின் கூட்டத்தைப் பார்த்தான். மறுகணம் அன்னப் பட்சியாக மாறிப் பறந்து அவைகளின் இடையே புகுந்து நீந்தலானான். அன்னப் பறவைகள் வருணனின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு நகைத்தவாறே ஒன்றைச் சுற்றி மற்றொன்று நெருக்கமாக நின்று ராவணன் வருணனைப் பார்க்காதவாறு மறைத்தன.

அங்கே நின்றிருந்த எமன் மனம், கலங்கித் தவித்தது. நான் எல்லோர் உயிரையும் பறிக்கும் எமனாக இருக்கிறேன் என்றால் இந்த எமனுக்கே எமனாக அல்லவா ராவணன் இருக்கிறான்! எமன் பெருமூச்சோடு மரக் கிளைகளைப் பார்த்தான். அங்கிருந்த காகங்கள் அவனைப் பிரியமாய் அழைத்தன. மறுகணம் காக வடிவெடுத்து அவற்றின் இடையே அமர்ந்து தன்னை ஒளித்துக் கொண்டான் அவன்.

அடுத்தடுத்து ஒவ்வொருவராக வேறுருவம் எடுத்து மறைவதைப் பார்த்த குபேரன் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. மன்னன் மருத்தன் வேள்வி முடித்துத் தரும் அவிர்ப்பாகம் இப்போது முக்கியமல்ல. உயிர் பிழைப்பதே முக்கியம். அவன் காதில் ம்கும் ம்கும் என்ற பச்சோந்தியின் ஒலி விழுந்தது. மரத்தைப் பற்றியிருந்த பச்சோந்தியைப் பார்த்த அவன் சடாரெனத் தானும் ஒரு பச்சோந்தியாக மாறி அதன் அருகே இருந்த கிளையைப் பற்றிக் கொண்டான். உண்மையான பச்சோந்தி அவனைப் பரிவோடு பார்த்தது.

அந்த வேள்விச் சாலையில் இவ்விதம் மாற்றுருவம் கொண்ட இந்த தேவர்களையும் வேள்வி நிகழ்த்திக் கொண்டிருந்த மன்னன் மருத்தனையும் தவிர மற்ற அனைவரும் சடாரென வெவ்வேறு

இடங்களுக்கு ஓடி மறைந்தார்கள். வேள்வியை நிகழ்த்திக் கொண்டிருந்த ஒரே ஒரு புரோகிதன் மட்டும் வேள்வி பாதியில் நிற்கலாகாது என்ற நல்லெண்ணத்துடன் அமைதியாக வீற்றிருந்தான்.

தன்னை நோக்கி வந்த ராவணன் மேல் பாய்ந்தான் மருத்தன். ஆனால் அதற்குள் புரோகிதன் தடுத்தான். வேள்வியைப் பாதியில் நிறுத்தலாகாது. வேள்வியைப் பாதியில் நிறுத்தினால் நிறுத்தியவனின் குலத்தை அது அழிக்கும் என்றான் புரோகிதன். மருத்தன் மனம் சிந்தித்தது. வேள்வி முக்கியமல்லவா? `வேள்வியை நிறைவு செய்துவிட்டு உன்னை எதிர்ப்பேன்!` என்று ராவணனிடம் கூறியவாறு மருத்தன் மீண்டும் வேள்வி இயற்ற அமர்ந்தான்.

அட்டகாசமாகச் சிரித்த ராவணன் வேள்வித் தீக் குண்டத்தை எட்டி உதைத்தான். வேள்வித் தீயின் கங்குகள் மண்ணில் சிதறின. `மருத்தனே! உன்னை வென்றேன், நீ என் அடிமை என்பதை நினைவில் கொள்!` என்று முழங்கியவாறே ராவணன் தேவர்களைத் தேடினான்.

வேள்வியில் கிட்டும் அவிர்ப்பாகத்தைப் பெற தேவர்கள் இங்கே வந்திருக்க வேண்டுமே? அவர்கள் எங்கே? மயில்களும் அன்னங்களும் காகங்களும் பச்சோந்திகளும் தானே இங்கே தென்படுகின்றன?அவர்களை எங்கும் காணாதவனாய் அவர்கள் ஓடிவிட்டார்கள் என்று நகைத்தவாறே அந்த இருப்பிடத்தை விட்டு அகன்றான். ராவணனின் படைகள் அவனுடன் நடந்து கண்ணுக்கெட்டாத தொலைவில் மறைந்தன.

புரோகிதன் மீண்டும் வேள்விச் சாலையைச் சீரமைத்து அக்கினியை வளர்க்க மருத்தனின் யாகம் தொடர்ந்தது. தேவர்கள் சுய உருக் கொண்டு அவிர்ப்பாகம் அருந்தி ஆசி கூறினார்கள்.

மயிலை அழைத்த இந்திரன் அதன் தோகையைத் தடவிக் கொடுத்தான்.

`மயிலே! எனக்கு உதவிய உனக்கு ஒரு பரிசளிக்க விரும்புகிறேன். எல்லாப் பறவைகளின் இறகுகளையும் போல் தானே உள்ளது உன் தோகை? இனி ஆயிரம் கண்ணுடைய என்னைப் போல் உன் தோகையில் உள்ள பீலிகளிலும் கண் வடிவம் தோன்றட்டும்!` என்று இந்திரன் சொல்லி முடிப்பதற்குள் அங்கிருந்த மயில் கூட்டத்தின் தோகைகள் அத்தனையிலும் அழகிய கண்போன்ற வடிவங்கள் பளபளவெனத் தோன்றி மின்னத் தொடங்கின. மயில்கள் மகிழ்ச்சியோடு நடனம் புரிந்தன.

வருணன் அன்னத்தை அருகே அழைத்துப் பரிவோடு அதை வருடிக் கொடுத்தான்.

`அன்னமே! உன் வடிவமல்லவோ என்னைத் தப்புவித்தது? நீ மிக அழகிய வெண்ணிறத்தை அடைவாயாக!` என்றான். மறுகணம் அதுவரை சாம்பல் நிறத்தில் இருந்த எல்லா அன்னங்களும் வெள்ளை வெளேர் என்ற நிறம் பெற்று ஒளி வீசின.

எமன் காகங்களை அருகில் அழைத்தான்.

`என் உயிர் காத்த காகங்களே! என்னால் உயிர் நீத்தவர்களுக்கு மானிடர் செய்யும் நீத்தார் கடனில் படைக்கப்படும் உணவையெல்லாம் உங்களுக்கே படைப்பார்களாக. நீங்கள் நோய்நொடியின்றி நீண்ட காலம் வாழ்வீர்களாக!` என்று வாழ்த்தினான். அன்று முதல் பித்ரு காரியங்களில் படைக்கப்படும் உணவெல்லாம் காகங்களுக்கே உரிமையாயிற்று.

பச்சோந்தியாய் மாறித் தப்பிய குபேரன் `உன்னைப் போல் நான் உருமாறித் தப்பித்தேன் பச்சோந்தியே! நீ சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நிறம் மாறும் தன்மையை அடைவாயாக!` என்று வாழ்த்தினான். அன்றுமுதல் பச்சோந்தி இடத்திற்குத் தகுந்தாற்போல் நிறம் மாறும் விந்தையான ஆற்றலைப் பெற்றது.

நடந்த அனைத்தையும் பார்த்து மகிழ்ந்த புரோகிதன் சொல்லலானான்:

`இந்த வேள்வியைப் பாதியில் நிறுத்தினால் நிறுத்தியவன் குலம் அழியும் என்று சொன்னேன். அது சத்தியமே. உண்மையில் வேள்வி நிறுத்தாமல் முடிக்கப்பட்டு தேவர்களுக்கு அவிர்ப்பாகமும் அளிக்கப்பட்டு விட்டது. ஆனால் இதைப் பாதியில் நிறுத்தியவன் ராவணன் தான். இந்த வேள்வித் தீயை எட்டி உதைத்துவிட்டுப் போனான் அல்லவா? வேள்வியைப் பாதியில் நிறுத்தியவன் குலம் அழியும் என்ற நியதிப்படி ராவணன் குலம் விரைவில் அழிவது உறுதி!` என்றான் புரோகிதன். இந்தப் புதிய விளக்கத்தைக் கேட்ட தேவர்கள் மனம் மகிழ்ந்தார்கள். மயில், அன்னம் காகம் பச்சோந்தி ஆகியவற்றின் மனம் கூட மகிழ்ச்சி அடைந்தது.

`இப்போது நடந்து முடிந்த வேள்வித் தீயில் எத்தனையோ பொருட்கள் ஆகுதியாகப் பெய்யப்பட்டன. தன்னைத் தொட்டிழுத்த ராவணனுக்கு எதிராகத் தானே தீ மூட்டினாள் வேதவதி. அந்த நெருப்பில் தன்னையே ஆகுதியாகப் பெய்துகொண்டாள் அவள். அவளே சீதையாகப் பிறந்து இந்த தேவர்கள் மனம் மகிழும் வகையில் ராமபிரான் மூலம் ராவண வதம் நிகழக் காரணமாகப் போகிறாள்!` என எண்ணிக் காலம் மகிழ்ச்சி கொண்டது.

23

எண்ணப்படும் நாட்கள்...

உப்பரிகையில் நின்றவாறே மகாராணி மண்டோதரி ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ராவணனது புஷ்பக விமானம் வானில் வரும் காட்சி வெகு தொலைவில். தெரிந்தது. போர் புரிவதற்காகவும் எதிரிகளை அச்சுறுத்துவதற்காகவும் புஷ்பக விமானத்தில் ஏறி ராவணன் அடிக்கடிப் பயணம் போவது வழக்கம் தான். ஒவ்வொரு பயணம் முடிந்த பின்னரும் கையில் சிவபெருமான் கொடுத்த சந்திரஹாசம் என்ற வெற்றி வாளைத் தாங்கியவாறு, நேரே மண்டோதரியை வந்து சந்தித்துத் தன் பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வான் அவன். பின்னரே மற்ற வேலைகளை கவனிக்கப் போவான்.

எனவே வழக்கம்போல் இப்போதும் தன்னைத் தேடி வருவான் ராவணன் என்று மகிழ்ச்சியோடு தன் அரண்மனையின் உள்ளே சென்றாள் மண்டோதரி. தன்னைச் சிறப்பாக அலங்கரித்துக் கொண்டு கணவன் வரவுக்காகக் காத்திருக்கலானாள். ஆனால் காலம் கடந்ததே தவிரக் கணவன் வரக் காணோம். என்ன இது? இந்த முறை மட்டும் ஏன் இப்படி?

கொஞ்ச நாள் முன்னால் ராவணனின் தங்கை சூர்ப்பணகை வந்து தன் அண்ணன் மனத்தை என்னென்னவோ சொல்லிக் கலைத்துவிட்டுப் போனாளே, அதன் பிறகு சிறிது காலமாகவே ராவணன் பெரும் குழப்பத்தில்தான் இருந்தான்.

பித்துப் பிடித்தவன் போல் எதையோ வெறித்துப்

பார்ப்பதும் அதன் பின் தனக்குத் தானே ஏதேதோ பேசிக் கொள்வதுமாக அவன் இருந்த நிலை மண்டோதரி அறியாததல்ல. காதல் பித்துப் பிடித்த இளம் வாலிபர்களைப் போல் அல்லவா அவன் நடத்தை இருந்தது?

சூர்ப்பணகையால் இன்னொரு பெண்ணிற்கு எதிராகத் தூண்டிவிடப் பட்ட காமப் பித்து அது என்பதையும் மண்டோதரி அறியாமல் இல்லை. சொந்தத் தங்கையே தன் அண்ணனைக் கெட்ட வழியில் செலுத்துவாளானால், அவனுக்கு விநாச காலம் நெருங்கிவிட்டது என்பது தானே பொருள்?

ராவணன் புஷ்பக விமானத்தில் எங்காவது போகும்போது, எதன் பொருட்டு எங்கு செல்கிறான் என்பதை மண்டோதரியிடம் தெரிவித்துவிட்டுச் செல்வதுதான் வழக்கம். இந்த முறை அவன் புறப்பட்டுப் போனபோது மண்டோதரியின் அரண்மனைப் பக்கம் அவன் வரவே இல்லை. அவன் சென்ற பின்தான் தனக்கென்றே உள்ள ஒற்றர்கள் மூலமாக அவன் இலங்கையை விட்டுச் சென்றிருக்கிறான் என்பதை அவள் அறிந்துகொண்டாள்.

இப்போது திரும்பிய பின்னரும் வழக்கம்போல் அவன் அவளைத் தேடி வரவில்லை. நேரம் செல்லச் செல்ல அவள் நெஞ்சம் நொறுங்கத் தொடங்கியது. கணவன் தன்னை விட்டு மெல்ல மெல்ல விலகிச் செல்வதுபோல ஓர் அச்சம் அவள் உள்ளத்தில் படர்ந்தது.

தன் ஒற்றர்களைக் கைதட்டி அழைத்தாள். ராவணன் இப்போது எங்கிருக்கிறான், இலங்கை திரும்பிய அவன் தன் அரண்மனைக்குச் சென்றுவிட்டானா அல்லது வேறு எங்காவது இருக்கிறானா என்பதையெல்லாம் உடனடியாக அறிந்துவந்து தெரிவிக்குமாறு உத்தரவிட்டாள். ஒற்றர்கள் விவரங்களைச் சேகரிக்க ஓடினார்கள். ம்ண்டோதரி அதிக நேரம் காத்திருக்கத் தேவையிருக்கவில்லை. மிகக் குறுகிய காலத்திலேயே ஒற்றர்கள் திரும்பி வந்தார்கள். தாங்கள் அறிந்துவந்த செய்திகளைத் தயங்கித் தயங்கித் தெரிவித்தார்கள்.

ராவணன் இன்னும் தன் அரண்மனைப் பக்கம் செல்லவே இல்லையாம். அசோக வனத்தில் தான் இருக்கிறானாம். ராமன் என்ற மானிடனின் மனைவி சீதை என்ற பெண்ணைத் தூக்கிவந்து அசோக வனத்தில் சிறை வைத்திருக்கிறானாம். அவளிடம் தன்னை ஏற்கச் சொல்லி கெஞ்சிக் கொண்டிருக்கிறானாம்.

ஆனால் அந்த மானிடப் பெண் அரக்கர்கோமானின் கெஞ் சலுக்கெல்லாம் மசியவில்லையாம். ஒரு புல்லை எடுத்து அவன் முன்னிலையில் போட்டு, அவன் அந்தப் புல்லுக்குச் சமானம் என்று சொல்லிக் கண்டபடி ஏசிக் கொண்டிருக்கிறாளாம் அவள். ஒரு மானிடப்

பெண் ஒருதுளி அச்சமும் இல்லாமல் ராவணேஸ்வரனைத் தாறுமாறாகத் திட்டுவதைப் பார்த்து அங்கே அவளுக்குக் காவலாகப் புதிதாக நியமிக்கப்பட்ட அரக்கிகளெல்லாம் திகைத்துப் போயிருக்கிறார்களாம்.

ஒற்றர்கள் இந்தத் தகவல்களைச் சொல்லிவிட்டுப் பணிவோடு விடைபெற்றுச் சென்றார்கள். மண்டோதரியின் மனம் சுக்குநூறாக உடைவதைப் போல் இருந்தது. என்றாலும் ராவணனின் பெண்ணாசை அவள் ஏற்கெனவே அறிந்ததுதான் என்பதால் ஒரு பெருமூச்சோடு அவன் வரவுக்காகக் காத்திருந்தாள். நேரே அவனது அரண்மனைக்குச் சென்றுவிடுவானா அல்லது தன்னைத் தேடி வருவானா?

சிறிதுநேரத்தில் ராவணன் உண்மையிலேயே மண்டோதரியைத் தேடிவந்தான். யார் மீது அவன் ஆசை வைத்தாலும் தன் மீது அவன் கொண்டுள்ள அன்பு குறையவில்லை என்றெண்ணி மண்டோதரியின் நெஞ்சம் சற்று ஆறுதல் அடைந்தது.

அவன் கையில் பயணம் முடிந்து திரும்பும்போது சந்திரஹாசம் என்ற சிவன் கொடுத்த வாள் இருக்குமே? கம்பீரமாக அந்த வாளோடு அல்லவா அவன் அவளைத் தேடி வருவான்? இன்று அந்த வாள் அவன் கரத்தை அலங்கரிக்கவில்லையே? ஏன் இப்படி?

`சுவாமி! பயணம் முடிந்துவரும் தங்கள் தோற்றம் இன்று வழக்கம்போல் இல்லாமல் வேறுவிதமாக இருக்கிறதே? உங்கள் திருக்கரத்தை அலங்கரிக்கும் சந்திரஹாச வாள் எங்கே? தாங்கள் தங்கள் அரண்மனைக்குச் சென்று அதை வைக்க வேண்டிய இடத்தில் வைத்துவிட்டீர்களா என்ன?`

மண்டோதரியின் கேள்வி அவனைத் திடுக்கிடச் செய்தது. சந்திரஹாசம் என்ற அந்த வாள் கைலாய மலையை ராவணன் தூக்கியபோது, தன் நரம்புகளையே வீணையாக்கி அவன் சாமவேதம் இசைத்ததைக் கேட்டு, மகிழ்ச்சியோடு சிவபெருமான் அளித்ததல்லவா? எப்பேர்ப்பட்ட விரோதியையும் வெல்லக் கூடிய வீரவாள் அல்லவா? தன் கையில் தானே இருந்தது அது? இப்போது எங்கே மாயமாய் மறைந்தது?

`தெரியவில்லையே தேவி! நீ சொன்ன பிறகுதான் அந்த வாளின் நினைவே வருகிறது எனக்கு!`

`ஏனென்றால் வாள்போன்ற கண்ணுடைய வேறு ஒருத்தியின் நினைவு உங்களின் மற்ற நினைவுகளை அழித்துவிட்டது. அப்படித்தானே?`

மண்டோதரி சலிப்புடன் சொன்னாள். ராவணன் சற்றே தலைகுனிந்தவாறு அமர்ந்திருந்தான்.

`பிரபோ! அந்த வாளின் சரித்திரத்தை நீங்கள் மறந்திருக்கலாம்.

அதைப் பிரயோகிப்பதற்கு ஒரு நிபந்தனை உண்டு. அதையும் நீங்கள் மறந்திருக்கக் கூடும். ஆனால் பரமசிவன் கருணையோடு தந்த வாளைப் பற்றித் தாங்கள் ஏற்கெனவே சொன்ன எல்லாச் செய்திகளும் எனக்கு நன்றாக நினைவிருக்கின்றன. அதுசரி. அந்த வாளைக் கடைசியாக யார்மீது பிரயோகித்தீர்கள்?`

`புஷ்பக விமானத்தில் நான் ஆசைப்பட்ட பெண்ணைக் கவர்ந்து வரும்போது ஒரு கழுகு என்னை வழிமறித்தது. தன் பெயர் ஜடாயு என்று சொல்லிக் கொண்ட அந்தக் கழுகு அபாரமான வீரத்தைக் காட்டியது. வேறு வழியின்றி சந்திரஹாச வாளால் தான் அதன் இறக்கைகளை வெட்டினேன். அதன் பின் தான் அந்த வாள் என்னிடமிருந்து விலகி மறைந்திருக்க வேண்டும்!`

`பிரபோ. அந்தக் கழுகு ஏதேனும் ஆயுதத்தால் தங்களுடன் சண்டையிட்டதா?`

`ஆம் தேவி. அது தன் அலகு என்னும் ஆயுதத்தால் என்னுடன் வலிமையாகப் போரிட்டது.`

`நாதா! அலகு என்னும் ஆயுதத்தால் போரிட்டது என்று தாங்கள் சொல்லும் வாக்கியம் பிழையானது.`

ராவணன் கடகடவென்று சிரித்தான்.

`எனக்கு இலக்கணப் பாடம் நடத்துகிறாயா நீ? நல்லது. அந்த வாக்கியத்தில் என்ன பிழை கண்டாய்?`

`அந்த வாக்கியத்தில் உள்ளது சொற்பிழை அல்ல. பொருட்பிழை. அந்தப் பிழை மட்டுமல்ல. உங்கள் செயலிலும் பிழை இருக்கிறது நாதா! அலகு என்பது ஆயுதமல்ல. அந்தப் பறவையின் ஓர் உறுப்பு.`

`அதனால் என்ன? என் செயலில் என்ன பிழை கண்டாய் நீ? என்னுடன் போரிட்ட அதன் இறக்கைகளை சந்திரஹாச வாளால் வெட்டி வீழ்த்தி நான் வெற்றி பெற்றதா பிழை?`

`வெற்றி பெற்றது பிழையல்ல. பெருமை. ஆனால் வெற்றி பெற்ற முறை பிழையானது. அதனால் பெருமை சிறுமையாகி விட்டது!`

இதைக் கேட்டு ராவணன் உறுமினான்.

`என் செயலில் பிழை காணும் அளவு நீ துணிச்சல் பெற்றுவிட்டாய். நல்லது. என் பட்ட மகிஷி என்பதால் உன் சொற்களைப் பொறுத்தேன். நான் அந்தப் பறவையிடம் செய்த பிழை என்ன சொல்!`

`சந்திரஹாசம் என்ற வாளால் போர் புரிய ஒரு நிபந்தனை உண்டே பிரபோ? சிவபெருமான் அன்று சொன்னதை மறந்துவிட்டீர்களா?

உங்களை ஆயுதத்தால் ஒருவர் தாக்கினால் தான், சந்திரஹாச வாள் என்ற ஆயுதத்தைத் தாங்கள் எடுத்து பதிலுக்குத் தாக்கலாம். அல்லாது உடலால் தாக்கும்போது இந்த வாளைப் பயன்படுத்தினால், வாள் உடனே சிவபெருமானிடமே சென்று சேர்ந்துவிடும். இவ்விதம் சங்கரனார் அன்று சொன்னதாகத் தாங்கள் தானே என்னிடம் தெரிவித்தீர்கள்? ஜடாயு என்ற பறவை ஆயுதத்தால் தாக்கவில்லையே? அலகால் தானே தாக்கியது? அலகு அதன் உடல் உறுப்புத் தானே? தாங்கள் அதை சந்திரஹாச வாளால் தாக்கியது முறையல்லவே? தங்கள் வாள் மறுபடி சிவனாரிடம் சென்று சேர்ந்துவிட்டது பிரபோ. அதுமட்டுமல்ல. அவ்விதம் வாள் திரும்பினால் அதன்பிறகு என்ன நேரும் என்று பரமசிவனார் அன்று சொன்னது தங்களுக்கு நினைவு வருகிறதா?`

ராவணன் மதிநுட்பத்துடன் தன் மனைவி தெரிவித்த கருத்துகளின் உண்மையை உணர்ந்தவனாய்த் திடுக்கிட்டான். சிவன் அன்று சொன்னது அப்போது ஞாபகத்திற்கு வந்து அவன் கலக்கத்தை மிகுதிப்படுத்தியது. `ராவணா! என்று இந்த வாள் உன்னை விட்டு என்னிடம் திரும்புகிறதோ அன்றிலிருந்து உன் ஆயுள் எண்ணப்படத் தொடங்கிவிட்டது என்பதைப் புரிந்துகொள்!` என்றல்லவா சிவன் கூறினார்? அப்படியானால் இனி தான் வாழப்போவது சிறிதுகாலம் தானா?

`சுவாமி! ஆயுதமற்றவர் மேல் சந்திரஹாச வாளைப் பிரயோகித்த தங்களின் ஒரு பிழையை இனிச் சரிசெய்ய இயலாது. ஆனால் தாங்கள் செய்துள்ள இன்னொரு பிழையை எளிதாகச் சரிசெய்துவிடலாம். அப்படிச் சரிசெய்துவிட்டால் தாங்கள் நிம்மதியாக வாழலாம்.`

`என்ன பிழை? எதைச் சரிசெய்யச் சொல்கிறாய் தேவி?`

`அடுத்தவர் மனைவி மேல் ஆசைகொள்வது அதர்மம் என்பது தாங்கள் அறியாததா? சீதையை மீண்டும் ராமனிடம் கொண்டு சேர்த்துவிடுங்கள். தர்மம் தவறினால் நாம் அழிவோம்.`

திடீரென உரத்த குரலெடுத்து ராவணன் உறுமினான்.

`செய்த செயலைப் பின் திரும்பிப் பார்த்துச் சரிசெய்யும் வழக்கம் ராவணனிடம் இல்லை என்பதை நீ அறிந்துகொள் தேவி. அவன் தான் செய்த செயலின் விளைவு எதுவானாலும் வீரத்தால் அதைச் சந்திப்பான்.`

சொல்லிவிட்டு ராவணன் விருட்டென மண்டோதரியின் அரண்மனையை விட்டு வெளியேறினான். காமம் அவன் கண்ணை மறைப்பதை உணர்ந்து மண்டோதரியின் விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவளது கால்கள் அவளின் இஷ்ட தெய்வமான சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் பூஜையறையை நோக்கி நடந்தன.

24

திருக்கரம் உயர்த்தினான் ஸ்ரீராமன்...

எவ்வளவு பெரிய ஆலமரம்! எத்தனை கிளைகள்! எத்தனை விழுதுகள்! நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அந்த ஆலமரம் அங்கே நின்றுகொண்டிருக்க வேண்டும்.

எண்ணற்ற பறவைகளுக்கு அடைக்கலம் கொடுத்துக் கொண்டிருந்தது அது. அதன் கிளைகளில் கூடுகட்டி வாழ்ந்த பறவைகள் ஆனந்தமாக அந்த மரம் தந்த ஆலம்பழங்களையே கொத்திக் கொத்தி உண்டு மகிழ்ந்தன. அதன் ஜடாமுடி போன்ற விழுதுகளில் தொங்கிக் காற்றில் ஊஞ்சலாடின.

தாய்ப் பறவைகள் பகலில் உணவு சேகரித்துக் கொண்டுவந்து கூட்டில் உள்ள குஞ்சுகளுக்கு அலகால் ஊட்டி விட்டன. பின்னர் இரவில் தங்கள் குஞ்சுகளோடு அவை பாதுகாப்பாக உறங்கின. நூற்றுக்கணக்கான பறவைகளின் சரணாலயமாக விளங்கியது அந்த மரம்.

அந்த பிரம்மாண்டமான ஆலமரத்தைப் பார்த்து வியந்தான் ராமபிரான். பின்னர் தாய்ப்பறவைகள் குஞ்சுகளுக்கு உணவூட்டும் பாசத்தை லட்சுமணனுக்குச் சுட்டிக் காட்டி ஆச்சரியப் பட்டான். தன் அருகே நின்ற வீபீஷணனிடமும் அந்தக் காட்சியைக் காட்டி மகிழ்ந்தான்.

`பறவைகளுக்குக் கூட இயற்கையில் தாய்ப்பாசம் அமையுமாறு படைத்த இறைவனின் கருணையே கருணை!` என்று ராமபிரான் விபீஷணனிடம் சொன்ன போது விபீஷணன் முகத்தில் ரகசியமாக

ஒரு பக்தி கலந்த புன்முறுவல் பிறந்தது. ராமபிரான் மூலப் பரம்பொருளின் வடிவமே என்று தெளிவாக உணர்ந்து கொண்டதால் விளைந்த புன்னகை அது.

அதனால் தானே தன் அண்ணன் ராவணனை விட்டு, ராமனையே சரணம் என்று வந்து சேர்ந்திருக்கிறான் விபீஷணன்! இப்போது எந்தத் தாய்ப்பாசத்தை எல்லா உயிர்களிடத்திலும் மூலப் பரம்பொருள் படைத்ததோ அந்த மூலப்பரம்பொருளே இன்னொருவர் அதைப் படைத்ததுபோல் எண்ணி மகிழ்கிறதே! விபீஷணனின் எண்ணத்தை உணர்ந்த லட்சுமணனும் விபீஷணனும் ஒருவருக்கொருவர் மெல்லிய முறுவலைப் பரிமாறிக் கொண்டார்கள்.

இதோ இலங்கையில் யுத்தம் தொடங்கப் போகிறது. சீதாப்பிராட்டியை அசோக வனத்திலிருந்து மீட்க வேண்டும். சேது அணை கட்டி பல்லாயிரக்கணக்கான வானரங்களோடு இலங்கை வந்தாயிற்று. போரை எப்போது துவக்குவது, எப்படித் துவக்குவது என்பன போன்ற விஷயங்களைக் கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டும்.

அந்தக் கலந்தாலோசனையின் பொருட்டாகத்தான் இப்போது அவர்கள் கூடியிருக்கிறார்கள். இந்தப் பெரும் ஆலமரத்தடியில் மந்திராலோசனை நடைபெறப் போகிறது என்ற தகவலை அனுமன் மூலம் அனைவருக்கும் அறிவிக்கச் செய்துவிட்டார்கள்.

அனுமன் ஒவ்வொரு படைத் தளபதியிடமும் கலந்தாலோசனை நடைபெறும் நேரத்தையும் இடம் ஆலமரத்தடி என்பதையும் தனித்தனியே தாவித் தாவிச் சென்று தெரிவித்தான். அந்தந்தத் தளபதிகள் முரசறைந்து தமக்குக் கிட்டிய தகவலை எல்லா வானர வீரர்களும் அறியும்படிச் செய்துவிட்டார்கள்.

இப்போது அனைத்து வானரங்களும் பெருங்கூட்டமாக ஆலமரத்தின் அடியில் கூடியிருந்தார்கள். அந்தப் பிரம்மாண்டமான பல நூற்றாண்டு கால ஆலமரம் அனைவருக்கும் நிழல் தந்தது. அனைவரும் சீராக வரிசை வரிசையாக அமர்ந்து கொண்டார்கள்.

அந்த ஆலமரத்தின் அடியிலேயே இருந்த ஒரு மேட்டுப்பாங்கான பகுதியில் அமர்ந்து ராம லட்சுமணர்கள் விபீஷணனோடும் சுக்கிரீவனோடும் அனுமனோடும் அந்தக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார்கள். தனது மாபெரும் படைபலத்தைப் பார்த்து ராமனுக்கு உள்ளூர ஒரு பூரிப்பு எழுந்தது. மரியாதைக்குக் கட்டுப்பட்டவர்களாய் அனைத்து வானரங்களும் எந்தச் சப்தமும் எழுப்பாமல் அமர்ந்திருந்த ஒழுங்கு ராமனுக்குப் பிடித்திருந்தது.

சுக்கிரீவனுக்கு ராமனது வீரத்தின் மேல் அபார நம்பிக்கை. ராமபிரான்

ராவணனை வெல்வார் என்பதில் அவனுக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஏழு மராமரங்களை ஒரே அம்பால் துளைத்த ராமன், ராவணனது நெஞ்சைத் தன் அம்பால் துளைப்பது இயலக் கூடியதே என்று அவன் உள்மனம் சொல்லிற்று. துந்துபி என்ற அரக்கனின் எலும்புக் கூட்டை ஒரு கட்டை விரலால் வீசி எறிந்த மாவீரனல்லவா ராமன்! அத்தகைய பரிசோதனைகளைச் செய்துதானே ராமனது வீரத்தின் மேல் நம்பிக்கை வைத்தான் சுக்கிரீவன்! ஆனால் அந்தப் பரிசோதனைகள் சுக்கிரீவன் முன்னிலையில் மட்டுமே நடந்தன. எல்லா வானரங்களும் அதைப் பார்க்கவில்லை.

வீடணனும் ராமனது வீரத்தை முழுமையாக நம்பியவன் தான். ராமபிரான் கடவுள் என்ற ரகசியத்தையே அறிந்துகொண்ட அவன் ராமனின் வெற்றியைப் பற்றி ஒரு சிறிதும் சந்தேகப்படுபவன் அல்ல.

சுக்கிரீவனது அணியில் இருந்த ஜாம்பவான், அங்கதன் ஆகியோர் ராமன் மேல் மட்டற்ற நம்பிக்கை வைத்திருந்தார்கள். அனுமனோ ராமனின் பூரண தாசனாகத் தன்னை மாற்றிக் கொண்டு ராமனுக்குத் தன் வாழ்வையே அர்ப்பணித்திருந்தான். எனவே இவர்கள் ராமபிரானின் வீரத்தை நம்புகிறார்களா என்ற கேள்வியே எழ வாய்ப்பில்லை.

ஆனால் அனைத்து வானரங்களும் ராமபிரானின் சக்தியை நம்புகின்றனவா? எல்லோருக்கும் ராமன் கட்டாயம் வெல்வான் என்று பரிபூரண நம்பிக்கை இருக்கிறதா? அப்படி இருக்க வேண்டியது முக்கியம் அல்லவா?

படையில் இருந்த ஒவ்வொரு வீரனும் தலைவனைப் பூரணமாக நம்பினால் தானே கடும் உத்வேகத்தோடு போரிட முடியும்? தங்கள் தலைவனின் சக்தி மேல் அவர்களுக்குப் பரிபூரண நம்பிக்கை இல்லாவிட்டால் அவர்கள் எவ்விதம் முழு உற்சாகத்தோடு போரிடுவார்கள்?

லட்சுமணன் இவ்வித யோசனையில் ஆழ்ந்தவனாய் எல்லா வானரங்களின் முகங்களையும் ஒவ்வொன்றாய் கண்ணுக்கு எட்டிய வரையில் பார்த்தான். சில முகங்களில் தயக்கம் தெரிந்தது. இந்த ராமன் என்கிற மானிடன் ராவணன் என்கிற அசுரபலம் படைத்த அரக்கனை வெல்லக் கூடிய சக்தி உள்ளவன் தானா என்ற ஐயப்பாடு தெரிந்தது. அதை வெளியே தெரியாமல் சில வானரங்கள் மறைத்துக் கொள்வதையும் லட்சுமணனால் பார்க்க முடிந்தது.

யாராலும் சாதிக்க இயலாத செயலாய் சேது அணையைக் கட்டி இலங்கை வந்த பிறகு பல வானரங்களின் மனத்தில் வியப்பும் நம்பிக்கையும் எழுந்தன. ஆனாலும் இன்னும் சில வானரங்கள் சற்றே தயங்குவதையும் காண முடிந்தது. சேதுபந்தனம் என்பது வானரங்கள்

அனைத்தின் கூட்டு முயற்சி தானே? ராமன் என்ற தனி மனிதனின் ஆற்றலை அவை இன்னும் பார்க்கவில்லை அல்லவா?

இப்போது யுத்தம் நடக்கவிருக்கும் இந்த நேரத்தில் அனைத்து வானரங்களின் உளப்பூர்வமான அர்ப்பணிப்போடு கூடிய செயல்பாடு தேவைப்படுகிறதே? இப்படிச் சில வானரங்கள் தயக்கத்தோடு போரில் ஈடுபட்டால் அது சரியல்லவே? லட்சுமணன் இவ்வித யோசனையில் ஆழ்ந்தவாறே தன் அண்ணன் ராமபிரானைப் பார்த்தான்.

ர்ாமனும் லட்சுமணனைப் பார்த்தான். அவனது உள்ளக் குறிப்பை அவன் கண்கள் மூலமே உணர்ந்துகொண்டான் ராமன். என்றும் தன்னை விட்டுப் பிரியாதவன் அல்லவா லட்சுமணன்?

சீதை இதோ ராவணனால் தன்னிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறாள். அவள் திருமணத்திற்குப் பிறகுதான் தன்னுடன் இணைந்தாள். லட்சுமணன் பிறந்ததிலிருந்து தன்னை விட்டுப் பிரியாத தம்பி அல்லவா? லட்சுமணன் மனத்தில் என்ன நினைக்கிறான் என்பதைத் தான் சரியாகவும் உடனடியாகவும் ஊகிப்பதில் என்ன வியப்பு இருக்கிறது?

சரி. இப்போது லட்சுமணன் நினைப்பது பற்றிச் சிந்திப்போம் என்று ராமன் முடிவு செய்தான். அத்தனை வானரங்களும் பார்த்து பிரமிப்படையும் வகையில் தான் தனி ஒருவனாக ஒரு செயலைச் செய்ய வேண்டும். அந்தச் செயலைப் பார்த்து வானரங்கள் வாய்மூடி வியப்படைந்து தனக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அப்படி என்ன செயலை இப்போது செய்வது? ராமன் மனம் ஒரு முடிவு செய்தது. அவன் திருமுகத்தில் ஓர் இளநகை அரும்பியது.

`சரி. மந்திராலோசனையைத் தொடங்கலாமா?` என்று லட்சுமணனிடம் கேட்டான் ராமபிரான். லட்சுமணன் தொடங்க வேண்டியதுதான் என்று தெரிவித்தான். ஆனால் பேச்சைத் தொடர முடியாமல் ஓர் இடையூறு குறுக்கிட்டது.

அந்த ஆலமரத்தில் குடியிருந்த அத்தனை பறவைகளும் கீச் கீச் என்றும் கூ கூ என்றும் கா கா என்றும் பல விதமாகக் குரலெழுப்பிக் கொண்டிருந்தன. அந்தச் சப்தம் பேசுவதற்குப் பெரும் இடையூறாக இருந்தது. ராம லட்சுமணர்கள் பேசிய பேச்சு எல்லா வானரங்களையும் போய் எட்ட இயலவில்லை.

இதென்ன இந்தப் பறவைகள் இப்படிச் சளசளவென்று சப்தம் போடுகின்றனவே என்ற சலிப்போடு எல்லா வானரங்களும் ஆலமரத்தை அண்ணாந்து பார்த்தன. அதைக் கண்ட ராமபிரான் நகைத்தவாறே பறவைகளை நோக்கித் தன் கையை உயர்த்தினான். சத்தம் போடவேண்டாம் என்று சொல்வது போல் கையால் அவற்றை

அடங்குமாறு சைகை காட்டினான்.

மறுகணம் நிகழ்ந்த செயலைப் பார்த்து வானரங்கள் வியப்பின் விளிம்புக்கே வந்துசேர்ந்தன. சொல்லி வைத்தாற்போல் அத்தனை நூற்றுக்கணக்கான பறவைகளும் கப்சிப் என்று தங்கள் வாயை மூடிக் கொண்டன. ராமனுக்கு மரியாதை தரும் வகையில் அவைகள் தங்கள் அலகைத் திறக்கவே இல்லை.

அத்தனை பறவைகளின் சப்தமும் ராமன் கையசைவில் ஒரே கணத்தில் அடங்கிய அதிசயத்தைப் பார்த்த வானரங்கள் ஒருசேர எழுந்து நின்று ராமனின் ஆற்றலுக்கு மரியாதை செய்வது போலக் கை கூப்பின. பறவைகளின் சப்தத்தை அடக்கும் ராமபிரானின் திருக்கரம் ராவணனின் கொழுப்பையும் அடக்கும் என அவை உணர்ந்துகொண்டன. பின்னர் ராமபிரான் அவற்றை அமருமாறு சொன்னதும் அவை அமர்ந்துகொண்டன.

இப்போது லட்சுமணன் எல்லா வானரங்களின் முகத்தையும் பார்த்தான். இயற்கையைக் கூடக் கட்டுப்படுத்தும் ராமனது பேராற்றலை உணர்ந்ததால் அவை அனைத்தும் மிகுந்த நம்பிக்கையும் உற்சாகமும் அடைந்திருக்கின்றன என்பதை அவன் உணர்ந்தான்.

ராமன் தன் கண்ணின் குறிப்பினாலேயே போதுமா என்பதுபோல் லட்சுமணனிடம் கேட்டான். போதும் என்று சொல்லும் வகையில் மகிழ்ச்சியுடன் லட்சுமணன் தலையாட்டினான்.

ராமபிரானின் கையசைவிற்குப் பறவைகள் கட்டுப்பட்டதை உணர்ந்து

விபீஷணன், ஜாம்பவான், அங்கதன் ஆகியோர் பக்தியுடன் கைகூப்பினர். ஜெய் ஸ்ரீராம் என்று அனுமன் முழங்கியதும் அனைத்து வானரங்களும் உற்சாகத்தோடு அதை எதிரொலித்த சப்தம் அசோக வனத்தில் சீதையை எட்டி அவளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

25

இலக்குவன் கேட்ட கேள்வி!

காற்று சிலுசிலுவென வீசிக் கொண்டிருந்தது. ஈரப்பதத்தை அள்ளிக்கொண்டு வந்த கடல்காற்று. சுக்ரீவன், ஆஞ்சநேயன் உள்ளிட்ட எல்லாக் குரங்கினத்தவர்களும் வியப்போடு ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடலைத் தாண்டி எப்படி இலங்கைக்குச் செல்வது என யோசித்துக் கொண்டிருந்தபோது வானத்தில் தென்பட்ட காட்சி அவர்கள் அனைவரிடமும் பெரும் ஆச்சரியத்தைத் தோற்றுவித்தது.

கூப்பிய கைகளுடன் ஆகாயத்தில் ஐந்து அரக்கர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் தலைவன் போன்ற தோற்றத்தில் கம்பீரமாகக் காட்சி தந்தான். ஆனால் அவன் அளவற்ற பணிவோடு ஒரு விஷ்ணு பக்தனைப் போல் தென்பட்டான். `ஸ்ரீராமா! உன் திருவடி சரணம்!` என்று தஞ்சமடைந்த அவன் எழுப்பிய தீனக்குரல் உள்ளத்தை உருக்குவதாக இருந்தது.

`யாரிவர்கள்?` எனச் சற்றே சந்தேகத்தோடு அனுமனை விசாரித்தான் சுக்ரீவன். இது ராட்சஸர்களின் சதி வேலையாக இருக்கலாம். உளவு பார்க்க வந்த அரக்கர்களாக இருக்கலாம். சரணடைவதைப்போல் வந்து சைனியத்தை அழிக்க உத்தேசித்திருக்கலாம். மாயங்களில் வல்லவர்கள் அல்லவா அரக்கர்கள்? எதுவானாலும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு எந்தவிதத் துன்பமும் நேர்ந்துவிடலாகாது.

கண்களில் கனிவும் பக்தியும் பொங்க வானத்தையே பார்த்துக் கொண்டிருந்த அனுமனை சுக்ரீவன் மறுபடி கேட்டான்:

`சொல் அனுமனே! யார் இந்த அரக்கர்கள்?`

அனுமன் மெல்ல நகைத்தான்:

`இவர்கள் அரக்கர்கள் தான். ஆனால் அரக்க குணம் உடையவர்கள் அல்ல. முதலில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியிடம் சென்று இவர்களின் வருகைபற்றித் தெரிவிப்போம்.`

அனுமனும் சுக்ரீவனும் ராமலட்சுமணர்கள் இருக்கும் இடம்நோக்கி விரைந்து சென்றார்கள்.

ராமன் கனிவோடு அனுமனைப் பார்த்தான். என்ன சேதி என விழிகளாலேயே விசாரித்தான் ஸ்ரீராமன்.

`பிரபோ. ராவணனின் தம்பி விபீஷணன் தனது நான்கு மந்திரிகளுடன் தங்களைச் சரணடைய வேண்டி ஆகாய மார்க்கமாக வந்திருக்கிறான். வானில் அவர்கள் தங்கள் அழைப்பை எதிர்பார்த்து நின்று கொண்டிருக்கிறார்கள்.`

அனுமன் தெரிவித்த செய்தி சுக்ரீவனைக் கவலையில் ஆழ்த்தியது.

`ஸ்ரீராமப்ரபோ! அனுமன் முன்னரே இலங்கை சென்றிருப்பதால் நல்லவேளையாக வந்திருப்பவர்களை இனங்கண்டு கொண்டுவிட்டான். இவர்கள் ஐவரும் நம் எதிரி நாட்டிலிருந்து வருகிறார்கள். மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவர்களை உடனடியாக விரட்டிவிடுவது தான் சரி. சரணம் என்று வந்தாலும் கபட வேடம் தரிப்பதில் வல்லவர்கள் அல்லவா அரக்கர்கள்? எப்படி இவர்களை நம்புவது?`

ராமன் திருமுகத்தில் மெல்லிய முறுவல் எழுந்தது.

`சுக்ரீவா. வீடணன் நல்லவனா பொல்லாதவனா என்பதை அனுமனிடம் கேட்டு அறிவோம். சரண் என்று வந்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு அடைக்கலம் தருவதே என் குல தர்மம். ரகுவம்சத்தின் குல தர்மத்தை அந்தக் குலத்தில் பிறந்த நான் மீற இயலாது.`

சுக்ரீவன் பரபரப்போடு குறுக்கிட்டுச் சொன்னான்:

`இருக்கலாம் பிரபோ. நல்லவர்களை ஆதரிக்க வேண்டியது நியாயம் தான். ஆனால் இவன் கபடத்துடன் வந்திருந்தால் என்ன செய்வது? யோசித்துப் பாருங்கள். ரத்த பந்தமுள்ள சொந்த அண்ணனையே விரோதித்துக்கொண்டு வருபவனை நாம் எப்படி நம்புவது?`

சுக்ரீவன் சொன்ன இந்த வாசகங்களைக் கேட்டு ராமபிரான் இலக்குவனை நோக்கி ஒரு மெல்லிய முறுவல் பூத்தான். இலக்குவன் முகத்திலும் அதன் பிரதிபலிப்பாக ஓர் இளநகை அரும்பியது. சொந்த அண்ணன் வாலியை விரோதித்துக் கொண்டு ராமபிரானைச் சரணடைந்தவன் தானே இந்த சுக்ரீவன் என்ற கருத்தோட்டம் அந்த முறுவலில் உள்ளடங்கி இருந்தது. நிலவிய மௌனத்தை அனுமன் பேச்சு சீர்செய்தது.

`பிரபோ. விபீஷணரை நான் நன்கு அறிவேன். அரக்கர் குலத்தில் தப்பிப் பிறந்தவர். தர்ம நியாயங்களைப் பற்றி ஆராய்ந்து செயல்படுபவர். அன்னை சீதாதேவியை விடுவிக்க வேண்டும் என்று ராவணனிடம் ஓயாமல் எடுத்துக் கூறி வருபவர். நான் இலங்கை சென்றபோது அரக்கர் கூட்டத்தில் இப்படியும் ஒருவரா என்று அவரைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். அதனால் இப்போது சரண் என்று வந்தவரை நாம் சந்தித்துப் பேசுவதே நல்லதென்று தோன்றுகிறது. அவரை நாம் அழைத்துக் கொள்வதால் நமக்கு நன்மை விளையுமே அன்றித் தீமை விளையாது.`

சுக்ரீவன் குறுக்கிட்டான்.

`சந்தித்துப் பேசலாம். அதில் பிசகொன்றும் இல்லை. ஆனால் அடைக்கலம் அளிப்பதைப் பற்றி நன்கு யோசித்துச் செயல்பட வேண்டும்!`

ராமன் நகைத்தவாறே கூறினான்:

`சுக்ரீவா. உன்னை விடப் பெரிய மித்திரன் எனக்கு வேறு யாரும் இல்லை. வீடணனை அழைப்போம். நீயும் அவனைக் கவனி. அனுமன் சொல்வது சரியாக இருந்தால் அவனை நம்முடன் இணைத்துக்கொள்வோம். உனக்கு அவன் ஒரு நல்ல தோழனாக இருக்கட்டும். இல்லாவிட்டால் அனுப்பிவிடுவோம். எப்படியும் முடிவெடுக்கப் போவது நாம் தான். அவ்வளவு தானே?`

உன்னை விடப் பெரிய மித்திரன் இல்லை என்று ராமபிரான் சொன்ன சொற்கள் சுக்ரீவன் உள்ளத்தைக் குளிர்வித்தன. கேட்பவர்களின் உள்ளப் பாங்கு அறிந்து இதமாகத் தன் கருத்தைச் சொல்கிற ராமபிரானின் சாதுரியம் எப்போதும் போல் அனுமனை வியக்க வைத்தது.

வீடணனும் அவன் உடன் வந்த அவனது மந்திரிகளான அனலன், சரபன், ஸம்பாதி, ப்ரகஸன் என்ற நால்வரும் ராமன் முன்னிலையில் அழைத்துவரப் பட்டார்கள். கானகத்திற்கு வந்த பரதனைத் தொலைவில் கண்டு கடும்சீற்றம் கொண்ட லட்சுமணன் அதே பரதனை அருகில் கண்டதும் அவன் உள்ளக் குறிப்பை உணர்ந்து சீற்றம் மாறினானே?

அதேபோல் பக்தியே வடிவான விபீஷணனை அருகில் கண்டதும் சுக்ரீவனின் மனமும் சந்தேகங்கள் எல்லாம் நீங்கி மாறியது.

அப்பழுக்கில்லாத விபீஷணனின் கண்பார்வையும் அவன் முகத்தில் பொங்கிய அளவற்ற பக்தியும் ராமபிரான் உள்ளத்தைக் கரைத்தன. விஷ்ணு பக்தனுக்குரிய சகல லட்சணங்களுடனும் அல்லவா திகழ்கிறான் அவன்! விபீஷணன் ஒரு விம்மலுடன் பேசலானான்:

`ஸ்ரீராமப்ரபோ! ராவணனின் தம்பி நான். உடன் வந்திருப்பவர்கள் நம்பிக்கைக்குரிய் என் அமைச்சர்கள். என் அண்ணனுக்கு எத்தனையோ முறை நீதிகளை எடுத்துச் சொன்னேன். அன்னை சீதாதேவியை உடனே விட்டுவிடு, ஸ்ரீராமரிடம் சரண் புகுந்து மன்னிப்புக் கேள் என்று ஆயிரம் முறை சொன்னேன். ஆனால் நாய் வாலை நிமிர்த்த முடியவில்லை. அவன் அழிவுக்கு அவனே வித்திட்டுக் கொள்கிறான். என்ன செய்வது? அதர்மத்தின் பக்கம் நிற்க நான் விரும்பவில்லை. தர்மத்தின் பக்கம் நிற்பதென முடிவுசெய்து தங்கள் பக்கம் வந்து சேர்ந்திருக்கிறேன். உங்களையே சரண் என்று நம்பி வந்திருக்கிறேன். என்னை உங்கள் படையினரில் ஒருவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுமட்டுமே என் வேண்டுகோள். ராவண சைன்யத்தின் பலங்களையும் பலவீனங்களையும் அறிவேன். அந்த வகையில் ராவணனை வெல்வதற்கு நான் உதவிகரமாக இருப்பேன்!`

ராமன் விபீஷணனை அருகே அழைத்து அணைத்துக்கொண்டு பேசினான்:

`விபீஷணா! உன் உள்ளக் கருத்தை அறிந்துகொண்டேன். என்னையே சரண் என்று வந்தவர்களுக்கு நான் அடைக்கலம் அளிக்காமல் விடமாட்டேன். அதுமட்டுமல்ல. ராவணனை அழித்து நான் பெறப் போகும் இலங்கையை இப்போதே உனக்குத் தந்தேன். உன் தலையை அரச மகுடம் கட்டாயம் அலங்கரிக்கும். என் சகோதரர்கள் சாட்சியாக இதைச் சொல்கிறேன். நான் வாக்கு மாற மாட்டேன்!`

`பிரபோ! அரசனாவதை எதிர்பார்த்து நான் சரண்புகவில்லை. தங்களுக்குச் செய்யும் கைங்கரியத்திலேயே நிறைவடைவேன்! அதுமட்டுமே எனக்குப் போதும். உங்களுக்குக் கைங்கரியம் செய்யும் பேறு அரசாட்சி பெறுவதை விடச் சிறந்தது. என் மனம் அரசுரிமையை நாடவில்லை.`

`இருக்கட்டும். நீ எதிர்பாராத போதும் உனக்கும் அதன் வழியே உலகுக்கும் நன்மைசெய்ய வேண்டியது என் பொறுப்பல்லவா? என் விருப்பத்தை நீ தட்டலாகாது!`

சமுத்திர நீரை முகண்டு கொண்டுவந்தான் இலக்குவன். விபீஷணனை இலங்கை அரசனாக்கி அப்போதே அபிஷேகம் நிகழ்த்தப்பட்டது. இந்தச் செயலைக் கண்டு தங்கள் வெற்றி முற்றிலும் உறுதி எனக் குரங்குப் படை குதூகலம் கொண்டு ஆர்ப்பரித்தது. `மன்னர் விபீஷணர் வாழ்க!` என்ற முழக்கம் வான்வெளியை நிறைத்தது. அது ராவணன் செவிகளையும் எட்டி அவனை நடுநடுங்கச் செய்தது.

இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் அடங்கிய பின் தனிமையில் ராமபிரானைச் சந்தித்தான் லட்சுமணன். ஓர் ஐயம் என்றவாறே தயங்கிநின்றான்.

`சொல் லட்சுமணா. என்ன சந்தேகம் உனக்கு?`

`நீங்கள் வீடணனை மன்னன் என அறிவித்திருக்கிறீர்கள். வீடணனோ பலமுறை ராவணனிடம் தங்களைச் சரண்புகச் சொல்லி அறிவுறுத்தியிருக்கிறான். ராவணனின் ஆழ்மனத்திலும் நிச்சயம் அச்சம் இருக்கும். அதர்ம வழியில் செல்பவர்கள் அச்சதோடு இருப்பது தவிர்க்க இயலாதது. அச்சமில்லாததுபோல் காட்டிக் கொள்ளலாம். ஆழ்மனத்தை யாரும் ஏமாற்ற இயலாது. ஒருவேளை இன்றோ நாளையோ ராவணனே உங்களைத் தேடிவந்து சரண் புகுந்தால் என்ன செய்வது?`

`அவனுக்கும் அடைக்கலம் அளிக்க வேண்டியது தான். சரண் புகுந்தவர்களைக் காப்பாற்றாமல் என்னால் இருக்க இயலாது! அது நம் குலதர்மம் அல்லவா லட்சுமணா?`

`ஆம் பிரபோ. அப்படியானால் வீடணனை மன்னன் என அறிவித்தீர்களே? இலங்கைக்குத் தொடர்ந்து ராவணனே அரசனாக இருக்கும் சூழல் நேர்ந்தால் வீடணனுக்கு எந்த ராஜ்ஜியத்தை அளிப்பது? அவனை மன்னன் என அறிவித்த உங்கள் வாக்கு பொய்க்கக் கூடாதே?`

லட்சுமணனின் இந்தக் கேள்விக்கு ராமபிரான் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று அறிய வான்வெளியில் தேவர்கள் சூட்சும ரூபத்தில் ஆவலோடு காத்திருந்தனர். சித்திரச் செந்தாமரை முகத்தில் மீண்டும் ஒரு மெல்லிய முறுவலைத் தேக்கியவாறு ராமன் சொன்னான்:

`அதனால் என்ன லட்சுமணா? இருக்கவே இருக்கிறது அயோத்தி. அதை வீடணனுக்குக் கொடுத்தால் போயிற்று!`

பதவி ஆசையே ஒருசிறிதும் இல்லாத ராமபிரானின் இந்த அமுதமொழிகளைக் கேட்டு தேவர்கள் வானிலிருந்து தூவிய மலர்களால் அந்தக் கடற்பிரதேசம் முழுவதும் கமகமவென மணக்கத் தொடங்கியது.

26

சங்கரன் கொடுத்த வாள்!

சிவபெருமான், பார்வதி தேவி, நந்தி தேவர், பூதகணங்கள் என அனைவருமே ஆச்சரியத்துடன் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சிவலோகத்தில் சிவபெருமானின் நடனத்தைப் பார்ப்பதற்காகக் கூடியிருந்த தேவர்கள் அத்தனை பேரின் பார்வையும் இப்போது பூலோகத்தில் தான் லயித்திருந்தது.

சிவனே தன் ஆட்டத்தை நிறுத்தி விட்டு அந்த வியக்கத் தகுந்த பூலோகக் காட்சியைத் தானே பார்த்துக்கொண்டிருந்தார்? பார்வதி தேவி வைத்த விழி வாங்காமல் அந்த பூலோக சம்பவத்தை விக்கித்துக் கண்டுகொண்டிருந்தாள்.

சம்பவம் நடந்து கொண்டிருந்த இடம் இலங்கை. வனாந்திரமான ஒரு பிரதேசத்தில் யாருமற்ற தனிமையில் அமர்ந்து மிக உக்கிரமான தவத்தை மேற்கொண்டிருந்தான் பத்துத் தலைகளை உடைய ராவணேஸ்வரன். `நமசிவாய நமசிவாய` என மன ஒருமைப்பாட்டுடன் அவன் உச்சரித்த மந்திர உச்சாடனம் எட்டுத் திசைகளையும் கதிகலங்கச் செய்துகொண்டிருந்தது.

அசுரனாயிற்றே அவன்? இவ்வளவு உக்கிரமான தவம் செய்தால், சிவபிரான் நேரில் வராமல் இருக்க இயலாதே? அப்படி வந்தால் சிவனிடம் என்ன வரம் கேட்பானோ? அவன் கேட்கும் வரத்தால் உலகம் என்ன பாடு படப்போகிறதோ? பூமா தேவி கலக்கத்துடன் அவனது பயங்கரமான தவத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

நல்லவர்கள் கடும்தவம் செய்து வரம் வாங்கினால், அந்த வரத்தால் நன்மைகள் விளையும். நாடு செழிக்கும். ஆனால் பொல்லாதவர்கள் தவம் செய்து வாங்கும் வரங்களால் பூமி தடுமாறுமே?

பார்வதி தேவி தாய்மைக் கனிவோடு ராவணனைப் பார்த்துக்கொண்டிருந்தாள். எல்லோருக்கும் அவள் அன்னை அல்லவா? ராவணேஸ்வரன் அவளது தேவக் குழந்தையல்ல. அசுரக் குழந்தை. அவ்வளவு தான். அந்தப் பத்துத் தலையுடைய அசுரக் குழந்தை அப்போது செய்த செயல், அவளது விழிகளில் பரிவுக் கண்ணீரைப் பெருக்கெடுக்கச் செய்தது.

ராவணேஸ்வரன் தன் உக்கிரமான தவத்தின் இறுதிக் கட்டமாக யாகத் தீ வளர்க்கலானான். திகுதிகுவென எரிந்த அந்த நெருப்பையே சற்றுநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். சடாரென ஒரு முடிவு செய்தான்.

இத்தனை கடும் தவத்திற்குப் பின்னரும் சிவபெருமான் காட்சி தரவில்லை என்றால், நாம் இருந்தென்ன, இல்லாதிருந்தென்ன? தன் வாளை எடுத்தான். பளார் எனத் தன் தலைகளில் ஒன்றைத் தானே வெட்டித் தன் இருபது கரங்களாலும் அதை எடுத்து யாகத் தீயில் ஆகுதியாக இட்டான்.

தன் தலை சடசடத்து எரிவதை நெட்டுயிர்ப்போடு உற்றுப் பார்த்தவாறிருந்தான். ஒரு தலை இழந்த வலியும் வேதனையும் அவன் உடலை வாட்டி வதைத்தன. என்ன பயன்? அப்படியும் சிவன் காட்சி தரவில்லை.

ஆவேசம் வந்தவனாய் அடுத்தடுத்துத் தன் தலைகள் ஒன்பதையும் அவ்விதமே ஒவ்வொன்றாய் வெட்டி நெருப்பில் வீழ்த்தினான். பூமிதேவி பதற்றத்துடன் அந்தச் செயலைப் பார்த்தவாறிருந்தாள்.

இத்தனை ஆவேசமான பக்திக்கு சிவன் நேரில் வந்தே ஆகவேண்டும். அப்படி வந்தால் இவன் கேட்கும் எந்த வரத்தையும் கொடுத்தே ஆகவேண்டும். அசுரனது வலிமை பெருகினால் பூமிக்கல்லவோ கெடுதல்? தாயே பராசக்தி! என்னை நீ தான் காக்க வேண்டும் அம்மா. பூமிதேவி, அன்னை பார்வதியை நோக்கி மனப்பூர்வமாகப் பிரார்த்தனை செய்தாள்.

வானுலகிலிருந்த பார்வதி தேவி கடைக்கண்ணால் பூமித்தாயைப் பார்த்தாள். `அஞ்சாதே! நான் பார்த்துக் கொள்கிறேன்!` என சமிக்ஞை செய்து அருளினாள். பூமிதேவி தன் விழிநீரைத் துடைத்துக் கொண்டு யாருமறியாமல் பார்வதி தேவிக்குத் தன் பணிவான வந்தனங்களைத் தெரிவித்துக் கொண்டாள். பின் நடப்பதைக் கவனிக்கலானாள்.

பரமசிவன் ராவணேஸ்வரனுக்குக் காட்சிதரப் புறப்பட்டார். அன்னை பார்வதியும் உடன் புறப்பட்டாள்.

`சுவாமி!`

`என்ன தேவி?`

`ஒருமுறை பஸ்மாசுரனுக்குத் தாங்கள் அளித்த வரம் ஞாபகம் இருக்கிறதல்லவா? தான் யார் தலையைத் தொட்டாலும் சாம்பலாக வேண்டும் என்று வரம் கேட்டான் அவன். தாங்கள் தங்கள் பக்தனாயிற்றே என்று வரத்தை உடனே அருளினீர்கள். ஆனால் நடந்தது என்ன? கடைசியில் உங்கள் தலையிலேயே கைவைக்க வந்தான். பிறகு என் அண்ணா திருமால் அல்லவா மோகினி வடிவெடுத்து வந்து உங்களைக் காப்பாற்ற வேண்டியிருந்தது?`

`அந்தச் சம்பவத்தை நான் மறக்கவில்லை தேவி!`

`இந்த ராவணன் விஷயத்தில் தாங்கள் சற்று எச்சரிக்கையாக வரமளியுங்கள்.`

`முயல்வேன். ஆனால் இவ்வளவு உக்கிரமான தவம் செய்கிறான். அவன் என்ன வரம் கேட்டாலும் என்னால் மறுக்க இயலும் என்று தோன்றவில்லை.`

`மறுக்கவேண்டாம். பக்தி செய்து வரம் கேட்டால் வரமருள வேண்டியது தங்கள் கடமை. பக்தியால் தாங்கள் உருகி விடுவீர்கள். ஆனால் அவன் கேட்கும் வரத்தைச் சற்று எச்சரிக்கையோடு கவனியுங்கள். தான் நிரந்தரமாக வாழவேண்டும் என்பதுபோல் வரம் கேட்டால் தாங்கள் அருள் புரிந்து விடாதீர்கள்.`

`என் பக்தன் அவன் தேவி! அவன் அவ்விதமெல்லாம் வரம் கேட்டுவிட மாட்டான். எனினும் உன் எச்சரிக்கையை நான் கவனத்தில் கொள்வேன்!`

பேசியவாறே சிவனும் பார்வதியுமாக ராவணேஸ்வரன் இருக்குமிடத்தை நெருங்கினர்.

ராவணன் தன் பத்தாவது தலையையும் வாளால் வெட்டப் போனான். அந்த நேரத்தில் `ராவணா! நில்!` என்ற தேனினும் இனிய குரல் கேட்டு திகைத்து நிமிர்ந்து பார்த்தான்.

ஆ! என்ன அற்புதமான காட்சி! தோடுடைய செவியன் விடையேறி தூவெண் மதிசூடி காடுடைய சுடலைப் பொடி பூசி உள்ளம் கவர் கள்வனாய் எதிரே நின்றுகொண்டிருந்தார் சிவபெருமான். பொன்னார் மேனியனாய்ப் புலித்தோலை அரைக்கசைத்து மின்னார் செஞ்சடை

மேல் மிளிர் கொன்றை அணிந்து அவர் நின்ற திருக்கோலம் உலகின் மொத்த எழிலையும் ஒன்று திரட்டி வைத்தாற் போல் இருந்தது. சிவனின் இடப்பாகத்தில் உறையும் உமை நிகழ்வதை எச்சரிக்கையோடு கவனிக்கலானாள்.

`ராவணா! என்ன வரம் வேண்டுமோ கேள். ஆனால் நீ கேட்பதற்கும் முன்பாக உனக்கு ஒரு வரம் தந்தேன். என் அருள்வேண்டி நீ நெருப்பிலிட்ட அத்தனை தலைகளையும் மறுபடி நீ அடையப் பெறுவாய்!`

என்ன ஆச்சரியம்! மறுகணம் ராவணன் மீண்டும் தனது பத்துத் தலைகளையும் பெற்றான். ஒவ்வொன்றாக மறுபடி மறுபடி முளைத்த தன் தலைகளைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த ராவணன் தான் விரும்பிய வரத்தைக் கேட்கலானான்.

`என் தெய்வமே! தாங்கள் உள்ள நாள் வரை நானும் இருந்து தங்களைப் பக்தி செய்ய விழைகிறேன். தங்களைப் போலவே எனக்கும் அழிவே இல்லாத வரம் அருளுங்கள் சுவாமி!`

அவன் கேட்ட வரத்தைக் கேட்டு பூமிதேவி நடுநடுங்கினாள். ஏற்கெனவே பார்வதியால் எச்சரிக்கப்பட்டிருந்த சிவபெருமான் மெல்லிய முறுவல் பூத்தார்.

`ராவணா! நீ என்றும் அழியாத தெய்வநிலையைக் கேட்கிறாய். அத்தகைய வரத்தை யாருக்கும் வழங்கும் வழக்கமில்லை. எனவே ஏதேனும் யுக்தி செய்து வேறொரு வரம் கேள். அந்த வரத்தால் அழிவில்லாத நிலை உனக்கு ஏற்படுமாறு செய்துகொள். நேரடியாக என்றும் அழியாமல் இருக்க வேண்டும் என்ற வரம் தருதல் இயலாது.`

ராவணன் சற்று நேரம் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான். பின்னர் ஒரு முடிவு செய்தான்.

`சுவாமி! எப்பேர்ப்பட்ட பலசாலியான எதிரி எ்திர்ப்பட்டாலும் அந்த எதிரியை அழிக்கக் கூடிய வாள் ஒன்று கொடுங்கள். அந்த வாள் போதும் எனக்கு. அதை வைத்துக் கொண்டே எமன் வந்தாலும் எமனையும் நான் வென்று விடுவேன்.`

பரமசிவன் கலகலவென நகைத்தார். `இதோ வைத்துக் கொள்!` எனக் கையை நீட்டினார். காற்றிலிருந்து தோன்றியது ஒரு மரகத வாள்! பளபளவென காண்பார் கண்ணைப் பறிக்கும் வகையில் ஒளிவீசிய அந்த வாள் அவர் கையிலிருந்து ராவணேஸ்வரன் கைக்கு மாறிற்று.

`ராவணா! இது சங்கரன் கொடுத்த வாள். இந்த வாள் எந்த எதிரியையும் கொல்லும் சக்தி வாய்ந்தது. மும்மூர்த்திகளைத் தவிர வேறு

எவரையும் அழிக்கக் கூடியது! ஈரேழு பதினான்கு உலகங்களிலும் இந்த வாளுக்கு இணையான படைக்கலன் வேறொன்று இல்லை.`

வாளைப் பெற்ற ராவணன் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. மிகுந்த மகிழ்ச்சியோடும் நன்றிப் பெருக்கோடும் சிவனது காலடியில் விழுந்து வணங்கினான் அவன். அப்போது பார்வதி ராவணனையே உற்றுப் பார்த்தவாறிருந்தாள்.

என்ன வியப்பு! ராவணன் சிவபெருமானது காலில் விழுந்து வணங்கியபோது அவனது ஐந்து தலைகள் மட்டும் தரையைத் தொடாது நிமிர்ந்தே இருந்தன! மற்ற தலைகள் ஐந்தும் சிவபெருமானின் காலடியில் தரையில் விழுந்து பணிந்தன.

சிவனும் பார்வதியும் ராவணனின் காட்சியிலிருந்து மறைந்து சிவலோகம் சென்று சேர்ந்தனர்.

பார்வதி திகைப்புடன் சிவபெருமானை வினவினாள்:

`நாதா! நம் பக்தன் தங்களை வணங்கியபோது ஐந்து தலைகள் மட்டும் தரையைத் தொட்டு வணங்காத மர்மமென்ன?`

`நம் பக்தன் என நீ சொல்வது சரியல்ல தேவி! அவன் என் பக்தன்.`

`அப்படியானால் அவன் என் பக்தனும் தானே? நான் உங்களில் பாதியல்லவா?`

`இருக்கலாம். ஆனால் நீ பெண். ராவணன் பெண்களை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை.`

`அவனைப் பெற்ற தாயும் ஒரு பெண்தானே? தன் தாயையே மதிக்க மாட்டானா? தாயைக் கூட வணங்கமாட்டானா?`

`பெண்கள் மேல் அவனுக்கு மரியாதை இல்லை தேவி!`

`என்ன மதியீனம் இது? ஆணும் பெண்ணும் முகத்தின் இரண்டு கண்களைப் போல என்ற உண்மையை அவன் உணரவில்லையா?`

`உணரவில்லை என்பது மட்டுமல்ல. அதனால் தான் வணங்கும்போது அவனது ஐந்து தலைகள் தரையில் பதியவில்லை.`

`இது என்ன புது விளக்கம்?`

`தேவி! நீ என் இடப்பாகத்தில் உறைகிறாய் அல்லவா? அவன் பெண்களுக்குத் தலை வணங்க மாட்டான். அதனால் தான் தனது தலைகளில் என் இடப்பக்கம் படியக் கூடிய ஐந்து தலைகளை அவ்விதம் தரையில் படியாதவாறு நிமிர்த்திக் கொண்டான்!`

இந்த விளக்கத்தைக் கேட்ட பார்வதி தேவி கடகடவென உக்கிரமாக நகைத்தாள். என்ன மதியீனம் என்ற சொற்கள் பராசக்தியின் உதடுகளிலிருந்து வெளிப்பட்டன. பிறகு சீற்றத்தோடு சொன்னாள் பார்வதி.

`சுவாமி. தாங்கள் வரம் தந்தீர்கள். ஆனால் நான் சாபம் தருகிறேன் அவனுக்கு. நானும் நீங்களும் ஒன்று தான் என்பதை அறியாத அந்த மூடன் நான் பெண் என்பதால் தானே என்னை வணங்க மறுத்தான்? அவனது அழிவு ஒரு பெண்ணாலேயே நேரட்டும். ஒரு பெண்ணை மோகித்து அவள் காலில் விழுந்து என்னைத் திருமணம் செய்துகொள் என்று அவன் கெஞ்சட்டும். அவள் அவனது கெஞ்சலுக்கு இணங்காமல் போகட்டும். அவளே அவனது சர்வ நாசத்திற்கும் காரணம் ஆகட்டும். அவனது பட்டம், பதவி, புகழ் அனைத்தையும் இழந்து இறுதியில் அந்தப் பெண்ணாலேயே அவன் உயிரையும் இழப்பான். இது தங்களில் ஒரு பாதியான என் சாபம் அவனுக்கு! உங்கள் வாள் அப்போது அவனைக் காக்காது.`

இதைக் கேட்ட நந்திதேவர் மிகுந்த மகிழ்ச்சியோடு மத்தளம் கொட்டினார். பூத கணங்கள் `அன்னை வாழ்க! வாழ்க!` என்று ஆர்ப்பரித்தனர். சிவன் `அப்படியே ஆகுக!` என்று தன்னில் பாதியான பார்வதியின் சொற்களை ஏற்று வாழ்த்தினார். பார்வதி தேவி பூமிதேவியைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். பூமித்தாயின் தலை நன்றியுடன் பார்வதியின் திருவடிகளை மானசீகமாகப் பணிந்தது.



27

அங்கதனை அசைக்க முடியாது!

தன் முன்னால் கால்பரப்பி கம்பீரமாக நின்று கொண்டிருந்த குட்டிக் குரங்கைப் பார்த்து ராவணனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. குரங்கு சிறிய குரங்குதான். ஆனால் அதன் கண்களில் தெறித்த வீரமும் முகத்தில் தென்பட்ட பொலிவும் வியக்கத்தக்க வகையில் இருந்தன.

அந்த ராஜசபையில் அமர்ந்திருந்த மகாராணி மண்டோதரியும் அந்தக் குரங்கையே பார்த்தாள். அவளிடமிருந்து ஒரு பெருமூச்சு புறப்பட்டது. நிச்சயம் ராமனிடமிருந்து வந்திருக்கும் குரங்காகத் தான் இருக்கும் இது. ராமன் அணியில் ஏராளமான வானரங்கள் திரண்டிருப்பதாகவும் அனைவரும் இலங்கை மதில்சுவருக்கு வெளியே முகாமிட்டிருப்பதாகவும் ஒற்றர்கள் பலநாட்கள் முன்பே செய்தி கொண்டுவந்துவிட்டார்கள். சீதையை ராமனிடம் சேர்ப்பித்துவிடுமாறு தான் என்ன சொல்லியும் கேட்காத ராவணன் இந்தக் குட்டிக் குரங்கு சொல்லியா கேட்கப் போகிறான்?

ராஜசபை முழுவதுமே அந்தக் குரங்கைத் தான் பிரமிப்போடு பார்த்துக் கொண்டிருந்தது. எப்படி இலங்கையின் வானளாவிய மதில் தாண்டியது இந்தக் குரங்கு? போகட்டும். எத்தனை கட்டுக்காவல் உள்ள இடம்? எல்லா இடங்களிலும் தப்பி நேரடியாக மகாராஜா வீற்றிருக்கும் ராஜசபைக்குள் வந்து நிற்கிறதே இது? எப்படி சாத்தியப்பட்டது இது? என்ன தைரியம் இதற்கு?

ராவணனின் புதல்வன் இந்திரஜித் அந்தக்

குரங்கையே பார்த்துக் கொண்டிருந்தான். அதன் வாலை முறுக்கி அதன் உடலை ஒரு திருகு திருகி வெளியே தூக்கி வீசினால் என்ன என்று அவன் கைகள் பரபரத்தன. அந்தக் குரங்கின் முகத்தில் தென்பட்ட அலட்சியம் அவனுக்கு எரிச்சல் ஏற்படுத்தியது. இத்தனை வீரர்களையும் கண்டுகொள்ளாமல் அது ஏளனத்தோடு ராவணனைப் பார்த்துக் கொண்டிருந்தது.

`யார் நீ?`

ராவணன் உறுமினான். கடகடவென்று அந்தக் குரங்கு நகைத்தது.

`முழுமுதற் கடவுளேயான ஸ்ரீராமபிரானின் தூதன் நான். அங்கதன் என்பது என் பெயர். உன்னை என் தொட்டிலில் தான் என் தந்தை வாலி விளையாட்டு பொம்மையாகச் சில நாட்கள் கட்டி வைத்திருந்தார். என்னை யார் என்று கேட்டாயே? ஆனால் நீ யார் என்று நான் கேட்கப் போவதில்லை. பிறன் மனைவிமேல் ஆசை வைக்கும் அற்பன் நீ என்பதுதான் இப்போது உலகப் பிரசித்தமாகி விட்டதே? அதைப் பற்றிய அவமானத்தைக் கூட லட்சியம் செய்யாத அறிவிலி நீ என்பது எனக்கு மட்டுமல்ல, எங்கள் அணியில் உள்ள எல்லோருக்குமே தெரியும்.`

`அங்கதனா நீ? அற்பப் பதரே! உனக்கு சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றிப் பேசாதே. எதன் பொருட்டு நீ இங்கே வந்தாய்? அதை மட்டும் சொல்!`

`உன்னை எச்சரிக்க வந்தேன் ராவணா! எங்கள் தேவி சீதாப்பிராட்டியை ஸ்ரீராமபிரானிடம் ஒப்படைத்து விடு. அவரிடம் சரண் புகு. உன்னை அவர் கட்டாயம் மன்னிப்பார். உயிர் பிழைத்துப் போ என்று விட்டுவிடுவார். தன்னைச் சரண் புகுந்தவர் யாராயினும் ரட்சிக்கிறவர் எங்கள் பிரபு. உன் உயிர் மேல் உனக்கு அக்கறை இருந்தால் இது ஒன்றுதான் நீ தப்புவதற்கான ஒரே உபாயம். நீ ஒரு காலத்தில் என் தந்தையின் நண்பன் என்று அறிந்தேன். அதனால் உனக்கு ஒரு நன்மை செய்யலாம் என்று கருதியே இந்த அறிவுரையைச் சொல்கிறேன். அதன்பொருட்டே இங்கு வந்தேன்.`

`முட்டாள் குரங்கே! உன்னால் என்ன செய்ய முடியும்? உங்கள் ராமனால் தான் எங்களை என்ன செய்துவிட முடியும்? எங்கள் அணியில் எத்தனை வீராதி வீரர்கள் இருக்கிறார்கள் தெரியுமா?`

அங்கதன் கடகடவென்று நகைத்தான்.

`சத்தியமும் தர்ம நெறியும் எந்த அணியில் இருக்கிறதோ அந்த அணி வீரர்கள் தான் உற்சாகமாகப் போரிடுவார்கள் ராவணா! உன் அணியில் இருக்கும் வீரர்களுக்கு அவர்கள் போரிடத் தொடங்கும்போது

அவர்களின் மன்னன் செய்த அநியாயத்திற்குத் துணைபோகிறோம் என்று தெரியும். அது போதுமே அவர்களின் வீரத்தைக் குலைக்க. போகட்டும். இதோ பார் உன் முன் என் இரு கால்களையும் பரப்பிக் காலூன்றி நிற்கிறேன். உங்கள் வீரர்களில் யாரேனும் ஒருவர் என் காலைச் சற்றேனும் அசைத்துப் பார்க்கட்டும். அது நடந்துவிட்டால் உங்கள் அணியிலும் வீரர்கள் உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.`

அங்கதன் சவால் விட்டான். இந்தச் சவாலை ஏற்பவர்கள் யாரும் இல்லையா என்பதுபோல் ராவணன் ராஜசபை நோக்கித் தன் பார்வையைப் படரவிட்டான்.

திடீரென எழுந்த ஒரு மந்திரி நகைத்தவாறே அங்கதனின் அருகே சென்று அவன் காலை அசைக்க முற்பட்டான். என்ன அதிசயம்! அந்தக் கால் ஒருசிறிதும் அசைவதாயில்லை. கால்கள் அப்படியே பூமிக்குள் வேர் விட்டு உறுதிபட நின்றுவிட்டனபோல் தோன்றின.

அங்கதனைக் குறைவாக எடைபோட்ட அந்த மந்திரியின் முகத்தில் முத்துமுத்தாக வியர்வைத் துளிகள் அரும்பின. சோர்வோடு அவன் தன் அரியணையில் போய் அமர்ந்தான்.

உறுமியவாறே எழுந்த இன்னொரு மந்திரி தானும் தன்னால் இயன்றதைச் செய்துபார்த்தான். அவை கால்களாகத் தெரியவில்லை. அந்த மண்டபத்தில் திடீரென முளைத்த தூண்கள் போல் தென்பட்டன. அவனும் முகத்தைத் துடைத்துக் கொண்டு தன் இருப்பிடத்தில் போய் அமர்ந்தான்.

ஒவ்வொருவராகத் தோல்வி அடைவதைக் கண்டு ராவணனுக்கு எரிச்சல் வந்தது. இந்திரஜித் பக்கம் பார்த்தான் அவன். இதற்காகவே காத்திருந்ததுபோல் இந்திரஜித் ஆவலோடு எழுந்தான்.

`ஜெய் ஸ்ரீராம்!` என்றவாறே அங்கதன் அவனை வரவேற்றான். இந்திரஜித் எவ்வளவோ உலுக்கிப் பார்த்தான். ஆனால் என்ன கால்கள் அவை! கால்கள் தானா இல்லை இரும்பு மலைகளா! மாவீரனான இந்திரஜித்தினாலும் அந்தக் கால்களை ஒருசிறிதும் அசைக்க இயலவில்லை. ராஜசபையிலிருந்த அத்தனை பேரும் திகைப்பில் ஆழ்ந்திருந்தார்கள்.

மண்டோதரி வியப்புடன் நடப்பது அனைத்தையும் பார்த்தவாறிருந்தாள். இந்தச் சிறிய குரங்கிற்கே இத்தனை வலிமை இருக்குமானால் மற்ற குரங்குகளை இலங்கை வீரர்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள் என்ற எண்ணத்தில் அவள் முகத்தில் கவலையின் ரேகைகள் படர்ந்தன.

`அடேய்! உன் கால்களை என்ன செய்கிறேன் பார்!` என்றவாறே

ராவணனே அங்கதனின் கால்களை அசைக்கும் பொருட்டு சிம்மாசனத்தை விட்டு எழுந்தான். இந்தத் திருப்பத்தை யாரும் எதிர்பார்க்காததால் எல்லோரும் பரபரப்போடு அந்தக் காட்சியைப் பார்க்கத் தொடங்கினார்கள்.

மண்டோதரியின் மனம் படபடத்தது. இதிலேயே ராவணன் தோல்வியைத் தழுவினால் அவனை இலங்கை வீரர்கள் ஒருவர் கூட மதிக்கமாட்டார்களே! இந்திரஜித்தே தோற்றுவிட்டான். ஆனால் ராவணன் தோற்க வாய்ப்பில்லை. மண்டோதரி பதற்றத்துடன் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ராவணன் தன் கால்களை அசைப்பதற்காக அருகே வந்ததும், அங்கதன் சடாரெனத் தன் கால்களைத் தள்ளி வைத்துக் கொண்டான். திடீரென அவன் கால்களை நகர்த்தக் கூடும் என்பதை ராவணன் எதிர்பாராததால் அவன் தரையில் குப்புற விழுந்தான். அவனது மகுடங்களில் ஒன்று கீழே உருண்டது. அந்த மகுடத்தை எடுத்து வாயிலின் வழியே வெளியே வானத்தில் வீசினான் அங்கதன். பிறகு கடகடவென நகைத்தவாறே சொல்லலானான்:

`ராவணா! என் சவால் உன் சபையில் உள்ள பிற வீரர்களுக்குத் தானே தவிர உனக்கல்ல. உன்னிடம் நான் சவால் விடவில்லையே? பிறகு ஏன் நீயாக வந்து என் காலில் விழுகிறாய்? உன்னை விட வயதில் சிறியவனான நான் உனக்கு ஆசி வழங்குவது பொருத்தமாக இராதே? என் காலில் விழுந்த நீ ஸ்ரீராமபிரான் காலில் விழுந்தால் தப்பிப்பாய். இலங்கையும் தப்பிக்கும். அதைச் சொல்லவே நான் வந்தேன். சரி. யோசித்து முடிவுசெய். நான் போய்வரவா?`

அங்கதனின் பேச்சைக் கேட்டு ராவணன் கடும் சீற்றம் அடைந்தான்.

`அடேய்! யாரங்கே? இந்தக் குரங்கைப் பிடித்துக் கயிற்றால் கட்டுங்கள் சொல்கிறேன்!` என்று உரக்க ஆணையிட்டான்.

`ஆனால் அதுதானே நடக்காது!` என்ற அங்கதன் ஜெய் ஸ்ரீராம் என்றவாறே வாயில் வழியே ஆகாயத்தில் தாவினான். எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவன் தோற்றம் விண்ணில் மறைந்தது.

அந்த ராஜசபை முழுவதும் வெலவெலத்துப் போய் அமர்ந்திருந்தது. மண்டோதரி ஒரு பெருமூச்சோடு தன் கணவனைப் பார்த்தாள். மனைவி சொல்லியே கேட்காதவன் ஒரு மந்தி சொல்லியா கேட்கப் போகிறான் என்ற எண்ணத்தில் அவளிடம் சோர்வு எழுந்தது. அவள் மெல்ல எழுந்து சிவபெருமானை வழிபடுவதன் பொருட்டு பூஜையறையை நோக்கி நடந்தாள்.

தன் முன்னே திடீரென வந்து விழுந்த மகுடத்தைப் பார்த்து ராமபிரான் திகைத்தான். இது ராவணனின் பத்துத் தலைகளில் இருக்கும் மகுடங்களில் ஒரு மகுடமல்லவா என்று விபீஷணன் வியந்தான்.

அதற்குள் அங்கு தாவி வந்த அங்கதன், ராமபிரானைப் பணிந்து நடந்தவற்றைச் சொன்னான். ஏராளமான குரங்குகள், சுக்கிரீவன், அனுமான், ஜாம்பவான், இலக்குவன், விபீஷணன் முதலிய அனைவரும் அங்கதன் சொல்வதை ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

`ஆனாலும் எனக்கு இப்போதும் கூட மிகவும் துக்கமாய்த்தான் இருக்கிறது ராமப்பிரபோ!` என்றான் அங்கதன் தன் முகத்தில் பொய்க்கவலையைத் தேக்கி.

`அப்படியென்ன துக்கம் உனக்கு?` என்று பரிவோடு கேட்டான் ராமபிரான்.

`இன்னும் விழுவதற்கு ராவணன் தலையில் ஒன்பது மகுடங்கள் காத்துக்கொண்டிருக்கின்றனவே!`

சிரிக்காமல் அங்கதன் இதைச் சொன்னபோது, ராமன் உள்ளிட்ட அத்தனை பேரும் கலகலவென்று சிரித்தார்கள். அந்தச் சிரிப்புச் சப்தம் மதிலைத் தாண்டி இலங்கை நகரில் எதிரொலித்தது. அதைக் கேட்ட ராவணன் வயிறு கலங்கியது.



28

காற்றின் குரல்!

லட்சுமணனுக்குத் திகைப்பாக இருந்தது. யார் இந்த இளைஞன்? போர்க்களத்தையே ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறானே?

எத்தனை அம்புகள் விட்டும் ஓர் அம்பாவது அவன் மார்பைத் துளைக்கவில்லை. மார்பில் ஏதேனும் கவசம் இருக்கிறதோ என்று பார்த்தால் எந்தக் கவசத்தையும் காணோம். அவன் மார்பு எலும்பாலும் தோலாலும் செய்யப்படாமல் பாறாங்கல்லால் செய்யப் பட்டிருக்குமோ?

அப்படியானாலும் கூட நம் அம்பு பாறாங்கல்லையும் துளைக்குமே? இந்த இளைஞனைத் தாக்கி எத்தனை அம்புகள் வீணாகிவிட்டன? அவனிடம் ஒரு சிறு காயத்தையும் காணோம். ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டே போரிட்டுக் கொண்டிருக்கிறான்.

மறுபடியும் ஓர் அம்பை அவனை நோக்கிக் குறிவைத்தவாறே போர்க்களத்தில் தன் அருகே நின்று கொண்டிருந்த விபீஷணனிடம் கேட்டான் லட்சுமணன்:

`விபீஷணரே! உங்கள் குலத்தில் உதித்த இந்த இளைஞன் அபாரமான வில்லாற்றலைக் காட்டுகிறானே? நான் என்ன செய்தும் என் அம்பு அவன் மார்பைத் துளைக்கவில்லை. யார் இந்த வீரன்?`

விபீஷணன் யோசனையோடு பேசத் தொடங்கினான்.

`என் குலத்தவரின் ரகசியங்கள் முழுவதையும் நான் அறிந்தவன். ஆனாலும் இந்த இளைஞனின் கவசமில்லாத மார்பை அம்பு ஏன் துளைக்கவில்லை என்று என்னால் அறியக் கூடவில்லை. இவன் என் அண்ணா ராவணனின் இரண்டாம் மனைவியான தான்யமாலி அண்ணியின் புதல்வன். பெயர் அதிகாயன்.`

`இருக்கட்டும். மறுமுறையும் முயற்சிக்கிறேன். என் அம்புகளின் ஆற்றல் வீணாவது ஏன் என்றுதான் ஆச்சரியமாக இருக்கிறது!`

சொல்லியவாறே லட்சுமணன் மீண்டும் ஓர் அம்பை அதிகாயனின் மார்பைக் குறிவைத்து எய்தான். என்ன ஆச்சரியம்! அந்த அம்பும் பாறாங்கல்லில் மோதிய கூழாங்கல் கீழே விழுவது மாதிரி ணங்கென்ற சப்தத்துடன் மார்பில் மோதி, பின் பயனில்லாது திரும்பியது. கலகலவென்று சிரித்தான் அதிகாயன்.

என்ன செய்வது இப்போது? லட்சுமணனின் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின. போர்க்களத்தில் தொலைவிலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த ராமன் முகத்தில் யோசனைக் குறிகள் தோன்றின. லட்சுமணன் திகைத்து நின்றதைக் கண்டு விபீஷணன் அதிகாயனின் கடந்த காலச் சாதனையைச் சொல்லலானான்.

சிவபெருமானின் இமயமலை மேல் ஏறிக்குதித்து அட்டகாசம் செய்த அந்தச் சிறுவனைப் பார்த்து சிவன் நகைத்தான். ஆனால் பார்வதி கடும் சீற்றமடைந்தாள். யார் இந்தச் சிறுவன்? நம்மை மதியாமல் மலையில் குதித்து அதிர்வுகளை ஏற்படுத்துகிறான்? இது சிவலோகம் என்பதை அவன் அறியவில்லையா? என்ன துணிச்சல்!

`சுவாமி! இந்தச் சிறுவன் மிகுந்த பலசாலியாக இருப்பான் போல் தோன்றுகிறதே? நமது இமயமலையையே அதிர வைக்கிறானே? யார் இவன்?`

`இமயமலையையே தூக்கி உன் மனத்தில் சீற்றத்தை உண்டாக்கினானே ராவணன்? அவனை ஞாபகமிருக்கிறதா தேவி?`

`ஓ! அந்தப் பத்துத் தலை அரக்கனா? நீங்கள் மலையைக் கட்டைவிரலால் அழுத்தியதும் மலையின் கீழே சிக்கிக் கதறினானே? அவன் தன் நரம்புகளையே மீட்டி வீணா கானம் இசைக்க, நீங்கள் மகிழ்ந்து அவனை மன்னித்தீர்களே? அவனுக்கு வாள் ஒன்றையும் பரிசாகத் தந்தீர்களே?`

`ஆம். அதே அரக்கன் தான். ஆணவத்திற்குப் பெயர்போன அந்த அரக்கனின் மகன் தான் இந்தச் சிறுவன்.`

`அப்பா பட்டது போதவில்லையாமா? இப்போது ஏன் இவன் வந்து

இப்படித் துள்ளுகிறான்? ஒரு சிறுவனால் என் அன்புக்குரிய இமயமலை அதிர்வது கண்டு என் நெஞ்சம் கொதிக்கிறது! இவனை அடக்குங்கள் சுவாமி!`

`அப்படியே ஆகட்டும் தேவி!`

அடுத்த கணம் சிவபெருமான் திரிசூலத்தை எடுத்து அவனை நோக்கி எறிந்தார். திரிசூலம் அக்கினிபோல் சீறிக்கொண்டு பாய்ந்தது. அவன் இறக்கப் போது உறுதி என்றெண்ணி பூத கணங்கள் எல்லாம் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தன. வானுலகத் தேவர்கள் அனைவரும் சக்தி நிறைந்த திரிசூலம் நிகழ்த்தவிருக்கும் வதத்தைக் காண ஆவலாய் வானில் கூடினார்கள். ஆனால் யாரும் எதிர்பாராத ஓர் அதிசயம் அப்போது நிகழ்ந்தது.

அதிகாயன் தன்னை நோக்கி வரும் திரிசூலத்தை உற்றுப் பார்த்தான். அது தன் தந்தையின் வழிபடு கடவுளான சிவபெருமானின் ஆயுதம் என்பதையும் பார்த்தவுடனே அறிந்துகொண்டான். மறுகணம் தன் இரு கரங்களால் அந்தத் திரிசூலத்தைப் பாய்ந்து பற்றிக் கக்கத்தில் இடுக்கிக் கொணடு மிகுந்த பணிவோடு சிவபெருமானையும் பார்வதி தேவியையும் வணங்கி நின்றான்.

பார்வதிக்கு அந்தச் சிறுவனின் சாமர்த்தியம் மகிழ்ச்சியைத் தந்தது. சீறிக்கொண்டு வந்த திரிசூலத்தைப் பாய்ந்து பிடித்துவிட்டானே? போருக்கு வந்தவன் அல்ல, ஏதோ விளையாட்டாய் மலையில் குதித்தவன் தான் என்ற செய்தியைத்தான் அவனது அளவுகடந்த பணிவு அறிவித்தது.

சிவன் மலர்ச்சியோடு அதிகாயனைத் தன் அருகே வரச் சொன்னார். `என் தந்தையின் வழிபடு தெய்வமாகிய தாங்கள் எனக்கும் தெய்வமல்லவா!` என்று அருகே வந்து கைகூப்பியவாறு தொழுத அதிகாயன் மேல் சிவனுக்கு அன்பு பெருகியது. பல அஸ்திரங்களை வரமாய் அருளினார். பார்வதி `இனிமேல் இமய மலையில் வந்து இவ்விதமெல்லாம் குதிக்கலாகாது` என்று செல்லமாய் அவனுக்கு அறிவுறுத்தி அவனை ஆசி கூறி அனுப்பி வைத்தாள்.

விபீஷணன் கூறிய தகவல்கள் அனைத்தையும் கேட்ட லட்சுமணன் அதிகாயன் மாவீரன் தான் என்பதைப் புரிந்துகொண்டான். ஆனால் அதிகாயனின் அஸ்திரங்களையெல்லாம் தூள் தூளாக்கிய பிறகும் தன் அம்பு அவன் மார்பில் பாயாமல் இருப்பதேன் என்ற கேள்விக்கு மட்டும் விபீஷணனிடமிருந்து பதில் கிட்டவில்லை.

வானுலகமும் இந்த நிகழ்வை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தது. என்ன செய்வது இப்போது? அதிகாயன் வதம் நிகழ்ந்தால் தான் அதன்பிறகு ராவணவதம் நிகழும். அதிகாயனே இறக்கவில்லை என்றால்

தொடர்ந்து அவன்தான் போரில் நிற்பானே தவிர ராவணேஸ்வரன் போருக்கே வரமாட்டானே?

தேவர்கள் ஏதேனும் ஓர் உபாயம் காணவேண்டி இந்திரனைச் சரணடைந்தனர். யோசனையில் ஆழ்ந்த இந்திரன் வாயு பகவானை அழைத்தான். ஒரு ரகசியத்தைச் சொல்லி, இந்த விஷயத்தை லட்சுமணன் காதில் யாரும் அறியாமல் சென்று சொல் என்று வாயுவை அனுப்பிவைத்தான்.

யுத்த களத்தில் தன் காதில் சிலுசிலுவென்று திடீரெனத் தென்றல் வீசுவதைக் கண்டு லட்சுமணன் திகைப்படைந்தான். அந்தத் தென்றல் ஏதோ ரகசியத்தைக் கிசுகிசுக்கிறதே? வில்லை வளைத்தவாறே அந்த ரகசியத்தைச் செவிமடுக்கலானான் லட்சுமணன்.

`லட்சுமணா! நான் பேசுவது உன்னைத் தவிர வேறு யாருக்கும் கேட்காது. ரகசியமாக உன் காதுக்குள் புகுந்து இந்தச் செய்தியைச் சொல்கிறேன். இதைச் சொல்லச் சொல்லி எனக்கு தேவேந்திரன் கட்டளை இட்டான்.

நான் உன் அணியைச் சார்ந்த பராக்கிரமசாலி அனுமனின் தந்தை. அந்த வகையில் நானும் உங்கள் அணி சார்ந்தவன் தான். எனவே என் வார்த்தையை நீ நம்பலாம்.

அதிகாயன் நெடுந்தவம் செய்து பிரமனிடமிருந்து ஒரு கவசம் பெற்றிருக்கிறான். அதைத் தரித்தே போர்க்களம் வந்திருக்கிறான். ஆனால் அந்தக் கவசம் இருப்பது யார் கண்ணுக்கும் தெரியாது. அப்படி ஒரு வரமும் பெற்றிருக்கிறான் அவன்.

நீ அந்தக் கவசத்தை முதலில் உடைத்தால் அன்றி அவனைக் கொல்வது என்பது ஒருநாளும் இயலாது. கவசத்தை நோக்கிக் குறி வைப்பாயாக. கவசம் உடைந்ததும் உன்னால் அவனைச் சுலபமாகக் கொன்றுவிட முடியும்! வேறு எந்த அஸ்திரத்தாலும் அவன் கவசத்தை உடைக்க இயலாது. பிரம்மன் தந்த கவசத்தை உடைக்க பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகிப்பாயாக. அது ஒன்றே அதிகாயனை அழிக்கும் வழி. இதுவே தேவேந்திரன் உன்னிடம் சொல்லச் சொல்லிச் சொன்னது! தாமதிக்க வேண்டாம். பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்துவிடு.`

சொல்லிவிட்டு வாயுபகவான் போகிற போக்கில் லட்சுமணன் போர்புரிவதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த தன் மகன் அனுமனின் தலையைத் தடவிக் கொடுத்துவிட்டுப் போனான். தன் தந்தையின் காற்றுக் கரம் தன்னைத் தடவிச் செல்வதை உணர்ந்த

அனுமன் கைகூப்பிக் கும்பிட்டான். திடீரென அனுமன் யாரை வணங்குகிறான் என்றறியாமல் சக வானரங்கள் திகைத்தன.

ரகசியம் அறிந்த லட்சுமணன் கடகடவென நகைத்தவாறே பிரம்மாஸ்திரத்தை எடுத்தான். அதிகாயனின் மார்பை நோக்கிக் குறிவைத்துச் செலுத்தினான். பிரம்மாஸ்திரம் கடும் சீற்றத்துடன் பாய்ந்து புறப்பட்டது.

அடுத்த கணம் அதிகாயன் மார்புக் கவசத்தைப் பிளந்துகொண்டு உள்ளே பாய்ந்தது அது. அலறியவாறே உயிரற்ற மரமாய் மண்ணில் சரிந்தான் அதிகாயன்.

அந்தச் செய்தி ஒற்றர்களால் உடனே ராவணன் அரண்மனைக்குத் தெரிவிக்கப்பட்டது. புதல்வனை இழந்த தான்யமாலிகையின் அழுகுரல் இலங்கை மக்களிடம் பெரும் அச்சத்தை உண்டாக்கியது. விரைவில் இலங்கையை இருள் சூழப் போவதை எண்ணி அவர்கள் மனம் கலங்கியது.



29

தப்பியவன் செய்த தந்திரம்!

மகாராணி மண்டோதரி ராஜசபையில் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தாள். அவள் முகத்தில் சோகத்தின் சாயல் படர்ந்திருந்தது.

அவள் அருகே இருந்த சிம்மாசனத்தில் ராவணன் வீற்றிருந்தான்.

தலையில் மகுடமும் மார்பில் கவசமுமாய் அவன் கம்பீரத்திற்கு ஒரு குறைவும் இல்லை. அவன் அகங்காரம் அவன் விழிகளில் வழக்கம்போல் இப்போதும் தெறித்துக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு நாளும் காலை சபை கூடுவது வழக்கம். அந்தப்படிக்கு, இன்றும் வழக்கம்போல் அவர்கள் இருவரும் வந்து சபாமண்டபத்தில் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் சபை கூடவில்லை.

கூடவேண்டுமானால் சபை உறுப்பினர்கள் வரவேண்டும். மந்திரி பிரதானிகள் வரவேண்டும். அப்படி யாரும் சபைக்கு வரவில்லை.

`ஏன் யாரும் இன்னும் வரவில்லை?` என்று மண்டோதரியிடம் விசாரித்தான் ராவணன். மண்டோதரி கசப்பும் சலிப்பும் நிறைந்த குரலில் பதில் சொன்னாள்:

`பிரபோ! சபையில் கூடுவதற்கு யாருமில்லை!`

`என்ன சொல்கிறாய் மண்டோதரி?`

`ஆம் பிரபோ. வழக்கமாக சபையில் கூடும் மந்திரி பிரதானிகள் எல்லாம் ஒவ்வொருவராக

போரில் ராமன் அம்பால் அழிந்துவிட்டார்கள். இனி அழிவதற்கு யாரும் மிச்சமில்லை. சபை காலியாக இருக்கிறது, நம் குலம் ஏறக்குறையக் காலியாகி விட்டதைப் போல்!`

இந்த பதிலைக் கேட்டு ராவணன் மௌனம் காத்தான்.

அவனுக்கே அதிர்ச்சியாகத்தான் இருந்தது. அத்தனை பேரும் ஒவ்வொருவராகக் கொல்லப்பட்டு விட்டார்களா?

இந்த மானிடப் பதர் ராமன் அத்தனை பெரிய வீரனா?

`இருக்கட்டும். இன்று நாம் போர்க்களத்திற்கு அனுப்பியிருக்கும் படைவீரர்கள், சேனாதிபதிகள் ஆகியோர் என்ன ஆனார்கள்? அவர்கள் யாரும் திரும்பவில்லையா?`

`இன்றைய போர் தொடங்கிவிட்டது பிரபோ! உக்கிரமாகப் போர் நடந்துகொண்டிருக்கிறது. போர் சூரிய அஸ்தமனத்தின் போது முடிய வேண்டும். அல்லாமல் அதற்கு முன்னரேயும் முடிவுக்கு வரலாம். போர் முடிந்தபிறகு தான் நம் தரப்பில் யார் திரும்புகிறார்கள் என்று தெரியவரும்!`

சொல்லிவிட்டு மண்டோதரி மௌனம் காத்தாள். நேற்றைய போரில் யாரும் மிஞ்சவில்லை. எஞ்சியிருந்த படைவீரர்கள் அனைவரையும் திரட்டி இன்றைய போருக்கு அனுப்பியாயிற்று. இன்றைய போரில் யார் மிஞ்சப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

இனி இலங்கைத் தரப்பில் மிஞ்சியிருக்கும் ஒரே மாவீரன் ராவணன் தான். இனியாகிலும் அவள் கணவனுக்கு புத்தி வருமா?

எத்தனை பேரைக் காவு கொடுத்தாயிற்று! தம்பி மாபெரும் பலசாலி கும்பகர்ணன், மகன் இந்திரனையே ஜெயித்த இந்திரஜித் என எல்லோரும் மாண்டுவிட்டார்கள். இத்தனை சொந்தங்களை நிரந்தரமாக இழந்த பின்னரும் மனம் தன் தவறைப் பற்றிச் சிந்திக்காதா?

அடுத்தவன் மனைவிமேல் ஆசை கொள்வது அதர்மம் என்பதை உணர இத்தனை உறவுகளையா நஷ்டப்பட வேண்டும்? ஆனால் இன்னும் கூடத் தன் தவறை ராவணன் உணர்ந்ததாய்த் தெரியவில்லையே?

இலங்கைத் தெருக்களின் ஓரங்களில், இறந்த வீரர்களின் மனைவியர் கழற்றி வீசிய தாலிகள் மலைமலையாய்க் குவிந்து கிடக்கின்றன. எங்கும் பெண்களின் அழுகுரல்.

இலங்கை மக்கள் ராவணனை மன்னிக்கத் தயாராக இல்லை. ஆனால் தங்கள் கருத்தை வெளியே சொல்ல அஞ்சி வாய்மூடிக் கிடக்கிறார்கள்.

நேற்றிரவு தன் பணிப்பெண் ஒருத்தியை அழைத்தாள் மண்டோதரி. அசோகவனத்தில் சீதை எப்படி இருக்கிறாள் என்று பார்த்துவரச் சொன்னாள்.

அவள் வந்து சொன்ன செய்திகளைக் கேட்டு மண்டோதரி திகைப்பில் ஆழ்ந்தாள்.

`தாயே! சீதாதேவியின் திருமுகம் பூரண சந்திரனைப் போல் பொலிவாக உள்ளது. நாளுக்கு நாள் அவளிடம் பொலிவு கூடிவருகிறது. அவளிடம் எந்த வகையான பதற்றமோ அச்சமோ தென்படவில்லை. தன் கணவர் தன்னைக் காப்பார் என்று அவள் மிகுந்த உறுதியோடு இருக்கிறாள்.`

`ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அப்புறம் சொல்!`

`அது மட்டுமல்ல தாயே! அவளுக்குக் காவலாக உள்ள திரிஜடையிடம் அவள் பேசுவதைக் கேட்டேன். இலங்கை மன்னன் செய்த தவறுக்கு இத்தனை இலங்கை மக்கள் துன்பப்படுவது நியாயமில்லை. மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? என்னைத் துன்புறுத்தும் அரக்கிகளைப் பார்த்தால் கூட எனக்கு இரக்கமாகத் தான் இருக்கிறது. இவர்களைக் கூடப் பாவிகள் என்று நான் கருதவில்லை. அப்படிப் பார்த்தால் உலகில் பாவம் செய்யாதவர்கள் யார்? என் பிரபு ஸ்ரீராமர், சரணடைந்த எல்லோரையும் அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் மன்னித்துவிடுவார். என்னைக் கொத்திய காகத்தின் மேல் முதலில் கடும்கோபம் கொண்டாலும் பின்னர் ஒரு கண்ணை மட்டும் போக்கிவிட்டு அதையும் உயிர் பிழைக்குமாறு விட்டுவிட்டார்...என்றிப்படி சீதாதேவி பேசினாள் தாயே! அவளைத் துன்புறுத்திவந்த அரக்கிகள் எல்லோரும் கூட ஒவ்வொருவராக இப்போது யோசிக்கத் தொடங்கிவிட்டார்கள். யுத்த நிலவரம் அவர்களுக்கும் தெரிந்துதானே இருக்கும்?`

பணிவோடு சொல்லிவிட்டு, பணிப்பெண் மௌனமாக விடைபெற்றாள். மண்டோதரியின் மனம் துயரத்தால் நைந்தது.

எப்படி என் கணவருக்குப் புத்திசொல்வேன் என அவள் கண்ணீர் சிந்தியவாறே தான் வழிபடும் சிவலிங்கத்தின் கீழ் சுருண்டு விழுந்தாள்.

உண்ணாமல் உறங்காமல் அப்படியே இரவெல்லாம் விழுந்து கிடந்த அவள் இதோ இப்போது ராஜசபைக்கு வந்திருக்கிறாள்.

ராஜசபை! நல்ல வேடிக்கை தான். ராஜா மட்டும் இருக்கிற ராஜசபை! கூட துணைக்கு இந்த ராணி! தேவாதி தேவர்களெல்லாம் காலில் விழுந்து வணங்க கம்பீரமாகக் கோலோச்சிய மன்னன் இன்று தன்னந்தனியே யாருமற்ற அநாதையாய்! என்ன கோலம் இது!

மண்டோதரியின் மனம் கசிந்தது. கணவரிடம் இப்போதாவது எடுத்துச் சொல்லலாமா? அவர் கேட்பாரா?

`பிரபோ!`

`சொல் தேவி!`

`நம் மைந்தர்களை இழந்தோம். என் அன்பான மைத்துனர் கும்பகர்ணரை இழந்தோம். நம் அன்புக்குரிய எண்ணற்ற படைவீரர்களை இழந்தோம். இனி இழப்பதற்கு எதுவுமில்லை. தாங்கள் ஒருமுறை தீவிரமாகச் சிந்தித்துப் பாருங்கள். இந்த இழப்பிற்கெல்லாம், அறநெறியில்லாமல் தங்களிடம் தோன்றிய அந்தப் பெண்ணாசை தான் காரணம் அல்லவா? சீதை பெண்ணல்ல பிரபோ. அவள் அக்கினி. இந்த இலங்கையை அந்த அக்கினி சுட்டுக் கொண்டிருக்கிறது. சீதையை அவள் கணவரிடம் சேர்த்துவிடுங்கள். இலங்கை மக்கள் அனைவரும் அதைத்தான் விரும்புகிறார்கள். மக்கள் விருப்பத்தை அறிந்து நடப்பது மன்னன் கடமை அல்லவா?`

ராவணன் விழிகள் கோபத்தில் சிவந்தன.

`இதை நீ சொல்வதானால் இனி நீ என்னிடம் பேசவேண்டாம் தேவி! நான் ஒருமுறை எடுத்த முடிவில் பின்வாங்கமாட்டேன். யாருக்கும் என் தலை வணங்காது. எதன்பொருட்டும் என் தலை குனியாது. இறக்கவும் நான் சித்தமாகிவிட்டேன்! போரில் ஏற்கெனவே இறந்த என் சொந்தங்களை வீரசொர்க்கத்தில் சென்று சந்திப்பேன்!`

ராவணனது பிடிவாதமான பதிலைக் கேட்டு மண்டோதரி பெருமூச்செறிந்தாள்.

அப்போது யாருமற்ற அந்த ராஜசபையில் எங்கிருந்தோ ஓடிவந்தான் ஒருவன்.

ராவணன் முன் வாயைப் பொத்திக் கொண்டு கண்ணீர் விட்டுக் கதறி அழுதான். ராவணன் அவனை அதட்டிக் கேட்டான்:

`சொல்! யார் நீ? எங்கிருந்து வருகிறாய்? ஏன் அழுகிறாய்?`

`அரசே! நம் இலங்கையைச் சார்ந்த படைவீரன் நான். யுத்த களத்திலிருந்து நேரே இங்கே வருகிறேன்.`

`ஓ! யுத்த களத்தின் இப்போதைய நிலைமை என்ன?`

`சொல்ல நா அஞ்சுகிறது அரசே! ஸ்ரீராமன் அம்பு ஒருவர் விடாமல் அனைவரையும் தேடித் தேடிக் கொல்கிறது. இன்றைய யுத்தத்தில் நம் தரப்பில் உயிர் தப்பியவர்கள் யாருமே இல்லை!`

`நீ பொய் சொல்கிறாய்!`

`இல்லை அரசே! நான் சொல்வது மெய். ஒருவரைக் கூட ராமன் அம்பு விட்டுவைக்கவில்லை!`

`அப்படியானால் உன்னை அது விட்டது எப்படி? அனைவரும் இறந்தார்கள் என்கிறாய். ஆனால் நீ என் முன் உயிரோடு நிற்கிறாய்!`

`அரசே! நான் மட்டும்தான் தப்பினேன். யுத்த நிலவரத்தை ஓரளவு ஏற்கெனவே ஊகித்திருந்த என் மனைவி, நான் யுத்தத்திற்குப் புறப்பட்ட போதே தப்பிப் பிழைக்க ஓர் உபாயம் சொன்னாள். அந்த உபாயப்படி நான் மட்டும் தப்பி விட்டேன்!`

கலங்கிய நெஞ்சோடு அவன் சொல்வதைக் கேட்ட மண்டோதரி இடையே குறுக்கிட்டுக் கேட்டாள்:

`வீரனே! எந்த உபாயத்தின் வழி நீ தப்பினாய்?`

`தாயே! ஸ்ரீராமன் தன் மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பாராதவனாம். இதைச் சொன்ன என் மனைவி, தவிர்க்க முடியாத சூழல் நேர்ந்தால் சடாரென ஒரு புடவையைக் கட்டிக் கொண்டு தப்பித்துவிடுங்கள் என்றாள். யுத்தம் மிக உக்கிரமாக நடந்து எல்லோரும் இறப்பதைப் பார்த்தேன். நான் அணிந்திருந்த ஆடைகளின் மேல் அப்படியே என் மனைவி தந்த புடவையைச் சுற்றிக் கொண்டு யுத்த களத்தை விட்டு ஓடலானேன். என் மனைவி சொன்னது மெய்தான். புடவையைப் பார்த்த ராமன், நான் பெண்ணாயிருக்கலாம் என்றெண்ணி என் பக்கமே தன் பார்வையைத் திருப்பவில்லை. இந்த சமயோசிதமான உத்தியை மட்டும் என் மனைவி எனக்குச் சொல்லியிராவிட்டால் என் மனைவியின் தாலி இன்று அவள் கழுத்தில் இருந்திராது!`

இதை அந்த வீரன் சொல்லி முடித்ததும் ஸ்ரீராமனுக்கும் தன் கணவனுக்கும் இடையே இருந்த வேறுபாட்டை எண்ணிப் பார்த்தாள் மண்டோதரி.

ஒரு பெருமூச்சுடன் அந்தப்புரம் நோக்கிப் புறப்பட்டாள். போகிற போக்கில் தன் கணவன் ராவணனை ஒரு பார்வை பார்த்தாள்.

`எதன் பொருட்டும் தன் தலை குனியாது` என்று பிரதாபம் பேசிய ராவணனின் தலை அப்போது நிலம் நோக்கிக் குனிந்திருந்தது.

30

மேகநாதனின் மனைவி!

மண்டோதரி வியப்பின் உச்சியிலிருந்தாள். சுலோசனா தன் கணவன் மேகநாதனைப் போருக்கு வழியனுப்பும் போது சுலோசனாவின் கண்களிலிருந்து ஒருசொட்டுக் கண்ணீர் கூட வரவில்லை. முகத்தில் குழப்பமற்ற தெளிவு இருந்தது. இது எப்படி?

மண்டோதரியிடம் அவள் மகன் மேகநாதன் போருக்குச் செல்வதற்காக விடைபெற்ற போது அவளது தாய்மனம் படாதபாடு பட்டது.

அவள் கண்களில் கண்ணீர் மாலைமாலையாய் வழிந்தது.

மனைவிக்கும் தன் கணவனைப் போருக்கு அனுப்பும்போது உணர்வுகள் அப்படித்தானே இருக்க வேண்டும்?

அக்ககுமாரன் உள்ளிட்ட எத்தனையோ பேரை அவரவர் மனைவியர் போருக்கு அனுப்பினார்கள். அழுதுகொண்டே வழியனுப்பினார்கள்.

ராம ராவண யுத்தத்தில் அரக்கர்கள் போருக்குப் போகிறார்களே அன்றிப் போரிலிருந்து திரும்புவதில்லையே?

அரக்க மனைவியர் அழுத கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. அவர்கள் அறுத்தெறிந்த தாலிகள் மலைபோல் குவிந்தன. ஆனாலும் சீதையை விடமாட்டேன் என்ற ராவணனின் பிடிவாதம் மட்டும் ஒரு சிறிதும் தளரவில்லை.

மேகநாதன் மண்டோதரியிடம் வந்து போருக்குச் செல்ல அனுமதி வேண்டி வணங்கியபோது, அவளது தாய்மனம் பதறியது.

`யாராலும் வெல்ல இயலாத இந்திரனையே வென்ற என் புதல்வனே! அதனால் இந்திரஜித் என்று பெயர்பெற்ற வீரத் திருமகனே! சென்று வா. எதிரிகளை வென்று வா.`

அவள் மேகநாதன் நெற்றியில் திலகமிட்டாள். மேகநாதன் குழந்தையாகப் பிறந்த அந்த நேரத்தில் அவன் அழுதபோது எதிரொலி போல, வானத்தில் இடி இடித்து மேகத்தின் நாதம் கேட்டது. அதனால் அல்லவா அவனை அன்போடு மேகநாதன் என அழைத்தாள் அவள்.

பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த பிள்ளை யுத்த களத்திற்குச் செல்கிறானே? அவள் உள்ளம் கசிந்தது.

மேகநாதனின் மனைவி சுலோசனாவும் ஆரத்தி கரைத்து அவனை வழியனுப்பினாள். தன் கணவரை இருகரம் கூப்பி பக்தியுடன் வணங்கினாளேயன்றி, மற்றபடி துயரத்தின் சாயலே சுலோசனா முகத்தில் தென்படவில்லை.

இன்னதென்றறியாத ஒரு தெளிவு அவளிடம் தென்பட்டது.

மேகநாதன் விருட்டென்று தேரிலேறி யுத்தகளம் நோக்கிப் போகிற வரை மாமியாரும் மருமகளுமாக அவன் சென்ற திசையைத் தான் வெறித்துப் பார்த்தவாறிருந்தனர்.

மண்டோதரி பொங்கியெழுந்த விம்மலுடன் முந்தானையால் விழிநீரைத் துடைத்துக்கொண்டாள்.

எத்தனை எத்தனை அரக்கர்களை இந்த யுத்தத்தில் இலங்கை பறிகொடுத்து விட்டது? இதோ இன்று போருக்குச் செல்லும் இந்திரஜித்தாவது வெற்றி வீரனாய் உயிரோடு திரும்புவானா?

`இவன் திரும்புவானா மாட்டானா பரிமளா?` சுலோசனாவின் இன்னொரு பெயரைச் சொல்லி அழைத்து அவளைக் கட்டிக் கொண்டு கதறினாள் மண்டோதரி. ஒரு மெல்லிய முறுவலுடன் `அமைதியாக இருங்கள் அம்மா, நடப்பது நடக்கும்!` என்று மாமியாருக்கு ஆறுதல் சொன்னாள் சுலோசனா.

எப்படி இவளால் இத்தனை அமைதியாக இருக்க முடிகிறது?

`பெண்ணே! அவன் வருவானா மாட்டானா என்று என் மனம் தவியாய்த் தவிக்கிறது. நீ எப்படி இவ்வளவு அமைதியாய் இருக்கிறாய்?`

`வருவாரா மாட்டாரா என்ற தவிப்பு உங்களுக்கு. வரமாட்டார் என்பதை நான் அறிந்ததால் என்னிடம் தவிப்பேதும் இல்லை!`

`என்ன சொல்கிறாய் பெண்ணே?` மண்டோதரி திடுக்கிட்டவாறு கேட்டாள். நாக குலத்தைச் சேர்ந்த பெண் இந்தச் சுலோசனா. அவள் நாக்கில் பாரம்பரிய விஷத்தன்மை கலந்திருக்கிறதா என்ன? ஒரு தாயிடமே அவள் மகன் போரிலிருந்து திரும்பி வரமாட்டான் என்று சொல்ல என்ன துணிச்சல் வேண்டும்?

சுலோசனா மெலிதாய் ஒரு கசந்த சிரிப்புச் சிரித்தாள். பின் அமைதியாய்ச் சொல்லலானாள்.

`தாயே! பதற வேண்டாம். அவரின் இறப்பு கூட அவரை என்னிடமிருந்து பிரிக்க முடியாது. நானும் அவரும் ஒருயிர் ஈருடல் என வாழ்கிறோம். அவர் மரித்தால் நானும் மரித்துவிடுவேன். அவ்வளவே. அவரை எப்படியும் சாவிலும் பிரிவதில்லை என நான் உறுதியாய் இருப்பதால் என்னிடம் எந்தக் கலக்கமும் இல்லை.`

`உன் மாமனார் ராவணேஸ்வரர் எத்தனை மாபெரும் வீரர்? அவரது மருமகளாக இருந்து எதிரியான ராமன் வெல்வான் என்பதுபோல் பேசுகிறாய்?`

`ஸ்ரீராமர் தான் வெல்லப் போகிறார் என்பது உங்களின் உள்மனத்திற்குத் தெரியாதா தாயே? அவர் மூலப் பரம்பொருள் என்ற உண்மையை என் சிறிய மாமனார் விபீஷணர் பலமுறை வலியுறுத்திச் சொன்னாரே? அதை மறந்துவிட்டீர்களா? நிகும்பலை யாகம் செய்து ராம லட்சுமணர்களை வெல்லலாம் என்று என் கணவர் முயன்றார். அந்த யாகம் கலைக்கப்பட்டு விட்டது. நாகாஸ்திரத்தின் மூலம் ராம லட்சுமணர்களைக் கட்டினார். அதை எங்கோ வானிலிருந்து ஒரு கருடன் வந்து கலைத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ராம லட்சுமணர்களை மயக்கமடையச் செய்தால் அனுமன் எங்கிருந்தோ சஞ்சீவி மலையையே பெயர்த்து வந்து அவர்களைக் காப்பாற்றுகிறார். ஏன் அம்மா? போர்க்களத்திலிருந்து எனக்குக் கிட்டும் இந்த எல்லாச் செய்திகளும் உங்களுக்கும் கிட்டியிருக்கும் தானே?`

மண்டோதரி `அனைத்தும் அறிவேன்` எனப் பெருமூச்செறிந்தாள்.

`அம்மா. நேற்று என் கணவர் உங்கள் கணவரிடம் நெடுநேரம் அறிவுறுத்தியிருக்கிறார். லட்சுமணன் முகத்தைப் பார்த்தால் அதில் உள்ள புனிதம் தன்னை வியக்கவைப்பதாகச் சொல்லியிருக்கிறார். போரை உடனே நிறுத்தி ராமபிரானிடம் சரண் புகலாம் என்று கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆயிரக்கணக்கான அரக்கர்கள் அழிந்துவிட்டார்கள். எஞ்சியிருக்கும் சொற்ப எண்ணிக்கையினரின் உயிரையாவது காப்பாற்ற வேண்டியது நம் கடமை என்று கெஞ்சியிருக்கிறார். ராவணேஸ்வரர் மனம் மாறவில்லை. சீதையை விட

அவர் தயாராயில்லை. என் மாமனார் எத்தனை பெரிய பலசாலியாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் எதிரியான ராமபிரானிடம் பிறன் மனைவியை ஏறெடுத்தும் பாராத நல்லொழுக்கம் என்ற பெரிய பலம் இருக்கிறது. அந்த பலத்தின் முன் மற்ற பலங்கள் அனைத்துச் செல்லாது அம்மா.`

மண்டோதரியின் மனம் வெளியே சொல்ல இயலாத சிந்தனைகளோடு அழுதுகொண்டிருந்தது.

ஒரு மருமகள் தன் மாமனாரின் பலவீனம் குறித்து மாமியாரிடம் எடுத்துச் சொல்லும் நிலையும் நேர்ந்ததே? எவ்வளவு பெரிய வீரராக இருந்தாலும் இப்படிப்பட்ட பலவீனம் உள்ள மாமனாரை எந்த மருமகள் உண்மையாக மதிப்பாள்?

அதிகாரத்திற்குப் பயந்து மதிப்பதுபோல் வேண்டுமானால் நடிப்பாள் அவ்வளவு தான். மண்டோதரி பெருமூச்செறிந்தாள்.

அடுத்த கணம் சுலோசனா செய்த செயல் மண்டோதரியை திகைப்பில் ஆழ்த்தியது.

அரண்மனை வாயிலில் விறகுக் கட்டைகளையும் வரட்டிகளையும் அடுக்கச் சொன்னாள் சுலோசனா.

`என்ன காரியம் செய்கிறாய் பெண்ணே? அமங்கலமாக விறகுகளை வாயிலில் அடுக்குவதாவது?`

மலர்ந்த முகத்துடன் தன் மாமியாரை வணங்கி எழுந்தாள் சுலோசனா.

`அம்மா! உங்கள் மகன் இறந்துவிட்டதை அறிய போர்க்களத்திலிருந்து உங்களுக்குச் செய்தி வரவேண்டும். ஆனால் என் உள்மனம் அந்தச் செய்தியை அறிந்துவிட்டது. ஒரு கணத்தின் முன்னால் இலக்குவனின் அம்புபட்டு அவர் மரணமடைந்துவிட்டார். இதோ சேதிசொல்லும் நம் ஒற்றர்கள் ஓடி வருகிறார்கள் பாருங்கள்.`

ஒற்றர்கள் மண்டோதரியைப் பார்த்துக் கதறலுடன் சேதிசொன்னார்கள். மேகநாதன் மரணமடைந்து விட்டான்.

இந்திரனையே ஜெயித்த மாவீரன் மடிந்துவிட்டான். லட்சுமணன் எய்த அம்பு அவனைக் கொன்றுவிட்டது.

செய்தி கேட்ட மண்டோதரி பெருங்குரலெடுத்து அழலானாள். அதற்குள் விறகு அடுக்கப்பட்ட இடத்தை நோக்கி அமைதியாக நடந்தாள் சுலோசனா. அவள் முகம் பளீர் எனச் சுடர் வீசிக் கொண்டிருந்தது.

பணிப்பெண்களை அழைத்து விறகுகளில் நெருப்பு மூட்டச் சொன்னாள் அவள்.

அவள் எடுத்திருக்கும் முடிவை ஊகித்த மண்டோதரி `என்ன காரியம் செய்கிறாய் பெண்ணே? உன் குழந்தைகளை நினைத்துப் பார். தந்தை இல்லாத குழந்தைகள் தாயையும் இழக்க வேண்டுமா?`

மண்டோதரியின் கேள்வி காற்றில் எதிரொலித்தது.

`என் குழந்தைகளை விபீஷண மகாராஜா நன்றாகப் பார்த்துக் கொள்வார் அம்மா! என் குழந்தைகளைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை. என் கணவர் என்னை அழைக்கிறார். நான் வருகிறேன். கணவர் அழைக்கும்போது அவர் இருக்கும் இடத்திற்குப் போக வேண்டியதுதானே?`

நெருப்பை மூன்றுமுறை வலம்வந்த சுலோசனா திடீரென நெருப்பில் குதித்தாள்.

அக்கினி அவளைச் சாப்பிட்டுப் பசியாறுவதைப் பார்த்துப் பணிப்பெண்கள் உரத்த குரலெடுத்து அழலானார்கள்.

மண்டோதரியின் மனம் திகைப்பில் ஆழ்ந்தது. நெருப்பில் குதிக்கும்போது அவளுடைய அன்பு மருமகள் சுலோசனா சொன்ன அந்த வார்த்தைகள்.

விபீஷண மகாராஜா என்று தன் சிறிய மாமனாரை அடைமொழி கொடுத்துச் சொன்னாளே?...அப்படிச் சொல்ல வேண்டிய அவசியமென்ன? அப்படியானால் இனி இங்கே விபீஷணன் ஆட்சி தானா?

கணவர் அழைக்கும்போது அவர் இருக்கும் இடத்திற்குப் போகவேண்டியது தானே என்ற வாக்கியத்தைச் சொன்னாளே? அவ்விதம் சொல்லும்போது என்னையே ஏன் அவள் தீர்க்கமாய்ப் பார்த்தாள்? நாளை எனக்கும் இதே கதிதான் என்பதை மறைமுகமாய் அறிவுறுத்தவா?

`என் மகனே மேகநாதா!` என்று கதறியவாறு மண்டோதரி மயங்கிச் சரிந்தபோது பணிப்பெண்கள் ஓடோடிச் சென்று அவளைத் தாங்கினார்கள்.

31

கண்களின் வழியே கருணை!

மாபெரும் ராம ராவண யுத்தம் நிகழ்ந்து முடிந்தது. கும்பகர்ணன், இந்திரஜித் முதலிய வீரர்கள் மடிந்தபின் இறுதியாக் ராவணனும் வதம் செய்யப்பட்டான். ராவணனது பொன்னுடல் மேல் விழுந்து மயங்கிய அவனது பத்தினி மண்டோதரி, தன்னுயிர் கொண்டு அவனுயிரைத் தேடுபவள் போன்று தானும் உயிர் நீத்தாள்.

ஸ்ரீராமர் வெற்றி பெற்றதை ஈரேழு பதினான்கு உலகங்களும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருந்தன. ஆனால் ராமபிரான் அந்தக் கொண்டாட்டங்களில் அக்கறை காட்டவில்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அயோத்தி செல்ல வேண்டும் என்று பரபரத்தார். அதற்கென்ன வழி என்று ஆலோசிக்குமாறு விபீஷணனிடம் கேட்டுக் கொண்டார். விபீஷணன் எண்ணமோ வேறுவிதமாக இருந்தது.

`சுவாமி! தாங்கள் ஒரு சில நாட்களாவது இலங்கையில் தங்கிவிட்டுப் போகலாகாதா? உங்களை உபசரித்த பேறு எனக்குக் கிடைக்குமே? சீதாதேவியையும் தங்களையும் லட்சுமணனையும் அனுமனையும் உபசரிப்பதோடு வானர சைன்னியத்தையும் கூட உபசரிக்க விரும்புகிறேன் நான்! அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய இந்த வானரப் படையால் அல்லவா நாம் வெல்ல முடிந்தது?`

நெகிழ்ச்சியுடன் வேண்டுகோள் வைத்த விபீஷணன் தன் விழிகளைத் துடைத்துக் கொண்டான். ராமபிரான் விபீஷணனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்.

`சகோதரா! நீ சொல்வதெல்லாம் சரி. ஆனால் ஒவ்வொரு கணமும் அயோத்தியில் பரதன் பரிதவித்துக் கொண்டிருப்பான். பரதனை நினைத்தால் அடுத்து என்ன ஆகுமோ என்று என் மனம் மிகுந்த கவலையில் ஆழ்கிறது. நான் அயோத்தி சென்று சேரத் தாமதமானால் அவன் மனம் விபரீதமாக ஏதேனும் முடிவெடுக்கத் தூண்டும். எனவே நம் வெற்றியை நாம் இங்கே கொண்டாடிக் காலம் கடத்துவதை விடவும், விரைவில் அயோத்தி சென்று அங்கே கொண்டாடுவதே புத்திசாலித்தனம்.`

ராமபிரான் கட்டளைக்கு விபீஷணன் அடிபணிந்தான். சீக்கிரமே விந்தையான புஷ்பக விமானத்தைக் கொண்டுவந்து ஸ்ரீராமபிரான் முன் நிறுத்தினான். அந்த அழகிய விமானத்தைப் பார்த்து அனைத்து வானரங்களும் பரவசம் கொண்டன.

தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட தூண்கள். வைர வைடூரியங்கள் இழைத்த மேடைகள். பிரகாசமாய் ஜொலித்துக் கொண்டிருந்த விதானங்கள். ஆங்காங்கே முத்துக்களாலும் ரத்தினங்களாலும் ஆன மாலைகள் தொங்கவிடப் பட்டிருந்தன. விமானத்தின் தரைப்பகுதி தங்கம் வெள்ளி போன்றவற்றால் இழைக்கப்பட்டிருந்தது. விலையுயர்ந்த கம்பளங்களால் மூடப்பட்ட சிம்மாசனங்கள் பல அதில் தென்பட்டன. விமானத்தின் விதானத்தில் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்த மணிகளும் சலங்கைகளும் அது மெல்ல மெல்ல அசையும் காலங்களில் காதுக்கு இனிமையான ஒலியை எழுப்பின. அந்த ஒலியே ஓர் இனிய சங்கீதம் போல் இருந்தது.

மொத்தத்தில் வானில் மிதந்து கொண்டிருந்த விமானம், ஒரு பறக்கும் அரண்மனை போல் தென்பட்டது. எத்தனைபேர் ஏறினாலும் தானே அதற்குத் தக்கவாறு பெரிதாகி இடம் கொடுக்கும் சக்தி பெற்றிருந்தது.

ஸ்ரீராமபிரான் தொடங்கி ஒவ்வொருவராக புஷ்பக விமானத்தில் ஏறலானார்கள். வானரங்கள் தாவிக் குதித்து புஷ்பக விமானத்தின் பல்வேறு இடங்களில் நின்றுகொண்டன. அதற்குள் விபீஷணன் ஓடோடி வந்து எல்லா வானரங்களுக்கும் நன்றி சொல்லி, தகுந்த சன்மானங்கள் அளித்து கௌரவித்தான்.

அவன் அளித்த தங்கம் வெள்ளி இவற்றால் ஆன ஆபரணங்களை அணிந்துகொண்ட வானரங்கள் மகிழ்ச்சிக் கூச்சலெழுப்பின. சீதாதேவி தனக்காக உயிரைக் கொடுக்கவும் சித்தமாக இருந்த அந்த வானரங்களை

மிகுந்த பரிவோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

இடுப்பில் மாட்டிக் கொள்ள வேண்டிய ஒட்டியாணத்தைக் காதில் மாட்டிக்கொண்ட வானரங்கள் சிலவற்றை அழைத்து சீதை அவற்றிற்கு அந்த அணிகலன்களைச் சரியாக அணிவித்தாள். சீதாதேவியே தங்களுக்கு அணிகலன்கள் அணிவித்த பெருமிதத்தில் அவை கம்பீர நடை நடந்தன. சீதை அவற்றின் பெருமிதத்தைக் கண்டு முறுவல் பூத்தாள். தன் வானர சைன்னியத்தின் மேல் சீதை செலுத்தும் பிரியத்தைப் பார்த்த ராமன் மிகுந்த மன நிறைவடைந்தான்.

எல்லோரும் புஷ்பக விமானத்தில் ஏறிய பின் விபீஷணன் தானும் அயோத்தி வந்து ராமபிரானின் பட்டாபிஷேக மகோத்சவத்தைக் கண்டு களித்துச் சிலகாலம் அங்கே தங்கிப் பின் இலங்கை திரும்ப விரும்புவதாக ஸ்ரீராமனிடம் வேண்டுகோள் வைத்தான்.

ராமன், `நான் அயோத்தியில் இல்லாதபோது பரதன் என் சார்பில் அங்கே ஆட்சி செய்வதுபோல் நீ இல்லாதபோது இங்கே இலங்கையை யார் ஆட்சி செய்யப் போகிறார்கள்? நம்பகமான பிரதிநிதிகள் இருக்கிறார்களா உனக்கு?` என்று கனிவோடு விசாரித்தார்.

`என் மந்திரி பிரதானிகள் பார்த்துக் கொள்வார்கள் பிரபோ. அவர்கள் ராவணன் ஆட்சி நடந்த காலத்திலேயே எனக்கு ஆதரவாக இருந்தவர்கள். அவர்கள் மேல் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது!` என்று சொன்ன விபீஷணன், ராமபிரான் சம்மதத்துடன் தானும் புஷ்பக விமானத்தில் ஏறிக் கொண்டான்.

விபீஷணன் உத்தரவின் பேரில், அந்த அற்புதமான விமானம் தானே விண்ணில் உயரப் பாய்ந்து பறக்கத் தொடங்கியது. விமானம் உயரத்தில் எழுந்தபோது அந்தப் பிரதேசம் முழுவதும் வானரங்களால் முழங்கப்பட்ட ஜெய் ஸ்ரீராம் என்ற சப்தத்தால் நிறைந்தது.

`ஒரு நிமிஷம்!` என்று விபீஷணனை அவசரமாக அழைத்த ராமபிரான் `முதலில் இந்த விமானத்தை இலங்கை முழுவதையும் ஒரு சுற்றுச் சுற்றச் சொல். அதன் பிறகு நாம் நேரே அயோத்தி செல்லலாம்!` என்று கூறினார்.

ஏற்கெனவே நேர நெருக்கடியாக இருக்கும்போது இப்போது அநாவசியமாய் இலங்கையை ஏன் சுற்ற வேண்டும் என்று எண்ணினான் விபீஷணன். ஆனால் ஏதொன்றும் பேசாமல் ராமபிரானின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு அப்படியே ஆகட்டும் என்று புஷ்பக விமானத்திற்கு உத்தரவிட்டான்.

அது மிக வேகமாகப் பறந்து கருடன் வானில் வட்டமிடுவதுபோல்

இலங்கையை வட்டமிடலாயிற்று. இலங்கை வாழ் பொதுமக்கள் தங்கள் தங்கள் வீட்டின் மாடியிலிருந்து இலங்கையைச் சுற்றும் புஷ்பக விமானத்தைப் பார்த்து ராமபிரானையும் சீதாதேவியையும் இருகை கூப்பி வணங்கினார்கள்.

ராமர் சீதையை அன்போடு பார்த்தார். பின் மெல்லச் சொல்லலானார்:

`சீதா! இலங்கையின் ஒவ்வொரு பகுதியையும் உன் விழிமலர்த்தி நன்றாகப் பார். இங்குள்ள மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் எல்லாவற்றையும் நன்கு பார். முக்கியமாக அதோ தெரிகிறதே விபீஷணன் அரண்மனை! அதன்மேல் உன் பார்வை படட்டும்! நாம் அயோத்தி போக வேண்டியது அவசரம் தான். ஆனால் நீ இலங்கையை நன்றாகப் பார்க்க எத்தனை நேரம் எடுத்துக் கொண்டாலும் சரிதான். அவ்விதம் நீ நன்றாகப் பார்த்தபின் தான் நாம் அயோத்தி போக வேண்டும்! நீ சிறையிருந்த அசோக வனத்தை மட்டுமே அறிவாய் நீ. முழு இலங்கையையும் மேலோட்டமாகவாவது நீ பார்க்க வேண்டாமா?`

சீதை ராமபிரான் சொன்ன வார்த்தைகளின் உள்ளிருந்து ராமனது உள்ளக் கருத்தை உணர்ந்தவாறு கலகலவென்று சிரித்தவாறே `அப்படியே ஆகட்டும் பிரபோ!` என்றாள். அவள் ஆசைதீர இலங்கையின் எல்லா இடங்களையும் ஒரு பார்வை பார்த்த பிறகு, அவள் சரி என்று சொன்ன பிறகுதான் விமானம் அயோத்தி நோக்கி விண்ணில் பறந்தது.

இந்தக் கோலாகலமான காட்சியையெல்லாம் வானிலிருந்து தேவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தேவேந்திரனின் மனைவி இந்திராணி இந்திரனைக் கேட்டாள்:

`அயோத்திக்கு அவசரமாகப் போகவேண்டும் என்று சொன்ன ராமபிரான், பரதன் காத்திருப்பான் என்று அதற்குக் காரணமும் சொன்ன ராமபிரான், பின் அவசரமே படாமல் சீதையிடம் இலங்கையை நன்றாகப் பார் என்கிறாரே? சீதை இலங்கையை நன்றாகப் பார்ப்பதில் என்ன உட்கருத்து இருக்கிறது?`

இந்திரன் நகைத்தான்:

`உனக்கு இதுகூடத் தெரியவில்லையா தேவி? விபீஷணன் ராமபிரானது சகோதரன் போன்றவன். அவன் நல்ல வளத்தோடு வாழ வேண்டும் என ராமபிரான் மனமார விரும்புகிறார்.`

`அதுசரி. விபீஷணன் வளத்தோடு வாழ்வதற்கும் சீதை இலங்கையைச் சுற்றிப் பார்ப்பதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது?`

`இருக்கிறது தேவி. சீதை லட்சுமி தேவிதான் அல்லவா? அவளது பார்வை எந்த இடத்தில் பட்டாலும் அங்கு செல்வம் கொழிக்குமே?

எனவே இலங்கை முழுவதிலும் செல்வம் கொழிக்க வேண்டும் என்று தான் ராமபிரான் சீதையை இலங்கையைச் சுற்றிப் பார்க்கச் சொல்கிறார். இதன் உள்ளார்ந்த சூட்சுமத்தை விபீஷணன் கூட அறியமாட்டான். இனி மிகச் சீக்கிரத்தில் இலங்கை செல்வ வளம் மிக்க நாடாக மாறிவிடும். இலங்கை வாழ் மக்கள் விபீஷணன் ஆட்சியில் பஞ்சமோ பசியோ இல்லாமல் ஆன்ந்தமாக வாழ்வார்கள். அதுதான் ராமன் விருப்பம். அதற்குத்தான் சீதைக்கு இலங்கையைச் சுற்றிக் காட்டுவதாக இப்படி ஒரு நாடகம்!'

சொல்லிவிட்டு இந்திரன் கலகலவென்று சிரித்தபோது இந்திராணியும் அவனுடன் சேர்ந்து சிரித்தாள். தன்னைச் சரணடைந்தவர்கள் மேல் ராமன் செலுத்தும் அன்பும் அக்கறையும் அவர்களை நெகிழச் செய்தன. எப்பேர்ப்பட்ட கருணாமூர்த்தி ராமன்!

அவர்கள் இருவரும் வானிலிருந்தவாறே ராமபிரானையும் சீதையையும் நோக்கி இருகரம் கூப்பி வணங்கினர். தேவர்கள் சொரிந்த பூமாரியால் புஷ்பக விமானம் உண்மையிலேயே புஷ்பங்களால் மூடப்பட்டுப் 'புஷ்ப' விமானமாகத் தோற்றம் தந்தது.



32

அகந்தை அழிந்தது...

அக்கினிப் பிரவேசம் முடிந்துவிட்டது. சீதாப்பிராட்டி அன்றலர்ந்த மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை மாதிரி மாசுமறுவில்லாமல் நெருப்பிலிருந்து வெளிப்பட்டுவிட்டாள். மண்ணுலகும் வானுலகும் ஒருசேர இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டிருந்தன. வானத்து தேவர்கள் பெய்த பூமாரியால் இலங்கையின் தெருக்கள் மண்மூடி மலர்ப்பாதை போல் ஆகியிருந்தன.

ஆயிற்று. அவதார நோக்கம் நிறைவேறிவிட்டது. ராவண வதம் முடிந்தது. அசோகவனத்துச் சிறையிலிருந்து மட்டுமல்ல, ராவணனின் மனச்சிறையிலிருந்தும் சீதாதேவி விடுதலை பெற்றுவிட்டாள். `கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் ஜானகியை மனச்சிறையில் கரந்த` முறையற்ற காதல் தண்டிக்கப்பட்டு விட்டது.

இனி என்ன? அயோத்தி செல்லவேண்டாமா? பரதன் காத்திருப்பானே? ஒருகணம் தாமதமானாலும் உயிரை விட்டுவிடத் துணிவான். வீடணன் புஷ்பக விமானத்தைக் கொண்டுவரச் சென்றிருக்கிறான். விமானம் இதோ வந்துவிடும்.

அன்னை ஜானகி ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் திருமுகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். பார்வையால் அந்த முகத்தைப் பருகிக் கொண்டிருந்தாள். மெய்த்திருப் பதம் மேவென்ற போதிலும் இத்திருத் துறந்து ஏகென்ற போதிலும் ஒன்றுபோல் மலர்ந்திருக்கும் சித்திரத்

தாமரை முகம். மாசுமறுவற்ற அந்த முகத்தில் பளிங்கு போன்ற அகத்தின் பிரதிபலிப்பு.

`சிறையிருந்த நாட்களெல்லாம் அகக் கண்ணில் எந்த முகத்தைக் கண்டு கண்டு ஆறுதல் கொண்டேனோ அந்த முகம் இன்று புறக் கண்ணிலும் காட்சியாகத் தெரிகிறது. இந்தப் பேரழகர், இன்றைய வெற்றி வீரர், என் கணவர் என மனம் மகிழ்ச்சியில் திளைக்கிறது. ஆனால் அதுகாரணமாக அகங்காரம் வராதிருக்க வேண்டுமே...அயோத்திக்கு சக்கரவர்த்தி ஆகப் போகிறார் என் மணாளர். நான் சக்கரவர்த்தினி ஆகப் போகிறேன். பதவிகள் என் நாயகரைப் பாதிக்காது. நானும் அவ்விதம் பாதிக்கப் படாமல் இருக்க வேண்டுமே!

நான் அவர் உயரத்தின் அளவு இணையாக உயர இயலுமா..என் கணவர் எனக்குக் கணவர் மட்டுமா? குருநாதரும் அல்லவா? எத்தனை எத்தனை விஷயங்களைக் கானக வாழ்வில் ஒவ்வொன்றாக அறிவுறுத்தினார்! ஸ்ரீராமரின் காலடியில் அமர்ந்து அவரது அதரங்களிலிருந்து வரும் அறவுரைகளைக் கேட்கும் பாக்கியசாலி ஆனேன். வனவாச காலம் முழுவதையும் எனக்குக் கல்வி போதிக்கக் கிடைத்த வாய்ப்பாக அல்லவா அவர் பயன்படுத்தினார்!

`என் மனத்தில் அகங்காரம் தோன்றாதிருக்கும்படித் தாங்கள் தான் அருள் புரிய வேண்டும் ஸ்வாமி!' சீதையின் நீல நயனங்கள் ராமபிரானிடம் பேசாமல் பேசின. கண்ணும் கண்ணும் பேசிக் கொள்ளும் போது வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல. இந்த உண்மையை மிதிலை அரண்மனையின் உப்பரிகையிலிருந்தே அண்ணல் நோக்கியபோது அவளும் நோக்கி அறிவுறுத்தியவள் அல்லவா!

ராமன் கனிவு பொங்க மனைவியைப் பார்த்தான். அடக்கத்தின் திருவுருவம். இவளுக்கு அகங்காரம் வர வாய்ப்பேது! தன் நாடு பற்றி எரிந்தாலும் கூடத் தத்துவ விசாரத்தில் ஈடுபடும் மனமுதிர்ச்சி நிறைந்த ஜனகரின் புதல்வி. ஜனகர் தம் குணங்களைப் புகட்டி அல்லவோ மகளை வளர்த்திருக்கிறார்! சீதை அயோத்திக்குக் கொண்டுவந்த சீதனங்களிலெல்லாம் உயர்ந்தது அவளது நற்குணங்கள் தானே! தன் மருமகளின் நற்குணங்களைப் பொறுக்காத பொறாமையால் தான் கைகேயி அவளைக் காட்டுக்கு அனுப்ப முயன்றாளோ? கணவன் கானகம் போனால் இவளும் உடன்போவாள் எனக் கைகேயியின் மனம் சரியாகவே அனுமானித்திருந்ததோ!

மென்மையே உருவான இவளையும் வனவாசத்தில் ஈடுபடுத்திய விதியின் கொடுமையை என்ன சொல்ல! என்னுடன் வரவேண்டும் என்ற ஒரே லட்சியத்தில் உடன் வந்துவிட்டாலும் அயோத்தி அரண்மனையின் வாயில் வரை நடந்து கடப்பதற்குள் கால்வலி பொறுக்காதவளாய்

`கானகம் வந்துவிட்டதோ ஸ்வாமி?` என விசாரித்தாளே! அந்த மெல்லிய பாதங்களைக் கல்லிலும் முள்ளிலும் நடக்க வைத்தேனே! ராமன் மனம் கருணையில் கசிந்தது. ` முற்றும் துறந்த முனிவர்களுக்குக் கூட அகங்காரம் வரலாம். ஆனால் உனக்கு அகங்காரம் வராது கண்ணே! கவலை வேண்டாம்!` ராமபிரானின் விழிகள் பேசாமல் பேசின.

தொலைவில் நின்ற லட்சுமணனைப் பார்த்தான் ராமன். இவன் தம்பி என்ற உறவில் கிடைத்த ஒரு யோகி. ஒருவேளை இவனுக்கு அகங்காரம் வருமோ? இப்படிப்பட்ட சிந்தனையே வியப்புத்தான். அகங்காரத்தின் மூச்சுக் காற்று கூட இவன் மீது பட வாய்ப்பில்லை. இரவும் பகலும் கண்விழித்து என்னையும் சீதையையும் மட்டுமா காவல் காத்தான்! தன் மனத்தில் எந்தச் சின்ன மாசும் நுழைந்து விடாமல் தன்னையும் அல்லவா காவல் காத்துக் கொண்டான்! ஆயிரம் ராமர் பரதனுக்கு நிகர் இல்லை என்றால் ஆயிரம் பரதர் கூட லட்சுமணனுக்கு நிகர் இல்லையே!

ஏதோ செய்தி சொல்ல வேண்டி திடீரென்று தன்முன் தாவிக் குதித்து வந்து நின்ற அனுமனைப் பார்த்தான் ராமபிரான். முகத்தில் மெல்லிய முறுவல் அரும்பக் கேட்டான்: `என்ன சேதி அனுமனே? ஓடோடி வருகிறாய்?`

`நாம் விரைவில் பறக்கப் போகிறோம் ஸ்வாமி! புஷ்பக விமானம் தயாராகிவிட்டது. இதோ இலங்கை மன்னர் வீடணர் வந்துகொண்டிருக்கிறார்!`

ராமனிடம் சொல்லிவிட்டு, புஷ்பக விமானத்தில் செல்வதற்கு எல்லா வானரங்களையும் தயார் செய்வதன் பொருட்டு விடைபெற்றுத் தாவிப் பறந்தான் அனுமன். ராமன் விழிகள் அனுமனையே பரிவோடு பார்த்துக் கொண்டிருந்தன. மறக்காமல் லட்சுமணனிடமும் அனுமன் இதே சேதியைச் சொன்னதைக் கண்டு ராமன் முகத்தில் இளமுறுவல்.. சீதையைத் தேடும் பணியில் சுக்கிரீவன் ஈடுபடச் சற்றுத் தாமதமானபோது லட்சுமணன் அடைந்த சீற்றத்தை அன்று நேரில் கண்டவன் அல்லவா அனுமன்! அது சுக்ரீவ பட்டாபிஷேகத்திற்குப் பிறகு நடந்த சங்கதி. இப்போது விபீஷண பட்டாபிஷேகத்திற்குப் பிறகு அதே சரித்திரம் திரும்பக் கூடாதே! உடனடியாக அயோத்தி செல்ல வீடணன் ஏற்பாடுகள் செய்த போதிலும் சின்னத் தாமதத்தால் கூட லட்சுமணன் சீற்றமடைந்து விடக் கூடாதே! என்ன ஜாக்கிரதை அனுமனுக்கு!

அனுமனைக் காணும் போதெல்லாம் ராமன் மனம் நிறைவில் ஆழ்கிறது. என்ன சுறுசுறுப்பு! எப்பேர்ப்பட்ட புத்திசாலித்தனம்! எத்தகைய வாக்கு சாதுர்யம்! இப்படியொரு கலவை தொண்டனாக அமையும் பாக்கியம் எந்தத் தலைவனுக்குக் கிடைக்கும்! உண்மையில் இவன் வெறும் தொண்டன் மட்டுமா! சீதை இவனை மகன்போல்

கருதுகிறாள். அப்படியானால் எனக்கும் இவன் மகன் தானே! சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டுவந்து எனக்கும் என் தம்பிக்கும் உயிர் தந்தவன்! அதை வைத்துப் பார்த்தால் இவன் என் தந்தையே ஆகிறான்!

ராமன் முகத்தின் மென்னகை மேலும் சற்றுக் கூடியது. என்ன நல்ல சேதி என்றாலும் தாவிக் குதித்து வந்து சொல்வது இவன்தான்! நான் இலங்கை வரப் போகிறேன் என்று முதலில் சீதையிடம் சொன்னான்! சீதை நலமாக இருக்கிறாள் என்று என்னிடம் சேதி சொன்னான். வீடணன் வந்துகொண்டிருக்கிறான் என்று இப்போது வந்து சொல்கிறான். நான் வரும் தகவலை முன்கூட்டியே பரதனிடம் சொல்லவும் விரைவில் இவனைத் தான் அனுப்ப வேண்டும்.

இவ்வளவு தொண்டு செய்கிறானே! மகத்தான தொண்டுகள் செய்கிறோம் என்ற அகங்காரம் இவனிடம் இருக்குமோ? இவ்விதம் எண்ணுவதே வேடிக்கை தான். இனி வரும் காலமெல்லாம் தொண்டுக்கு இலக்கணம் என்று உலகம் இவன் பெயரைத் தான் சொல்லிக் கொண்டாடப் போகிறது. அகங்காரம் என்ற வார்த்தையின் உச்சரிப்புக் கூட இவன் அறியாதது.

சீதையும் தன் மகனே போன்ற அனுமனின் சுறுசுறுப்பைத் தான் கனிவோடு கவனித்துக் கொண்டிருந்தாள். `பிரபோ!` என்று ராமனை அழைத்தாள் அவள்.

`என்ன தேவி?`

`அணிலின் சேவையைப் பாராட்டி அதன் முதுகில் மூன்று விரல்களால் தடவிக் கொடுத்தீர்களாமே? நீங்கள் என்னைப் பிரிந்த இடைக்காலத்தில் செய்த செயல்கள் ஒவ்வொன்றாக என் செவிகளுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அணில் நீங்கள் கொடுத்த மூன்று விரல் சான்றிதழை முதுகில் சுமந்து இனி வரப்போகும் காலமெல்லாம் பெருமையுடன் துள்ளித் திரியப் போகிறது.`

`என்ன சொல்ல வருகிறாய் தேவி?`

`அணிலைக் கௌரவித்த தாங்கள் என் பிள்ளை அனுமனை உரிய வகையில் கௌரவிக்கவில்லையே ஸ்வாமி!`

சீதையின் வினாவைக் கேட்டு ராமன் மனம் யோசனையில் ஆழ்ந்தது. உண்மை தான். ஆனால் இவனை என்னவிதத்தில் கௌரவிப்பது? தன் வாழ்வில் ஒன்றாய்க் கலந்துவிட்ட இவனைத் தெய்வமாய் வருங்காலம் போற்றப் போகிறது. தட்டிக் கொடுத்தும் தடவிக் கொடுத்தும் பாராட்டி உற்சாகப்படுத்த வேண்டிய நிலைகளைக் கடந்துவிட்ட கர்ம யோகி. இவன் முதுகில் மட்டுமல்ல, இவனது ஒவ்வொரு மயிர்க்காலிலும் கூட

ஏற்கெனவே ராமநாமம் எழுதப்பட்டிருக்கிறது. விலையுயர்ந்த முத்து மாலையைப் பரிசளித்தால் கூட அதைக் கடித்து முத்துகளின் உள்ளே ராமநாமம் இருக்கிறதா என்று தான் பார்ப்பான். எந்தப் பொருளின் மதிப்பும் ராமநாமத்தின் முன் இவனுக்கு ஒரு பொருட்டே அல்ல.

லட்சுமண பரத சத்துருக்கனர்கள் தன் மேல் செலுத்தும் அன்பில் ஆச்சரியமில்லை. அவர்கள் உடன் பிறந்தவர்கள். அது ரத்த பாசம். சீதையோ பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட காதல் மனைவி. வீரத்திற்குக் கிடைத்த பரிசு. கணவனை மனைவி உயிருக்குயிராய் நேசிப்பதிலும் வியப்பில்லை. ஆனால் எங்கிருந்தோ வந்த இந்த அனுமன் என்மேல் வைத்திருக்கும் நேசமும் பக்தியும்..இத்தனைக்கும் மானிடன் கூட இல்லை. ஒரு வானரம்..மனிதன் தெய்வமாவது கடினம் தான். என்றாலும் அது ஒரு படிநிலையைக் கடந்த பரிணாம வளர்ச்சி. ஆனால் வானரம் தெய்வமாவது இரண்டு படிநிலைகளைத் தாண்டிய வளர்ச்சி அல்லவோ..தன் இனம் அல்லாத என்னிடம் இத்தனை பக்தி கொண்ட அனுமனை எவ்விதம் கௌரவிப்பேன்..

`அன்பே சீதா! பொறுத்திரு. ஒரு சந்தர்ப்பம் வரும். அனுமனின் பெருமையை ஏதேனும் ஒரு இயற்கைப் பொருளில் நிரந்தரமாய் எழுதி வைப்போம். ஜாதிமத பேதங்களால் பிளவு படும் மானிட குலம், தெய்வ நிலைக்கு உயர வேண்டுமானால் அத்தகைய பிளவுகளைக் கைவிட்டு அன்பால் ஒன்றாக வேண்டும். இந்த நீதியை அந்த இயற்கைப் பொருளைப் பார்த்து உலகம் நிரந்தரமாய்க் கற்கும் வகையில் நாம் ஓர் ஏற்பாடு செய்வோம்.`

`பூடகமாய்ப் பேசுகிறீர்கள். புரியவில்லையே நாதா?`

`தருணம் வரும்போது உனக்குத் தானாய்ப் புரியும் அன்பே! என்னைக் காணச் சிறையில் இத்தனை நாளாய்க் காத்திருந்தாயே? அனுமனை நான் எவ்விதம் கௌரவிக்கப் போகிறேன் என்றறிய இன்னும் சற்று நேரம் காத்திருக்கக் கூடாதா?`

வருங்காலத்தையும் சேர்த்து உணர்ந்த ராமபிரான் வார்த்தைகளில் சீதை நம்பிக்கை கொண்டாள். காத்திருக்கலானாள்.

விறுவிறுவென்று வந்து நின்ற புஷ்பக விமானத்தில் எல்லோரும் ஏறிக் கொண்டனர். விமானம் பறக்கத் தொடங்கியது. வானரங்கள் ஏற ஏற அதன் தளம் விரிந்து இடம் கொடுத்த அதிசயத்தைப் பார்த்து சீதை பிரமித்தாள். சீதாப் பிராட்டியை அப்போது தான் புதிதாய்ப் பார்த்த சில வானரங்கள் அவள் பின்னலைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து அன்னையின் வால் மட்டும் ஏன் தலையிலிருந்து தொடங்குகிறது என ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டபோது சீதை நாணினாள்.

தனக்காக உயிரை விடவும் சித்தமாயிருந்த அந்தப் பேதைமை நிறைந்த குரங்குகளின் முதுகைப் பரிவோடு வருடித் தன் பாசத்தை வெளிப்படுத்தினாள். ராமபிரான் புஷ்பக விமானம் பறந்து செல்லும் வழியில் உள்ள இடத்தையெல்லாம் காட்டி சீதையைப் பிரிந்திருந்த காலத்தில் அங்கங்கே என்னவெல்லாம் நிகழ்ந்தன என்று விவரித்தான். அப்போது....

கீழிருந்து ஒரு தவமுனிவரின் குரல்...

`இங்கே சற்று இளைப்பாற வேண்டும் ராமா! என் இல்லத்தில் பசியாறிப் பின் பயணத்தைத் தொடரவேண்டும்!`

வானை நோக்கிக் கும்பிட்டுக் கேட்டுக் கொண்டார் பரத்வாஜ முனிவர். முனிவரின் ஆசிரம வளாகத்தில் புஷ்பக விமானத்தைத் தரையிறக்குமாறு பணித்தான் ராமன்.

`வரவேண்டும் ஸ்ரீராமா வரவேண்டும். உனக்கும் பிராட்டிக்கும் இலக்குவனுக்கும் மற்றும் அனைவருக்கும் சுஸ்வாகதம்! என் குடிலில் விருந்துண்டு செல்ல வேண்டும்!`

ராமன் யோசனையோடு நின்றான். அனுமன் வானரம் என்பதால் அவனைப் பெயர்சொல்லி வரவேற்காது விடுத்தாரா? அனுமனின் பெருமையை இவர் அறியவில்லையா? விரைவில் அதை உணரச் செய்வோம்.

`முனிவர் பெருமானே! வந்தனங்கள். வானரங்களையும் சேர்த்து நூற்றுக்கணக்கான பேர் இருக்கிறோமே. உண்பதென்றால் அனைவருடனும் தான் நான் உண்பேன். விருந்துபசரிக்க இயலுமா தங்களால்? தங்கள் வசம் என் குலகுரு வசிஷ்டரின் காமதேனு இருப்பதுபோல் அல்லவா அழைக்கிறீர்கள்?`

`காமதேனு என்வசம் இல்லாவிட்டால் என்ன ராமா? நூறு காமதேனுக்களை தவ வலிமையால் படைக்க என்னால் முடியும். நீ உணவுண்ணச் சித்தம் கொண்டால் வானரங்களையும் சேர்த்து உங்கள் அனைவருக்கும் ஒரு நொடியில் உணவை வரவழைப்பேன்.`

முற்றும் துறந்த முனிவரே ஆயினும் என்ன அகந்தை! சீதையின் முகத்தில் மெல்லிய அலுப்பின் ரேகை. ராமன் ஒரு பார்வையில் சீதையின் மனத்தைப் படித்தான். ஒரு திட்டத்தோடு சாந்தம் இழையோடும் குரலில் முனிவரைப் பார்த்துச் சொன்னான்: `அப்படியே ஆகட்டும்!`

ஒருகணத்தில் உணவுப் பொருள்கள் பரத்வாஜரின் தவ வலிமையால் மலைமலையாய்க் குவிந்தன. வானரங்கள் உண்ணவெனக் கனிகள் ஆங்காங்கே உள்ள மரங்களில் கொத்துக் கொத்தாய்ப் பழுத்துத்

தொங்கலாயின. அனுமன் தவிர்த்த பிற வானரங்கள் மரங்களில் கனிகளை உண்ணத் தலைப்பட்ட போது அனுமனைத் தன் அருகிலேயே அமருமாறு பணித்தான் ராமபிரான். ஓ. நாடகம் தொடங்கிவிட்டது. சீதை மெலிதாய்த் தனக்குள் சிரித்துக் கொண்டாள். முனிவர் வியப்புடன் ராமனை ஏறிட்டார். தயக்கத்துடன் கேட்டார்:

`உங்கள் அருகிலா அனுமனுக்கு இடம்?`

`ஆம் முனிவரே! அனுமனின் இதயத்திலேயே எனக்கு இடம் கிடைத்திருக்கிறபோது என் இருக்கை அருகே அவனுக்கு இடம் தரலாகாதா என்ன? எங்கள் அனைவருக்கும் இலைபோட்டுப் பரிமாற ஏற்பாடு செய்யுங்கள்.`

`இதுதானா பிரமாதம்? இதோ!`

பரபரவென முனிவரின் தவ வலிமையால் வாழை இலைகள் வந்து குவிந்தன. அவரது தவ ஆற்றலாலேயே வரவழைக்கப்பட்ட தேவ கன்னியர் இலை போடலானார்கள். என்ன சங்கடம்! ராமனின் அருகே அமர்ந்திருந்த அனுமன் வரை இலை வந்தது. ராமனுக்குப் பிறகு இன்னும் அனுமன் மட்டுமே பாக்கி. ஆனால் இலைகள் தீர்ந்துபோயின.

`முனிவரே! அனுமனுக்கு எங்கே இலை? சீக்கிரம் இலை வரவழையுங்கள். எனக்குப் பசிக்கிறது. நான் அனுமனோடு சேர்ந்து உணவுண்ண வேண்டும்!`

முனிவர் பதறினார். `இதோ! இதோ!` எனத் தம் தவ ஆற்றல் முழுவதையும் பிரயோகித்து ஓர் இலைவேண்டித் தவம் கிடந்தார். ம்கூம்! இலை வரவில்லை. சீதை இந்தத் திருவிளையாடலைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். பரத்வாஜ மகரிஷியின் முகமெல்லாம் முத்து முத்தாய் வியர்த்தது. `ம். ஆகட்டும் முனிவரே! சீக்கிரம்!` ராமனின் சொற்கள் அவரை முடுக்கின. ஆனால் என்ன செய்ய? இத்தனை வகைவகையான உணவுப் பொருட்களையும் ஏராளமான வாழை இலைகளையும் வரவழைத்த முனிவரால் ஒரே ஓர் இலையை வரவழைக்க முடியவில்லை! முனிவர் படும் பாட்டைக் கண்டு அன்னையின் மனம் இரங்கியது.

`பிரபோ! முனிவரால் இயலவில்லை போலிருக்கிறது. அவரை மேலும் சோதிக்காதீர்கள். பிரச்னையை உங்கள் விருப்பப்படித் தீர்த்துவையுங்கள்!`

அன்னையின் வாசகங்களைக் கேட்ட முனிவர் நெகிழ்ந்தார். அவரது அகந்தை அடங்கியது. இறையருளின் முன் தவ வலிமையின் அகங்காரம் தூள் தூள் ஆவதை உணர்ந்தார். கையெடுத்துக் கும்பிட்டார்.

`ஸ்ரீராமா! மூலப் பரம்பொருளே! உன் பெருமை அறியாமல்

அகந்தையால் அழிந்தேன். அனுமன் உனக்கு இணையானவன் என்பதை அவனுக்கு நீ சமபந்தி அந்தஸ்து கொடுத்ததால் அறிந்தேன். என் கர்வம் அழிந்தது. நீயே இந்தச் சிக்கலுக்கு ஒரு முடிவு சொல்!`

குறுநகை புரிந்த ராமன் சொன்னான்: `பிரச்னையைத் தீர்ப்பது மிகவும் சுலபம் முனிவரே! இதோ பாருங்கள். ஆஞ்சநேயா! என் எதிரே வந்து அமர்வாய்!`

`அப்படியே ஸ்வாமி!` அஞ்சனை குமாரன் வியப்போடு ராமபிரானின் எதிரே அமர்ந்துகொண்டான்.

`நாங்கள் இருவரும் ஒரே இலையில் சாப்பிடப் போகிறோம்.` என்ற ராமன் வாழையிலையின் நடுவே தன் மோதிர விரலால் ஒரு கோடு கிழித்தான். என்ன ஆச்சரியம்! அதுவரை நடுவே காம்பு ஏதும் இல்லாமல் பாய்மாதிரி ஒரே இலையாக இருந்த அது இப்போது நடுவில் ஒரு காம்பைப் பெற்றுத் தன்னைப் பாதி பாதியாகப் பிரித்துக் கொண்டது. முனிவர் தேவ கன்னிகையிடமிருந்து பாயசப் பாத்திரத்தை வாங்கித் தாமே ஒரே இலையின் இரு புறங்களிலும் பாயசத்தைப் பரிமாறினார். அனுமன் பக்திக் கண்ணீர் பெருகப் பெருக ராமபிரானுடன் ஒரே இலையில் அமர்ந்து விருந்துண்டான். முனிவர் அகந்தை நீங்கியவராய் நிறைவுடன் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

`இனித் தோன்றும் வாழை இலைகளெல்லாம் நடுவே இப்படிக் காம்புடன் தான் தோன்றும்!` என்று சீதையைப் பார்த்துச் சிரித்தவாறே சொன்னான் ராமபிரான். அனுமன் புகழுக்கு இயற்கைப் பொருளில் ஸ்ரீராமர் முத்திரை பதித்துவிட்டதை உணர்ந்த நிறைவோடு அன்னை தானும் ஒரு கை பாயசத்தை அருந்தலானாள்.



33

சத்துருக்கனனும் மந்தரையும்!

சத்துருக்கனன், தன் அண்ணா பரதன் எடுத்த முடிவை அறிந்து திகைத்துப் போய்ச் சிலைபோல நின்று கொண்டிருந்தான். பரதன் முன்னால்,

அவன் கட்டளைப்படி விறகுகள் அடுக்கப்பட்டுத் தீ மூட்டப்பட்டிருந்தது.

தீ சரசரவெனக் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அந்தத் தீயில் குதித்து தன் பொன்னான உயிரை மாய்த்துக் கொள்ள முடிவு செய்துவிட்டான் பரதன்.

ராமபிரான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் வரவேண்டுமென்றால் இப்போது வந்திருக்க வேண்டும். பதினான்கு ஆண்டுகள் நேற்றோடு முடிந்துவிட்டன.

ஒவ்வொரு நாளையும் என்று ராமன் திரும்பி வருவான் என்று எண்ணிக் கொண்டே இருந்த பரதனுக்கு ராமன் வரும்நாள் தெரியாதா என்ன?

பரதனுக்குப் பழியைத் தந்த அந்த வனவாச வரம். அவனது தாய் கைகேயி மாமன்னர் தசரதரிடம் கேட்ட வரம்.

அந்த வரத்திற்கான கெடு முடிந்த பின்னரும் ராமபிரான் அயோத்திக்குத் திரும்பி வராவிட்டால் என்ன அர்த்தம்?

`எனக்கு வேண்டாம் ராஜ்ஜியம், நான் கானகத்திலேயே வாழ்ந்துகொள்கிறேன்!` என்று

முடிவு செய்துவிட்டானா? அல்லது அவன் உயிருக்கு ஏதும் ஆபத்தா?

சொன்ன சொல் தவறாத குணமுடையவன் ஆயிற்றே? இன்னும் வரவில்லையே?

இனி ஒருகணம் உயிர் வாழ்வதிலும் அர்த்தமில்லை என்று பரதன் முடிவெடுப்பதில் ஆச்சரியமில்லை தான்.

ஆனால் நான் என்ன செய்வது? சத்துருக்கனன் யோசித்தான். இதே தீயில் நானும் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்றால் அயோத்தியின் அரசாட்சிக்கு மன்னர் தேவை என்று குலகுரு வசிஷ்டர் வற்புறுத்துகிறார். `உன்னைப் பற்றி நினைக்காதே, அயோத்தி மக்களை நினைத்துப் பார்!` என்று கட்டளை இடுகிறார். என்ன வாழ்க்கை என் வாழ்க்கை. சத்துருக்கனன் மனம் சலிப்புற்றது.

சுற்றிலும் அவனது மூன்று தாய்மார்களும் மந்திரி பிரதானிகளும் பொதுமக்களும் குழுமியிருக்கிறார்கள். எல்லோர் கண்களிலும் கரகரவெனக் கண்ணீர் வழிந்துகொண்டிருக்கிறது - பரதன் உயிர் விடப் போவதை எண்ணி.

ஆனால் என் மனநிலையை இங்கிருப்பவர்களில் ஒருவர் கூடப் புரிந்துகொள்ளவில்லையே?

சத்துருக்கனன் மனம் தாள முடியாத பரிதவிப்பில் தவித்து விம்மியது.

கானகத்தை ஆள்வேன் என்று அயோத்தி என்கிற நில மகளைக் கைவிட்டுப் போனான் மூத்த அண்ணனாகிய ராமபிரான். அவனைக் காப்பதே தன்னுடைய வாழ்க்கைக் கடமை என்று உடன் போனான் அடுத்த அண்ணனாகிய லட்சுமணன். அவர்கள் வரும் நேரம் தவறிவிட்டது என்று தன் பொன்னான உயிரை விடத் துணிந்துவிட்டான் இதோ இன்னோர் அண்ணனாகிய பரதன்.

இப்படி மூவரும் துறந்த அரசாட்சியை வெட்கமில்லாமல் நான் ஆள்வதா?

சத்துருக்கனன் கடும் வெறுப்போடு கூட்டத்தினரின் இடையே கண்களால் தேடினான். அதோ இந்த அத்தனை நிகழ்வுகளுக்கும் காரணமான கூனி மந்தரை ஓர் ஓரத்தில் கைகேயியின் அருகே மறைந்தவாறு நின்றுகொண்டிருக்கிறாள்.

வாளால் அவளை வெட்டிவிடலாமா? அவன் மனத்தில் சினம் பொங்கியது.

தர்மம் தவறாமல் ஆண்டுவந்த ஓர் அரச குலத்திற்கு எல்லாவகைச் சங்கடங்களையும் ஏற்படுத்தியவள் இவள் தானே? தூய மாதா கைகேயியின் மனம் இவளது துர்ப்போதனையால் தானே திரிந்தது?

ஒருவகையில் பார்த்தால் தசரத மாமன்னர் இறப்பதற்கும் கூட இவள் தானே காரணம்? இவள் தூண்டியதால் அல்லவா அன்னை கைகேயி அந்தக் கடும் வரங்களை தசரதரிடம் கேட்டாள்?

அண்ணா ராமனையும் அண்ணி சீதையையும் இன்னோர் அண்ணா லட்சுமணனையும் காட்டுக்கு அனுப்பி, அப்பா தசரதர் காலமாகக் காரணமாக அமைந்து வெட்கமில்லாமல் இன்னும் உயிர் வாழ்கிறாளே இந்த மந்தரை! சத்துருக்கனன் கண்கள், பரதன் குதிக்கவிருந்த நெருப்பைப் போல் சிவந்து விழித்தன.

சத்துருக்கனன் பார்வை தன்னை நோக்கிச் சினந்து சீறுவதை மந்தரையும் கவனித்துவிட்டாள். அவள் மனம் அஞ்சிப் பதுங்கியது.

தசரதரின் சாவுக்குத் தானே காரணம் என்று பொதுமக்களிலேயே பலர் நினைப்பதையும் அவள் அறிவாள். அவள் மேல் மக்களுக்குக் கடும் கோபம் இருக்கிறது. வெளியே எங்கும் அவள் தனியே செல்வதில்லை. கல்லால் அடித்தே கொன்றுவிடுவார்களோ என்ற அச்சம் தான் காரணம்.

பதினான்கு ஆண்டுகளாக கைகேயியின் ஆதரவில் அவள் அரண்மனைக்குள்ளேயே புழுங்கிப் புழுங்கி வாழ்ந்து வருகிறாள்.

பரதன் உயிர் விடுவானானால் மக்களின் சீற்றம் கட்டாயம் அவள் மேல் பாயும். எந்த பரதனுக்காக கைகேயி வரங்கள் கேட்டாளோ அந்த பரதனே இறந்துவிட்டால் கைகேயி மேல் மக்கள் கோபம் கொள்ள மாட்டார்கள். அவள் நிலையை எண்ணிப் பரிதாபப்படுவார்கள்.

ஆனால் அயோத்தியில் ஏற்கெனவே நிகழ்ந்த தசரதர் சாவுக்கு மந்தரையே காரணம் என்று நினைக்கும் மக்கள் கூட்டம் பரதனது சாவுக்குப் பின் அதற்கும் இவள்தானே காரணம் என நினைக்குமானால் மந்தரையின் கதிதான் என்ன?

இதோ இப்போதே தன்னைப் பார்த்துச் சீறுகின்றன சத்துருக்கனனின் கண்கள். நான் என்ன செய்வேன்?

பரதன் நெருப்பில் குதித்ததும் தானும் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஓடோடிப் போய் நெருப்பில் குதித்துவிடவா? இந்தப் பெருங்கூட்டம் அப்படிப் போய்க் குதிக்க வழிவிடுமா?

ராமன் மேல் எல்லோரும் பாசம் செலுத்தும்போது எனக்கு மட்டும் அன்று ஏன் அப்படிப் புத்தி பிசகிற்று? கைகேயியின் மனத்தைத் தன்

துர்ப்போதனையால் தான் மாற்றியதை எண்ணியெண்ணி பின்னர் ஒவ்வொரு நாளும், அவள் வருந்தியிருக்கிறாள். ஏன் கைகேயியிடமே சொல்லிச் சொல்லி அழுதிருக்கிறாள்.

`கடந்த காலத்தை மறந்துவிடு மந்தரா! நீ உன் போதனைகளால் மாற்றினாலும் நான் ஏன் மாறவேண்டும்? நீ சொன்னபடி இரண்டு வரங்கள் கேட்கும் அளவு நான் ஏன் துணியவேண்டும்? உன் மேல் உள்ள பிசகை விட என்மேல் உள்ள பிசகுதான் மிகவும் அதிகம்! என்றும் நீ என் தோழிதான். உன்மேல் உள்ள என் அன்பு ஒருநாளும் வற்றாது. நான் உணர்ந்து திருந்திய மாதிரி நீயும் திருந்தி விட்டாய். கடந்த காலத்தை மறப்பது ஒன்று தான் நம் மனப்பாரத்திலிருந்து நாம் தப்பிக்க ஒரே வழி. என் மகன் ராமனது திருநாமம் எல்லாம் வல்ல பரம்பொருளின் நாமம். அந்த நாமத்தைத் தொடர்ந்து ஜபிப்போம். எல்லாப் பாவங்களிலிருந்தும் நானும் நீயும் விடுபடுவோம் மந்தரா!`

கைகேயி மந்தரையின் தோளைத் தட்டி ஆறுதல் கூறுவாள். பதினான்கு ஆண்டுகளும் ராமநாமத்தை ஜபித்தவாறு தானே மந்தரை உயிர் வாழ்ந்து வருகிறாள். ராம ராம ராம என்று சொல்லும்போது மனத்தில் ஆறுதல் பிறக்கிறது.

`ராமா, நீ என்னைக் கட்டாயம் மன்னிப்பாய்` என்று மனம் நம்பிக்கை கொள்கிறது. தன் சூழ்ச்சியால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவன் அவன் தானே? அவன் மன்னித்தால் அன்றி இந்தப் பாவத்திலிருந்து விடுபட இயலாது. இப்படி வாழ்வதை விடச் செத்துவிடலாம். ஆனால் சாவு வரவில்லையே? மந்தரையின் மனம் அழுதது.

தயக்கத்தோடு தொலைவிலிருந்து மறுபடியும் சத்துருக்கனனைப் பார்த்தாள் அவள். அவன் பார்வை கூர்மையான அம்பு போல் அவளைத் தொடர்ந்து துளைத்துக் கொண்டிருந்தது. பார்வையே அவளைக் கொன்றுவிடும் போல் இருந்தது.

அவளுக்குப் பதினான்கு ஆண்டுகள் முந்தைய அந்த நாள் ஞாபகம் வந்தது.

பரதன் ராமனைக் காட்டிலிருந்து கூட்டிவருகிறேன் என்று புறப்பட்ட நாள். சத்துருக்கனனும் மூன்று தாய்மார்களும் குலகுரு வசிஷ்டரும் ஏராளமான பொதுமக்களும் பரதன் பின்னால் உடன் போவதற்காக அணி திரண்டனர். கூடவே தயக்கத்தோடு மந்தரையும் நின்று கொண்டிருந்தாள். மந்தரை மேல் சத்துருக்கனன் பார்வை விழுந்துவிட்டது.

`இந்தக் கூனியல்லவா இதற்கெல்லாம் காரணம்? இவளைக் கொன்றுவிடுகிறேன்!` என்று வாளோடு மந்தரையை நோக்கிப்

பாய்ந்தான் சத்துருக்கனன்.

அப்போது பரதன்தான் சடாரென்று குறுக்கிட்டுத் தடுத்தான். அவன் தடுத்திராவிட்டால் அன்றே மந்தரையின் உயிர் போயிருக்கும்.

`என்ன காரியம் செய்யத் துணிந்தாய் சத்துருக்கனா? ஒரு பெண்ணைக் கொல்வதா? உன் வீரத்திற்கு அழகா இது? என் தாய் கைகேயியின் புத்தி வெகுசீக்கிரத்தில் மாறியதற்கு அவள் என்ன செய்வாள் பாவம்!'

அன்று சத்துருக்கனன் தன் வாளை உறையிலிட்டான். ஆனால் இன்று அந்த வாள் உறையிலேயே தங்குமா?

இதோ வாளை உருவிவிட்டானே அவன்! மந்தரை நடுநடுங்கினாள்.

அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. வானிலிருந்து ராம் ராம் என்று உரக்கக் குரல்கொடுத்தவாறே அனுமன் குதித்தான். பரதனைத் தீப்புகாதவாறு பாய்ந்து தடுத்தான். ராம பிரான் வந்துகொண்டிருக்கும் ஆனந்தச் செய்தியை அறிவித்தான்.

மக்கள் வெள்ளம் ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் மந்தரை மட்டும் நடுங்கியவாறு சத்துருக்கனனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனது வாள், உறையிலிருந்து வெளிப்பட்ட வாள் மீண்டும் உறைக்குள் போகவில்லையே? அது அப்படியே தான் அவன் கையில் பளபளத்துக் கொண்டிருந்தது.

ரத்தபலி கேட்கிறதா அது? இனி என்ன நடக்கும்? சத்துருக்கனன் தன்னை வெட்டி வீழ்த்திவிடுவானா?

அவனிடம் உயிர்ப்பிச்சை கேட்க வேண்டும். ராமபிரானின் பட்டாபிஷேகம் நடந்து முடியட்டும். அதைப் பார்க்க ஆசைப்படுகிறேன். அதுவரை என்னை உயிரோடு விடு என்று கெஞ்ச வேண்டும். வேறென்ன செய்வது?

மந்தரையை அவன் வெட்ட முன்வந்தால் சந்தேகமில்லாமல் மக்கள் அத்தனைபேரும் அவனுக்கு ஆதரவாகத்தான் நிற்பார்கள். தனக்காக ஒரு குரல் கூட எழப் போவதில்லை.

கைகேயி தன்னைக் கொல்ல வேண்டாம் என்று ஒருவேளை குரல் கொடுக்கலாம். ஆனால் அந்தக் குரலை யாரும் லட்சியம் செய்ய மாட்டார்கள். மந்தரையின் மனம் கிடுகிடுவென நடுங்கியது.

அதோ ராமபிரான் புஷ்பக விமானத்தில் வந்துவிட்டார். மக்கள் ஆர்ப்பரித்தார்கள். ராமன் பரதனைக் கட்டித் தழுவிக்கொண்டான். அருகே நின்ற சத்துருக்கனைப் பார்த்தான். அவன் கையில் உருவிய

வாளோடு நிற்பதையும் ராமன் கண்கள் கவனித்திருக்க வேண்டும். சத்துருக்கனன் எண்ணத்தையும் கூட கூர்மையான மதி படைத்த ராமன் உணர்ந்திருக்கக் கூடும். ஆனால் ராமன் சத்துருக்கனனைக் கவனியாதது போல் தாய்மார்களை நோக்கி வந்தான்.

ஆ. எப்பேர்ப்பட்ட செயலைச் செய்கிறான் ராமன். மந்தரை விக்கித்து நின்றாள். ராமன் தன் மூன்று தாய்மார்களையும் வணங்கும்போது முதலில் கைகேயியை வணங்கினான். `சீதா! லட்சுமணா! நீங்களும் மாதா கைகேயியை வணங்குங்கள்!` என்ற அறிவுறுத்தினான்.

மக்கள் வெள்ளம் ராமபிரானின் செயலை வியப்போடு பார்த்தவாறிருந்தது. எல்லோரும் ராம பிரானை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டிருந்தனர். பின்னர் கோசலை, சுமித்திரை இருவரையும் வணங்கினான் ராமன். அதன் பின்னர்....

மந்தரைக்கு விழிகளில் கண்ணீர் வழிந்தது. `எங்கே என் அன்னை மந்தரை?` என்று கேட்டன ராமனின் உதடுகள். மெய்தானா இது? தன் செவிகள் கேட்பது உண்மை தானா? இப்படியும் ஒரு பெருந்தன்மை உண்டோ? மந்தரை விம்மியவாறு ராமனை நோக்கி வந்தாள்.

மந்தரையின் கால்களில் விழுந்து பணிந்தான் ராமன். விம்மி விம்மி அழுத அவளை அணைத்து ஆறுதலாய் முதுகில் தட்டிக் கொடுத்தான். அவ்விதம் தட்டிக் கொடுத்தவாறே சத்துருக்கனனைப் பார்த்தன ராமபிரானின் கண்கள். தன்னிச்சையாக சத்துருக்கனின் உருவிய வாள் மீண்டும் உறைக்குள் சென்றது. அதைத் தானும் கவனித்த மந்தரை ராமனின் கால்களைத் தொட்டு வணங்கப் போனாள்.

`மந்தரா தேவி! தாங்கள் என் தாயைப் போன்றவர் அல்லவா? ஒரு தாய் தன் மகனை வணங்கலாமா? மகன் அல்லவோ தாயை வணங்க வேண்டும்?`

சொல்லியவாறே ராமன் மந்தரையை மீண்டும் நமஸ்கரித்தான். ராமனோடு சீதையும் லட்சுமணனும் கூட மந்தரையை விழுந்து வணங்கினார்கள். கூட்டம் திகைப்பில் உறைந்தது. பின்னர் `மந்தராதேவி வாழ்க!` என்று குரல் கொடுத்தது.

உண்மையிலேயே தனக்கு உயிர்ப்பிச்சை தந்து தன்னை வாழ வைத்தவன் ராமன் தானே என எண்ணி மந்தரையின் விழிகளில் நீர்ப்பெருக்கு தோன்றியது. தேவர்கள் பொழிந்த பூமாரியால் மண்ணுலகம் நிறைந்தது.

34

லட்சுமணன் செய்த தியாகம்!

என்ன எழில்! எத்தனை கோலாகலம்! அயோத்தி மாநகரம் ஆனந்தத்தால் பூரித்துக் கொண்டிருந்தது. ராம பட்டாபிஷேக வைபவத்திற்காகக் காத்துக் கொண்டிருந்த மக்கள் அந்தத் தருணம் வந்துவிட்டதை எண்ணியெண்ணித் தாங்கவியலாத மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவர் வீட்டிலும் அவரவர் வீட்டுக் கல்யாணம் போல் அலங்காரங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

வீடெங்கும் மாவிலைத் தோரணங்கள். வாயிலை அடைத்துப் பெரிய பெரிய வண்ணக் கோலங்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என ஒவ்வொருவரும் புத்தம் புதிய ஆடை அணிந்துகொண்டு புதிய புதிய ஆபரணங்களைச் சூட்டிக் கொண்டு அரண்மனையை நோக்கிக் குழுமினார்கள். சங்கு, பேரிகை, துந்துபி, வீணை, மிருதங்கம் போன்ற இசைக்கருவிகளின் இனிய நாதம் நகரெங்கும் பரவியது. ஆடல் பாடல் நிகழ்ச்சிகளின் கோலாகலம் பார்த்த இடமெல்லாம் தென்பட்டது.

ஸ்ரீ ராமச்சந்திரன் உண்மையிலேயே சந்திரனைப் போல் பிரகாசித்தார். ராவணனை வதம் செய்த வெற்றிப் பெருமிதம் அவரது முகத்தில் தென்பட்டது. அவரைச் சூழ்ந்திருந்த அவரது மூன்று தம்பிகளும் விபீஷணன், சுக்கிரீவன், அனுமன் போன்றோரும் நிலவைச் சுற்றியுள்ள நட்சத்திரங்களைப் போல் காணப்பட்டார்கள். தனக்குப் பட்டாபிஷேகம்

நிகழ்த்திய ஸ்ரீராமரது பட்டாபிஷேகத்தில் தான் கலந்துகொள்ளும் பாக்கியம் பெற்றது பற்றி விபீஷணன் முகத்தில் நன்றி கலந்த பூரிப்பு தென்பட்டது.

ஸ்ரீராமரது பக்கத்தில் அமர்ந்திருந்த சீதாதேவி பொதுமக்களின் ஆனந்தத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தாள். சீதையின் முகத்தில் எல்லா மக்களுக்கும் அவள் தாய் என்பதுபோலான ஒரு கனிவு தென்பட்டது. . ராமனது திருமுகம் இன்னதென்றறறியாத சாந்தத்துடன் ஒளிவீசியது.

கௌசல்யை, சுமித்திரை, கைகேயி ஆகிய ராஜமாதாக்கள் ஒருபுறம் ஆசனங்களில் அமர்ந்து தங்கள் மகனான ராமனையும் மருமகளான சீதையையும் பாசம் பொங்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கைகேயி ராமனைப் பார்த்துப் பின் பரதனையும் பார்த்தாள். ராமனுக்கு முன்பே பட்டாபிஷேகம் நிகழ்ந்திருக்க வேண்டும். அதைத் தடுத்தவள் தானல்லவா என்ற கழிவிரக்கம் அவள் பார்வையில் ஊடாடியது. இப்போது பொதுமக்களின் நெஞ்சம் நிறைந்த ஆனந்தத்தைப் பார்த்த அவள் மக்களின் பேரன்பைப் பெற்ற ராமனே அரசாளத் தகுதியானவன் என்பதைப் புரிந்துகொண்டவளாய் ராமனைத் தன் கண்பார்வையாலேயே ஆசீர்வதித்தாள். தீங்கு செய்த தன்னிடம் கூட ஒருதுளியும் விரோதம் பாராட்டாத ராமனல்லவோ தசரதருக்குப் பின் இத்தகைய சாம்ராஜ்யத்தைக் கட்டியாளப் பெரிதும் ஏற்றவன் என்று அவள் உள்ளம் விம்மியது.

முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. சத்ருக்கனன் சுக்ரீவனைப் பார்த்து ராமனுடைய அபிஷேகத்திற்காக புண்ணிய தீர்த்தங்களிலிருந்து நீரெடுத்து வருமாறு வானரர்களை அனுப்பக் கேட்டுக் கொண்டான். அப்படியே செய்வதாய் வாக்களித்த சுக்கிரீவன் நான்கு வானரர்களை அழைத்து அவர்களிடம் நான்கு தங்கக் குடங்களைக் கொடுத்து நான்கு திக்குகளில் உள்ள புண்ணிய தீர்த்தங்களிலிருந்தும் பரிசுத்தமான நீரைக் கொண்டுவருமாறு பணித்தான். தங்களுக்குக் கிடைத்த கௌரவத்தை எண்ணிப் பெருமிதம் கொண்ட அந்த வானரர்கள் கருடனைப் போல் ஆகாயத்தில் தாவிச் சென்று குடங்களில் புண்ணிய தீர்த்தத்தை நிரப்பிக் கொண்டுவந்தார்கள்.

தவிர ஜாம்பவான், அனுமான், வேதர்சீ, ரிஷபன் ஆகிய நால்வரும் தாங்களும் விரைந்துசென்று தங்கக் கலசங்களில் ஐந்நூறு நதிகளிலிருந்து புண்ணிய தீர்த்தத்தைக் கொண்டுவந்தார்கள். கிழக்கே உள்ள கடலிலிருந்து சுஷேணனும் தெற்கே உள்ள கடலிலிருந்து ரிஷபனும் மேற்குக் கடலிலிந்து கவயனும் வடக்குக் கடலிலிருந்து நளனும் புண்ணிய தீர்த்தம் கொணர்ந்தார்கள்.

எல்லாப் புண்ணிய தீர்த்தக் குடங்களும் சபையில் வைக்கப்பட்டன. சுக்கிரீவன் தீர்த்தங்கள் வந்துசேர்ந்ததை சத்துருக்கனனுக்குத் தெரிவித்தான். அந்தச் செய்தியை சத்துருக்கனன் மிகுந்த பணிவோடு குலகுருவான வசிஷ்டரிடம் தெரிவித்தான்.

வசிஷ்ட மகரிஷி ரத்தின மயமான சிம்மாசனத்தில் ராமனையும் சீதா தேவியையும் அமரச் செய்தார். வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், காத்யாயனர், சுயக்ஞர், கௌதமர், விஜயர் என்ற எட்டு முனிவர்கள் வேத மந்திரங்களை ஓதி பரிமள திரவியங்கள் கலந்த புண்ணிய தீர்த்தத்தால் ராமபிரானையும் சீதாப்பிராட்டியையும் அபிஷேகம் செய்து விதிப்படி பட்டாபிஷேகம் நிகழ்த்தினார்கள்.

வானவெளியில் நின்று தேவர் குலம் முழுதும் இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தது. தங்கள் வேண்டுகோளின்படி ராவண வதம் நிகழ்த்திய பின்னர் திருமாலாகிய ராமபிரான் செய்துகொள்ளும் பட்டாபிஷேகம் என்பதால் தேவர்கள் அனைவரின் கைகளும் நன்றியுடன் கூப்பியபடியே இருந்தன.

தேவேந்திரனால் அனுப்பப்பட்ட வாயு பகவான், தங்கத் தாமரைப் புஷ்பங்களால் அமைக்கப்பட்ட ஒரு பிரகாசமான மாலையையும் நவரத்தினங்கள் இடைடையே கோக்கப்பட்ட ஒரு முத்து மாலையையும் கொண்டு வந்தார். அதை ராமபிரான் கழுத்தில் அணிவித்து அவர் மகிழ்ந்தார். ராம பிரானின் அருகே அவரது தாசனாய் அமர்ந்திருந்த தன் புதல்வன் அனுமனைப் பார்த்து வாயு பகவான் மட்டற்ற மகிழ்ச்சியும் அளவற்ற பெருமிதமும் அடைந்தார்.

வசிஷ்டர் பாரம்பரியமான மணிமகுடத்தை எடுத்து ராமபிரான் தலையில் சூட்டினார். தேவர்கள் பொழிந்த பூமாரியால் மண்ணுலகம் நிறைந்தது.

ராமபிரான் பட்டாபிஷேகத்தை தேவர்களும் மானிடர்களும் மட்டுமல்ல, இயற்கையே கூடக் கொண்டாடியது. ராமன் தலையில் மகுடம் சூட்டப்பட்ட அந்தத் தருணத்தில் மரங்களும் செடிகொடிகளும் விசேஷமாய்ப் பூத்துச் சொரிந்தன. மயில்கள் தோகை விரித்து நடனமாடின. பசுக்கள் மடிசுரந்து தானாய்ப் பால் கறந்தன. பறவைகள் ஒலியெழுப்பின.

பரத சத்துருக்கனர்கள் ராமபிரானுக்குச் சாமரம் வீசிக் கொண்டிருந்தார்கள். லட்சுமணன் வெண்கொற்றக் குடையைப் பிடித்திருந்தான்.

பறவைகள், விலங்குகள், மனிதர்கள், தேவர்கள் எல்லோர் கண்களும் ராம பட்டாபிஷேகக் காட்சியையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக்

கொண்டிருந்தன.

ஆனால் இதென்ன! லட்சுமணன் தாங்கியிருந்த வெண்கொற்றக் குடை நேராய் இல்லாமல் லேசாய்ச் சாய்ந்திருந்தது. ராமபிரானின் மணிமகுடத்திற்கு மேல் நேராய் நிற்க வேண்டிய அந்தக் குடை சிறிது சாயக் காரணம் என்ன? இந்த அபூர்வமான வைபவத்தில் லட்சுமணன் குடை பிடிப்பதில் கூடக் கவனமில்லாமலா இருப்பான்? ஏன் இப்படி?

எல்லோர் விழிகளும் அந்தக் குடையையே பார்த்தவாறிருந்தன. சீதாதேவி அதைக் கவனித்தாள். `லட்சுமணா!` என்று அன்போடு அழைத்தாள். `அனுமனும் நீயும் சேர்ந்து குடையைப் பிடித்துக் கொள்ளுங்கள்!` என்று பரிவோடு சொன்னாள்.

லட்சுமணன் சற்றுத் திடுக்கிட்டான். பின் சுதாரித்துக் கொண்டான். அன்னை சீதையின் வாசகத்தைக் கேட்ட அனுமன் தாவி ஓடோடி வந்து தானும் அந்தக் குடையைத் தாங்கலானான். இப்போது அனுமனும் சேர்ந்து பிடித்ததால் குடை நேராக நிமிர்ந்து நின்றது. ராமன் பேசத் தொடங்கினான்:

`பெரியோர்களே! பொதுமக்களே! இந்த வைபவத்தின் முக்கியச் சிறப்பம்சம் என்ன தெரியுமா? என் தலையில் மகுடம் சூட்டப்பட்டதே. அது அல்ல. லட்சுமணன் என் தலைக்குப் பின்னால் பிடித்திருந்த குடை சற்றே சாய்ந்ததே, அதுதான் இன்றைய விழாவின் முக்கியச் சிறப்பு!`

மக்கள் வியப்போடு ராமன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ராமன் மேலும் சொல்லலானான்:

`நான் பதினான்கு ஆண்டுகள் கானகம் சென்றேன். காட்டில் எத்தனை கொடிய விலங்குகள் இருக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை. அரக்கர்களின் தொந்தரவுகள் வேறு. இரவெல்லாம் கண்விழித்துக் காவல் காக்க வேண்டிய கட்டாயம். என்னைத் தன் தந்தை போலவும் சீதாதேவியைத் தன் தாய்போலவும் இரவு பகலாய் உறங்காமல் கண்விழித்துக் காத்தவன் இந்த லட்சுமணன் தான்.`

இதைச் சொல்லிவிட்டு ராமன் மாதா சுமித்திரையைப் பார்த்தான். சுமித்திரை நெகிழ்ச்சியுடன் தன் விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

`உறக்கமே இல்லாமல் பதினான்கு ஆண்டுகள் ஒருவன் எப்படி உயிர்வாழ முடியும்? நித்திரா தேவியை நோக்கித் தவம் செய்து, தனக்குப் பதினான்கு ஆண்டுகள் முழுவதும் உறக்கமே வரக் கூடாது என்றும் ஆனால் அதனால் உடலில் களைப்பு எதுவும் தோன்றக் கூடாது என்றும் வரம் கேட்டான் என் தம்பி. அண்ணன் மேல் இந்தத் தம்பி கொண்டிருக்கும் அளப்பரிய பாசத்தைப் பார்த்து வியந்தாள்

நித்திராதேவி. கேட்ட வரத்தை அவனுக்கு அருளினாள். கூடவே இன்னொன்றையும் சொன்னாள்.

பதினான்கு ஆண்டுகள் மட்டுமே இந்த வரம் செல்லும் என்றும் அது முடிந்ததும் பதினான்கு ஆண்டு உறங்காத களைப்பு தோன்றும் என்றும் அப்போது நாள்தோறும் கூடுதலாக உறங்கி அந்தக் களைப்பைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினாள்.

அவள் கொடுத்த காலக் கெடு முடிந்துவிட்டதால் லட்சுமணனை இப்போது தூக்கம் தழுவுகிறது. அதையும் மீறித்தான் இந்தக் கொண்டாட்டத்திற்காக அவன் குடை பிடிக்க வந்தான்.

இந்தக் குடை சற்றே சாய்ந்தது அவன் உறக்கத் தளர்ச்சியால் தான். என் பொருட்டாக பதினான்கு ஆண்டு உறங்காதிருந்த அவனது பாசத்தின் பெருமையை இந்தக் குடை அனைவரும் அறியக் காட்டிக் கொடுத்திருக்கிறது. இப்படிப்பட்ட தம்பியைப் பெற என்ன பாக்கியம் செய்தேன்!`

என்ற ராமன் குடையை அனுமனிடம் கொடுக்குமாறு லட்சுமணனிடம் பணித்துவிட்டு லட்சுமணனை முன்னே இழுத்துப் பிரியத்தோடு அணைத்துக் கொண்டான்.

சீதை வலக்கரம் தூக்கி லட்சுமணனுக்கு ஆசி வழங்கினாள். லட்சுமணனின் அரிய தியாகத்தை உணர்ந்த மக்கள் `லட்சுமண மகாராஜா வாழ்க!` என்று முழங்கினார்கள்.

அண்ணனைக் காக்க வேண்டும் என்றுதானே தன் பிள்ளை கானகம் செல்லும்போது சுமித்திரை கட்டளையிட்டாள்!

தான் என்ன சொன்னோமோ அதைத் தன் பிள்ளை நிறைவேற்றி விட்டான் என்றறிந்து மாதா சுமித்திரையின் முகத்தில் அளவற்ற பெருமிதம் எழுந்தது.

35

ராமனுக்கும் ஒரு குசேலர்!

அவர் ஒரு ரிஷி. முகத்தில் பளபளவெனத் தவப்பொலிவு மின்னியது. பல்லாண்டுகள் கடவுளையே தியானம் செய்து வாழ்ந்தவராய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இத்தகைய ஒரு தேஜஸ் முகத்தில் தென்பட வாய்ப்பில்லை. ராமபிரானை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடி வந்தார் அவர்.

பட்டாபிஷேகம் அப்போதுதான் நடந்து முடிந்திருந்தது. பதினான்கு ஆண்டுகால மக்களின் எதிர்பார்ப்பு ஒருசில கணங்களுக்கு முன்தான் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ரகுவம்சத்தின் குலகுரு வசிஷ்டர் தன் தலையில் சூட்டிய பாரம்பரிய மகுடத்தோடு ராமபிரான் எல்லோரையும் முறுவல் பூக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தங்களால் நின்ற பட்டாபிஷேகம் பதினான்கு ஆண்டுகள் கழித்து இப்போதாவது நடந்ததே? இனியேனும் மக்களின் பழிச்சொல்லிலிருந்து தாங்கள் மீண்டுவிடுவோம் என்று நிறைவடைந்தவர்களாய் ஒருபுறம் கைகேயியும் மந்தரையும் கண்ணில் நீர்வழிய நின்று கொண்டிருந்தார்கள். கோசலையும் சுமித்திரையும் பரவசத்தோடு இந்தக் காட்சியைப் பார்த்து விம்மியவர்களாய் தங்கள் விழிகளில் வழிந்த கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டிருந்தார்கள்.

முற்றிலும் ஆனந்தமயமான சூழல். மக்கள் பூரண மனநிறைவில் விளைந்த உள்ளார்ந்த மௌனத்தோடு தெய்வமேயான ராமனை பக்திப்

பரவசமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காவலர்களும் கூட மெய்ம்மறந்து ராமனை தரிசித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போதுதான் காவலர்களையும் மீறி அது நடந்துவிட்டது. ஆம். அந்த வாலிப முனிவர் தடதடவென்று ராமனை நோக்கி ஓடலானார்.

எங்கிருந்து வந்தார் இவர்? இதுவரை எங்கேயிருந்தார்? எப்படி இந்த மாபெரும் கூட்டத்தைப் பிளந்துகொண்டு இவரால் தனியொருவராக ராமபிரானை நோக்கி ஓடிவர முடிநத்து? ஏன் இத்தனை வேகம்? ஆடையெல்லாம் அழுக்குப் படிந்து மண்ணும் புழுதியுமாய்த் தென்படுகிறதே? ஒருவேளை பித்துப் பிடித்தவரோ? மனநிலை சரியில்லாதவரோ?

தன் தோற்றத்தைப் பற்றியோ சுற்றிலும் மக்கள் வெள்ளம் இருப்பதைப் பற்றியோ அவர் லட்சியம் செய்தவராய்த் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால் சுற்றுப்புறச் சூழலே அவர் மனத்தில் உறைத்ததாய்த் தெரியவில்லை.

விறுவிறுவென்று யாரும் தடுப்பதற்குள்ளாகவே ராமபிரான் அருகில் சென்றுவிட்டார். அவர் வாயிலிருந்து அடுத்துப் புறப்பட்ட சொற்கள் எல்லோரையும் திடுக்கிட வைத்தன.

`அடேய் ராமா! என்னடா நீ? உன்னை எங்கெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறேன்! நீ இங்கேயா இருக்கிறாய்? எப்போது வந்தாய் அயோத்திக்கு? ஏன் உன் மகுடாபிஷேகத்திற்கு இத்தனை தாமதம்?`

மரியாதை சிறிதுமில்லாமல் வாடா போடா என்று சக்கரவர்த்தி ராமனை ஒருமையில் அழைத்தவாறே ராமபிரான் அருகே சென்றார் அந்த முனிவர். முனிவரின் விழிகளில் கண்ணீர் அருவி போல் வழிந்துகொண்டிருந்ததது.

காவலர்கள் சடாரென உணர்வு வரப் பெற்றார்கள். ஆகா. ராமபிரான் மகுடம் சூடிய காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பரவசத்தில் கடமையை மறந்துவிட்டோமே? எப்படி இந்தப் பைத்தியம் நம் காவலை எல்லாம் மீறி ராமன் அருகிலேயே சென்றுவிட்டது? உடனே பிடித்துக் கட்டவேண்டும் அந்தப் பைத்தியத்தை.

வில், வாள் போன்ற ஆயுதங்களோடு பற்பல காவலர்கள் ஓடிப்போய் அந்த இளம்முனிவரைச் சுற்றி நின்றுகொண்டார்கள்.

முனிவருக்கு ஒன்றும் புரியவில்லை. யார் இவர்கள்? என்னைச் சுற்றி ஏன் நிற்கிறார்கள்? இது எந்த இடம்? அயோத்தியா கானகமா? கானகத்திலிருந்து அயோத்திக்குத் தானே நான் புறப்பட்டு வந்தேன்? இது அயோத்தியாகத் தான் இருக்க வேண்டும்.

அதுசரி. நான் என்ன குற்றம் செய்தேன்? என் ராமனின் அருகில் நான் வந்தது ஒரு குற்றமா? என் ராமனின் அருகில் நான் வராமல் வேறு யார் வரமுடியும்? முனிவர் ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க விழித்தபடி ராமனைப் பார்த்தார்.

`சத்தியவிரதா? நீ வந்துவிட்டாயா? உனக்காகத் தானே காத்திருந்தேன்? வாடா என் அருகே!`

ராமபிரான் இருகரம் நீட்டி அந்த வாலிப முனிவரை அழைத்தான். காவலர்கள் ஒன்றும் தெரியாமல் திகைத்து வழிவிட்டார்கள். அந்த முனிவர் ராமனிடம் ஓடோடிப் போனார்.

ராமன் அவரை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டான். மக்கள் வெள்ளம் இந்தக் காட்சியைப் பரவசத்தோடு பார்த்துக் கொண்டிருந்தது. யார் இவர் என்ற கேள்வி மட்டும் எல்லோர் நெஞ்சிலும் ஓடத் தொடங்கியது.

சீதை அந்தக் காட்சியை ஆச்சரியம் பொங்கப் பார்த்தாள். தன் கணவர் மேல் இத்தனை பாசம் செலுத்தும் இவர் யாராயிருக்கலாம்? என்ன உரிமையோடு வாடா போடா என்று அழைக்கிறார்! அவர் விழிகளில் பொங்கும் பாசத்தின் ஆழம் பார்க்கப் பார்க்கப் பரவசம் தருகிறதே?

அனுமன் அந்த முனிவரை வியப்போடு மட்டுமல்ல, சற்றுப் பொறாமையோடும் கூடப் பார்த்துக் கொண்டிருந்தான். நான்தான் ராமபக்தியில் பெரிதும் தோய்ந்தவன் என்று நினைத்தால் இவர் என்னிலும் அதிகமாக ராமன் மேல் பாசம் செலுத்துகிறாரே? இவர் மட்டும் நமக்கு நண்பரானால் நாம் இவருடன் ராமபிரானைப் பற்றிப் பேசிக்கொண்டு ஆனந்தமாகப் பொழுதைக் கழிக்கலாம். இல்லாவிட்டால் இவரும் நானுமாக நாள்முழுதும் ராமநாமம் சொல்லி ஆனந்தம் அனுபவிக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். பலரும் நினைப்பதுபோல் இவர் பைத்தியமில்லை. அப்படியும் சொல்ல முடியாது. ஒருவகையில் இவரும் நானும் கூடப் பைத்தியங்கள் தான். ராமப் பைத்தியங்கள்.

இப்படியெல்லாம் நினைத்தவாறே அனுமன் `யார் இவர்?` என்ற கேள்விக்குறியோடு லட்சுமணனைப் பார்த்தான். லட்சுமணன் எதுவும் சொல்லாமல் அந்த இளம்முனிவரையே பிரியமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். அதற்குள் பாசம் பொங்க ராமன் கன்னத்தைத் தடவி அவனை உற்றுப் பார்த்த முனிவர் அருகே நிற்கும் லட்சுமணனைப் பார்த்தார். உடன் அவர் கண்களில் புதிதாய் ஒரு பரவசம் தொற்றிக் கொண்டது.

`அடேய் லட்சுமணா! என்ன தம்பியடா நீ? என் ராமன்

மெலிந்திருக்கிறானே? அவன் ஒழுங்காகச் சாப்பிடுகிறானா என்று நீ பார்த்துக் கொள்ளக் கூடாதா? இவனை இப்படியா மெலிய வைப்பது?`

ஒருபுறமாய் நின்று மகுடாபிஷேக வைபவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கோசலாதேவி இந்த வாக்கியங்களைக் கேட்டு வியப்பும் நிறைவும் அடைந்தாள். தன்னைப் போலவே ராமபிரானின் உடல் நலத்தில் அக்கறை செலுத்தி அவன் சாப்பிட்டது போதவில்லை என்று நினைக்கும் இன்னும் ஒரு நபரும் இருக்கிறாரே! இந்த இளம் முனிவர் யாராயிருப்பார்? கோசலை சுமித்திரை கைகேயி மூவரும் ஒருவரையொருவர் வியப்போடு பார்த்துக் கொண்டார்கள். சீதை அந்த முனிவரைப் பாசத்தோடு பார்த்தவாறே ராமபிரானிடம் கேட்டாள்:

`நாதா! யார் இந்த முனிவர்?`

அந்த முனிவரின் தலையைப் பரிவோடு தடவி, அவர் மேல் ஒட்டியிருந்த மண்துகள்களைத் தட்டிவிட்ட ராமபிரான் நெகிழ்ச்சியுடன் சொல்லலானார். அவர் சொல்வதை மக்கள் கூட்டம் முழுவதும் வியப்போடு கேட்டுக் கொண்டிருந்தது.

வசிஷ்டரிடம் ராம லட்சுமணர்கள் குருகுல வாசம் செய்யும்போது அவர்களுடன் ஒன்றாகப் படித்தவர் அந்த சத்தியவிரதன். உண்மையே பேசும் உத்தமர். ராமனைத் தெய்வம் எனவும் உணர்ந்து அதே நேரம் அவனைத் தோழனாகவும் கண்டு பாசம் செலுத்தியவர். குருகுல வாசத்தில் ராமனை விட்டு ஒருகணம் கூட அவர் பிரிந்ததே இல்லை.

அந்த நாளும் வந்தது. ராமன் குருகுலவாசம் முடிந்து விடைபெற்று அரண்மனை செல்லும் நாள். ராமன் தன்னைவிட்டுப் பிரியப் போகிறான் என்ற உண்மையை அவரால் தாங்க இயலவில்லை. விம்மி விம்மி அழலானார்.

`என் தெய்வமே! என்னைவிட்டுப் போய்விடுவாயா நீ?`

ராமனைக் கட்டிக் கொண்டு கதறினார். ராமன் சத்தியவிரதனை அணைத்துக் கொண்டு ஆறுதல் கூறினார்:

`சத்தியவிரதா! ஏன் இந்த அஞ்ஞானம் உனக்கு? நான் உன்னை விட்டு எங்கே போவேன்? என்றும் உன்னோடு தானே இருக்கிறேன்? உன் மனத்துக்குள் தானே குடிகொண்டிருக்கிறேன்? எனக்கு உலகியல் கடமைகள் உண்டல்லவா? குடும்ப ரீதியான கடமைகள். அயோத்தி நாட்டு மக்களுக்கு உரியவன் நான். அவர்களுக்கு நான் செலுத்த வேண்டிய கடமைகள் எத்தனையோ உண்டே? அவற்றை நிகழ்த்துவதன் பொருட்டாக நான் குருகுலவாசத்தை முடித்துக் கொண்டு விடைபெற்றாக வேண்டிய தருணம் இது. புரிந்துகொள் நண்பா!`

சத்திய விரதன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

`ராமா! நீ எப்போது அரசனாவாய்? உன் தலையில் மகுடத்தோடு உன்னைப் பார்க்கவேண்டும் நான்!`

ராமர் மெல்லிய முறுவல் பூத்தார்.

`அதற்குரிய காலம் வரும். காலம் வந்ததுபோல் ஒருமுறை வரும். ஆனால் வராது. மறுபடியும் கொஞ்ச நாள் கழித்து அதே காலம் திரும்ப வரும். இரண்டாம் முறையாக அந்தக் காலம் வரும்போதுதான் மகுடம் என் தலையில் ஏறும். தலையில் மகுடம் ஏறுதல் என்பது பெரிய பாரமல்லவா நண்பா? பூபாரம் என்கிறார்களே, அப்படி புவியைக் காக்கும் பாரம். எத்தனை உறவுகளை ராஜநீதி என்ற வகையில் நான் துறக்க நேருமோ தெரியவில்லை. எனவே நான் மகுடம் சூடும்போது அவசியம் நீ அயோத்தி வா. உற்ற தோழர்கள் உடனிருந்தால்தான் அந்தப் பொறுப்பை நான் செம்மையாக நிர்வகிக்க முடியும். எப்படியும் எங்கள் குருகுல வாசம் முடிந்தது போல் இன்னும் கொஞ்ச காலத்தில் உன் குருகுல வாசமும் முடிந்துவிடும். அதன் பின்னர் அயோத்திக்கு வாயேன். என்னுடனேயே தங்கிவிடேன்.`

ராமன் தன்மேல் செலுத்தும் அன்பை உணர்ந்து சத்தியவிரதன் நெகிழ்ந்தான். ஆனால் இதெல்லாம் சாத்தியமோ? அவன் ராஜா வீட்டுப் பிள்ளை. நானோ ஓர் ஏழை. எனக்கும் அவனுக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது. அயோத்தியில் அவனுடன் போய் இருப்பதாவது? அதெல்லாம் சாத்தியப்படாது. ஆனால் என் நண்பன் தலையில் கிரீடத்தோடு தென்படும் கோலத்தை மட்டும் கட்டாயம் ஒருமுறையேனும் பார்த்துவிட வேண்டும்.

`நான் எதற்கு அயோத்தியிலேயே இருக்க வேண்டும் ராமா? நீதான் எப்போதும் என் மனத்தில் என்னுடன் இருந்துகொண்டே இருக்கிறாயே?`

சத்தியவிரதனின் பேச்சைக் கேட்ட ராமன் அவன் கண்ணீரைக் கைகளால் துடைத்துவிட்டான். `பிறகு ஏன் இந்த அழுகை?` எனக் கேட்டுச் சிரித்தான். ராம லட்சுமணர்கள் சத்தியவிரதனிடம் பிரியா விடைபெற்றுப் பிரிந்தார்கள்.

காலம் பறந்தது. ராமனுக்கு மகுடாபிஷேகம் நிச்சயிக்கப்பட்டது. அந்தச் சேதியைக் கேள்விப்பட்டதும் சத்தியவிரதன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. என் ராமன் மன்னனாகப் போகிறான். கானகத்திலிருந்து அவன் அயோத்திக்கு ஓடோடி வந்தான்.

ஆனால் மகுடாபிஷேகம் ரத்து செய்யப்பட்டு விட்டதாமே? கைகேயி ஏதோ வரங்கள் கேட்டுப் பிரச்னை ஆகிவிட்டதாமே? ராமன் பதினான்கு

ஆண்டுகள் கானகம் செல்லப் போகிறான் என்கிறார்கள்.

அயோத்திக்கு உள்ளே நுழைந்து நடந்து வந்துகொண்டிருந்த சத்தியவிரதன் மக்கள் பேசிக் கொள்ளும் பேச்சைக் கேட்டான். தன் நண்பனைத் தலையில் மகுடத்தோடு காணவேண்டி ஆவலுடன் வந்த அவன் செவிகளில் இந்தச் செய்தி பழுக்கக் காய்ச்சிய ஈயத்தைப் போல் விழுந்து சுட்டது.

ஒரு நந்தவனத்தின் அருகாக நடந்துவரும்போது தான் இந்தச் செய்தியைக் கேட்டான் அவன். அடுத்த கணம் அந்த நந்தவனத்தில் உள்ள மற்ற மரங்களோடு தானும் ஒரு மரம்போல் திகைத்து நின்றுவிட்டான். `என் ராமனுக்கா இந்தச் சோதனை?` அவன் மனம் வேதனையில் தத்தளித்தது. `ராம ராம ராம` என்று சத்தியவிரதனின் உள்மனம் ஜபிக்கத் தொடங்கியது. இடைவிடாத ஜபம்.

அயோத்தி மக்களெல்லாம் வேறு பரபரப்பில் இருந்தார்கள். ராமன் கானகம் போகிறானே என்று அவனுடன் அவர்கள் புறப்படத் தலைப்பட்டார்கள். ஓவியச் சாலைகளில் தீட்டி வைக்கப்பட்டிருந்த சித்திரங்களைத் தவிர மற்ற எல்லா மக்களும் கானகம் செல்லும் ராமனது தேரைப் பின்தொடர எத்தனித்தார்கள். அந்த அமர்க்களத்தில் சத்தியவிரதன் சிலைபோல அசையாமல் நின்று கொண்டிருப்பதையோ அதற்கான காரணத்தையோ யாரும் கவனிக்கவும் இல்லை. அறியவும் இல்லை.

அந்த உயிருள்ள சிலை ராம ராம என்று உச்சரித்துக் கொண்டே இருந்தது. சத்தியவிரதனைச் சுற்றி மண்புற்று மேடிட்டது. அவனை மண் முழுவதுமாக மூடியது. மண்ணின் இடையே இருந்த சில துவாரங்களால் சுவாசிக்க மட்டும் அவனுக்குச் சற்றுக் காற்று கிடைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் பதினான்கு ஆண்டுகள் அவன் உயிர்தரித்திருந்தது எப்படி? உணவுக்குப் பதிலாக ராமநாமத்தையே உண்டு, நீருக்குப் பதிலாக ராமநாமத்தையே பருகி வாழ்ந்தான் சத்தியவிரதன். பதினான்கு ஆண்டுகள் பரதனும் சத்துருக்கனனும் செய்தது தவமா, இல்லை இந்த சத்தியவிரதன் செய்தது தவமா?

ராமன் கானகத்திலிருந்து வந்துவிட்டான். இதோ பட்டாபிஷேகம். யாரோ நந்தவனத்தின் அருகாகச் சென்றவர்கள் உல்லாசமாகச் சொல்லிக் கொண்டே ஓடினார்கள். அதைக் கேட்டன புற்றுக்குள் புதைந்திருந்த சத்தியவிரதனின் செவிகள்.

புற்றை உடைத்துக் கொண்டு வெளிவந்தான் சத்தியவிரதன். உடலெல்லாம் புழுதி. சுற்றிலும் உள்ள எதையும் உணரும் மனநிலையில் இல்லை அவன். என் ராமனுக்குப் பட்டாபிஷேகம். ஓடோடி

ராஜசபைக்கு வந்தான். யாரையும் லட்சியம் செய்யாமல் அடேய் ராமா என்று அழைத்தவாறே ராமபிரானின் அருகிலேயே வந்துவிட்டான்.

ராமன் சொன்ன அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த சீதாதேவி பாசம்பொங்க சத்தியவிரதனைப் பார்த்து முறுவல் பூத்தாள். மண்ணுலகும் வானுலகும் இந்த அபூர்வ பக்தியைக் கேட்டுச் சிலிர்த்துக் கொண்டது.

திடீரெனச் சுற்றுப்புறம் முழுவதையும் பார்த்த சத்தியவிரதன் தன்னுணர்வு வரப்பெற்றான். அடடா, ராமன் என் நண்பனாய் இருக்கலாம். இப்போது அவன் அரசன் அல்லவோ? என்ன காரியம் செய்தேன்! மக்கள் முன்னிலையில் அவனை வாடா போடா என்றெல்லாம் ஏகவசனத்தில் பேசுவது தவறாயிற்றே?

`என் ஆருயிர் நண்பனே ராமா! உன்னை வாடா போடா என்றெல்லாம் பழைய நட்புரிமையில் ஏகவசனத்தில் பேசிவிட்டேனே? இப்போது நீ மன்னனல்லவா?`

ராமபிரான் குறுமுறுவல் பூத்தான்.

`அதனால் என்ன? நான் என்றும் என் தாய்க்கு மகன் என்பதுபோல் என்றும் உனக்கு நண்பன். என் தாய் நான் மன்னன் என்பதற்காக என்னை மரியாதையுடன் அழைப்பாளா என்ன? ஆனால் சத்தியவிரதா! எப்போதும் என்னை நீ இப்படியெல்லாம் அழைத்தாலும் இன்று என்னை நீ ஏகவசனத்தில் அழைத்தபோது என் மனம் விசேஷமாக மகிழ்ந்தது.`

`அது ஏன் ராமா?` சத்தியவிரதன் நெகிழ்ச்சியுடன் கேட்டான்.

`என் தந்தை தசரத சக்கரவர்த்தி இப்போது இல்லை. அவர் இருந்தால் என்னை அன்போடு ஏகவசனத்தில் தான் அழைப்பார். என் தம்பிகள் அவர்களின் தந்தை போல் என்னை பாவித்து மரியாதை கலந்த பாசத்தைத் தான் செலுத்துகிறார்கள். என்னை ஏகவசனத்தில் அழைக்கும் ஓர் ஆண் கூட இல்லையே என்று நான் ஏங்கியிருந்தபோது எங்கிருந்தோ வந்தாய். என்னை வெகுபிரியமாக வாடா போடா என்றெல்லாம் அழைத்துப் பேசி என் மனத்தைக் குளிர்வித்தாய். சத்தியவிரதா! என் தந்தை தசரதர் இல்லாத குறையை இன்று நீ தீர்த்துவைத்தாய்!`

சொல்லிவிட்டு சத்தியவிரதனை மறுபடி மார்போடு சேர்த்து அணைத்துக் கட்டிக் கொண்டான் ராமபிரான். `ராமபிரானின் நண்பர் சத்தியவிரதன் வாழ்க!` என்று மக்கள் மகிழ்ச்சியோடு முழக்கமிட்டார்கள். சத்தியவிரதன் மேல் ஒட்டியிருந்த மண்துகள் ஒன்றை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டான் அனுமன். அதைப் பார்த்து நெகிழ்ந்தாள் சீதாதேவி.

36

அந்த ஒரு கிண்ணம்!

உள்ளமெல்லாம் சாந்தம் ததும்ப அமைதியே வடிவாக வீற்றிருந்தார் வசிஷ்ட முனிவர். ஆசிரமத்தில் தன் முன் வந்து அமர்ந்திருந்த சுமித்திரையைக் கனிவுபொங்கப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்களின் ஒளியில் கனிவோடு ஒரு கூர்மையும் கலந்திருந்தது.

எதன் பொருட்டு சுமித்திரை தன்னைத் தேடி வந்திருக்கிறாள் இப்போது? தர்ம நியாயங்களைப் பற்றி அடிக்கடித் தன்னிடம் விளக்கம் கேட்டு அறிபவள் தான் என்றாலும், ராம பட்டாபிஷேகம் நடைபெற்று முடிந்திருக்கும் இந்தத் தருணத்தில் என்ன சந்தேகம் வந்திருக்கும் சுமித்திரைக்கு?

கௌசல்யை, கைகேயி இருவர் மேலும் ஒரு தந்தைக்குரிய பாசம் உண்டு அவருக்கு. குலகுரு என்றால் தந்தை போலத்தானே?

ஆனால் சுமித்திரை மேல் இருப்பது பாசம் மட்டுமல்ல. ஒரு மரியாதையும் கூட. சுமித்திரை ஒரு விவேகி என்பதையும், எப்போதும் அறநெறியைப் பற்றிச் சிந்தித்துச் செயல்படுபவள் என்பதையும், அவள் பலனை எதிர்பாராமல் செயலை மட்டும் ஆற்றும் கர்மயோகி என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

ராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் சென்றபோது கதறி அழுதாள் கௌசல்யை. அவளை மிக சிரமப்பட்டு சமாதானப்படுத்தியதே இதோ வீற்றிருக்கிறாளே இந்த சுமித்திரை தான்.

அதுமட்டுமா? லட்சுமணன் ராமனுடன் கூடக் கானகம் செல்கிறேன் என்றபோது `அதுதான் சரி, ராமனை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்!` என்று சொல்லி மனப்பூர்வமாக விடைகொடுத்து அனுப்பியவளும் இவள்தான். `எதுநடந்தாலும் அது கடவுள் சித்தம். அதைக் குறைகூறாமல் ஏற்பதே மனிதர் கடமை!` என்பதை அனுபவபூர்வமாகக் கடைப்பிடிப்பவள் இவள்....

`சுவாமி! உங்களிடம் ஒரு சந்தேகம் கேட்டு வந்திருக்கிறேன்!`

`கேள் மகளே! ராம பட்டாபிஷேகம் நிறைவுற்றிருக்கும் இந்தத் தருணத்தில் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். உன் மனத்திலும் எந்தக் குறுகுறுப்பும் இல்லாத பரிபூரண ஆனந்தம் நிலவ வேண்டும் என்றே விரும்புகிறேன்.`

`அப்படிப்பட்ட பரிபூரண ஆனந்தம் கிட்ட வேண்டுமானால் என் மனத்தில் எழுந்துள்ள ஓர் ஐயத்திற்கு நான் விடைகாண வேண்டும்! என் கேள்விக்கான விடையை முக்காலமும் உணர்ந்த முனிவரான தாங்கள் தான் தரமுடியும்.`

வசிஷ்டர் மெல்லிய முறுவல் பூத்தார்.

`எல்லாக் கேள்விகளுக்கும் பதிலாக எப்போதும் நிற்பவன் அந்தப் பரம்பொருள் தான். பரம்பொருளே உன் வளர்ப்பு மகன் ராமனாக அவதரித்திருக்கிறது என்ற ரகசியத்தை உணர்ந்த மிகச் சிலரில் என்னைப் போல் நீயும் ஒருத்தி. ராமனை மகன் என்ற பாசத்தை விட்டுவிட்டுப் பரம்பொருள் என்ற பக்தியோடு சிந்தனை செய்தாலே உன் அனைத்துக் கேள்விகளுக்கும் விடை கிட்டுமே மகளே?`

`கிட்டும் சுவாமி! பொதுவாக எப்போதும் நான் அப்படித்தான் செய்வேன். ஆனால் இப்போது எனக்கு ஒரு விந்தையான அனுபவம் நேர்கிறது. ராமனைச் சிந்தித்து என் கேள்வியை நினைத்தால் என் உள்ளத்தில் ராமன் உருவம் தோன்றுவதற்கு பதிலாக அனுமன் உருவம் தோன்றுகிறது. என் குறிப்பிட்ட அந்தக் கேள்விக்கான பதிலை நான் வேண்டும்போதெல்லாம் ஏன் அனுமன் உருவம் என் மனத்தில் தோன்ற வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை சுவாமி!`

வசிஷ்டர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

`மகளே! உன் கேள்விக்கு விடையாகத் தான் அனுமன் உருவம் தோன்றுகிறது என்கிறாய் நீ. சரிதானா?`

`அப்படியும் இருக்கலாம் சுவாமி! என் கேள்விக்கு விடையே அனுமன் தானா? என் கேள்வி அனுமன் தொடர்பானதே அல்ல. அப்படியிருக்க என் உள்மனத்தில் இறைவன் அனுமனைக் காட்ட

வேண்டிய அவசியம் என்ன? ஒன்றும் புரியவில்லை சுவாமி. அதுதான் விளக்கத்தின் பொருட்டுத் தங்களை நாடினேன்.`

`நல்லது மகளே! உன் கேள்வி என்ன? அதைச் சொல். அதன் பின்னர் அந்தக் கேள்விக்கும் அனுமனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று பார்க்கலாம்.`

`கேள்வி, ஏற்கெனவே உங்களுக்கு மட்டும் தெரிந்த, நான் ஏற்கெனவே உங்களிடம் சொன்ன ஒரு விஷயத்தைப் பற்றியதுதான் சுவாமி!`

சுமித்திரை பெருமூச்சோடு தன் கடந்த காலத்தைச் சொல்லத் தொடங்கினாள்.

புத்திரகாமேஷ்டி யாகம் முடிந்து அக்கினியிலிருந்து தோன்றிய ஒரு தேவ புருஷன் பாயசக் கிண்ணத்தை தசரதரிடம் அளித்து மறைந்தான். தசரதர் மிகுந்த பக்தியோடு அந்தப் பாயசத்தை மூன்று பங்காகப் பிரித்து கௌசல்யை, கைகேயி, சுமித்திரை மூவருக்கும் மூன்று தனித்தனிக் கிண்ணங்களில் வழங்கினார். `குளித்துவிட்டு, பாயசக் கிண்ணத்தை பூஜையறையில் வைத்துப் பிரார்த்தித்துவிட்டு, பின் பாயசக் கிண்ணங்களோடு வசிஷ்டரை வந்து நமஸ்கரித்துவிட்டுப் பாயசத்தை அருந்துமாறு பணித்தார் தசரதர். மூன்று மகாராணிகளும் கிண்ணங்களோடு குளிப்பதற்கும் பின்னர் பூஜையறை செல்வதற்கும் தயாராகப் புறப்பட்டனர்.

ஆனால் அதற்குள் என்னவெல்லாம் சுமித்திரை வாழ்வில் நேர்ந்துவிட்டது! ஒரு சின்ன உணர்வலையின் மன வீச்சுக்குத்தான் எத்தனை சக்தி! `கௌசல்யை மூத்த பட்டமகிஷி. அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கு அரசனாகும் தகுதி கிட்டும். கைகேயியை மணம் புரிந்தபோது அவள் மகனுக்கே பட்டம் கட்டுவதாக தசரதர் உறுதி கூறியிருக்கிறார். எனவே கைகேயி புதல்வனுக்கும் அரசனாகும் வாய்ப்பு கிட்டலாம். ஆனால் சுமித்திரையான தனது மகனுக்கு அரச வாய்ப்பு கிட்டப் போவதே இல்லை. அப்படியிருக்க அந்த மகனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமா?` - ஒரு கணம் இப்படி நினைத்தாள் சுமித்திரை. அந்த நினைப்பின் பளுவைக் குறைப்பதற்காகவோ என்னவோ பாயசக் கிண்ணத்தை உப்பரிகைத் திண்டில் வைத்தாள். ஒரு பெருமூச்சு விட்டாள். மறுகணம் எங்கிருந்தோ வந்த ஒரு கழுகு அந்தக் கிண்ணத்தை அப்படியே கவ்வி எடுத்துச் சென்றுவிட்டது!

தூக்கிவாரிப் போட்டது சுமித்திரைக்கு. என்ன செய்வேன் என்ன செய்வேன் என்று அவள் உள்ளம் பதறியது. ஆனால் பாயசக் கிண்ணத்தைத் கழுகு எடுத்துச் சென்ற விவரமறிந்த கௌசல்யையும்

கைகேயியும் அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டார்கள். அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்து தங்கள் கிண்ணங்களிலிருந்து பாதிப் பாதிப் பாயசத்தை இன்னொரு புதுக் கிண்ணத்தில் இட்டுச் சாப்பிடத் தந்தார்கள். அப்படித் தனக்கெனக் கிடைத்த பாயசப் பங்கைத் தவறவிட்டுவிட்டு, தானமாய்த் தரப்பட்ட பாயசத்தில் பிறந்தவர்கள் தானே லட்சுமணனும் சத்துருக்கனனும்!

கடந்த காலத்தையெல்லாம் நினைத்துப் பார்த்த சுமித்திரை தன் மனத்தில் அடிக்கடி எழும் கேள்வியை இப்போது வசிஷ்டரிடம் தெரிவித்தாள்.

`சுவாமி! எனக்குத் தரப்பட்ட பாயசத்தை, பொறுப்பில்லாமல் உப்பரிகைத் திண்டின் மேல் வைத்தது என் தவறல்லவா? அந்தத் தவறுக்கு என்ன தண்டனை தரப்படும் எனக்கு? அதுசரி. அந்த அபூர்வமான தெய்வப் பிரசாதத்தை ஒரு கழுகு தூக்கிச் சென்றதே? அந்தப் பாயசம் பிறகு என்ன ஆயிற்று? ஸ்ரீராம பட்டாபிஷேகம் நடந்திருக்கும் இந்தப் பொன்னான தருணத்தில் இந்தக் கேள்விகளுக்கு விடைபெற நான் விழைந்தேன். நான் விடைவேண்டி தெய்வத்தைப் பிரார்த்தித்து நினைக்கும்போதெல்லாம் அனுமன் உருவமே மனத்தில் தோன்றுகிறது. அது ஏன் சுவாமி? இதைத் தங்களிடம் கேட்டறியவே இங்கு வந்தேன். விடைதெரிந்தால் என் மனம் குறுகுறுப்பில்லாத ஆனந்தத்தை அனுபவிக்கும். இல்லாவிட்டால் என் மனத்தில் அந்தக் கடந்தகாலச் செயலின் குற்றக் குறுகுறுப்பு இருந்துகொண்டே தான் இருக்கும்.`

வசிஷ்டர் அமைதியாகச் சற்றுநேரம் தியானத்தில் ஆழ்ந்தார். பின் மெல்லிய முறுவலுடன் சொல்லத் தொடங்கினார்.

`மகளே! நீ எந்தத் தவறும் செய்யவில்லை. நீ பாயசத்தைச் சாக்கடையில் கொட்டவில்லை. உப்பரிகையில் தான் பத்திரமாக வைத்தாய். கழுகு எடுத்துச் செல்லக் கூடும் என்பதைச் சற்றும் நீ எதிர்பார்க்கவில்லை. எனவே நடந்த செயலில் உன் தவறு எதுவுமில்லை. நீ குற்றமே செய்யாததால் உனக்கு எந்தத் தண்டனையும் கிட்டப் போவதும் இல்லை!`

முந்தானையால் தன் விழிகளைத் துடைத்துக் கொண்ட சுமித்திரை நிறைவாகப் புன்னகைத்தாள்.

`சரி சுவாமி. தெய்வப் பிரசாதமான அந்தப் பாயசத்தைக் கழுகு தூக்கிச் சென்றதே? அந்தப் பாயசம் என்ன ஆயிற்று?`

வசிஷ்டர் ஆனந்தமாகப் புன்னகைத்தவாறே சொல்லலானார்:

`கழுகைப் பாயசக் கிண்ணத்தை எடுக்குமாறு தூண்டிய இறைச்சக்தி ஒரு காரணத்தின் பொருட்டே அவ்விதம் நிகழச் செய்திருக்கிறது. அந்தப் பாயசக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு விண்ணில் பறந்தது அந்தக் கழுகு. மலைமேல் பறந்துசென்றது. அப்போது வாயுபகவானின் மனைவியான அஞ்சனா தேவி ஒரு புதல்வனை வேண்டித் தவம் செய்து பிரார்த்தித்தவாறு வானை நோக்கிக் கையேந்திக் கொண்டிருந்தாள். அஞ்சனையின் கணவர் வாயு கழுகின் கால்பிடியிலிருந்த அந்தப் பாயசக் கிண்ணத்தைத் தட்டிவிட்டார். கிண்ணம் ஒரு துளிப் பாயசமும் சிந்தாமல் மிகச் சரியாக அஞ்சனை கைகளில் வந்து விழுந்தது. தேவ லோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பிரசாதம் என்றே நினைத்த அவள், கிண்ணத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு பாயசத்தை அருந்தினாள். அதன்மூலம் பிறந்தவனே அனுமன்.

நீ பாயசம் என்ன ஆயிற்று என்று கேட்கும்போதெல்லாம் அனுமன் உருவம் உன் மனத்தில் தோன்றக் காரணம் பாயசம் அனுமனாக உருவாயிற்று என்பதை நீ அறிந்துகொள்ளத் தான்.`

இதைக்கேட்ட சுமித்திரை அளவற்ற வியப்பும் சந்தோஷமும் அடைந்தாள். அனுமன் மேல் தனக்கு மிகுந்த பாசம் எழுவதற்கான காரணத்தையும் தெரிந்துகொண்டாள். அந்தப் பாயசத்தைச் சாப்பிட்டு தனக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்க வேண்டிய அனுமன், அதே பாயசத்தைச் சாப்பிட்ட அஞ்சனைக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கிறான், அவ்வளவுதானே?

அதற்குள் சுமித்திரையைத் தேடிக்கொண்டு வசிஷ்டர் ஆசிரமத்திற்கே வந்துவிட்டான் அனுமன்.

`தாயே சுமித்திரா தேவி! ராஜசபை கூடியிருக்கிறது. இரு தாய்மார்களும் சபைக்கு வந்துவிட்டார்கள். வசிஷ்ட மகரிஷியையும் தங்களையும் அழைத்துவருமாறு உத்தரவிட்டார் ஸ்ரீராமப்பிரபு.` என்று அனுமன் சுமித்திராதேவியை வணங்கி நின்றான்.

`இதோ வந்துவிட்டேன் மகனே!` என்றவாறே மலர்ச்சியோடு புறப்பட்டாள் சுமித்திரை. `மகனே!` என்று அவள் அழைத்த அழைப்பில் விசேஷ பாசம் தொனிப்பதை உணர்ந்த நிறைவால் வசிஷ்டரின் முகத்தில் ஒரு முறுவல் எழுந்தது.

37

ராமன் சொன்ன காரணம்!

குலகுரு வசிஷ்டர் ஸ்ரீராமபிரானின் தலையில் மகுடத்தைச் சூட்டிய மகுடாபிஷேக விழா நிறைவுபெற்று விட்டது. மகுடாபிஷேகத்தை ஒட்டி இலங்கை உள்ளிட்ட பல இடங்களிலிருந்தும் வந்தவர்களெல்லாம் விடைபெற்றுச் சென்றுவிட்டார்கள்.

மகுடாபிஷேகக் கோலாகலத்தின் மிச்சம்மீதிக் காட்சிகளாய், வீட்டின் முகப்பில் வரையப்பட்ட பெரிய கோலங்கள் பாதி அழிந்தும் பாதி அழியாமலும் அயோத்தி நகரின் வீதிகளில் தென்படுகின்றன. வீடுகளில் கட்டியிருந்த மாவிலைத் தோரணங்கள் சில அறுபட்டும் சில அறுபடாமலும் காற்றில் ஆடிக் கொண்டிருக்கின்றன. மக்கள் மனத்தில் இனந்தெரியாத பூரண நிறைவு. ராமராஜ்யம் தொடங்கிவிட்ட ஆனந்தம்.

மக்களின் ஆனந்தத்திற்குக் காரணமான ஸ்ரீராமரின் அரண்மனையில் பட்டமகிஷி சீதாதேவி யாரையோ எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள். அவளின் நீண்ட நயனங்கள் நொடிக்கொரு முறை வாசலைப் பார்த்துப் பார்த்துத் திரும்பிக் கொண்டிருந்தன.

`யாரை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாய் சீதா?`

ராமபிரான் கனிவோடு கேட்டார். சீதை ஒரு பெருமூச்சோடு சொன்னாள்:

`பட்டாபிஷேகம் நடந்து முடிந்த பிறகு எந்த உள்மனச் சிக்கலும் இல்லாமல் எல்லோரும்

மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்பதுதான் என் விருப்பம் பிரபோ. எனவே ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக அன்னை மந்தரா தேவியை அழைத்துவரச் சொல்லி நம் சேவகனை அனுப்பினேன். மந்தரா தேவி வருகிறாரா என்றுதான் வாயிலைப் பார்த்துக் கொன்ண்டிருக்கிறேன்.`

`அன்னை மந்தரா தேவியிடமிருந்து என்ன விஷயம் தெளிவாக வேண்டியிருக்கிறது உனக்கு?`

`அது உங்களைப் பற்றிய விஷயம் தான் பிரபோ. சற்றுப் பொறுங்களேன். மந்தரா தேவி வந்தால் தெரிந்துவிடப் போகிறது! அதோ அன்னை வந்துவிட்டாரே!`

சீதை மந்தரையை வரவேற்க எழுந்தாள். ராமபிரானும் எழுந்தார். மந்தரை தன் கூன் விழுந்த முதுகோடு கம்பை ஊன்றியவாறு அரண்மனையின் உள்ளே வந்தாள்.

`தாயே அமருங்கள்!` என்று ராமன் கைத்தாங்கலாக மந்தரையைப் பிடித்து அழைத்துவந்து இருக்கையில் அமர்த்தினார். மந்தரையின் உள்ளம் நெகிழ்ந்தது.

ராமனுக்குப் பெரிய துரோகம் செய்துவிட்டோம் என்று அவள் ஆழ்மனத்தை வாட்டி வதைத்துவந்த குற்ற உணர்ச்சி பட்டாபிஷேக தினத்தன்று ராமன் காட்டிய பரிவால் முற்றிலும் அழிந்துவிட்டது. புதிதாகச் சூட்டப்பட்ட மகுடத்தோடு கைகேயி, கோசலை, சுமித்ரை ஆகியோரை வணங்கிய ராமன் பின்னர் தன்னையுமல்லவா தேடிவந்து வணங்கினான்! ராமன் தன்னை முழுமையாக மன்னித்துவிட்டதை அவள் உள்மனம் உணர்ந்திருந்தது.

ராமன் மன்னித்துவிட்டான் என்று சொல்வது கூடச் சரியல்ல. மந்தரை தவறு செய்தாள் என்று அவன் நினைத்ததே இல்லையே? தான் கானகம் செல்ல நேர்ந்தது விதியே அன்றி வேறல்ல என்று தானே அவன் மனப்பூர்வமாக உணர்ந்திருந்தான்?

மந்தரை தாய்மைக் கனிவோடு ராமனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தாள். அயோத்தி எத்தனை அதிர்ஷ்டம் செய்திருக்கிறது இத்தகைய உத்தம புத்திரனைச் சக்கரவர்த்தியாக அடைய? இந்த மக்கள் செல்வாக்குப் பெற்ற மாமன்னன் என்மேல் மட்டற்ற பாசம் செலுத்துகிறான்! நான் எத்தனை பாக்கியசாலி!

சீதை மந்தரையையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்ணில் தென்படும் தூய்மையான பாச உணர்வைப் பார்த்து வியந்தாள். இப்போது ராமன் மேல் இத்தனை பாசம் செலுத்துபவள் பதினான்கு

ஆண்டுகளுக்கு முன் ஏன் ராமன் மேல் அத்தனை விரோதம் கொண்டிருந்தாள்? எதனால் அன்று கைகேயியின் மனத்தை மாற்றி வரம் கேட்க வைக்க வேண்டும் என்று ஓர் எண்ணம் அவளுக்குத் தோன்றியது? ராமனிடம் என்ன முன்விரோதம் மந்தரைக்கு? நேரடியாகவே இன்று கேட்டுவிட வேண்டியதுதான்.

மந்தரா தேவிக்குப் பழச்சாறு கொடுத்து உபசரித்த சீதை, பின்னர் அதிராத தொனியில் மெல்லக் கேட்கலானாள்.

`தாயே! ஒரு விஷயத்தை வெளிப்படையாக உங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் உங்களை இன்று வரச்சொன்னேன். என் மனத்தில் எந்த உறுத்தலும் இல்லாமல் இருக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு!`

`சொல் என் மருமகளே! நீ சேவகனை அனுப்பி என்னை வரவழைத்தபோது ஏதேனும் காரணத்தோடுதான் வரச்சொல்லியிருப்பாய் என்றுதான் நானும் நினைத்தேன்.`

சீதை சற்றுநேரம் அமைதியாய் இருந்தாள். பின் மெல்லிய முறுவலுடன் சொல்லத் தொடங்கினாள்.

`தாயே! என்னை நான் உங்கள் மருமகளாகக் கருதவில்லை. மகள் என்றே கருதுகிறேன். அதனால் தான் ஒரு மகள் தன் தாயிடம் உரிமையுடன் சிலவற்றிற்கு விளக்கம் கேட்பது மாதிரி உங்களிடம் ஒரு விளக்கம் கேட்க வேண்டும் என்று அழைத்துவரச் சொன்னேன்.`

`கேள் மகளே! எனக்குத் தெரிந்த விளக்கம் எதுவானாலும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்! என் தவறையெல்லாம் பொருட்படுத்தாது என்னை முழுமையாகத் தாயாக ஏற்றுக்கொண்ட என் கண்மணி ராமனின் மனைவி அல்லவா நீ?`

`தாயே! என் கேள்வியே அதுபற்றித் தான்! ஈ எறும்புக்குக் கூடக் கெடுதல் நினைக்காதவர் என் கணவர் என்பதை உலகம் அறியும். அப்படியிருக்கத் தாங்கள் பரதனுக்கு மகுடம் சூட்டவேண்டும் என்று கேட்டிருந்தது கூடச் சரி. ஆனால் ஸ்ரீராமரைக் கானகம் அனுப்ப வேண்டும் என்று வரம்கேட்கச் சொன்னீர்களே? ஸ்ரீராமரை வனத்திற்கு அனுப்ப நினைக்கும் அளவுக்குத் தங்களுக்கு அவர் மேல் என்ன முன்விரோதம் அம்மா?`

சீதையின் கேள்வியைக் கேட்டு ராமபிரான் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவருக்கும் உள்ளூற ஓர் ஆர்வம் இருக்கத்தான் இருந்தது. யாருக்கும் தான் கெடுதல் நினைத்ததில்லை. அப்படியிருக்க மந்தரை ஏன் தனக்குக் கெடுதல் நினைக்க வேண்டும்?

இப்போது மந்தரை சற்று நேரம் அமைதியாக இருந்தாள். பின் பெருமூச்சோடு சொல்லலானாள்.

`சீதா! உன் வெளிப்படையான கேள்வியை நான் மெச்சுகிறேன். என் மனத்தை நானே ஆராய்ந்து பார்க்க ஒரு சந்தர்ப்பம் இது எனக்கு. ராமனால் நான் அவமானப்படுத்தப் பட்டேன். அப்போதே ராமனைப் பழிவாங்க வேண்டும் என்ற உணர்வு எனக்குத் தோன்றிவிட்டது. பல ஆண்டுகளாக மனத்தில் குமைந்து கொண்டிருந்த அந்த உணர்வு சமயம் வாய்த்தபோது வெளியே தலைகாட்டியது. அவ்வளவே!`

ராமபிரான் திடுக்கிட்டார். அங்கே ஒரு மௌனம் நிலவியது. சீதை மெல்லிய குரலில் அந்த மௌனத்தைக் கலைத்தாள்.

`தாயே! ஸ்ரீராமரால் தாங்கள் அவமானப்படுத்தப் பட்டீர்கள் என்பது கேட்பதற்கு ஆச்சரியமாய் இருக்கிறது. அப்படிக் கூட நடந்துகொள்வாரா என் கணவர்? அது எப்போது நடந்தது? எப்படி நடந்தது?`

மந்தரை ஒரு பெருமூச்சோடு சொல்லலானாள்:

`உண்மையில் ராமன் மேல் எந்தத் தவறும் இல்லை சீதா! அது அவன் இளம்பருவம். ஆறு அல்லது ஏழு வயதுக் குழந்தை அவன் அப்போது. தான் செய்வது இன்னதென்று அறிந்து செய்யும் வயதல்ல. எல்லாமே அந்தப் பருவத்தில் விளையாட்டுத்தான்.

அவன் உண்டிவில் வைத்து விளையாடும்போது நான் அந்தப் பக்கம் நடந்து சென்றேன். இயற்கையிலேயே கூன்விழுந்த உடல் தானே எனக்கு? என் கூன் முதுகை அவன் உண்டிவில்லில் இருந்த ஒரு கல்லால் தாக்கினான். பார்த்துக் கொண்டிருந்த மற்ற குழந்தைகள் கலகலவென்று நகைத்தார்கள்.

உடல் ஊனம் இயற்கையில் அமைவது. அதைப் பார்த்து நகைப்பதும் அந்த ஊனமுற்ற முதுகைக் கல்லால் தாக்குவதும் என்ன நியாயம் என்று நான் சீற்றம் கொண்டேன். ஆனால் ராமன் ராஜா வீட்டுப் பிள்ளை. என்னால் எதுவும் செய்ய இயலவில்லை. அந்தக் கோபத்தால் தான் அப்படி வரம் கேட்குமாறு கைகேயியைத் தூண்டினேன். இப்போது நினைத்தால் பைத்தியக்காரத் தனமாக இருக்கிறது என் கோபம்.

தான் செய்வதே இன்னதென்றறியாத வயதில் ஒரு சிறுவன் செய்த செயலுக்கு வஞ்சினம் கொள்வது எத்தனை தவறு? மனமுதிர்ச்சி அற்றவளாய் இருந்த நான் அந்தத் தவறைத்தான் செய்தேன் சீதா!`

மந்தரையின் பேச்சைக் கேட்ட ராமபிரான் எதுவும் பேசாது சிலையாய் அமர்ந்திருந்தார். சீதை யோசனையோடு ராமபிரானைக் கேட்டாள்:

`சுவாமி! அன்னை மந்தரை சொல்லும் சம்பவம் உங்களின் இளம்

வயதில் நடந்திருக்க வேண்டும். அது தங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? இல்லை மறந்துவிட்டதா?`

ராமபிரான் குற்ற உணர்ச்சி கலந்த ஒரு பெருமூச்சோடு சொன்னார்:

`நன்றாக ஞாபகமிருக்கிறது சீதா! அது என்னால் மறக்கக் கூடிய சம்பவமல்ல. அப்போது இளம் வயதுதான். ஆனாலும் என் மனத்தில் ஞாபகப் பிசகு ஏதுமில்லை. அரண்மனையைத் தாண்டிய வெளி முற்றத்தில் மாலை மங்கிய நேரத்தில் நடந்தது அது. சரிதானா தாயே?`

மந்தரை அளவுகடந்த வியப்புடன் சொன்னாள்:

`இன்னும் அது உன் நினைவில் இருக்கிறது என்றால் அது ஆச்சரியம் தான் ராமா!`

சற்றுநேரம் அமைதி காத்த சீதை, பின் மெதுவாகச் சொல்லலானாள்:

`நாதா! உங்கள் மனத்தில் இப்போதும் நினைவில் நிற்கிற சம்பவம் என்றால் அப்போது நீங்கள் விவரம் தெரிந்தவர் என்று தானே பொருள்? தாங்கள் சின்னஞ்சிறு வயதிலேயே முதிர்ச்சியுடன் பெரியவர்களைப் போல் இயங்கியதாக அன்னை கோசலை என்னிடம் சொன்னதும் உண்டு. அப்படியிருக்க தாங்கள் உண்டிவில்லால் அன்னை மந்தரையின் முதுகில் கல்லெறிந்தது என்ன நியாயம்? அதைத் தெரியாமல் செய்த செயல் என்று கொள்ள முடியாது அல்லவா? தெரிந்தே செய்த செயல்தானே அது?`

ராமபிரான் கண்களில் கண்ணீர் வழிய தன் சிம்மாசனத்தை விட்டு எழுந்தார். மந்தரையின் காலருகே மண்டியிட்டு அமர்ந்தார்,

`தாயே! என்னை மன்னியுங்கள். அது தெரியாமல் செய்த செயல் அல்ல. தெரிந்து செய்த செயல்தான். ஆனால் அதற்கு ஒரு காரணம் இருந்தது. அதைத் தாங்கள் அறியாததால் என்மேல் சீற்றம் கொண்டுவிட்டீர்கள்.`

மந்தரை திகைத்தாள்.

ராமபிரான் தலையைப் பரிவோடு தடவிக் கொடுத்தாள். `அப்படி என்ன காரணம் ராமா?` என்று சன்னமான குரலில் கேட்டாள்.

சீதையும் ராமர் சொல்லும் காரணத்தைக் கேட்க ஆவலானாள். ராமர் தழுதழுத்த குரலில் சொல்லலானார்:

`அன்று காலை தான் முதல்முறையாக உலைக்களத்தைப் பார்வையிடச் சென்று வந்தேன் தாயே! வசிஷ்ட மாமுனிவர் நீ கையாளவிருக்கும் ஆயுதங்கள் எப்படித் தயாராகின்றன பார் என்று சொல்லி என்னை அரண்மனை உலைக் களத்திற்குக் கூட்டிச் சென்று

காட்டினார். அங்கே ஈட்டி, வாள் போன்ற ஆயுதங்கள் செய்யப்படும் காட்சியை நான் கண்டேன். வளைந்திருந்த இரும்பை நிமிர்த்த சுத்தியலால் அடிப்பதையும் அப்படி அடிக்கும்போது அந்த வளைவு நிமிர்வதையும் கண்டு வியந்தேன்.

அன்று மாலை உங்களைப் பார்த்தபோது பலரின் நகைப்புக்கு ஆளாகும் உங்கள் கூன் முதுகைக் கண்டு இரக்கம் கொண்டேன். வளைந்த இரும்பு, சுத்தியலால் அடித்தபோது நிமிர்ந்த மாதிரி, உண்டிவில்லில் இருந்த கல்லால் உங்கள் முதுகை அடித்தால் அதுவும் நிமிர்ந்துவிடும் என்று குழந்தைத்தனமாக எண்ணினேன்.

அதனால் உங்கள் கூனை நிமிர்த்தும் முயற்சியில்தான் கல்லெறிந்தேனே தவிர உங்களைப் பழிக்கும் நோக்கத்தில் அல்ல. என் நல்ல நோக்கம் உங்களால் தவறாகப் புரிந்துகொள்ளப் பட்டதை அப்போது நான் அறியவில்லை. அன்றைய என் செயலுக்கு இன்று மன்னிப்புக் கேட்கிறேன் தாயே!`

ஸ்ரீராமன் மந்தரையின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டார்.

`உன் நல்ல நோக்கத்தைப் புரிந்துகொள்ளாத நான் அல்லவா உன்னிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் ராமா!` என்று மந்தரை கண்களில் கண்ணீர் வழிய வழிய ராமனைக் கும்பிட்டாள்.

ராமன் மந்தரையைப் பாசத்தோடு அணைத்துக் கொண்டான். சீதாதேவியின் வலக்கரம் மந்தரையின் விழிகளிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தது.



38

தொடரும் உறவுகள்...

பட்டாபிஷேகம் முடிந்து அதன் கோலாகலங்கள் ஓரளவு அடங்கியிருந்த தருணம். ராமனும் சீதையும் ஓய்வாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்தார்கள். சீதாதேவி தன் மணாளனுக்கு வெகு பிரியமாக வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீராமபிரானது திருமுகத்தையே சற்றுநேரம் பார்த்தவாறிருந்தாள் சீதை. தலையில் மகுடம் சூடிய மன்னன் என்கிற கர்வமோ ஒரு துளி ஆணவமோ எதுவும் ஸ்ரீராமர் முகத்தில் தென்படவில்லை. பதினான்கு ஆண்டுகளுக்கு முன் மந்தரையின் சூழ்ச்சியால் மகுடம் துறந்து காட்டுக்குப் போனபோது சித்திரச் செந்தாமரை மலர் போல் இருந்த முகம் இப்போதும் அதே வழக்கமான மலர்ச்சியோடு தான் இருந்தது.

சுகதுக்கங்களால் பாதிக்கப்படாத மனநிலை அவருக்கு வாய்த்திருப்பதை அவரது திருமுகம் காட்டியது. தன் கணவனை எண்ணிப் பெருமிதம் கொண்டாள் சீதாதேவி.

`என்ன தேவி? ஏன் எதுவுமே பேசாமல் என்னையே பார்த்தவாறிருக்கிறாய்?`

சீதை தந்த வெற்றிலையைக் கையில் வாங்கிக் கொண்ட ராமன் சிரித்தவாறு சீதையிடம் வினவினான்.

`பிரபோ! உங்கள் குணங்களில் எனக்கு மிகவும் பிடித்த குணம் எது என்று யோசித்தேன். இப்போது அதைக் கண்டுபிடித்து விட்டேன். அந்த

மகிழ்ச்சியோடு உங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்!`

`நல்லது. அப்படி என்ன குணத்தை நீ கண்டுபிடித்தாய்? உனக்கு மிகவும் பிடித்த என் குணம் எது? என் வீரமா? கருணையா? பொதுமக்கள் எல்லோரையும் சமமாக நேசிக்கும் என் அன்பா?`

`அதெல்லாம் பிடிக்கும். அவற்றோடு புறச் செயல்பாடுகளால் பாதிக்கப்படாமல் நீங்கள் அமைதியாக எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பது பிடிக்கும். ஆனால் அதையெல்லாம் விட இன்னொரு குணம் மிகவும் அதிகம் பிடிக்கும் பிரபோ.`

`அது என்ன குணமென்று நான் தெரிந்துகொள்ளலாமா தேவி?`

`என்னைத் திருமணம் செய்துகொண்ட போது இந்த இப்பிறவியில் இன்னொரு பெண்ணைச் சிந்தையாலும் தொடமாட்டேன் என்று எனக்கு வரமளித்தீர்களே? உங்களின் ஏக பத்தினி விரதம் தான் உங்களிடம் எனக்கு மிகவும் பிடித்த அம்சம்!`

இதைக் கேட்ட ராமன் கலகலவென்று சிரித்தான். பிறகு சொல்லலானான்:

`சீதா! உனக்கு நான் வரம் தந்ததால் அப்படி இருந்தேன் என்பதல்ல. உண்மையிலேயே ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் இயற்கை விதி. பிரம்மன் படைக்கிற போது ஒரே ஓர் உயிரைத்தான் படைக்கிறான். பிறகு அதை இரண்டு பாதியாகப் பிரிக்கிறான். ஒன்றை ஆண் வடிவிலும் இன்னொன்றைப் பெண் வடிவிலும் வைத்து பூமிக்கு அனுப்புகிறான். அந்தப் பாதி பாதி உயிர்கள் வாழ்வில் இணைகின்றன. இந்தக் கணவன் மனைவி பந்தம் எந்தப் பிறவியிலும் பிரியாதது. எல்லாப் பிறவிகளிலும் அதே கணவனுக்கு அதே மனைவி தான். அதே மனைவிக்கு அதே கணவன் தான்!`

இதைக் கேட்ட சீதை மகிழ்ச்சியோடு நகைத்தாள். பின் கேட்கலானாள்:

`பிரபோ! நீங்கள் சொல்வதெல்லாம் சரி. ஆனால் ஒருவருக்கு அவரின் அடுத்த பிறவி மனிதப் பிறவியாகத்தான் அமையும் என்று தீர்மானமாக எப்படிச் சொல்ல முடியும்? அவரவர் வினைக்குத் தக பிறவிகளும் மாறுமல்லவா? ஒருவேளை அடுத்துவரும் பிறவிகளில் நீங்களே ஒரு வராகமாகவோ மீனாகவோ பிறந்தால் என் கதி என்ன ஆகும்?`

`ஒன்றும் ஆகாது தேவி. அப்போதும் நீதான் என் மனைவியாவாய். நீ பெண் வராகமாகப் பிறப்பாய். அல்லது பெண் மீனாகப் பிறப்பாய். அவ்வளவு தான். கணவன் மனைவி உறவு என்பது பிறவிதோறும் தொடர்ந்து வருவது என்பதையும் பிரிக்க இயலாதது, பிரிக்கக் கூடாதது

என்பதையும் மனிதர்கள் உணர்ந்தால் வாழ்க்கை எவ்வளவோ இனிமையாக இருக்கும் தேவி! அதை அவர்கள் உணராதது தான் அவர்களின் பல பிரச்னைகளுக்குக் காரணம்.`

`பிரிக்க இயலாதது என்பது சரி பிரபோ! ஆனால் பிரிக்கக் கூடாதது என்கிறீர்களே? ஒன்றாக இணைந்து வாழும் கணவன் மனைவியை யார் தான் பிரிக்க முடியும்?`

`பிரிக்க முடியாதுதான். ஆனால் ஒரு சிலர் கணவன் மனைவி பந்தத்தின் புனிதத்தை உணராமல் பிரிக்க முனைவார்கள். அப்படிப் பிரிக்க முனைபவர்கள் தற்காலிகமாகக் கொஞ்ச காலம் வெற்றி பெறலாமே தவிர நிரந்தர வெற்றியை ஒருபோதும் அடைய முடியாது. அதுமட்டுமல்ல. உள்ளம் இணைந்து வாழ முயலும் தம்பதியைப் பிரிக்க முயன்ற அவர்கள் அந்தப் பாவச் செயலுக்குத் தண்டனையாக அழிந்துபடுவார்கள் தேவி. பிரிந்த தம்பதியைச் சேர்த்து வைக்க முயல்பவர்கள் ராஜபதவி அடைந்து வாழ்வாங்கு வாழ்வார்கள். எல்லா மேன்மைகளையும் புகழையும் அடைவார்கள். இதெல்லாம் இயற்கை விதி. நம் வாழ்க்கையிலேயே இதற்கு உதாரணங்கள் இருக்கிறது தேவி!`

`நம் வாழ்க்கையில் அதற்கு உதாரணமா? நாம் தான் பிரியவே இல்லையே? பிறகு எப்படி நம் வாழ்வில உதாரணம் வரும்?`

`மனத்தால் பிரியவில்லை என்பது உண்மைதான். ஆனால் ஸ்தூல வடிவில் நானும் நீயும் ஓராண்டு பிரிந்துதானே இருக்க நேர்ந்தது? இலங்கையில் நீயும் கிஷ்கிந்தையில் நானுமாக நாமிருவரும் தவித்த தவிப்பு எவ்வளவு கொடுமையானது! ஆனால் அந்தக் கொடுமையை நமக்கு நிகழ்த்தியவர்கள் வாழ்ந்தார்களா என்று பார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான துயரத்தைத் தான் அனுபவித்தார்கள்.`

சீதை சிறிதுநேர யோசனைக்குப் பின் சொன்னாள்:

`ஆம் பிரபோ. சூர்ப்பணகை உங்களை என்னிடமிருந்து பிரிக்க எண்ணினாள். தம்பதியைப் பிரிக்க நினைத்த அவள் இலக்குவனால் மூக்கறுபட்டாள்!`

`தேவி! ஓர் ஆண் திருமணமானவன் என்று தெரிந்தும் இன்னொரு பெண் அவன்மேல் நாட்டம் கொள்கிறாள் என்றால் அதைப் போன்ற அதர்மமான செயல் உலகில் வேறு எதுவும் இல்லை. அத்தகைய பெண்கள் பெண் குலத்திற்கே இழுக்கு.

முதல் மனைவி இருக்கும்போது இரண்டாம் மனைவியாக அந்த ஆணை வளைத்துப் போட்டுக் கொள்ளும் பெண்கள் அந்த முதல் மனைவியின் மனத்தில் எத்தகைய மன உளைச்சலை

ஏற்படுத்துகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியுமா? உண்மையில் சூர்ப்பணகையின் மூக்கை அறுத்தது இலக்குவனின் அம்பல்ல தேவி. தனக்கே உரியவர்மேல் இன்னொருத்தி இச்சை கொள்வதா என்ற உன் கோபம். அதுதான் லட்சுமணனின் அம்பாய் மாறி அவளைத் தண்டித்தது. இரண்டாம் மனைவியாக வரும் பெண்ணை தர்மம் சும்மா விடாது. அவளை அது சுட்டெரித்துவிடும்.

அதுமட்டுமா தேவி? சூர்ப்பணகையின் அண்ணன் ராவணன் உன்னை என்னிடமிருந்து பிரிக்க எண்ணினான். ஓராண்டு காலம் பிரித்து வைக்கவும் அவனால் முடிந்தது. ஆனால் கடைசியில் உன்மேல் ஒருதலைக் காதல் கொண்ட அவன் தன் பத்துத் தலைகளையும் அல்லவா இழக்க நேர்ந்தது? உயிரே போயிற்றே அவனுக்கு?`

`பிரபோ. தம்பதியைப் பிரிக்க எண்ணுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றீர்கள். அப்படியானால் பிரிந்த தம்பதியை இணைக்க எண்ணுபவர்கள் நன்மை அடைய வேண்டுமல்லவா? அப்படி யாரும் அடைந்திருக்கிறார்களா?`

`நம் வாழ்விலேயே அதற்கும் சான்றிருக்கிறதே சீதா? கணவனிடமிருந்து மனைவியைப் பிரித்து எடுத்து வருவதும் அவள் மேல் காதல் கொண்டதாகப் பிதற்றுவதும் அதர்மம் என்று அண்ணனிடம் எடுத்துச் சொன்னவன் விபீஷணன். தன் அண்ணனே ஆனாலும் அவன் வதம் செய்யப்படக் காரணமாய் இருந்து, தம்பதியான என்னையும் உன்னையும் அவன் சேர்த்துவைத்தான். அவன் தலையில் மகுடம் ஏறியது பார். அவன்தானே இப்போது அரச பதவி வகிக்கிறான். நினைத்துப் பார். மூன்றாவது பிள்ளையான அவன் அரசனாக வாய்ப்பே இல்லையே? ஆனால் பிரிந்த தம்பதியை இணைத்து வைத்த புண்ணியச் செயல் அவனுக்கு ராஜ பதவி என்ற பலனை வழங்கிவிட்டது!`

சீதை ராமனின் விளக்கத்தைக் கேட்டு மகிழ்ந்து சிரித்தாள். சில நேரங்களில் கடைசிப் பிள்ளைக்குக் கிடைக்கும் பாக்கியத்தைப் பற்றி எண்ணி அவள் தன் மனத்தில் வியந்துகொண்டாள்.

சத்துருக்கனன் தசரதரின் கடைசிப் பிள்ளை. நான்காவது பிள்ளை. தன் தந்தைக்குக் கொள்ளி போடும் பாக்கியம் அவனுக்குக் கிடைக்க வாய்ப்பே இல்லை. ஆனால் ராம லட்சுமணர்கள் கானகம் செல்ல, பரதன் கொள்ளி போடக்கூடாது என்று தசரதர் சொல்லிவிட்டு இறக்க, அந்தக் கடைசிப் பிள்ளையான சத்துருக்கனனுக்குத் தன் தந்தைக்குக் கொள்ளி போடும் பேறு கிடைத்ததே? காலம் யாருக்கும் எந்த பாக்கியத்தை வேண்டுமானாலும் தரும். சீதை ஒரு மெல்லிய முறுவலுடன் பிறகு கேட்டாள்:

`நம்மைச் சேர்த்துவைத்த விபீஷணனுக்கு ராஜபதவி கிடைத்துவிட்டது. நல்லது. ஆனால் நம் இருவரையும் சேர்த்து வைத்ததில் என் மகன் அனுமனுக்கும் தான் பங்கிருக்கிறது. அவனுக்கு என்ன பதவி கிட்டப் போகிறது?`

`அனுமன் பிரம்மச்சாரி. இல்லறம் பற்றி ஏதும் அறியாதவன். ஆனால் அவன்தான் பிரிந்திருந்த உன்னையும் என்னையும் இணைத்து வைத்தான். ஒரு மகன் பிரிந்திருக்கும் தாய் தந்தையரை இணைத்து வைப்பது போல் அந்தச் செயலைச் செய்து முடித்தான்.

பிரிந்திருந்த தம்பதியரை இணைத்து வைத்த அந்தப் புண்ணியச் செயலுக்காக, பாரத நாடெங்கும் பல இடங்களில் அனுமனுக்குத் தனிக் கோயில்களே அமையப் போகிறது தேவி! அனுமனின் புகழை நாடு காலம் காலமாய்க் கொண்டாடிக் கொண்டே இருக்கும்.`

தன் மகனே போன்ற அனுமனை ராமன் புகழ்ந்ததுகேட்டு சீதை மகிழ்ச்சியில் ஆழ்ந்தாள். பின்னர் கனிவோடு சொல்லலானாள்:

`சுவாமி! பிரிந்த தம்பதியர் இணைந்து வாழ விரும்பினால் அனுமனை வழிபட்டால் போதும். நம்மைச் சேர்த்துவைத்த அனுமன் பிரிந்த தம்பதியர் அனைவரையும் சேர்த்து வைப்பான்.

அவன் அருளால் உலகில் இல்லற நெறி இனிமையாய்த் தழைக்கட்டும். அனுமனின் அருள் தம்பதியரின் பிரிவுத் துயரை மாற்றட்டும்.`

சீதை சொன்னவற்றைக் கேட்ட ராமபிரான் `ததாஸ்து. அப்படியே ஆகட்டும்` என்று அருளினார்.

சீதையும் ராமனும் பேசிய பேச்சை வானிலிருந்து சூட்சும உருவில் கேட்டுக் கொண்டிருந்த தேவர்கள் மகிழ்ச்சியோடு தூவிய மலர் மாரியால் அந்தப் பிரதேசம் நிறைந்தது.

39

சீதை கிழித்த கோடு!

சூரிய ஒளி இன்னும் தெளிவாகப் புலப்படாத கருக்கல் நேரம். அயோத்தியின் வீதியில் விறுவிறுவென்று அந்தத் தேர் பறந்துகொண்டிருந்தது. அதில் பயணம் செய்துகொண்டிருந்தாள் சீதாதேவி. சீதைக்கு, ஏன் தேரோட்டி தேரோட்டாமல், லட்சுமணனே இன்று சாரதியாகத் தேரிலேறித் தேரோட்டுகிறான் என்பதுதான் தெரியவில்லை.

மறுபடியும் கொஞ்ச நாள் வனத்தில் இருக்க வேண்டும் என்று சீதாதேவி ராஜாராமனிடம் தெரிவித்தது என்னவோ உண்மைதான். இப்போது அவள் கர்ப்பவதி என்பதால் அவள் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று ராமபிரான் நினைத்துத்தானே தன்னை வனத்திற்கு அனுப்புகிறார்? அப்படித்தான் அவள் நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

ஆனால் இதில் ரகசியம் என்ன? அதிகாலையிலேயே தன்னைப் புறப்படச் சொல்ல வேண்டிய அவசியம்தான் என்ன?

மாமியார் மூன்று பேரிடமும் வணங்கி விடைபெற வேண்டும் என்று ஆசைப்பட்டாள். எங்காவது கொஞ்ச காலம் வெளியூர் போனால் அப்படிச் செய்வதுதானே வழக்கம்?

ஆனால் `அதற்கெல்லாம் ஒன்றும் அவசியம் இல்லை, மாமியார்கள் மூவரும் உறங்கிக் கொண்டிருப்பார்கள், அவர்களை எழுப்ப வேண்டாம்

என்று அண்ணா சொல்லிவிட்டார்!` என அவளை வலுக்கட்டாயமாகத் தடுத்துவிட்டான் லட்சுமணன். தன்மேல் அபரிமிதமான பாசம் செலுத்தும் மாமியார்களிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லிக் கொள்ளாமல் புறப்படுவதைப் பற்றி சீதைக்கு வருத்தம் தான்.

லட்சுமணன் அடிக்கடித் தன் கண்ணைத் துடைத்துக் கொள்வதைப் பார்த்து சீதைக்கு நகைப்பு வந்தது. ஓரிரு நாட்களில் திரும்பிவரக் கூடிய அண்ணியின் இந்தக் குறைந்த காலப் பிரிவைக் கூடத் தாங்க முடியாத எத்தனை எளிய குழந்தை மனம் இவனுக்கு!

`லட்சுமணா! வருந்தாதே! கானகத்தைச் சுற்றிப் பார்க்க ஆசைப்படுவதாக உன் அண்ணாவிடம் தெரிவித்தேன். சில நாட்களுக்கு என்னை வனத்திற்கு அனுப்புகிறார் அவர். அவ்வளவுதான். மிக விரைவிலேயே அயோத்தி திரும்பி விடுவேன்.`

குதிரையின் லகானைப் பற்றியவாறே முகத்தைத் திருப்பி லட்சுமணன் சொன்னான்:

`தாங்கள் அப்படி விரைவில் திரும்ப மாட்டீர்கள் தாயே!`

சீதை கலகலவென்று சிரித்தவாறே கேட்டாள்:

`ஏன் கானகத்திலேயே அரண்மனை கட்டி உன் அண்ணாவும் அங்கேயே வந்து தங்கப் போகிறாரா என்ன?`

லட்சுமணன் ஒரு பெருமூச்சு விட்டான்.

`இதோ வனம் வரப் போகிறது! இன்னும் சற்று நேரத்தில் உங்களுக்கு எல்லா விவரங்களும் விளக்கப்படும் தாயே!`

சீதை இந்தப் பூடகமான பேச்சின் பின்னால் பொதிந்துள்ள விஷயங்களின் ஆழம் புரியாமல் திகைத்தாள். எப்போதும் கலகலவென்று பேசும் லட்சுமணன் ஏதொன்றும் பேசாமல் கண்களில் கண்ணீர் வழியத் தேரை ஓட்டுவதைப் பார்த்து அவள் மனம் திடுக்கிட்டது. அவன் கண்ணீருக்கான காரணம் என்னவாக இருக்கும் என்று ஊகிக்க முயன்று முடியாமல் அவள் தோற்றாள்.

அதற்குள் வனம் வந்துவிட்டது. லட்சுமணன் தேர்த்தட்டிலிருந்து குதித்துக் கீழே இறங்கினான். தாய்மையின் பாரத்தைக் கடந்த மூன்று மாதங்களாய் வயிற்றில் சுமந்துகொண்டிருந்த சீதாதேவி மெல்லத் தேரை விட்டு இறங்கினாள். சுற்றுமுற்றும் பார்த்துப் பரவசம் அடைந்தாள்.

சூரியன் சற்று மேலேறி இருந்ததால் அந்தக் காலை வேளையில் கானகம் மெல்ல மெல்ல விழித்துக் கொள்ளத் தொடங்கியிருந்தது. வண்டுகளின் இனிய ரீங்காரம். குயில்களின் ஆனந்தமான கூவல்கள்.

மலர்களின் இதழ்கள் மேல் அமரவேண்டி நூற்றுக் கணக்கில் பறந்துகொண்டிருந்த வண்ண வண்ணமான பட்டுப் பூச்சிகளின் எழில்.

`குழந்தாய் லட்சுமணா! இந்தக் கானகத்தின் அழகைப் பார்த்தால் இங்கேயே வாழ்நாள் முழுவதும் இருந்து விடலாம் போல் தோன்றுகிறது!`

லட்சுமணன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு சொன்னான்:

`அதுதான் அண்ணாவின் உத்தரவும் கூட!`

சீதை திடுக்கிட்டு லட்சுமணனைக் கேட்டாள்:

`என்ன சொல்கிறாய் லட்சமணா? சற்று விளக்கமாகச் சொல்.`

லட்சுமணன் சற்றுநேரம் முகத்தை மூடிக் கொண்டு கதறினான். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு மெல்லச் சொன்னான்:

`தாயே! யாரோ துணிவெளுக்கும் ஒருவன் தங்களைப் பற்றி அவதூறாகப் பேசினானாம். அது அண்ணா காதுக்கு எட்டிவிட்டது. ராஜாவின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும் என்பது அரச நீதியாம். அதனால் தங்களைக் கானகத்தில் விட்டுவிடச் சொல்லி என்னை அனுப்பினார். இனித் தங்கள் வாழ்வு கானகத்தில் தான் தாயே!`

சீதை பெரும் திகைப்படைந்தாள். என்ன கொடுமை இது! தன்னையே சரண் என்று வந்த மனைவியை நிராகரிப்பது என்ன நியாயம்! அரச நியாயம் இருக்கட்டும். ஒரு பெண்ணின் கணவருக்கென்று தனி நியாயம் இல்லையா?

`இந்தக் கொடும் கானகத்தில் கர்ப்பவதியான நான் தன்னந்தனியாய் என்ன செய்வேன்!` என்று கதறி அழுத சீதை திடீரென மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். அதிகாலையிலேயே அவளைப் புறப்படச் சொன்னது ஏன் என்றும் மாமியார்களிடம் விடைபெற வேண்டாம் என்று சொன்னது ஏன் என்றும் அவளுக்கு இப்போது புரிந்தது.

கர்ப்பவதியான அவளைக் கானகத்திற்கு அனுப்பும் அளவு அவளது மாமியார்கள் கல்நெஞ்சக்காரர்கள் அல்ல. ஒருவேளை நாட்டில் இருக்கப் பிடிக்கவில்லை என்று மாமியார்களும் சேர்ந்து கானகம் புறப்பட்டுவிட்டால் என்ன செய்வது என்று ராமன் அஞ்சியிருக்கக் கூடும். நல்ல நாடு! நல்ல அரச நீதி! சீதை விழிகளைத் துடைத்துக் கொண்டு லட்சுமணனிடம் சொன்னாள்:

`லட்சுமணா! நல்லது. உன் அண்ணாவிடம் போய்ச் சொல். இப்படிப்பட்ட தேவையற்ற பழிகளைச் சுமத்தும் மக்கள் வாழும் நாட்டில் வாழ்வதை விடக் கானகத்தில் வாழ்வதையே அண்ணி விரும்புகிறாள்

என்று தெரிவித்துவிடு. இனி நான் அயோத்திக்கு வரமாட்டேன்.`

`தாயே! அப்படிச் சொல்லாதீர்கள். அண்ணா மனம்மாறித் தங்களை மறுபடி அழைக்கலாம் அல்லவா?`

`அழைக்கலாம். நானும் மறுபடி அயோத்தி வரலாம். மறுபடியும் வேறொருவன் இதைப் போல் பேசலாம். மீண்டும் நான் கானகம் வரவேண்டியிருக்கும். இதென்ன வாழ்வு மகனே! நான் பட்ட துயரங்களெல்லாம் போதும். ராவணன் என்னைத் தூக்கிச் சென்றதில் என் பங்கு ஏதுமில்லை. அப்படியும் என்னைப் பற்றி அவதூறு பேசுவார்களானால் அப்படிப் பேசுவோர் வாழும் இடத்தில் வாழ நான் விரும்பவில்லை.`

லட்சுமணன் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு மெல்லச் சொன்னான்:

`நல்லது தாயே! அண்ணா தங்களைக் கானகத்தில் விட்டுவிடச் சொன்னாரே அன்றி என்னை நாடு திரும்ப வேண்டும் என்று சொல்லவில்லை. நான் தங்களோடு இங்கேயே தங்கிவிடுகிறேன். அண்ணாவும் நீங்களுமாக முன்னர் பதினான்கு ஆண்டு வனவாசத்திற்கு உட்பட்ட போது நான் உங்கள் இருவருக்கும் பணிவிடை செய்தேன். இப்போது உங்களுக்குப் பணிவிடை செய்து என் எஞ்சிய வாழ்நாளை உங்களோடு இதே கானகத்தில் கழிப்பேன்.`

சீதை நகைத்தாள்.

`மகனே! இந்தத் தண்டனை எனக்கு ஏன் ஏற்பட்டது என்பதை நான் அறிவேன். இயற்கையின் நியதி அது. ஒவ்வொருவரும் அவரவர் செய்த செயலுக்குரிய தண்டனையை அனுபவித்துத் தான் ஆகவேண்டும்.`

`அப்பழுக்கில்லாதவர் அல்லவா தாங்கள்? நீங்கள் என்ன தவறு செய்தீர்கள் தாயே?`

`வனவாச காலத்தில் உன் அண்ணா பொன்மானின் பின் போனபோது உன்னை எவ்விதமெல்லாம் ஏசினேன் நான். நீ மறந்துவிடலாம். நான் மறக்க இயலுமா? நாக்கில் நரம்பில்லாமல் சுமத்தக் கூடாத பழிகளை எல்லாம் உன்மேல் சுமத்தினேன் அல்லவா? என்மேல் கொண்ட ஆசையின் பொருட்டாகத் தான் நீ அயோத்தியை விட்டு எங்களோடு வந்தாயா என்று கூடக் கேட்டேனே! என்ன மதியீனம்! அப்படிக் கேட்ட என் நா அறுந்து விழவில்லையே? அசோக மரத்தடியில் நான் கண்ணீர் வழிய வாழ்ந்த காலங்களில் உன்னைப் பற்றிப் பேசியதை எண்ணி எண்ணி அழுதேன். பின்னர் அக்கினிப் பிரவேசத்தின்போது எனக்குத் தண்டனை கிட்டிவிட்டதாக எண்ணி மனச்சமாதானம் அடைந்தேன்.

உன்னைப் போன்ற ஓர் உத்தமனைப் பற்றி, துயரவசப்பட்ட நிலையில் தான் என்றாலும் நான் அவ்விதம் அபாண்டமாகப் பேசியது தவறல்லவா? அந்தத் தவறுக்குத்தான் கானகத்திலேயே கிட நீ என்று இயற்கை எனக்கு இந்தத் தண்டனையை வழங்கியுள்ளது போலும். இதை நான் தனியே அனுபவிப்பேன். நீ அயோத்தி சென்றுவிடு.`

`அவ்விதம் சொல்லலாகாது தாயே! உங்களைத் தனியே விட்டுச் செல்ல எனக்கு மனமில்லை. நான் தங்களின் சேவகனாக இங்கேயே தங்குவேன்!`

சீதை திடீரென விரக்தியுடன் நகைத்தாள்.

`என் மகனே லட்சுமணா! உலகம் அறியாமல் பேசுகிறாய் நீ? என்னைப் பற்றி ராவணனுடன் இணைத்து அவதூறாகப் பேசிய வாய் நீ இங்கேயே தங்கினால் உன்னையும் என்னுடன் இணைத்து அவதூறு பேசும். அயோத்தி ரகுவம்சத்தின் மானம் கப்பலேறும். இது தேவைதானா?`

`யார் என்ன பேசினாலும் எனக்குக் கவலை இல்லை! என் அண்ணாவின் வார்த்தைகளைக் கூட இனி நான் லட்சியம் செய்வதாக இல்லை. உங்களையே கானகம் அனுப்பத் துணிந்துவிட்ட அவரைப் பற்றி இனி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?

உங்கள் நலன் மட்டுமே இனி என் வாழ்நாளின் எஞ்சிய குறிக்கோள். இந்த வனாந்திரமான பிரதேசத்தில் உங்களைத் தன்னந்தனியே விட்டுவிட்டு என்னால் நாடு திரும்ப இயலாது.`

`என்னைப் பற்றிக் கவலைப் படாதே லட்சுமணா. வனதேவதைகள் என்னைக் காப்பாற்றுவார்கள். இலங்கையில் அசோக மரத்தடியில் ஒருமுறை மனம் தளர்ந்து தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்தேன். அப்போது என் மகன் ஆஞ்சநேயன் தக்க நேரத்தில் வந்து ராம நாமத்தைச் சொல்லி என் உயிரைக் காத்தான்.

ஆனால் இப்போது நான் தற்கொலை முடிவெடுக்க இயலாது. தாய்மைப் பொறுப்பை இயற்கை எனக்கு வழங்கியுள்ள நேரம் இது.

மகப்பேறுக்குப் பிறகு என் குழந்தையை வளர்த்து என் கணவரிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்துவிட்டு நான் உலகைத் துறப்பேன். இந்த உலகில் வாழ வேண்டும் என்ற ஆசை எனக்கு முற்றிலும் அற்றுப் போய்விட்டது. என் கடமையை நிறைவேற்றும் பொருட்டே என் உடல் உயிரைத் தரித்திருக்கிறது.

நீ பத்திரமாக அயோத்தி திரும்பவேண்டும் என்பது மட்டுமே என் வேண்டுகோள்.`

`முடியாது தாயே. அப்படிச் சொல்லாதீர்கள். உங்களை இந்தக் கொடும் கானகத்தில் விட்டுவிட்டு என்னால் அயோத்தி திரும்ப இயலாது.`

லட்சுமணன் விம்மி விம்மி அழுதான். சீதை திடீரென ஒரு முடிவெடுத்தாள். கீழே கிடந்த ஒரு சிறு கல்லைக் கையிலெடுத்தாள். லட்சுமணனுக்கும் தனக்கும் இடையே நீளமாக ஒரு கோட்டை மண்ணில் வரைந்தாள்.

`லட்சுமணா! வனவாச காலத்தில் நீ ஒரு கோட்டை வரைந்தாய். அதைத் தாண்டி நான் வரக்கூடாது என்று சொல்லிவிட்டு ராமனைத் தேடிச் சென்றாய். நான் அந்தக் கோட்டைத் தாண்டினேன். அதனால் தான் ராவணன் கையில் அகப்பட்டேன்.

இதோ இப்போது நீ வரைந்த கோட்டைப் போல் நானும் ஒரு கோடு வரைந்திருக்கிறேன். இந்தக் கோட்டை நீ தாண்டி வரலாகாது.

அவ்விதம் வந்தால் நான் உயிரோடு இருக்க மாட்டேன். போ. மாமியார்களிடம் விஷயத்தை எடுத்துச் சொல். அவர்களுக்கு என் நமஸ்காரங்களைத் தெரிவி. உன் அண்ணா என்னைப் பிரிந்து கடும் சோகத்தில் இருப்பார்.

அரச நீதியின் கடுமையை நான் புரிந்துகொண்டு விட்டேன் என்றும் எனக்கு அவரிடம் வருத்தம் ஏதும் இல்லை என்றும் சொல்லிவிடு. தாமதிக்காமல் புறப்படு மகனே!`

சொன்ன சீதை திடீரெனத் திரும்பிக் கானகத்திற்குள் நடக்கலானாள்.

`தாயே!` என அழைத்தவாறே அவளைத் தொடர நினைத்த லட்சுமணனை அந்தக் கோடு தடுத்தது.

அவன் அழுதவாறே தளர்ந்த உடலோடு தேரில் ஏறினான். புரவியின் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தது.

புரவி மனமில்லாமல் அயோத்தி நோக்கி நகரத் தொடங்கியது.

40

மந்தரை ஊட்டிய பழச்சாறு!

உலகம் காலடியிலிருந்து நழுவுவது போல் இருந்தது ராமபிரானுக்கு. இது என்ன கொடுமை! ஒற்றர்கள் கொண்டுவந்த செய்தி அவனைப் பதைபதைக்க வைத்தது.

ராமராஜ்யம் ராமராஜ்யம் என்று எல்லோரும் புகழ்கிறார்கள். நல்ல ராமராஜ்யம் இது! இந்த ராமராஜ்யத்தில் ஒரு பிரஜை உண்ணாவிரதம் இருந்து உயிரை விடத் தீர்மானித்துள்ளான். இதுவா ராமராஜ்யத்தின் மகிமை?

போதும். போதும். கர்ப்பவதியான சீதாதேவியைக் கானகம் அனுப்பியதும் போதும். சீதையில்லாத அயோத்தியில் நான் ஒவ்வொரு கணமும் துன்பத்தில் ஆழ்வதும் போதும்.

செய்தி கொண்டுவந்த அந்த நம்பிக்கையான ஒற்றர்களிடம் ராமன் தாழ்ந்த குரலில் யார் அந்த மனிதன், அவன் ஏன் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவுசெய்தான் என்று விசாரித்தான்.

அந்த ஒற்றர்கள்தான், இருபது நாட்கள் முன்பு, துணிவெளுக்கும் ஒருவன் சீதாதேவியைப் பற்றி அவதூறு பேசியதாகச் செய்தி கொண்டுவந்தவர்கள். அந்தச் செய்தி தந்த அதிர்ச்சியில் அரண்மனையே குலுங்கியது. சீதை ராமனால் நிராகரிக்கப்பட்டு கானகத்திற்கு அனுப்பப்பட்டாள். இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து கோசலை, கைகேயி, சுமித்திரை யாரும் மீளவில்லை. அரண்மனையின் சுவர்கள் கூட துக்கத்தில் உறைந்திருக்கின்றன.

இப்போது யாரோ ஒருவன் உண்ணாவிரதம் இருந்து உயிர்விடத் தீர்மானித்திருப்பதும் சீதாதேவி கானகத்திற்கு அனுப்பப்பட்ட செயலின் எதிரொலிதானா? ஒற்றர்களில் ஒருவன் சொல்லலானான்:

`பிரபோ! இந்த மனிதன் உண்ணாவிரதம் இருப்பதற்கும் சீதாதேவி கானகம் அனுப்பப் பட்டதற்கும் சம்பந்தம் உண்டு. சீதாதேவி கானகம் அனுப்பப்பட்டதற்குக் காரணமே இந்த மனிதன் தான்! உண்ணாவிரதம் இருந்து உயிரைவிடத் தீர்மானித்திருப்பவன் அன்னை மீது அவதூறு பேசிய அதே துணிவெளுப்பவன் தான். அவன் சொன்ன பழிச்சொல்லால் தான் அன்னை கானகத்திற்கு அனுப்பப்பட்டார் என்று நாடு முழுவதும் தெரிந்துவிட்டது. அவனது குடும்பத்தினரே அவனை வெறுத்து ஒதுக்கிவிட்டார்கள். மக்கள் அவனைப் பார்க்கும் பார்வையின் உஷ்ணத்தை அவனால் தாங்க இயலவில்லை. சரயூ நதி தீரத்தில் கடந்த பதினைந்து நாட்களுக்கும் மேலாக அவன் தண்ணீர் கூட அருந்தாமல் உயிரைப் பட்டினி கிடந்தே மாய்த்துக் கொள்ள எண்ணி அசையாமல் அமர்ந்திருக்கிறான்!`

ஸ்ரீராமன் சற்று நேரம் அமைதியாக இருந்தான். பின்னர் கைதட்டி ஏவலர்களைக் கூப்பிட்டான்:

`அன்னை மந்தராதேவியை ஒரு கோப்பை பழச்சாற்றோடு சரயூ நதி தீரத்தில் நான் செல்லுமிடத்திற்கு வரச் சொல்லுங்கள். அவர்களைத் தேரில் என்னைப் பின்தொடரச் சொல்லுங்கள்!`

ஏவலர்கள் செய்தியை மந்தரையிடம் சொல்ல ஓடினார்கள். அதற்குள் விவரம் தெரிந்து கோசலை, சுமித்திரை, கைகேயி, பரதன், லட்சுமணன், சத்துருக்கனன் ஆகியோரும் ராமனைப் பின்தொடர விரைந்து வந்தார்கள். ராமன் தேரில் ஏறிக்கொள்ள தேர் சரயூ நதி தீரத்தை நோக்கிப் பறந்தது. ஒற்றர்கள் ராமன் தேரைக் குதிரையில் பின்தொடர்ந்தார்கள். மக்கள் கூட்டம் அரச குடும்பத்தினரைத் தொடர்ந்தது.

அந்தத் துணிவெளுப்பவன் உடல் மெலிந்தவனாய், பஞ்சடைந்த கண்களோடு சாவை எதிர்பார்ப்பவன் போல் அமர்ந்திருந்தான். ஸ்ரீராமபிரான் தன்னை நோக்கி வருவதைப் பார்த்து, `என்னை மன்னியுங்கள் பிரபோ!` என்றவாறு எழமுயன்று, இயலாமல் மண்ணில் சரிந்தான்.

ராமன் ஓடோடிச் சென்று அவனைத் தன் மடியில் தாங்கிக் கொண்டான். அவன் தலையைப் பரிவோடு கோதிவிட்டுக் கனிவுபொங்க அவனையே சற்றுநேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

கூட்டம் இக்காட்சியைத் திகைப்போடு பார்த்தவாறிருந்தது. தன் மனைவி மேல் அவதூறு சொன்னவனை ராமன் மடியில் கிடத்திக்

கொண்டு தந்தைபோல் பாசம் பொங்கப் பார்ப்பதைப் பார்த்து மக்கள் விழிகளைத் துடைத்துக் கொண்டனர். இதெல்லாம் எங்கள் ராமனால் தான் முடியும் என்ற பெருமிதம் அவர்கள் விழிகளில் பளபளத்தது.

`ஸ்ரீராம ப்ரபோ! என்னையும் ஒரு பொருட்டாய்க் கருதி நான் சாகும் நேரத்தில் எனக்குக் காட்சி தர வந்தாயா?`

`இல்லை. நீ சாகப் போவதில்லை. வாழப் போகிறாய். உன்னைச் சாகவிடமாட்டேன்!`

`இல்லை ராமா. நான் சாகத்தான் வேண்டும். என் சொற்களால் உன் இலலறம் சிதைந்தது. என் இல்லறமும் கூடச் சிதைந்துவிட்டது. என் மனைவி என்னை வெறுத்து ஒதுக்கிவிட்டாள். என் குடும்பத்தினர் அனைவரும் மனங்கசந்து என்னை நிராகரித்து விட்டார்கள். இந்த அயோத்தி மக்கள் அனைவரும் பார்வையாலேயே என்னை பகிஷ்கரிக்கிறார்கள். இந்த அவமானங்கள் அனைத்திலிருந்தும் சாவு மட்டும் தான் எனக்கு விடுதலை தரும். என் குற்ற உணர்ச்சியிலிருந்தும் எனக்கு விடுதலை வேண்டும். தவறு செய்துவிட்டேன் பிரபோ. என்னைத் தாங்கள் மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும். காதுகுளிர அதைக் கேட்டுவிட்டு நான் மரணத்தைத் தழுவுவேன்.`

`நீ எந்தத் தவறும் செய்யவில்லை. விதி நடத்தும் நாடகத்தில் நீ ஒரு கதாபாத்திரம். அவ்வளவே. முன்னர் என்னோடு சீதாதேவி கானகம் வந்தாளே? அது எவ்வாறு நிகழ்ந்தது? மந்தரையாலா? அல்ல. அன்று நடந்தவற்றில் யார் பிழையும் இல்லை. விதியின் பிழை அது. அப்படியே இன்று நடந்ததும் விதிதான் என அறிந்து அமைதி கொள்வாய். மந்தரையின் நாவிலிருந்து அன்று விதி துள்ளிக் குதித்தது. இதோ இருபது நாட்கள் முன்னால் உன் நாவிலிருந்தும் குதித்தது விதிதான் அப்பா!`

`அப்படியானால் விதி என் நாவில் குடியிருக்கவில்லை ஸ்ரீராமா! அது ஒற்றர்கள் காதில் குடியிருந்தது.`

`என்ன சொல்கிறாய் நீ? ஒற்றர்கள் நீ சொன்னதைத் தானே அப்படியே என்னிடம் வந்து சொன்னார்கள்?`

ராமன் ஒற்றர்களைத் திரும்பிப் பார்த்தான். ஆம் என்ற அர்த்தத்தில் அவர்கள் தலையசைத்தார்கள். ராமன் மடியில் பெருமூச்சு விட்டவாறு படுத்திருந்தவன் மெல்லிய குரலில் சொல்லலானான்:

`ஸ்ரீராமா! நான் கூறிய சொற்களின் பொருளை அறியாமல் நான் சொன்னதை அப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் ஒற்றர்கள் உன்னிடம் கிளிப்பிள்ளை போல் சொன்னார்களே, அதுதான் என்

விதி. என் மனைவியே நான் சொன்னதைச் சரிவர உணராதபோது ஒற்றர்களைக் குற்றம் சொல்வதில் பயனென்ன?`

ராமன் திகைத்தவாறு கேட்டான்: `அப்படி நீ என்ன சொன்னாய் அப்பா? `

`என் மனைவி அன்று இரவு மிகத் தாமதமாக வீட்டுக்கு வந்தாள். நான் கதவைத் திறக்காமல் சாளரத்தின் வழியே அவளைக் கண்டித்தேன். ஓராண்டு அன்னிய நாட்டில் இருந்தாலும் தன் மனைவியை ராமபிரான் ஏற்பார். ஆனால் நான் இரவு நேரத்தில் தாமதமாக வரும் மனைவியை ஏற்க இயலாது. ஏனென்றால் நான் ராமனல்ல என்றேன்.`

`ஆம். அதைத்தான் என் ஒற்றர்களும் என்னிடம் சொன்னார்கள்.`

`அவர்கள் நான் சொன்னதை அப்படியே உன்னிடம் சொன்னது சரி. ஆனால் நான் சொன்னதன் பொருள் என்ன தெரியுமா ராமா? நான் ராமனல்ல. ராமன் தெய்வம். அவரால் தன் மனைவியின் உள்ளுணர்வுகளைக் கூடப் புரிந்துகொள்ள முடியும். அவரே பொதுமக்களின் சந்தேகத்தை நீக்க வேண்டும் என்று சீதாதேவியை அக்கினியில் குதிக்கச் சொன்னார். சீதாதேவி பூப்போல நெருப்பிலிருந்து திரும்பி வந்தார். ஏனென்றால் சீதாதேவியும் சராசரி மானிடப் பெண் அல்ல. அவரும் தெய்வம். ஆனால் நானும் என் மனைவியும் சராசரி மானிடர்கள். என் மனைவி இரவு தாமதமாக வந்தால் சமுதாயம் அதை அங்கீகரிக்காது. என் மனைவியை நெருப்பில் குதிக்கச் சொல்ல இயலாது. ஏனென்றால் நெருப்பு அன்னை சீதை என்ற தெய்வத்தைத் தான் சுடாதே தவிர என் மனைவியை அது தன் இயல்புப்படிச் சுட்டுப் பொசுக்கிவிடும். எனவே நான் ராமனல்ல, என் மனைவி சீதையல்ல என்பதை உணர்ந்து என் மனைவி நடந்துகொள்ள வேண்டும் என்றேன். இந்தப் பொருளில் நான் சொன்னது வேறுவகையான அர்த்தம் பெற்றுவிட்டது. நான் சொன்ன சொல் ஒன்று. அது பொருள் தந்த விதம் வேறொன்று. நான் என்ன செய்வேன் ராமா?`

இந்தத் தன்னிலை விளக்கத்தைக் கேட்டு ஒற்றர்கள் தலைகுனிந்து நின்றார்கள். கூட்டமும் இந்த விளக்கத்தால் திகைப்படைந்திருந்தது.

ராமன் முகத்தில் முறுவல் படர்ந்தது. சீதாதேவி அப்பழுக்கற்றவள் என்பதைத்தான் இவனும் சொல்லியிருக்கிறான். அப்பழுக்கற்றவள் என்று சொல்லப்பட்ட ஒருத்தி, அதன் காரணமாகக் கானகம் அனுப்பப்பட்டாள் என்றால் இது விதியல்லாமல் வேறென்ன?

சீதாதேவி எங்கிருக்கிறாள் என்று தேடிச் சென்று இனி அழைத்தாலும் அவள் வருவாளா? அப்படி வருவதற்கு அவள் சுயமரியாதை இடம் தருமா? `இப்படி ஒவ்வொருவர் ஒவ்வொருமுறை என்ன பொருளில்

சொன்னாலும் அதன் பொருட்டு நான் எத்தனை முறை தீக்குளிக்க வேண்டும் சொல்லுங்கள் பிரபோ? ` என்று என் சீதை என்னைக் கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்? ஒற்றர்கள் சொன்னதைப் பூரணமாக நம்பி உட்பொருளை ஆராயாது என் சீதைக்கு வனவாச தண்டனையைக் கொடுத்தேனே? ஆராயாமல் தண்டனை கொடுத்த நான் அல்லவோ குற்றவாளி? எனக்கென்ன தண்டனை? சீதையைப் பிரிந்து வாழும் இந்தத் தனிமையை விட வேறு பெரிய தண்டனை உண்டா? ராமன் பெருமூச்சோடு சொன்னான்:

`அப்பா! இப்போது புரிகிறதல்லவா? நடந்தவற்றில் உன் பிசகு எதுவும் இல்லை. விதியின் தவறே காரணம். அன்று மந்தராதேவி கைகேயியை வரம் கேட்கத் தூண்டியதிலும் ஓர் உட்பொருள் உண்டு. என் தந்தை தசரதர் கைகேயி மாதாவைத் திருமணம் செய்துகொண்ட போது அன்னை கைகேயி மூலம் பிறக்கும் மகனுக்கு அரசாட்சியைத் தருவதாக வாக்குக் கொடுத்திருந்தார். ரகுகுல மன்னர் வாக்குத் தவறக் கூடாது என்பதுதான் அன்னை மந்தரையின் நோக்கமாக இருந்தது. அவரது புனித நோக்கத்தை அன்று யாரும் உணரவில்லை. இதோ சீதாதேவியைத் தெய்வமாகக் கருதும் உன் புனித நோக்கத்தை இன்று யாரும் புரிந்துகொள்ளவில்லை. போகட்டும். நீ தவறே செய்யாதவன். எனவே நீ சாவைத் தழுவக் கூடாது. உன்னை உலகம் புரிந்துகொண்டுவிட்டது.`

ராமன் இதைச் சொன்னபோது, கூட்டத்தின் இடையே எங்கோ நின்றிருந்த துணிவெளுப்பவனின் மனைவி ஓடோடி வந்து ராமனை நமஸ்கரித்துத் தன் கணவன் அருகாக நின்று கொண்டாள்.

`தாயே மந்தராதேவி! ரகு குலத்தின் பெருமை காப்பாற்றப் பட வேண்டும் என்பதற்காகப் பழியையும் விரும்பி ஏற்ற தியாகி நீங்கள். உங்களாலும் இதோ இந்தத் துணிவெளுப்பவனாலும் தான் அயோத்தி பெருமை அடைகிறது. உங்கள் கரத்தால் இந்தப் பழச்சாற்றை இவனுக்கு ஊட்டுங்கள்!`

மந்தரை பொங்கி வந்த கண்ணீரைத் துடைக்க மறந்தவளாய் அந்தப் பழச்சாற்றை ராமன் மடியில் படுத்திருந்தவன் வாயில் மெல்ல ஊட்டினாள். ராமபிரான் அவனது கரத்தையும் அவன் மனைவியின் கரத்தையும் இணைத்து வாழ்த்தினான். `ராமபிரான் வாழ்க! சீதாதேவி வாழ்க!` என்ற முழக்கம் எங்கும் பரவியது.

41

கானகம் சென்ற மரதரசி!

ராமன் காத்திருந்தான். எப்போது லட்சுமணன் வருவான் என்று தன் அறையின் சாளரத்திலிருந்து, அவன் சென்ற தேர் வரும் வழியையே பார்த்தவாறிருந்தான். நிலைகுத்திய அவன் பார்வையில் ஒரு வெறுமையும் தன்னிரக்கமும் கலந்திருந்தது. இந்நேரம் சீதை கானகத்தில் தனித்து விடப்பட்டிருப்பாள். `என் பிராண நாதரா என்னைக் கானகத்திற்கு அனுப்பினார்!` என்ற அதிர்ச்சியில் அவள் மயக்கமுற்றிருக்கலாம்.

கர்ப்பவதியான பெண்ணைத் தன்னந்தனியே கானகத்தில் கொண்டுவிடும் செயலை உலகில் வேறு எந்தக் கணவனும் செய்திருக்க வாய்ப்பில்லை. என்ன கொடுமை இது! நானே என் அன்பான மனைவிக்குச் செய்துள்ள மாபெரும் கொடுமை!

ராமன் விழிகளிலிருந்து கண்ணீர் பெருகியது. அதோ தேர்வரும் ஓசை! புரவிகளை லாயத்தில் கட்டிவிட்டு லட்சுமணன் தன்னைத் தேடி வருவான்.

இன்னும் அரண்மனையில் யாரும் சீதை கானகத்தில் விடப்பட்டுள்ளதைப் பற்றி அறியவில்லை. அதிகாலையில் இந்தச் செயல் ஊரும் உறவும் அறியாமல் மிக ரகசியமாக நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

சீதையின் மாமியார் மூவரும் இந்த விவரத்தை அறிய வரும்போது அரண்மனையில் பூகம்பம் வெடிக்கலாம். அவர்கள் சீதையில்லாத அரண்மனையில் தொடர்ந்து வசிக்கச் சம்மதிக்க வேண்டுமே! தாங்களும் கானகத்திற்குப் போகிறோம்

என்று அவர்கள் புறப்படக் கூடும். நிலைமை எவ்விதமெல்லாம் உருவாகும் என்பது போகப் போகத்தான் தெரியும். எனக்கு ஒரு சிக்கல் என்றால் இதுவரை சீதை துணையிருந்தாள். சீதையே இல்லாததால் விளையும் சிக்கலுக்கு நான் யாரைத் துணைக்கு அழைக்க முடியும்!

சீதை தொடர்பாக நான் எடுத்த முடிவின் பொருட்டு மக்கள் என்னை மதிப்பார்களா இல்லை தூற்றுவார்களா? யாரோ ஒருவன் ஏதோ சொன்னான் என்பதற்காக எங்கள் ராணியை கானகத்திற்கு அனுப்பியது என்ன நியாயம் என்று மக்களிடமிருந்தும் புரட்சி வெடிக்கலாம்.

எந்த நிலைமை நேர்ந்தாலும் அதையெல்லாம் எதிர்கொள்ள வேண்டியதுதான். ராஜநீதி தான் முக்கியம். ராஜாவின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம். ரகுவம்சத்தில் பிறந்த ராமன் ராஜநீதியைச் சரியாக அனுசரிக்கவில்லை என்ற பழிச்சொல் என்மேல் படரலாகாது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த ராமன், அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்த லட்சுமணனை வெறித்துப் பார்த்தான். சற்றுநேரம் ராமனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த லட்சுமணன் `நாம் ஏன் அரச குடும்பத்தில் பிறந்தோம் அண்ணா? ஏதாவது ஒரு சராசரிக் குடும்பத்தில் பிறந்திருந்தால் எத்தனையோ மகிழ்ச்சியாக வாழ்ந்திருப்போமே?` என்று கேட்டு மனமுடைந்து கதறலானான். ராமன் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தலைகுனிந்தவாறு நின்றிருந்தான்.

`இப்படிப்பட்ட மாபெரும் தண்டனை கிடைக்க என் அண்ணி என்ன தவறு செய்தார் அண்ணா? அவர் உத்தமி என்பதை அபவாதம் சொன்ன அந்தத் துணிவெளுக்கும் ஒருவன் தவிர மற்ற எல்லோரும் அறிவார்கள். என் அண்ணி உத்தமி என்பதற்குச் சாட்சியா வேண்டும்? கள்ளங்கபடமற்ற அவரது திருமுகத்தை ஒருமுறை பார்த்தால் போதாதா?`

லட்சுமணனின் நேரிடையான கேள்வி ராமனை உலுக்கியது.

`அண்ணியைக் கானகத்தில் விட்டுத் திரும்பும் போது என் தலையில் இடி விழுந்து நான் இறந்துவிடலாகாதா என்று நினைத்தேன் அண்ணா! எவ்வளவு கடுமையான பணியை எனக்கு வழங்கினீர்கள்! குற்றம் செய்தவன் பொய்யாக அபாண்டத்தைச் சுமத்திய துணிவெளுப்பவன். அவன் நாக்கையல்லவா அறுத்திருக்க வேண்டும்? அப்பாவியான என் அண்ணியைத் தண்டித்து விட்டீர்களே?`

ராமன், மெல்லச் சொல்லலானான்.

`தண்டனை எந்தக் காரணத்தால் வேண்டுமானாலும் 'நமக்குக்

கிடைக்கலாம் லட்சுமணா! தண்டனை கிட்டும்போது இப்படிப்பட்ட தண்டனை கிட்ட நாம் கடந்த காலத்தில் என்ன செய்தோம் எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் எப்போதோ செய்த தவறுகளுக்கு இப்போது இப்படித் தண்டனை கிட்டியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். உன் அண்ணி உத்தமி என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் இந்த வனவாசத் தண்டனையை அனுபவிக்கும் படியாக அவள் மூன்று தவறுகள் செய்திருக்கிறாள்.`

`என் அண்ணி தவறு செய்தாரா? அதுவும் மூன்று தவறுகளா? என்ன தவறுகள் அவை அண்ணா?`

`பொன்மானைப் பார்த்து ஆசைப்பட்டது முதல் தவறு! அந்த மானின் பொய்க்குரல் கேட்டு, அது என் குரல் அல்ல என்று நீ எடுத்துச் சொல்லியும் கேளாமல் உன்னை என்னைத் தேடுமாறு அனுப்பியது இரண்டாம் தவறு. நீ கிழித்த கோட்டைத் தாண்டினாளே அது அவள்செய்த முக்கியமான மூன்றாம் தவறு.`

`அண்ணா! இவை மூன்றும் தவறுகளே அல்ல. அப்படி இவை தவறானால் அதற்கான பொறுப்பு நம் இருவருக்கும் தான் உண்டே தவிர அண்ணிக்கு அல்ல. பொன்மானைப் பார்த்து ஆசைப்பட்டால், அவ்விதம் ஆசைப்படுவது சரியல்ல, அது மான்வடிவம் கொண்ட அரக்கனாக இருக்கலாம் என அண்ணி ஏற்கும் விதத்தில் அழுத்தமாக நீங்கள் எடுத்துச் சொல்லியிருக்கலாமே? அண்ணி கேட்டார் என்பதற்காக பொன்மானைத் தேடி நீங்கள் போனது தவறில்லையா?

மானின் பொய்க்குரல் எங்களுக்கு மட்டுமா கேட்டது? மான்மேல் அம்புபோட்டு அதன் அருகே நின்ற உங்களுக்கும் தானே கேட்டிருக்கும்? அண்ணி கவலைப்படுவார் என்று ஓடிவந்த நீங்கள், அப்படி ஓடி வரும்போதே நான் நலமாகத்தான் இருக்கிறேன் என்று அண்ணியின் காதில் விழுமாறு உரத்துக் குரல் கொடுத்திருக்கலாம் இல்லையா? அப்படிக் குரல் கொடுக்காதது நீங்கள் செய்த தவறு தானே?

அண்ணி தாண்டக் கூடாது என்று கோடு கிழித்துவிட்டு உங்களைத் தேடி வந்தேனே நான்? அதுமட்டும் எப்படிச் சரியாகும்? உங்களுக்கு மானால் எந்தப் பிரச்னையும் ஏற்பட வாய்ப்பில்லை என்று நான் அறிந்திருந்தேன் அல்லவா? அப்படியிருக்க அண்ணி என்ன சொன்னாலும் நான் அங்கேயே மேலும் சற்று நேரம் பொறுமையோடு தங்கியிருந்தால் ராவணன் வந்திருக்கவும் மாட்டான். அதற்குள் நீங்களும் வந்திருப்பீர்கள்.

அண்ணி கோட்டைத் தாண்டி வந்தது எதன் பொருட்டாக? ஆபத்து வரும் என்று தெரிந்தா? இல்லையே? முனிவன் வேடத்தில் வந்தவனை முனிவன் என்றே நம்பியதால் அவனுக்கு பிட்சை அளிக்கத்தானே வந்தார்?

அண்ணியின் உயர்ந்த தர்ம சிந்தனை, நான் கிழித்த கோட்டையும் தாண்டச் செய்துவிட்டது என்றால் அதுகுறித்து நாம் பெருமை கொள்ள வேண்டுமே அல்லாது அண்ணி தவறு செய்தார் என்று சொல்வது என்ன நியாயம்? மான் வேடத்தில் வந்த அரக்கனை உங்களால் முன்கூட்டியே உணர இயலாதபோது, முனிவன் வேடத்தில் வந்த அரக்கனை மட்டும் அண்ணி எப்படி அரக்கன் என உணர இயலும்? தற்செயலாக நிகழ்ந்த விபரீதங்களுக்கு அண்ணி மேல் பழிபோட்டு அண்ணி தவறு செய்ததாகச் சொல்வது நியாயமல்ல அண்ணா!`

இப்போது ராமன் மௌனம் காத்தான். பின் மெல்லச் சொன்னான்:

`லட்சுமணா! உன் அண்ணி மட்டுமா தண்டனை அடைந்திருக்கிறாள்? நானும் உன் அண்ணியைப் பிரிந்து பிரிவு என்ற தண்டனையை அடையத்தானே செய்திருக்கிறேன்? துணிவெளுப்பவன் சொன்ன அபவாதத்திற்காக உன் அண்ணியைக் கானகம் அனுப்ப நேர்ந்துவிட்டது. ஆனால் அந்த அபவாதம் தானாய் எழவில்லை. ஓர் அபவாதம் தான் இன்னோர் அபவாதத்தைத் தோற்றுவித்திருக்கிறது. இயற்கை நியதியில் ஒவ்வொரு செயலுக்கும் ஓர் எதிர்ச்செயல் உண்டு!`

லட்சுமணன் ஆச்சரியத்துடன் கேட்டான்:

`எந்த அபவாதம் அண்ணா இந்த அபவாதம் தோன்றக் காரணம்?`

`லட்சுமணா! சீதையை ஜாக்கிரதையாகக் காவலிருந்து பார்த்துக் கொள் என்று உன்னிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுத் தானே நான் மானைத் தேடிப் போனேன்? நீ நான் இட்ட எந்தக் கட்டளையையும் என்றும் பணிய மறுத்ததில்லையே? அப்படியிருக்க அன்று ஏன் என் கட்டளையை மீறினாய்? என் கட்டளையையே மீறுமளவு சீதை உன்னைச் சொல்லால் துன்புறுத்தினாள். உண்டா இல்லையா சொல்.`

இப்போது லட்சுமணன் அமைதி காத்தான்.

`உன் அண்ணா விலகிச் செல்ல வேண்டும் என்பதற்காக இத்தனை நாள் நீ காத்துக் கொண்டிருந்தாயா என்று சீதை உன்னைக் கேட்டது நினைவில்லையா? சீதை மேல் கொண்ட நாட்டத்தின் காரணமாகத்தான் நீ கானகத்திற்கு என்னுடன் வந்தாயா என்று அன்று உன் அண்ணி உன்னைத் தன் சொற்களால் துன்புறுத்தியதை நீ மறந்துவிட்டாயா? அப்படியெல்லாம் அண்ணி உன்னைக் கேட்டதால் தான் நீ என் கட்டளையை மீறி என்னைத் தேடி வந்ததாக நீதானே அன்று சொன்னாய் லட்சும்ணா? நீ உன் அண்ணியைத் தாயாக அல்லவோ நினைக்கிறாய்? இதை சீதையும் அறிவாளே? இல்லாத அபாண்டத்தை அன்று உன்மேல் சுமத்தினாள் உன் அண்ணி. இன்று இல்லாத அபாண்டம் ஒன்று அவள் மேல் துணிவெளுப்பவனால் சுமத்தப் பட்டிருக்கிறது. நம் சொற்கள்

நியாயமாக இல்லாதுபோனால் அவை திரும்பி வந்து நம்மையே தாக்கும் என்பதற்கு இந்தச் சாட்சி போதாதா?`

லட்சுமணன் ஒரு பெருமூச்சோடு சொன்னான்:

`உங்களுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற அளவற்ற கவலையால் விளைந்த பதற்றத்தில் சொல்லப்பட்ட சொற்களுக்குப் பொருள் இல்லை அண்ணா! அவற்றைப் பெரிதுபடுத்துவது சரியல்ல. சம்பந்தப்பட்ட நானே அதைப் பொருட்படுத்தவில்லை. அண்ணி அன்றும் என்றும் என்னை அவரது பாசத்திற்குரிய மகனாகத் தான் நினைக்கிறார். என்னை அண்ணி அவ்வாறு பேசினார் என்பதற்காகவா இத்தனை ஆண்டுகள் கழித்து அவருக்கு இந்தத் தண்டனை வழங்கினீர்கள்?`

`நான் அதற்காகத் தண்டனை வழங்கவில்லை லட்சுமணா! இயற்கை விதி அந்த அபாண்டத்தின் விளைவாய் இன்னோர் அபாண்டத்தை உருவாக்கிவிட்டது. புதிய பழிச்சொல்லால் அண்ணி தண்டனை பெற நேர்ந்துவிட்டது. இதுவே இப்போதைய சூழ்நிலைக்கான என் விளக்கம். உன் அண்ணிக்கு நான் தண்டனை விதித்துள்ளதாக நீ சீறுகிறாய். உண்மையில் எனக்கு நானே விதித்துக் கொண்டுள்ள தண்டனை பற்றி யாரும் உணர மாட்டார்கள். என் அன்பான சீதையைப் பிரிந்து நான் வாழ்கிறேனே? இந்தப் பிரிவை விடக் கொடிய தண்டனை வேறென்ன உண்டு? என் அன்பான மனைவிக்குக் கொடும் தண்டனை விதித்தவன் அல்லவா நான் என்ற ஆழமன உணர்வில் தவித்துத் தத்தளிக்கிறேனே? இது சீதை அடைந்திருக்கும் வனவாசம் என்ற தண்டனையை விடவும் பெரிது என்பதை நீ அறியமாட்டாய் லட்சுமணா!`

`நீங்கள் என்ன சொன்னாலும் என் மனம் சமாதானம் அடையாது! இனி என் அண்ணியில்லாத அயோத்தியில் மகிழ்ச்சிக்கும் குதூகலத்திற்கும் வழியே இல்லை. மக்கள் துயரத்தில் ஆழப் போகிறார்கள்!`

என்ற லட்சுமணன் குதிரைகளின் கனைப்புக் குரல் கேட்டு திடீரென சாளரத்தின் வழியே குதிரை லாயத்தைப் பார்த்தான். பரிதவிப்புடன் தொடர்ந்து சொல்லலானான்:

`அண்ணா! துயரம் அடையப் போகிறவர்கள் மக்கள் மட்டுமல்ல. நான் அண்ணியை எந்தத் தேரில் கொண்டு விட்டு வந்தேனோ அந்தத் தேரில் பூட்டியிருந்த குதிரைகளின் நிலையைச் சற்றுப் பாருங்கள்!`

ராமன் திகைப்புடன் சாளரத்தின் வழியே குதிரை லாயத்தைப் பார்த்தான். சீதாதேவியைக் கானகத்தில் விட்டுவந்த துயரத்தில் அந்தத் தேர்க்குதிரைகளின் விழிகளில் கண்ணீர் ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட ராமன் விழிகளிலும் தொடர்ந்து கண்ணீர் பெருகத் தொடங்கியது.

42

ஜனகர் சொன்ன வழி!

அயோத்தியில் கடும் பஞ்சம். மழை பெய்து பல வருஷங்கள் ஆகிவிட்டன. வயல்களில் நெல் சரியாக விளையவில்லை. மரங்கள் வாடிக் கருகிவிட்டன. மக்கள் வறுமையின் கோரப் பிடிக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். ராம ராஜ்யத்தில் இப்படி நடக்கலாமா? ஏன்? ஏன்?

மக்கள் கூட்டம் கூட்டமாக `ராமா! ராமா! எங்களைக் காப்பாற்று! காப்பாற்று!` என்று குரல் கொடுக்கிறார்கள். அந்தக் கூக்குரல்கள் ராமர் செவிகளில் விழத்தான் செய்கின்றன. ஆனால் ராமர் அமைதியாக இருக்கிறார்.

அயோத்தியின் பஞ்சத்திற்குக் காரணம் என்னவென்று அவருக்கு நன்றாகத் தெரியும். மக்கள் அந்தக் காரணத்தை உணர்ந்தார்களா என்றுதான் தெரியவில்லை.

இதோ அரண்மனை வாயிலில் இப்போதும் கூட மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. கஜானாவில் இருந்த பணம், பொருள், நெல், தானியங்கள் என எல்லாவற்றையும் வாரி வழங்கச் சொல்லிவிட்டார் ராமர். மக்கள் வரிசை வரிசையாக நின்று அவற்றைப் பெற்றுச் செல்கிறார்கள். ராம பிரானை வாழ்த்திச் செல்கிறார்கள்.

அதுசரி. இப்படி கஜானா காலியாகிவிட்டால் அப்புறம் என்ன செய்வது? எப்போது மழை பெய்து எப்போது நாடு சுபிட்சமடையும்? மூட ஜனங்கள். இந்தக் கடும் பஞ்சத்திற்குக் காரணம் என்னவென்று

கொஞ்சமாவது யோசித்தார்களா?

ஒருவன் செய்த தப்பு ஊரார்மேல் விடிந்திருக்கிறது. அன்று துணிவெளுக்கும் ஒருவன், மனம் வெளுக்காத மூடன் சீதாதேவியைப் பற்றி அபவாதம் சொன்னான். பிறகு சொன்னதன் பொருட்டு அவனே வருந்தினாலும் சொன்னது சொன்னது தானே? வாயை விட்டு வெளிவந்த வார்த்தைகளை மீண்டும் விழுங்கவா முடியும்?

அரச நீதி என்று ஒன்று இருக்கிறதே? மன்னனும் ராணியும் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்று தர்ம சாஸ்திரங்கள் சொல்கிறதே? பாழாய்ப் போன அரச நீதி. அதை எப்போது யார் கொளுத்துவது?

ராமரிடமிருந்து தாங்க இயலாத விம்மலுடன் ஒரு பெருமூச்சு எழுந்தது. `சீதாதேவியைக் கானகத்தில் விட்டு வா!` என்று சொன்ன போது சுலபத்தில் லட்சுமணன் ஒப்புக் கொள்ளவில்லை. `என் தாயாரல்லவா அவர்? அவரையா நான் கானகத்தில் விடுவேன்? அதுவும் கர்ப்பவதியாக இருக்கும் என் அண்ணியையா?` துடிதுடித்தான்.

ஆனால் `சீதையைக் காட்டுக்கு அனுப்புவது அரச நீதி. நீ கொண்டுபோய்க் காட்டில் விட்டு வரவேண்டும் என்பது அரச கட்டளை. அரச கட்டளையை மீறும் துணிச்சல் உண்டா உனக்கு?` என்று ராமன் கண்கலங்க உறுமிய போது லட்சுமணன் வேறு வழியின்றி அதற்குப் பணிய வேண்டியதாயிற்று.

சீதை காட்டில் கொண்டு விடப்பட்டாள். என்ன கொடுமை! என்ன கொடுமை! ஆகாயத்தில் மேகங்கள் அந்தக் கொடிய காட்சியைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தன. தங்களைப் போல் அடர்ந்த கருங்கூந்தல் கொண்ட மாதரசி. அன்பே வடிவான உத்தமி. ஒருமுறை அக்கினிப் பிரவேசம் செய்தவள் மறுமுறையும் அபவாதத்திற்கு ஆட்படுவதா? அயோத்திக் குடிமகன் ஒருவன் மகா பதிவிரதையான சீதையைப் பற்றியும் அபவாதம் சொல்லத் துணிந்தானா? அன்று மேகங்கள் ஒன்று கூடி முடிவெடுத்திருக்க வேண்டும், இனி அயோத்தியில் மழை பெய்ய மாட்டோம் என்று.

சீதாதேவி லட்சுமி அல்லவா? லட்சுமி நாட்டைவிட்டுப் போனால் பின்னர் நாட்டில் எங்கே லட்சுமீகரம் இருக்கும்? லட்சுமியின் அக்கா தான் அட்டகாசமான சிரிப்புடன் எல்லா வீடுகளிலும் குடியேறினாள்.

வீடுகளில் அடுப்பில் பூனை தூங்குகிறது. புல்லையும் மரத்தின் காய்ந்த சருகுகளையும் சாப்பிட்டுப் பசியாற முடியுமா என்று மக்கள் முயல்கின்றனர். குழந்தைகள் பாலின்றித் தவிக்கின்றனர். விளை நிலங்கள் பாளம் பாளமாய் வெடித்திருக்கின்றன. பற்பலர் வேறு

நாடுகளுக்குக் குடிபெயர்ந்து விட்டார்கள்.

வசிஷ்டர் ஒருநாள் ராஜசபையைக் கூட்டினார். அவசரக் கூட்டம் அது. ராமரிடம் அவர் வேண்டுகோள் வைத்தார்.

`ராமா! இதென்ன கொடுமை! நாட்டு மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடுகிறார்களே? இதைப் பார்த்துக்கொண்டு நாம் சும்மா இருக்கலாமா? நாம் இந்தப் பஞ்சத்தைப் போக்க ஏதேனும் செய்ய வேண்டும்!`

`என்ன செய்யலாம்? சொல்லுங்கள் குலகுருவே! தாங்கள் தானே நான் செய்ய வேண்டிய செயல்கள் குறித்து அறிவுறுத்த வேண்டும்? எது சொன்னாலும் நிறைவேற்றச் சித்தமாக இருக்கிறேன்!` ராமர் பணிவோடு தெரிவித்தார்.

`மகாராணி சீதாதேவி வந்துவிட்டால் பஞ்சமும் பட்டினியும் உடனே நீங்கிவிடும். நாம் நம் அரண்மனைக்கு வந்த மருமகளைக் காட்டில் அநாதரவாக விட்டுவிட்டோம். இந்த அதர்மத்திற்குத் தான் நாடு பழிவாங்கப் படுகிறதோ என்று எனக்குக் கவலை எழுகிறது. மகாராணியைத் தேடிப் பிடித்துத் திரும்ப அழைத்துவர உத்தரவிட வேண்டும்!`

ராமர் பெருமூச்செறிந்தார்.

`நாம் ஒன்றைச் சிந்தித்துச் செய்ய வேண்டும். செய்த பின் அதில் மறுசிந்தனை கூடாது. இதைத் தாங்கள் தான் எனக்குக் கற்பித்தீர்கள். ரகுவம்சத்தின் பெருமையைக் காப்பாற்ற நான் அரச நீதியை நிலை நாட்டும் பொருட்டு என் மனைவியைக் காட்டிற்கு அனுப்பிவிட்டேன். இனி அவளைத் திரும்ப அழைப்பது என்ற பேச்சிற்கே இடமில்லை. அதைத் தவிர, பஞ்சத்தைப் போக்க வேறு ஏதேனும் உபாயம் இருந்தால் சொல்லுங்கள்.`

குருவை மறுத்துப் பேசாத ராமன் விரக்தியின் விளிம்பில் இப்போது குருவையும் மறுத்துப் பேசத் தொடங்கினான். வசிஷ்டர் அமைதியானார். பின் மெல்லச் சொன்னார்:

`ராமா! நாம் அஸ்வமேத யாகம் நடத்திப் பார்க்கலாம். அது ஒரு நல்ல வழி. அஸ்வமேத யாகம் நிகழ்த்தினால் மழைபெய்து நாட்டில் சுபிட்சம் நிலவும் என்று சாஸ்திரங்கள் அறுதியிட்டுச் சொல்கின்றன.`

`அப்படியானால் அஸ்வமேத யாகம் நடத்த ஏற்பாடு செய்யுங்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை. உடனேயே பணிகளை ஆரம்பித்துவிடுங்கள். இனியும் காலம் கடத்த வேண்டாம்!`

`அவ்விதமெனில் அஸ்வமேத யாகம் உள்ளிட்ட அத்தனை யாகங்களையும் எவ்விதம் செய்வது என்பததில் கரைகண்ட நிபுணர்

ஒருவர் இருக்கிறார். அவரை நாம் அழைத்து ஆலோசனை கேட்க வேண்டும்.`

`அழையுங்கள். அதில் என்ன தயக்கம்? யார் அவர், யாக விதிகளில் கரைகண்ட நிபுணர்? அழைத்தவுடன் வருவாரா?`

`கட்டாயம் வருவார். நமக்கு வேண்டியவர் தான் அவர். நம்மோடு சம்பந்தப் பட்டவர்.`

`சம்பந்தப்பட்டவரா?`

`ஆம். சம்பந்தத்தால் சம்பந்தப் பட்டவர். சீதாதேவியின் தகப்பனாரும் உனது மாமனாருமான ஜனகர்.`

ராமன் மனம் துணுக்குற்றது. ஜனகரையா அழைப்பது? அவரது மகளைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு, அதன் மூலம் பெரும் சோகத்தை அவருக்குத் தந்துவிட்டு, இப்போது அவரையே அயோத்திக்கு அழைப்பதா?

`என்ன யோசனை ராமா? அவர் ராஜரிஷி. பற்றுகளைத் துறந்தவர். சீதாதேவி கானகம் போனது தெரிந்தும் அமைதி காப்பவர். தன் பெண் குறித்துத் தனது மாப்பிள்ளை எடுக்கும் எந்த முடிவிலும் குறுக்கிட விரும்பாதவர். அவர்தான் அஸ்வமேத யாகத்தை நியம நிஷ்டை தவறாமல் நிகழ்த்துவது எப்படி என்று கற்பிக்க முடியும். அவரது அறிவுரையின் பேரில் யாகம் நிகழ்த்துவதே சரியானது.`

சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்த ராமர் பின்னர் ஒரு பெருமூச்சோடு சொன்னார்.

`சரி. உங்கள் சித்தப்படியே செய்யுங்கள்.`

ராமர் அரசவையைக் கலையச் சொல்லி உத்தரவிட்டு விட்டு தனிமையைத் தேடிப் போனார். தனிமை தனிமை தனிமை. இப்போது கொஞ்ச காலமாய் ராமர் தனிமையில் தான் காலம் கழிக்கிறார். அவரது நீண்ட நீல நயனங்கள் சீதையைப் பிரிந்த துயரில் எப்போதும் கண்ணீரில் பளபளக்கின்றன.

அயோத்தியிலிருந்து கொண்டுவரப் பட்ட ஓலையை ஜனகர் பிரித்துப் படித்தபோது அவரது மனைவி சுனயனா பக்கத்தில் தான் இருந்தாள்.

`என் கண்மணி சீதை காட்டில் எங்கிருக்கிறாள் என்றே தெரியவில்லை. அப்படிக் கொடுமை செய்துவிட்டு, இப்போது பாவப் பிராயச்சித்தம் போல் அஸ்வமேத யாகமா? இதற்கு சீதையின் தந்தையான உங்களுக்கு வேறு அழைப்பு வருகிறது. நல்ல நாடகம் இது.`

ஜனகர் எப்போதும் பாலேடாய்த் தன் முகத்தில் மிதக்கும்

புன்னகையோடு மெல்லிய குரலில் பதில் சொன்னார்:

`பதற்றத்தில் வார்த்தைகளைக் கொட்டாதே சுனயனா! சீதையைக் காட்டில் கொண்டுவிட்ட ராமன் நம்மை விட அதிகமாய்த் துடிதுடித்துக் கொண்டிருக்கிறான் என்பதை நீ அறியவில்லை.`

`நான் ஏன் அறிய வேண்டும்? எனக்கு அறியத் தேவையில்லை. என் கண்மணி சீதைக்கு இத்தனை பெரிய அநியாயம் செய்துவிட்டு இப்போது எதற்கு இந்த அஸ்வமேத யாகமோ?`

ஜனகர் மறுபடி தன் மனைவியைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

`அரச நீதியைப் பற்றி அரசிகள் அறிய வாய்ப்பில்லை. அது போகட்டும். அஸ்வமேத யாகத்தை நிகழ்த்திவைக்க எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. நான் அயோத்தி செல்கிறேன். விருப்பமிருந்தால் நீயும் வரலாம்.`

`நான் வரவில்லை என்று எங்கே சொன்னேன்? மகளைப் பிரிந்து வாடுகிறேனே, அந்த வாட்டத்தில் ஏதேதோ சொன்னேன். அவ்வளவு தான். மகளைப் பார்க்க முடியவில்லை என்றாலும் என் மாப்பிள்ளையையாவது பார்த்து ஆறுதல் அடைகிறேன். என் மாப்பிள்ளை ஸ்ரீராமரின் முகத்தைப் பார்த்தால் எல்லா மனத் துயரும் விலகுகிறது என்று தான் எல்லோரும் எப்போதும் சொல்கிறார்கள். என் துயரம் சற்றேனும் குறைகிறதா பார்க்கிறேன்.`

`அப்படிப்பட்ட மாப்பிள்ளை தவறா செய்வார்? யோசித்துப் பார். நீ ஏறு தேரில்.`

புன்னகையுடன் ஜனகர் தேரில் ஏறிக்கொண்டார். `எதனாலும் பாதிக்கப்படாத ராஜரிஷியைத் திருமணம் செய்து கொண்டதாலேயே எனக்கும் அத்தகைய மனநிலை வந்துவிடுமா என்ன?` என்று பெருமூச்சுடன் கேட்டவாறே சுனயனாவும் தேரில் ஏறினாள். தேரோட்டி தேர்க் குதிரைகளைச் சொடுக்கினான். தேர்ச் சக்கரங்கள் கடகடவென உருண்டன. தேர் அயோத்தியை நோக்கிப் பறந்தது.

மீண்டும் அயோத்தியில் ராஜசபை கூடியது. இப்போது புதிதாக ஜனகரும் அந்த சபையில் வீற்றிருந்தார். கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய ராஜ மாதாக்களுடன் ஜனகரின் மனைவி சுனயனாவும் ஓர் ஓரத்தில் இருந்த சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தாள்.

சீதையைப் பிரிந்து வாடும் சீதையின் மூன்று மாமியார்களுக்கும் ஆறுதல் சொல்லிச் சொல்லி சுனயனாவுக்கு வாய் வலித்தது. சீதை இல்லாத அந்த அரண்மனையையும் ராஜசபையையும் பார்த்து அவள் மனம் வலித்தது. ஒரு பெருமூச்சோடு அவள் நடக்கும்

பேச்சுவார்த்தைகளைக் கவனித்தவாறிருந்தாள்.

திடீரென்று துயரம் மேலிடும்போது சுனயனா தன் மாப்பிள்ளை ராமரது திருமுகத்தைப் பார்ப்பாள். அந்த முகத்தில் இருந்த தெய்வீகப் பேரொளி அவள் மனத்தில் ஒரு சாந்தியைத் தோற்றுவிக்கும். உலகமே ஒரு நாடக மேடை, இதோ முன்னரே திட்டமிடப்பட்ட ஒரு நாடகம் அரங்கேறிக் கொண்டிருக்கிறது என்று அவள் உள்ளுணர்வுக்குத் தோன்றும்.

ஆனால் மறுபடி அவள் மனத்தைத் துயரம் சூழ்ந்துகொள்ளும். தன் கணவர் ஜனகர் முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவள் மனத்தில் ஒரு பொறாமை தோன்றும். எப்படி இப்படி எதனாலும் பாதிக்கப்படாமல் இவரால் இருக்கமுடிகிறது? ராஜரிஷியால் முடிகிறது. ஆனால் ராஜரிஷியின் பத்தினியால் முடியவில்லையே? அவள் பெருமூச்சு விட்டுக் கொள்வாள்.

அப்போதுதான் வசிஷ்டர் ராமர் முன்னிலையிலும் ஏன் எல்லோர் முன்னிலையிலும் மெல்லத் தன் ஐயத்தைக் கேட்க ஆரம்பித்தார்:

`ஜனகரே! ஸ்ரீராமர் அஸ்வமேத யாகம் செய்ய எந்தத் தடையும் இல்லையே? அதை முதலில் தெளிவுபடுத்துங்கள்!`

எந்தத் தடையும் இல்லை என ஜனகர் சொல்வார் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஜனகர் தயக்கமேதும் இல்லாமல் கம்பீரமாகத் தெரிவித்தார்.

`மிகப் பெரிய தடை ஒன்று இருக்கிறது வசிஷ்ட முனிவரே! அந்தத் தடையை நீக்கினால் அன்றி அஸ்வமேத யாகம் நிகழ்த்த இயலாது.`

சபை சுறுசுறுப்படைந்து காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டது.

`அது என்ன தடை என்று நான் அறியலாமா?` வசிஷ்டர் மேலும் கேட்டார். ஜனகர் தொடர்ந்து பேசலானார்.

`அஸ்வமேத யாகம் செய்பவர் தன் மனைவியோடு தான் அந்த யாகத்தைச் செய்யவேண்டும் என்பதே சாஸ்திரங்களின் அடிப்படை விதி. இந்த விதி நிறைவேறாவிட்டால் யாகம் செய்தாலும் யாகத்திற்கான பலன் கிடைக்காது!`

இப்போது ஜனகரின் மனைவி சுனயனா பரபரப்போடு அந்த உரையாடலைக் கவனிக்கலானாள். சீதை மறுபடி அழைக்கப்பட வாய்ப்பிருக்கிறதா? சீதை எங்கிருக்கிறாள் என்று கண்டறிய ஆட்களை அனுப்புவார்களா? தெய்வமே!

வசிஷ்டர் சொல்லத் தொடங்கினார்.

`ஆனால் ராமர் தன் மனைவியை மீண்டும் அழைத்துக் கொள்வதாக இல்லை. அது ஏற்கெனவே செய்யப்பட்ட முடிவு. அந்த முடிவில் எந்த மாற்றமும் எப்போதும் இல்லை என்று அவர் உறுதியாகத் தெளிவுபடச் சொல்லிவிட்டார். இப்போது என்ன செய்வது?`

ஜனகர் புன்முறுவல் மாறாத சாந்தியுடன் சொன்னார்:

`என்னைக் கேட்டால்? யாகத்தின் விதியைச் சொல்வது என் பொறுப்பு. வழிகாண்பது உங்கள் கடமை.`

`அப்படியானால் மனைவி கட்டாயம் தேவை என்கிறபோது ஒரு புதிய மனைவியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். ஏனெனில் அஸ்வமேத யாகம் முக்கியமானது. அயோத்தியின் பஞ்சம் தீர அது ஒன்றே வழி.` என்றார் வசிஷ்டர்.

ஜனகர் மெல்லச் சொன்னார்.

`அவ்விதம் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு மனைவியாக்கிக்கொள்வது ரகுவம்சத்தில் இல்லாத வழக்கமும் அல்ல. குழந்தைப் பேற்றின் பொருட்டு ராமரின் தந்தையான சக்கரவர்த்தி தசரதர் மூன்று திருமணம் செய்துகொண்டார். அப்படியிருக்க அஸ்வமேத யாகத்தின் பொருட்டு ராமர் இன்னொரு திருமணம் செய்துகொள்வது இயல்பானது தான்.`

சுனயனா உள்ளிட்ட எல்லோரும் ராமரது முகத்தைப் பார்த்தார்கள்.

அந்த முகம் கற்சிலை போல் இருந்தது. சற்றுநேரத்திற்குப் பின்னர் ராமர் சொன்னார்:

`என் மனத்திலும் வாழ்விலும் சீதையைத் தவிர வேறு பெண்ணுக்கு என்றும் இடமில்லை. அவள் ஒருத்தி மட்டுமே என் மனைவி. அவள் இடத்தை நிரப்ப யாராலும் ஆகாது. ஆனால் அஸ்வமேத யாகம் நிகழ வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். ஏனெனில் மக்களின் பஞ்சம் தீர்ந்து அவர்கள் மகிழ்ச்சியாக வாழவேண்டும். இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதை விட்டுவிட்டு சாஸ்திரப்படி வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று ஆராய்ந்து பாருங்கள்!`

ராமர் இதைச் சொன்னவுடன் ஜனகர் தன் மனைவி சுனயனாவைக் குறிப்பாகப் பார்த்தார்.

சுனயனா மகிழ்ச்சிப் பெருக்குடன் தன் விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

சற்றுநேரம் அமைதி காத்த ஜனகர் பின்னர் மெல்லச் சொல்லலானார்:

`அப்படி மனைவி யாகத்தில் பங்கேற்க இயலாத சந்தர்ப்பங்களில் மனைவியைப் போன்ற ஒரு பொற்பதுமையைச் செய்து மனைவிக்குப் பதிலாகப் பக்கத்தில் இருத்திக்கொண்டு யாகம் நிகழ்த்தலாம் என்று சாத்திரங்கள் விதிவிலக்கும் சொல்கின்றன. விதியை அனுசரிக்க முடியாவிட்டால் விதி விலக்கை அனுசரிக்கலாம்.`

ராமர் சடாரெனக் குறுக்கிட்டுச் சொன்னார்:

`அப்படியானால் என் சீதாதேவியைப் போன்ற பொற்பதுமையைச் செய்வதற்குப் பொற்கொல்லர்களுக்கு உத்தரவிடுங்கள். காலம் கடத்தவேண்டாம். யாகம் விரைவில் நிகழ்வது நல்லது!`

இதைச் சொன்ன ராமர், திடீரெனக் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தவாறே மேலும் சொன்னார்:

`ஆனால் ஒன்று. பொன்னால் செய்யப்பட்ட பதுமை கூட என் சீதாதேவி அளவு ஒளி வீச இயலாது! இனி ராஜசபை கலையலாம்.`

ஒரு விம்மலுடன் ராமர் சபையை விட்டு எழுந்து தனிமையை நாடிச் சென்றார்.

ராஜசபை மௌனம் காத்தது. ஜனகர் தன் மனைவி சுனயனாவைப் பெருமிதத்தோடு பார்த்தார்.

சுனயனா தன் சேலைத் தலைப்பால் பொங்கிவந்த விம்மலை அடக்க முயன்றாள்.

அந்த விம்மலில் தன் மாப்பிள்ளையைப் பற்றிய மன நிறைவும் கலந்தே இருந்தது.

43

சாமரம் நடுங்கியது!

அன்று அயோத்தியின் ராஜசபையில் ராமனும் லட்சுமணனும் மட்டுமே தனித்திருந்தார்கள். ராமன் மகுடம் சூடி ராஜாராமனாக ஆட்சிசெய்து வந்த காலம். சீதை மண்ணில் புகுந்து மறைந்த துயரிலிருந்து அயோத்தி மெல்ல மெல்ல மீண்டுகொண்டிருந்தது. லவகுசர்கள் இளவரசுப் பட்டத்தோடு நடமாடி வந்தார்கள்.

வழக்கம்போல் அன்றும் ராமனுக்குக் கவரி வீசிக் கொண்டிருந்தான் லட்சுமணன். சாமரம் வீசும் சேவையை அவன் தானே எப்போதும் ராமனுக்குச் செய்துவருகிறான்!

உள்ளம் முழுவதையும் தனக்கே கொடுத்து தன் நினைவாகவே வாழ்ந்துவரும் லட்சுமணனைப் பாசம் பொங்கப் பார்த்தான் ராமபிரான். தன் சேவைக்காகவே வாழ்வை அர்ப்பணித்து சுகங்களையெல்லாம் தியாகம் செய்து வாழும் இவனைப் போன்ற தம்பி எத்தனை பேருக்குக் கிடைப்பான்!

`தம்பியுடையான் படைக்கஞ்சான்!` என்பது மெய்தான். இத்தகைய தம்பி இருக்கும் தைரியத்தால் அல்லவா இலங்கை மீது போரிடத் துணிந்தேன். இந்திரனையே வென்றவன் இந்திரஜித். அந்த இந்திரஜித்தையே வென்ற ஒப்பில்லாத தம்பி அல்லவா இவன்! சீதையும் மண்ணில் புகுந்து சொர்க்கம் போனபின் இப்போது எனக்கு எஞ் சியிருப்பவர்களில் முக்கியமான துணை இவன் தான் அல்லவா? ராமன் மனம் அன்பின் நெகிழ்ச்சியில் கனிந்தது. தன்னையே பாசம் பொங்கப் பார்த்த

ராமனிடம் லட்சுமணன் நகைத்தவாறே கேட்டான்:

`ஏன் அண்ணா என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?`

`தெரியவில்லை லட்சுமணா! உன்னைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல் தோன்றுகிறது இன்று!`

அப்படித் தோன்றுவதன் பின்னணியில் விதி நகைக்கிறது என்பதை ராமனும் அறியவில்லை. லட்சுமணனும் அறியவில்லை. சிரித்தவாறே ராமபிரானுக்குத் தொடர்ந்து கவரி வீசலானான் லட்சுமணன்.

`உன் கைகள் வலிக்கும் லட்சுமணா! சாமரம் வீசுவதிலிருந்து சற்றுநேரம் ஓய்வெடுத்துக் கொள்!`

பரிவோடு சொன்னான் ராமன். லட்சுமணன் சிரித்துக்கொண்டான். சாமரம் வீசுவதிலிருந்து தற்காலிகமாக அல்ல, நிரந்தரமாகவே அவனுக்கு ஓய்வு கிட்டப்போவதை எண்ணி அந்தச் சாமரம் நடுக்கத்துடன் சிலிர்த்துக் கொண்டது.

அதே நேரம் அரண்மனை வாயிலில் பார்ப்போர் நெஞ்சை அள்ளிச் சாப்பிட்டுவிடும் அசாத்தியமான வனப்போடு வந்து நின்றார் ஒரு முனிவர். அந்த முனிவரை வியப்புடன் பார்த்தார்கள் காவலர்கள்.

பல்லாண்டுகளாக நடந்துவரும் ராமராஜ்யத்தில் ராமபிரானைச் சந்திக்க எத்தனையோ முனிவர்கள் வருவதுண்டு. முனிவர்களை விசேஷ மரியாதையோடு நடத்தவேண்டும் என்றும் அவர்கள் தெய்வங்களின் பிரதிநிதிகள் என்றும் ராமன் நிரந்தர உத்தரவிட்டிருக்கிறான்.

ஆனால் இப்போது வந்திருக்கும் முனிவருக்கு இணையான ஒளிவீசும் பொலிவோடு யாரும் இதுவரை வந்ததில்லை. மலைபோல் உயர்ந்து நிற்கும் அயோத்தியின் அரண்மனை வாயில்முன், ஏற்றிவைத்த தீபம் போல் பளபளவெனப் பிரகாசத்துடன் நின்றுகொண்டிருந்தார் அவர்.

நரைத்த தாடி. முப்புரிநூல் அணிந்த மார்பு. தழைந்த கேசம். ஒரு முனிவர் என்றால் என்னென்ன இலக்கணம் சொல்லப்படுமோ அவையனைத்தும் அவரிடம் பொருந்தியிருந்தன. அயோத்தியின் சபையை அலங்கரிக்கும் தவசிரேஷ்டரான வசிஷ்ட முனிவரே கூடக் கையெடுத்துக் கும்பிடக் கூடிய பொன்னொளிரும் தோற்றம்.

இடையில் கச்சணிந்து கையில் நீண்ட பிரம்புடன் அரண்மனை வாயிலைக் காத்துவந்த காவலர்கள் மிகுந்த பணிவோடு முனிவரிடம் `என்ன வேண்டும்?` என வினவினார்கள். அவரது ஜொலிக்கும் தவ ஒளி அவர்களைச் சற்றுக் கூடுதலாகப் பணிய வைத்தது.

முனிவர் நகைத்துக் கொண்டார். முனிவரா நகைத்தார்? அல்ல,

காலம் நகைத்தது. விதி நகைத்தது. `ராமனைப் பார்க்க வேண்டும் நான்!` என்றார் அவர். வான்வெளியில் கூடியிருந்த தேவர்கள் வியப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ராமனைப் பார்க்க வேண்டும் என்று சொன்னாலும் முதலில் லட்சுமணனைத்தான் குறிவைக்கப் போகிறார் அவர் என்பதை அவர்கள் அறிவார்கள். இந்திரன் இந்திராணியைப் பார்த்தான். இந்திராணி தங்க விமானம் தயாராய் இருக்கிறதா என்று பார்த்தாள். அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து முறுவல் பூத்துக் கொண்டார்கள்.

காவலர்கள் ஓடோடிச் சென்று அற்புதமான எழிலோடு ஒரு தவ முனிவர் அரண்மனை வாயிலில் வந்திருப்பதை ராமபிரானுக்கு அறிவித்தார்கள்.

`உடனே வரச்சொல்லுங்கள் அவரை. ஒருகணம் கூடத் தாமதிக்க வேண்டாம்!`

இவ்விதம் சொல்லியவாறே வந்திருப்பவர் யாராயிருக்கலாம் எனப் பரபரப்போடு எழுந்தான் ராமன். அந்த முனிவரும் தன் செயலை ஒரு கணம் கூடத் தாமதிக்காமல் நிகழ்த்துபவர் தான். யாருக்கு எந்தக் கணம் என்பதை முன்கூட்டியே முடிவு செய்பவரும் அவர்தானே?

முனிவர் அநாயாசமான கம்பீரத்துடன் அரண்மனை உள்ளே நுழைந்தார். அரண்மனையில் ஏற்றப்பட்டிருந்த மங்கல தீபங்கள் சற்றே ஒளிமங்கின. அவரது பிரகாசத்தால் அவை மங்கிற்றா, இல்லை இது அசுபத்தின் அறிகுறியா? ராமன் மனம் இனந்தெரியாமல் மயங்கியது.

அந்த முனிவரின் மிகக் கூர்மையான பார்வை முதலில் லட்சுமணன் மேல் விழுந்தது. ஒரு கத்தி தன் உடலில் பாய்ந்து தன் உயிரை ஊடுருவுவதுபோல் லட்சுமணன் உடல் திடுக்கிட்டு விம்மியது.

`ராமா! உன்னிடம் அந்தரங்கமாகப் பேச வேண்டும் நான். ஒரு முக்கியச் செய்தி கொண்டுவந்திருக்கிறேன். பிறர் முன்னிலையில் அதைத் தெரிவிப்பது முறையில்லை. நாம் பேசும்போது நடுவே யாரும் வரக் கூடாது. அப்படி வந்தால் அவர் யாராயினும் மரண தண்டனைக்கு உரியவர். இந்த நிபந்தனைக்கு நீ கட்டுப்பட வேண்டும்!`

கணீரென்ற குரலில் முனிவர் பிரகடனம் செய்ததை ஓர் உத்தரவு போல் ஏற்றான் ராமன்.

`அப்படியே ஆகட்டும். லட்சுமணா! நானும் இவரும் பேசும்போது வேறுயாரும் வராதவாறு ராஜசபை வாயிலில் நீ காவல் காத்துக் கொண்டிரு!`

ராமனின் கட்டளையைச் சிரமேற்கொண்டு லட்சுமணன் அந்த இடத்தை விட்டு விலகினான். ராமன் தனக்கிடும் கடைசிக் கட்டளை அது என்பதையோ, தங்கள் தந்தையான தசரதன் வரம் கொடுத்துச் சிக்கிக் கொண்டதுபோல் ராமபிரானும் இந்த நிபந்தனைக்கு உடன்பட்டுச் சிக்கிக் கொள்ளப் போவதையோ லட்சுமணன் அப்போது அறியவில்லை.

லட்சுமணன் விலகிச் சென்றதும் `சொல்லுங்கள் முனிவர் பெருமானே!` என ராமன் பணிந்துநின்றான்.

`ஸ்ரீராமப்ரபோ. நான் முனிவன் வேடம் தாங்கி வந்துள்ளேன். என்னைக் காலதேவன் என்றும் எமதர்மராஜன் என்றும் உலகோர் அழைப்பார்கள்!`

`ஆ. தாங்களா? மானிடர்களின் இறுதிக்கணம் எது என்று நிர்ணயிக்கும் தங்களை தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன் நான். என்னே என் பாக்கியம்.`

`என்னை தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் அந்த பாக்கியத்தை நீண்ட காலம் அனுபவிக்க இயலாது ராமப்ரபோ! உடலுக்கும் உயிருக்கும் இடையே நிலவும் பாசத்தை என் பாசக் கயிறு அறுத்துவிடும். விண்ணுலகம் ஏகும் காலம் வந்தால் தான் நான் வருவேன் என்பதை நீ அறிவாய் அல்லவா? பிரமன் தான் என்னை இங்கு அனுப்பினான். நீ சொர்க்கத்தில் உறையும் கடவுள் திருமால் அல்லவா? ராவணனை வதம் செய்யும் அவதார நோக்கம் நிறைவேறிவிட்டது. நீண்ட நாள் அரசாண்டுவிட்டாய். இனி சகோதரர்கள் ஒவ்வொருவராக சொர்க்கம் திரும்ப வேண்டியதுதான்.`

ராமன் மனத்தில் தான் திருமாலே என்ற உணர்வு எழுந்தது. மானிட அவதாரத்திற்கு ஒரு காலக்கெடு உண்டு என்பதையும் ராமன் மனம் உணர்ந்தது. எமதர்மன் மேலும் பேசலானான்:

`லட்சுமிதேவி உனக்காக பாற்கடலில் காத்துக் கொண்டிருக்கிறாள். உன்னை மீண்டும் காண்பதற்காக செந்தாமரை மலரில் அமர்ந்து தவம் செய்துகொண்டிருக்கிறாள். நீ விண்ணுலகம் வந்து பாற்கடலில் பள்ளி கொள்ள வேண்டும். அதற்குப் படுக்கையை முதலில் தயார் செய்தாக வேண்டும். ஆதிசேஷன் என்கிற பாம்பணை அல்லவா உன் படுக்கை. அந்தப் படுக்கை தானே இப்போது லட்சுமணனாய் வெளியே காவல் காத்துக் கொண்டிருக்கிறது? லட்சுமணன் முதலில் வரட்டும். பின்னர் அடுத்தடுத்து நீங்கள் மூவரும் வரலாம்!`

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருந்தபோது வெளியே ஒரு விபரீதம் நிகழ்ந்து கொண்டிருப்பதை ராமன் அறியவில்லை.

காவலர்கள் ஓடோடி வந்து ராஜசபை வாயிலில் காவல் காத்துக்கொண்டிருந்த லட்சுமணனைப் பணிந்தார்கள். மேலும் ஒரு தவமுனிவர் அரண்மனை வாயிலில் வந்திருக்கிறார் என்றும் தன்னை துர்வாசர் என்று அவர் சொல்லிக் கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

இப்படி அவர்கள் தெரிவிப்பதற்குள் விறுவிறுவென்று நடந்து அரண்மனை வாயிலிலிருந்து ராஜசபை வாயிலுக்கே வந்துவிட்டார் துர்வாசர். அவர் விழிகள் இரண்டும் கோவைப்பழமாய்ச் சிவந்திருந்தன.

லட்சுமணன் துர்வாசரைப் பற்றி நன்கு அறிவான். கடும் தபஸ்வி. அவர் எந்தச் சாபம் கொடுத்தாலும் உடனே பலிக்கும். அது மட்டுமல்ல. அவர் எந்தச் சாபம் கொடுக்கவும் தயங்கமாட்டார்.

ராமன் தம்பியரில் தனக்குக் கோபம் அதிகம் என்பது மெய்தான். ஆனால் முனிவர்களிலேயே அதிகக் கோபம் நிறைந்தவர்கள் விஸ்வாமித்திரரும் துர்வாசரும் தானே?

அன்றொருநாள் ராமலட்சுமணர்கள் இளம் பாலகர்களாய் இருந்த போது விஸ்வாமித்திர முனிவர் வந்து அவர்களைக் காட்டுக்கு அழைத்துச் சென்றார். இதோ இப்போது துர்வாசர் வந்திருக்கிறாரே? இவர் யாரை எங்கே எந்தக் காட்டுக்கு அனுப்பப் போகிறாரோ? லட்சுமணன் மிகுந்த எச்சரிக்கையுடனும் கூடுதலான பணிவுடனும் கேட்டான்.

`என்ன வேண்டும் பிரபோ? சொல்லுங்கள். எதுவேண்டுமானாலும் நான் செய்கிறேன்.`

`நான் உடனடியாக ஒருகணம் கூடத் தாமதிக்காமல் ராமனைச் சந்திக்க வேண்டும்! என் வருகை பற்றி ராமனிடம் உடனே தெரிவி!`

லட்சுமணன் மனம் திடுக்கிட்டது. என்ன இக்கட்டு இது! இப்போது ராமன் முன் யார் போய் நின்றாலும் அவர்கள் மரண தண்டனை பெறுவது நிச்சயம். இவர் வந்திருக்கிறார் என்பதை ராமனிடம் இப்போது எப்படிச் சொல்ல முடியும்? நான் கூட உள்ளே செல்ல இயலாத நிபந்தனை அல்லவா அது! உள்ளே ராமனுடன் உரையாடிக் கொண்டிருக்கும் அந்த அழகிய முனிவர் விதித்த விந்தையான நிபந்தனை! எப்படி இந்த இக்கட்டிலிருந்து தப்பிப்பது?

`துர்வாச மகாமுனிவரே! முனிவர்களுக்குள் தலையாயவரே! தேவர்களும் தொழும் பேராற்றல் படைத்த பெருமானே! சொல்லுங்கள். தங்களுக்கு என்ன வேண்டுமானாலும் நானே நிறைவேற்றித் தருகிறேன். உள்ளே ஒரு முனிவர் ஏற்கெனவே வந்திருக்கிறார். சற்றுப் பொறுங்கள். அவர் சென்றபின் தாங்கள் செல்லலாம்.`

`அடேய் லட்சுமணா!` துர்வாசர் கர்ஜித்தார். அவரது சிவந்த விழிகளிலிருந்து நெருப்புப் பொறி பறக்கும் போல் தோன்றியது.

`நான் உடனே இந்தக் கணமே ராமனைப் பார்க்க வேண்டும். நான் வந்திருப்பதை நீ உடனடியாக ராமனிடம் போய்ச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லவில்லை என்றால் இந்த அயோத்தி முழுவதையும் அழியுமாறு சபிப்பேன். இது நிச்சயம்! சொல் சீக்கிரம்! நீ ராமனிடம் போய் என் வருகை பற்றிச் சொல்கிறாயா? அல்லது அயோத்தி அழியுமாறு நான் சபிக்கவா?`

லட்சுமணன் மனம் திகைப்பில் ஆழ்ந்தது. என்ன நடந்துவிட்டது என்று இவ்வளவு சீற்றம் கொள்கிறார் இவர்? இவர் உள்ளே போய் ராமனைப் பார்ப்பதற்கும் அயோத்தி அழிவதற்கும் என்ன சம்பந்தம்? ஏன் இத்தகைய கடும்மொழிகளைப் பிரயோகிக்கிறார்? ஏதேனும் முன்கூட்டிய திட்டத்தோடு தான் வந்திருக்கிறாரா? இவரை எப்படிச் சமாதானப் படுத்துவது? கொஞ்சம் தாமதப் படுத்தினால் உள்ளே பேசிக்கொண்டிருக்கும் முனிவர் வெளியே வந்துவிடுவார் என்று பார்த்தால் அதற்குரிய அறிகுறியே காணோமே? என்ன செய்வது இப்போது? காலம் கடந்துகொண்டிருக்கிறதே?

லட்சுமணன் உடல் கிடுகிடுவென நடுங்கியது. அயோத்தி அழிவதை எப்படி சகிக்கமுடியும்? தனி மனிதரை விட நாடல்லவா முக்கியம்? இந்த முனிவர் சொன்னால் சொன்னபடி சபித்துவிடுவாரே! துர்வாசர் சாபம் பலிக்காமல் விடாதே? தான் அழிந்தாலும் பரவாயில்லை. அயோத்தி காப்பாற்றப்பட வேண்டும். அதுவே முக்கியம். பிறந்த பொன்னாடு என் உயிரை விடச் சிறந்தது. உடனே லட்சுமணன் முடிவெடுத்தான்.

`ஒரே ஒரு கணம் பொறுங்கள் பிரபோ. இதோ என் அண்ணாவிடம் சென்று தாங்கள் வருகை புரிந்திருப்பதை அறிவிப்பேன்!`

லட்சுமணன் ஓடோடி உள்ளே சென்றான். அவன் தன்னிடம் ஓடி வருவதைப் பார்த்து விதியின் திட்டத்தை உணர்ந்த அந்த விந்தையான முனிவர் நகைத்தார்.

ஏன் உள்ளே வந்தாய் லட்சுமணா?` பரிதவித்த குரலில் ராமன் உருகினான்.

`அத்திரி மகிரிஷியின் புத்திரரான துர்வாசர் வந்திருக்கிறார் அண்ணா. தன் வருகை பற்றி உடனடியாக உங்களிடம் சொல்லவில்லை என்றால் அயோத்தி அழியுமாறு சபிப்பேன் என்கிறார். அயோத்தி என் உயிரினும் மேலானது!`

லட்சுமணன் கூறிவிட்டு விரைந்து வெளியே சென்று துர்வாசரை

உள்ளே அனுப்பினான். அதற்குள் முனிவராய் வந்த எமதர்மராஜன் கடகடவென நகைத்தவாறே விண்ணில் மறைந்தார்.

ராமன் ஒரு பெருமூச்சோடு தன் எண்ணங்களைத் தடுத்தவனாய் துர்வாசரை உபசரித்தான். `என்ன வேண்டும் சுவாமி?` என்று கனிவுபொங்க மரியாதையுடன் விசாரித்தான்.

`நான் ஆயிரம் ஆண்டுக்கு ஒருமுறை உன் அரண்மனையில் உணவருந்துவேன். தசரதர் காலத்தில் இது நடந்துகொண்டிருந்தது. உன் அரண்மனை உணவை நான் சாப்பிட்டு நேற்றோடு ஆயிரம் ஆண்டு பூர்த்தியாகிவிட்டது. எனக்கு உணவு தரச் சொல்.`

`அப்படியே ஆகட்டும் சுவாமி!`

ராமன் உத்தரவின் பேரில் சமையல் கலைஞர்கள் ஓடோடி வந்தனர். மிக விசேஷமான விருந்தை உடனே தயாரித்தனர். பொற்பாத்திரங்களை மட்டுமே பயன்படுத்தி, அடுப்பில் அகில், சந்தனம் ஆகிய உடலுக்குக் குளிர்ச்சிதரும் உயர்தர விறகுகளை மட்டுமே எரித்து அவர்கள் தயாரித்த அறுசுவை அடிசிலின் மணம் சுற்றுப்புறம் அனைத்திலும் கமகமவெனக் கமழ்ந்தது.

துர்வாச முனிவருக்கு ராஜாராமன் தானே தன்கையால் உணவு பரிமாறினான். முனிவர் வயிறார உண்டார். சமையல் கலைஞர்களை வாழ்த்தினார். தன் கட்டளையைத் தட்டாது தன் வருகை பற்றி உடனே ராமனுக்குச் சொன்ன லட்சுமணனின் பதவி மேலும் உயரும் என ஆசீர்வதித்தார். பின் தான் வந்த கடமை முடிந்ததுபோல் பூரண திருப்தியுடன் விடைபெற்றார்.

ராமன் லட்சுமணனை நெகிழ்ச்சியுடன் நோக்கினான். அரச பதவியை விட வைகுண்ட பதவி உயர்ந்ததுதான் அல்லவா? லட்சுமணனைப் பிரிந்து சிறிதுகாலம் நான் வாழத்தான் வேண்டுமா?

லட்சுமணன் திடசித்தம் அவன் கண்ணில் புலப்பட்டது.

`அண்ணா! ரகுவம்சத்தினரின் வாக்கு முக்கியம். நீங்கள் இடையில் யார்வந்தாலும் மரணதண்டனை அளிப்பதாய் ஒப்புக்கொண்டீர்கள். அதை மாற்ற இயலாது. தசரதரைப் பிரிந்து தாங்கள் வாழவில்லையா? என் அண்ணியைப் பிரிந்தும் தாங்கள் வாழத்தானே செய்தீர்கள்? அதுபோல் ஆறுதல் அடையுங்கள்.`

லட்சுமணனின் உறுதிகண்டு மெச்சிய ராமன் அந்த உறுதியால் தனக்கு நேரப்போகும் இழப்பை எண்ணி வருந்தினான். காவலரை அழைத்து வசிஷ்டர் உள்ளிட்ட மந்திரிபிரதானிகளை உடனே வருமாறு அறிவிக்க உத்தரவிட்டான். ராஜசபை அவசரமாகக் கூடியது.

வசிஷ்டரிடம் நடந்த அனைத்தையும் மெல்லிய குரலில் கூறினான் ராமபிரான். முற்றும் துறந்த மாமுனிவரான வசிஷ்டர் சிறிதுநேரம் யோசனையில் ஆழ்ந்து பின் விரக்திச் சிரிப்பொன்றை உதிர்த்தார். பிறகு பெருமூச்சோடு சொல்லலானார்:

`முன்னொரு காலத்தில் ஒருமுறை இதேபோல் துர்வாசர் வந்தார். உன் தந்தை தசரத மன்னன் அவருக்கு வயிறார உணவிட்டான். உணவுண்ட திருப்தியோடு என்ன வேண்டும் என வினவினார் துர்வாசர். பிள்ளைவரம் கேட்டான் தசரதன். புத்திரகாமேஷ்டி யாகம் செய்யுமாறு அறிவுறுத்திய துர்வாசர் நான்கு பிள்ளைகள் பிறக்கும் என்றார். அவர்கள் நெடுநாள் வாழ்வார்கள். என்று நால்வரில் ஒருவன் மறைகிறானோ அதையொட்டி அடுத்தடுத்து விரைவில் எல்லோருமே மறைவார்கள் என்று அப்போதே அவர் கூறினார்!`

இதைச் சொல்லிவிட்டு வசிஷ்டர் சற்றுநேரம் மௌனம் காத்தார். லட்சுமணன் ராமனது கால்களில் விழுந்து பணிந்தான்.

`வசிஷ்ட மாமுனிவர் சொன்னதைக் கேட்டீர்கள் அல்லவா? எனக்கு நிரந்தரமாக விடைகொடுங்கள் அண்ணா!`

கற்சிலைபோல் நின்ற ராமன் பேசாதிருப்பதையே விடைகொடுத்ததாக ஏற்றான் லட்சுமணன். விறுவிறுவென்று அரண்மனையை விட்டு வெளியேறி சரயூ நதியை நோக்கி நடந்தான். அயோத்தி மக்கள் நிகழவிருக்கும் விபரீதத்தை உணர்ந்து கண்ணீர் வடித்தவாறே லட்சுமணனைத் தொடர்ந்தனர்.

திரும்பிப் பாராமல் நடந்த லட்சுமணன் சரயூ நதியில் மூழ்கினான். யோகநிலையில் நதிக்குள் அமர்ந்து சுவாசத்தை உள்ளுக்குள் அடக்கினான்.

தன்னைப் போரில் வென்ற இந்திரஜித்தையே வெற்றிபெற்ற இலக்குவனை அழைத்துச் செல்ல பொன்விமானத்தில் சரயூ நதிக்கரையில் வந்திறங்கினான் இந்திரன். தெய்வ உடம்பு பெற்ற இலக்குவனை விமானத்தில் ஏற்றி சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றான். வானவர்கள் சொரிந்த பூமாரியால் சரயூ நதி மலர்களால் ஆடை உடுத்தியதுபோல் காட்சியளித்தது.

மறுநாளும் வழக்கம்போல் ராஜசபை கூடியது. ராஜாராமன் சிம்மாசனத்தில் அமர்ந்தான். மந்திரி பிரதானிகள் அமர்ந்தனர். லட்சுமணன் இல்லாத சபை. அப்போது யாரோ ஒரு காவலன் ஓடிவந்து ராமபிரானுக்குக் கவரி வீசத் தொடங்கினான். ஒரு தம்பியை இழந்துவிட்ட அண்ணனுக்கு இனி கவரி உபசாரம் தேவையில்லை என்று அந்தப் பணிவிடையை நிராகரித்தான் ஸ்ரீராமன். அவன் உணர்வுகளை அறிந்து ராஜசபை வருத்தத்தோடு மௌனம் காத்தது.

44

அன்னை பூமி கேட்ட வரம்

சரயூ நதியில் நொப்பும் நுரையுமாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொணடிருந்தது. அதன் கரையில் மக்கள் வெள்ளம் ஆயிரக் கணக்கில் கூடியிருந்தது. எல்லோர் கண்களும் கலங்கிக் கண்ணீரால் தளும்பிக் கொண்டிருந்தன.

அவர்களின் இதயத்தில் நிரந்தரமாக ஆட்சி செய்துகொண்டிருக்கும் அயோத்தி மன்னர் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி ஒரு முடிவெடுத்துவிட்டால் பிறகு அது முடிந்த முடிவு தானே? யார் சொல்லியும் தம் முடிவை மாற்றிக் கொள்ளும் வழக்கம் அவருக்கு இல்லையே? இப்போது அவர் எடுத்திருக்கும் முடிவை அறிந்த அவர்கள் விக்கித்துப் போயிருந்தார்கள்.

மக்கள் அபவாதம் வரக் கூடாது என்பதற்காக மனைவி சீதா தேவியையே அக்கினிப் பிரவேசம் செய்யச் சொன்னவர். பிறகு அவள் அயோத்தி வந்த பின்னரும் கூட யாரோ ஒரு துணிவெளுப்பவன் சொன்னான் என்பதற்காக மக்கள் மத்தியில் தன் தர்ம நெறியை நிலைநாட்டக் காதல் மனைவியையே கானகத்திற்கு அனுப்பியவர். இப்போது யார் சொல்லியேனும் தன் முடிவை மாற்றிக் கொள்வாரா என்ன?

இன்னும் சற்று நேரத்தில் ராமபிரான் சரயூ நதிக் கரைக்கு வரப்போகிறார். மக்கள் எல்லோரிடமிருந்தும் நிரந்தரமாய் விடைபெற்று சரயூ நதியில் கலந்து விண்ணுலகு செல்லப் போகிறார்.

ஏற்கெனவே பல்லாண்டுகள் முன்பு சீதாப்பிராட்டி,

அப்போது சின்னஞ்சிறுவர்களாக இருந்த லவகுசர்களை ராமபிரானிடம் ஒப்படைத்து விட்டு, பூமித்தாய் கைநீட்டி அழைக்க மண்ணில் புகுந்து மறைந்துவிட்டாள். அதன் பின்னர் பல காலம் அறநெறி தவறாமல் ராமராஜ்யம் நடத்திய ராமபிரான் இப்போது தாமும் நதியில் கலக்க முடிவுசெய்துவிட்டார்.

அரண்மனையிலிருந்து வேகவேகமாக ஓடிவரும் ரதத்தைப் பார்த்த மக்கள் விலகி வழிவிட்டார்கள். ஸ்ரீராமபிரானின் புதல்வர்களான லவனும் குசனும்தான் தேரை ஓட்டி வந்து கொண்டிருந்தார்கள். அந்தத் தேரில் தான் ராமர் சரயூ நதியில் கலப்பதற்காக வந்து கொண்டிருந்தார்.

தங்கள் அன்னை இறந்த பிறகு இத்தனை காலம் மண்ணில் இருந்து ஸ்ரீராமர் அரசாட்சி செய்ததே பெரிது என்பதை லவகுசர்கள் அறிவார்கள். ஈருடலும் ஒருயிருமாய் இருந்தவர்கள் ஸ்ரீராமரும் சீதாப்பிராட்டியும். உயிர் எப்போதோ மண்ணுக்குள் மறைந்துவிட்டது. ராமர் என்ற உடல் தானே இத்தனை காலம் பூமியில் ஜீவித்திருந்தது? சீதாதேவியைப் பிரிந்த சோகத்தைத் தாங்க இயலாமல் ஸ்ரீராமர் எத்தனை துன்பத்தில் ஆழ்ந்திருந்தார் என்பதை லவகுசர்கள் நன்கறிவார்கள்.

இப்போது தந்தையைப் பிரியப் போகிறோம் என்ற உணர்வு வாலிபர்களான லவ குசர்களை வாட்டி வதைத்தது. யாரேனும் சொல்லி ராமரின் இந்த முடிவை மாற்றினால் எத்தனை நன்றாக இருக்கும்? ஆனால் அப்படிச் சொல்லக் கூடியவர்கள் யார்?

ராமபிரான் தேரிலிருந்து குதித்துக் கீழே இறங்கினார். அப்போது அவர் முன்னர் திடீரென பூமி பிளக்க பூமியிலிருந்து ஒரு தேவி தோன்றினாள்.

களிமண்ணால் செய்த சிலை போல அவள் மண் நிறத்தில் இருந்தாள். அளவற்ற அழகோடு தலையில் மகுடம் தரித்தவளாய் நன்கு அலங்காரம் செய்யப் பெற்றவளாய் பளபளவென ஒளி வீசினாள். வைரம் வைடூரியம் தங்கம் முதலிய விலை உயர்ந்த ஆபரணங்கள் அவள் மேனியை அலங்கரித்தன. அதுசரி. தங்கம் வைரம் எல்லாவற்றையும் அவள் தானே மக்களுக்கு வழங்குகிறாள்? ஸ்ரீராமபிரான் அவளை இருகரம் கூப்பி வணங்கினார்.

`தாயே! நதியில் கலந்து மறைய முடிவெடுத்துள்ள என்முன் திடீரென மண்ணிலிருந்து தோன்றும் தாங்கள் யார்?`

முன்னே நின்ற தேவி கனிவோடும் வருத்தத்தோடும் மெல்லிய முறுவல் பூத்தாள். ஒரு பெருமூச்சோடு சொல்லத்தொடங்கினாள்.

`ஸ்ரீராமா! நான் உனக்கு மாமியார் ஆவேன்!`

`என் மாமியார் ஸ்ரீஜனகரின் மனைவி சுனயனா தேவி அல்லவா?`

`அவள் உன் மனைவியை வளர்த்த தாய். உன் உண்மையான மாமியார் நான் தான். அதாவது உன் மனைவியைப் பெற்றவள் நான்.`

`ஓ! நமஸ்கரிக்கிறேன் தாயே! தாங்கள் பூமாதேவி அல்லவா? என் மனைவியைத் தங்களிடம் அழைத்துச் சென்றீர்களே? பூமி பிளந்தல்லவா என் மனைவி சீதா தேவி மண்ணுக்குள் புகுந்து மறைந்தாள்! இப்போது என் மனைவி சீதையை மீண்டும் என்னிடம் ஒப்படைக்க வந்திருக்கிறீர்களா அம்மா?`

அன்னை பூமி பெருமூச்சு விட்டாள்.

`குழந்தாய்! மண்ணுலகம் புகுந்த அவள் அங்கிருந்தே விண்ணுலகம் சென்றுவிட்டாள். உன் மேல் பிசகில்லை என்பதை அவள் அறிவாள். ஆனால் ராஜநீதி என்ற கூரிய அரிவாள் அவள் வாழ்வை இரண்டு முறை வெட்டிச் சாய்த்ததே? போதும் இந்த வாழ்க்கை என அவள் முடிவு செய்துவிட்டாள்!`

`என் சீதாதேவி இல்லாத இந்த வாழ்க்கை போதும் என்று நானும் முடிவுசெய்து விட்டேன் அம்மா! சரயூ நதியில் கலக்கச் சித்தமாகவே இப்போது இங்கு வந்துள்ளேன்.`

`அதை அறிந்துதான் நான் உன் முன் தோன்றினேன் குழந்தாய். நீ உன் முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும். நான் உனக்கு மாமியார் மட்டுமல்ல. ஒருவகையில் மகளும் ஆவேன். பூமிப்பெண்ணை எந்தக் கெடுதலும் வராது அரசர்கள் காப்பாற்றுவதால் அரசர்களுக்கு பூமி மகளாகிறாள். மாமியார் என்ற வகையில் என் வேண்டுகோளை நீ ஏற்காவிட்டாலும் மகள் என்ற வகையிலாவது நீ என் அன்பான கோரிக்கையைத் தட்டக் கூடாது. உன் முடிவை மாற்றிக்கொண்டு நீ இன்னும் பல ஆண்டுகள் அயோத்தியை ஆண்டு வரவேண்டும்.`

`தாயே! நான் எடுத்த முடிவு எடுத்தது தான். இனி அதை மாற்ற இயலாது. ஒரு இல், ஒரு வில், ஒரு சொல் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே? நான் ஒரு சொல் சொன்ன பிறகு அதை மாற்றுவது அறமல்லவே? சரயூ நதியில் கலந்து மறைவதாக ஏற்கெனவே அறிவித்து விட்டேன். இனி அந்தத் திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை. நான் இல்லாவிட்டால் இந்த பூமியைக் காப்பது யார் என்ற கவலை தங்களுக்குத் தேவையில்லை. இதோ என் செல்வக் குமாரர்கள் இருவர் இருக்கிறார்கள். லவனும் குசனும். அவர்கள் பூமியைக் காப்பாற்றுவார்கள் அம்மா!`

பூமித் தாய் தன் பேரக் குழந்தைகளான லவனையும் குசனையும் பரிவோடு பார்த்தாள். அவர்கள் அவளை வணங்கினார்கள். அவர்களின்

தலையை வருடி அவர்களுக்கு ஆசிவழங்கினாள் பூமாதேவி. பின் ராமபிரானை நோக்கிச் சொல்லலானாள்.

`ஸ்ரீராமா! அவர்கள் குழந்தைகள். ஆனால் உன் குழந்தைகள் அல்லவா? நன்றாகத்தான் ஆட்சி செய்வார்கள். அதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் நீ எல்லா அறநெறிகளையும் உன் வாழ்வில் கடைப்பிடித்துக் காட்டியவன். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று பதினான்கு ஆண்டுகள் கானகம் சென்று வசித்தவன். ஜாதி மத இன பேதமில்லாது குகன், சுக்கிரீவன், வீடணன் என அனைவரையும் சகோதரர்களாய் ஏற்றவன். இன்னும் நீ அனுசரித்து நிலை நிறுத்திய தர்ம நெறிகள் பலப்பல. ஏராளமான சோதனைகள் உனக்கு வந்தன. ஒவ்வொரு சோதனையிலும் நீ தர்மத்தின் வழியில் தான் நின்றாய் என்பதை மக்கள் அறிவார்கள். உன்னைப் பார்க்கும்போதே மக்கள் அந்த நினைவில் தோய்வார்கள். தாங்களும் உன்னைப் போல் தர்ம நெறியில் வாழவேண்டும் என்று உத்வேகம் கொள்வார்கள். பூமி பிரச்னைகள் இல்லாமல் இருக்கும். தீயவை அழிந்து நல்லவை வாழும். அதன்பொருட்டு நீ என்றென்றும் பூமியில் இருக்க வேண்டும் என்று என் மனம் ஆசை கொள்கிறது. உன்னுடைய அறநெறிகள் தொடர்ந்து நினைவூட்டப்படுவதற்கு நீ என்றும் பூமியில் இருக்க வேண்டியது அவசியம் இல்லையா?`

`அதற்கு அவசியமில்லை. நான் ஸ்தூல வடிவில் இல்லாவிட்டாலும் நான் அனுசரித்த தர்ம நெறிகளை மக்கள் மறவாமல் இருப்பதற்காக நான் இன்னோர் ஏற்பாட்டைச் செய்துவைத்திருக்கிறேன் தாயே!`

`அது என்ன ஏற்பாடு குழந்தாய்?`

`இதோ சொல்கிறேன் அம்மா!`

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி தன் பிள்ளைகளான லவ குசர்களைப் பார்த்தார்.

`என் செல்வங்களே! வால்மீகி மகரிஷி உங்களுக்குக் கற்றுத்தந்த ராமாயண சுலோகங்களை இந்த பூமித்தாயும் இங்குள்ள மக்களும் கேட்கும் வகையில் நீங்கள் பாடுங்கள் இப்போது. இது உங்கள் தந்தையின் கடைசி ஆசை. அதை நீங்கள் இருவரும் நிறைவேற்றிய பின் நான் சரயூ நதியில் கலப்பேன்!`

லவ குசர்கள் தங்கள் தந்தையைப் பணிந்தார்கள். பிறகு ராமாயணத்தைப் பாடத் தொடங்கினார்கள். பூமித்தாய் காதுகுளிர அதைக் கேட்கலானாள். மக்கள் அனைவரும் அந்த தேவகானத்தை அனுபவித்துக் கேட்கத் தொடங்கினார்கள். அந்த சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கும் உன்னதமான கருத்துகளை மக்கள் தங்கள்

மனத்தில் உள்வாங்கிக் கொண்டார்கள். ராமன் கானகம் செல்லும் சந்தர்ப்பத்திலும் சீதை அசோக வனத்தில் துயருற்ற சந்தர்ப்பத்திலும் பாடப்பட்ட சுலோகங்களைக் கேட்டு அனைவர் கன்னங்களிலும் கண்ணீர் வழிந்தது.

ராமபிரான் சரயூ நதியில் கலந்தபிறகு ஸ்ரீராமரின் ஆன்மாவை விண்ணுலகு அழைத்துச் செல்ல புஷ்பக விமானத்தோடு வானில் காத்திருந்த தேவர்கள் ராமாயணக் கதைகைய் கேட்டுப் பரவசம் அடைந்தார்கள். லவகுசர்கள் மேல் தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள்.

ஸ்ரீராமாயணம் என்ற அந்த மகத்தான இதிகாசம் பாடி முடிந்தவுடன் அன்னை பூமி, `சர்வ மங்கலங்களையும் தரவல்ல ஸ்ரீராமாயண காவியத்திற்கு நமஸ்காரம்!` என்று இருகரம் கூப்பித் துதித்தாள். மக்கள் அனைவரும் கூட ராமாயண காவியத்தை மனத்தில் நினைத்துத் தொழுதார்கள். இப்போது ராமர் பேசலானார்.

`பூமாதேவி! தாங்கள் இனிக் கவலை கொள்ள வேண்டாம். பூமி உள்ளவரை இந்த ராமாயண காவியம் நிலைபெற்று நிற்கும். ராமாயண காவியம் உள்ளவரை உலகில் அறநெறிகள் தழைத்தோங்கும். பூமியில் தர்ம நெறிகள் தழைத்து பூமி நிரந்தரமாய்ச் செழிப்புடன் விளங்கும். நான் வேறு, ராமாயணம் வேறல்ல. நான் தான் ராமாயணம். ராமாயணம் தான் நான். எனவே நான் சரயூ நதியில் கலந்து மறைந்தாலும் ராமாயணக் கதை வடிவில் நான் என்றும் இருப்பேன். அந்த வடிவில் என்றென்றும் மக்களை வழிநடத்திக் கொண்டும் அருள்புரிந்து கொண்டும் இருப்பேன். நான் வருகிறேன் தாயே! விடைகொடுங்கள்.`

ராமன் பூமித்தாயைப் பணிந்து வேண்டினார். கண்களைத் துடைத்துக் கொண்ட அன்னை பூமி, `சென்று வா. ராமா. சென்று வா. ஆனால் எங்கெல்லாம் ராமாயணம் படிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் நீ தோன்றாத் துணையாகத் தோன்றி உன் பக்தர்களைக் காத்துவா! அதுவே நான் வேண்டும் வரம்` என்றாள்.

`அப்படியே ஆகட்டும் தாயே! உலகுள்ளளவும் ராமாயணம் இருக்கும். ராமாயணம் சொல்லும் இடங்களில் எல்லாம் நான் தோன்றுவேன்!` என்று வாக்குறுதி கொடுத்த ஸ்ரீராமர் சரயூ நதியில் கலந்தார். மனநிறைவோடு லவ குசர்களையும் மக்கள் அனைவரையும் ஆசீர்வதித்த பூமித்தாய் மீண்டும் மண்ணில் கலந்து மறைந்தாள். லவகுசர்களின் கணீரென்ற குரலில் ராமாயண காவியம் தொடர்ந்து ஒலிக்கத் தொடங்கியபோது மக்கள் குரலும் கூடவே இணைந்து அதனோடு ஒலிக்கத் தொடங்கியது.

திருப்பூர் கிருஷ்ணன் நூல்கள்

★ **சிவப்பாய்ச் சில மல்லிகைகள்** (சிறுகதைத் தொகுதி. தீபம் நா. பார்த்தசாரதி முன்னுரையுடன்.) எழுத்தாளர் கூட்டுறவுச் சங்க வெளியீடு. இலக்கியச் சிந்தனையின் ஆண்டுப் பரிசுபெற்ற சின்னம்மிணி கதை உள்படப் பற்பல பரிசுக் கதைகளின் தொகுப்பு.

★ **பட்டொளி வீசி...**(சிறுகதைத் தொகுதி: இந்திரா பார்த்தசாரதி முன்னுரையுடன்.) வானதி பதிப்பக வெளியீடு. லில்லி தேவசிகாமணி முதல்பரிசு, அனந்தாச்சாரி இலக்கிய விருது, பாஞ்சஜன்யம் விருது உள்படப் பல பரிசுகளைப் பெற்ற கதைகளின் தொகுப்பு.

★ **கோதை நாயகியின் இலக்கியப் பாதை...** முன்னோடி இலக்கியவாதியும் சுதந்திரப் போராட்டத் தியாகியும் பாடகியுமான கோதைநாயகியின் வாழ்வும் பணியும் குறித்த ஆய்வுநூல். இலக்கியச் சிந்தனை ஆதரவுடன் வானதி பதிப்பகம் வெளியிட்ட புத்தகம்.

★ இன்றைய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் **நா. பார்த்தசாரதி வாழ்வும் பணியும்** குறித்த ஆய்வுநூல். சாகித்ய அகாதமி வெளியீடு.

★ **சுவடுகள்** - கடந்த கால்நூற்றாண்டு கால எழுத்துலக அனுபவங்களின் தொகுப்பு. கல்கியில் வெளிவந்த தொடர். ஏராளமான எழுத்தாளர்களின் புகைப்படங்களுடன். (திருப்பூர் குமரன் பதிப்பக வெளியீடு)

★ **அரவிந்த அமுதம்** - ஸ்ரீஅரவிந்தரின் திருச்சரிதம். கல்கியில் வெளிவந்த தொடர். (திருப்பூர் குமரன் பதிப்பக வெளியீடு)

★ **ஸ்ரீஅன்னை** - ஸ்ரீஅன்னையின் திருச்சரிதம். மங்கையர் மலரில் வெளிவந்த தொடர். (திருப்பூர் குமரன் பதிப்பக வெளியீடு)

★ **இலக்கிய முன்னோடிகள்** - தி.ஜானகிராமன், தொ.மு.சி. ரகுநாதன், க.நா.சு., நாரண துரைக்கண்ணன், கண்ணதாசன் போன்ற காலஞ் சென்ற முன்னோடி எழுத்தாளர்களைப் பற்றிய அனுபவப் பதிவு. (திருப்பூர் குமரன் பதிப்பக வெளியீடு)

★ **நளசரிதம்** - குமுதம் ஜங்ஷன் இதழ்த் தொடரின் நூல்வடிவம். மகாபாரத மூலத்தையும் அதிவீரராம பாண்டியன், புகழேந்திப் புலவர் ஆகியோர் எழுதிய செய்யுள் நூல்களையும் பாரதத்தில் வழங்கும் பல்வேறு நளமகாராஜன் கதைகளையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட உரைநடை இலக்கியம். (திருப்பூர் குமரன் பதிப்பக வெளியீடு)



டாக்டர் திருப்பூர் கிருஷ்ணன், எம்.ஏ., பிஎச். டி.

- ❖ இந்திரா பார்த்தசாரதியின் நாடகங்களை ஆய்வுசெய்து டாக்டர் பட்டம் பெற்றவர்.
- ❖ நா.பார்த்தசாரதியின் தீபம் இதழில் துணையாசிரியராகப் பணிபுரிந்தவர்.
- ❖ தினமணியில் கால்நூற்றாண்டு காலம் துணையாசிரியராகப் பணியாற்றியவர்.
- ❖ அம்பலம், சென்னை ஆன்லைன் ஆகிய இணைய இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- ❖ அகில இந்திய வானொலி நடத்திய தேசிய ஒருமைப்பாட்டுக் கவிதைப் போட்டியில் முதல் பரிசு, இலக்கியச் சிந்தனை ஆண்டுப் பரிசு, லில்லி தேவசிகாமணி முதல் பரிசு, அனந்தாச்சாரி அறக்கட்டளை முதல் பரிசு, ஆனந்த விகடன் முத்திரைப் பரிசுகள், ஹரிவம்சராய் பெயரிலான அகில இந்திய ஆசீர்வாத் விருது உள்ளிட்ட பல பரிசுகளும் விருதுகளும் பெற்றவர்.
- ❖ இதழ் இலக்கிய ஏந்தல், தமிழ் ஞானவாரிதி, தெய்வத் தமிழ் மாமணி உள்ளிட்ட பல பட்டங்கள் பெற்றவர்.
- ❖ இலக்கிய, ஆன்மிகச் சொற்பொழிவாளர். தொலைக்காட்சி, வானொலி ஊடகங்களில் நிகழ்ச்சிகள் வழங்குபவர்.
- ❖ திரு.ஏ.வி.எஸ். ராஜா அவர்களைப் பதிப்பாளராகக் கொண்டு ஸ்ரீராம் டிரஸ்ட் சார்பில் வெளியிடப்படும் அமுதசுரபி மாத இதழின் ஆசிரியர்.

